

# பூஜாரிகளுக்கான வழிகாட்டி

# பூஜா முறை

கிராமக் கோயில்களில் எளிய முறையில்
தினசரி வழிபாடு நடத்துவதற்கு
பூஜாரிகளுக்கான ஒரு வழிகாட்டி

பூஜாரிகள் பயிற்சி முகாமில்
பயன்படுத்தப்படும் கையேடு.



# பகுதி - 1

# பூஜாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்த பக்ஷ நியமங்கள்


பூஜாரிகள் அகத்தூய்மையும் புறத்தூய்மையும் வாய்க்கப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

'புறத்தூய்மை நீரான் அமையும்' என்ற வள்ளுவன் வாக்குப்படி சூர்யோதய நேரத்திற்கு முன்னதாகவே துயில் நீங்கி, மல ஜலம் கழித்து, பல் துலக்கி-ஸ்நானம் செய்ய வேண்டும்.

பின்னர் தோய்த்து உலர்த்தப்பட்ட தூய ஆடை அணிய வேண்டும்.

கோவணம் அணிந்து பின்னர் வேட்டி கட்டுவது. அதுவும் மூலக்கச்[redacted]வோ பஞ்சக் கச்சமாகவோ கட்டுவது உத்தமம்.

உடம்பில் சட்டை அணியலாகாது. மேல் அங்க வஸ்திரத்தை யோக வஸ்திரமாக அணிவது நல்லது. யோக வஸ்திரம் என்பது மேல்துண்டை இடது தோளிலிருந்து வலக்கைப்புறம் பூநூல் அணிவது போல அணிந்து கொள்வது.



பின்னர் சமயச் சின்னங்களை அதாவது திருநீறு, திருமண், சந்தனம், குங்குமம் ஆகியவற்றை அவரவர் மரபு வழக்கப்படி அணிந்து கொள்ள வேண்டும்.

பின்னர் தங்களுடைய சொந்த ஆத்மார்த்த பூஜையை இல்லத்திலோ அன்றி ஆலயத்திலோ செய்யலாம்.

இஷ்ட தெய்வ தியானம், ஜபம் குறைந்த பக்ஷமாகவாவது தினசரி செய்ய வேண்டும்.

ஆலயத்தில் எந்த மூர்த்திக்கு நாம் பூஜை செய்கிறோமோ அந்த தெய்வத்தையே இஷ்ட தெய்வமாக வைத்துக் கொள்வது பூஜாரியின் ஆத்ம சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

உதாரணமாக ஹனுமார் கோயிலில் பூஜை செய்பவர் ஹனுமத் உபாஸகராக இருப்பதுதான் உத்தமம்.

பல சந்நிதிகளில் பூஜை செய்பவர்கள்-அந்த ஆலயத்தின் ப்ரதான தெய்வத்தைத் தங்கள் இஷ்ட தெய்வமாகக் கொள்ள வேண்டும்.

பூஜாரிகள் பீடி, சிகரெட், சுருட்டு முதலானவற்றைப் புகைப்பது பாவம். முற்றிலுமாக இவற்றைத் தவிர்த்து விட வேண்டும்.

கள், சாராயம், மது ஆகியவற்றைக் கனவிலும் கூட அவர்கள் [redacted]ருந்தக் கூடாது.

சாராயம், கள் குடிக்கிற பூஜாரியை சமுதாயம் எள்ளளவும் மதிக்காது. இறையருளும் அவர்களுக்கு துர்லபமே.

புறத்தே ஆலயத்துள் உறையும் தெய்வமே நம் உடலின் உள்ளேயும், அதாவது நமது உள்ளத்திலும் உறைவதால் அத்தகைய நடமாடும் கோயிலாகத் திகழும் நமது உடலை எந்த விதத்திலும் அசுத்தப் படுத்தக் கூடாது.

உக்ர தெய்வங்களைப் பூஜிக்கும் பூஜாரிகள் தவிர பிற பூஜாரிகள் எவரும் புலால் உணவைப் புசிக்கக் கூடாது. மாமிசத்தை முற்றிலுமாகத் தவிர்த்து விட வேண்டும்.

குறிப்பாக சிவன், முருகன், விநாயகர், அம்பாள், விஷ்ணு, ஹனுமார், மாரியம்மன் கோயில்களில் பூஜை செய்கிறவர்கள் சுத்த மரக்கறி உணவு உண்பவர்களாகவே இருக்க வேண்டும்.

பூஜாரிகள் கழுத்தில் ருத்ராக்ஷம், துளசி மணி மாலை அல்லது ஸ்படிகமணி யாலை-ஆகிய ஏதாவது ஒன்றை அணிந்திருப்பது அவசியம்.

# பஞ்ச சுத்திகள்

'பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுவார் பாங்காக
பஞ்ச வித பாசமறுப்பார்'

''பஞ்சவித சுத்தி செய்து பாவித்து பூஜை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே''

என்ற பெரியோர் வாக்குப்படித் திருக்கோயிலில் பூஜை செய்யும் பூஜகர்கள் தினமும் பூஜை தொடங்கும் முன்னர் ஐந்துவிதமான சுத்திகளைச் செய்து கொள்ள வேண்டும்.

## 1. ஆத்ம சுத்தி

[redacted]ஜை செய்யும் பூஜகர் தனது உடலைத் திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனிபோல ஸுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் கள்ளப்
புலனைந்துங் காளா மணி விளக்கே'

என்ற திருமூலர் திருவாக்கை உய்த்து உணர்க.

தூய்மையாய் இருப்ப ரேனும் தூய்மையே இல்லா ரேனும்
சேய்மையில் இருக்கத் தக்க செய்கைகள் நிலைமை கொண்ட
வாய்மையில் யாவரேனும் மாலலிதை நினைவு
கொண்டால்
போய்மைகள் புறம்பு முள்ளும் புனிதராய் ஆவார் தாமே

## 2. ஸ்தான சுத்தி

பூஜிக்கும் ஆலயமும், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக்ரஹமும் இதர மூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்பொழுதும் சுத்தமானதாயிருக்கச் செய்ய வேண்டும்.

புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியது பூஜகரின் கடமை. கர்ப்பக்ருஹத்தைப் பெருக்கும் அலகை (துடைப்பத்தை) வேறு இடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

கர்ப்பக்ருஹத்தில் கரப்பு, பாச்சை, எலி ஆகியன இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

அர்க்கிய நீரை பூமியில் தெளித்து இடத்தை சுத்தி செய்ய வேண்டும்.

கர்ப்பக்ரஹத்தில் எப்போதும் குறைந்தபக்ஷம் ஒரு விளக்காவது எரிந்து கொண்டே இருக்க வேண்டும். மூர்த்தியின் மூலமந்திரத்தைச் சொல்லியவாறே விளக்கு ஏற்ற வேண்டும்.

## 3. திரவிய சுத்தி

பூஜைக்குரிய பாத்திரங்களை நன்றாகக் கழுவி, சங்கு, நீர் [redacted]தலியவற்றிலும் பூஜைக்குரிய புஷ்பம் முதலான பதார்த்தங்களில் அர்க்கிய நீரைத் தெளித்து சுத்தி செய்ய வேண்டும்.

## 4. மந்திர சுத்தி

பீஜாக்ஷர மந்திரத்தை சுஷும்னா நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்குரிய மூல மந்திரத்தைப் பத்துமுறை ஜபிக்க வேண்டும்.

ப்ராணாயாமம் தெரியாதவர்கள் மூல மந்திரத்தை சித்த சுத்தியோடு ஜபித்தாலே போதுமானது.

## 5. லிங்க சுத்தி

லிங்க சுத்தி வழிபாட்டுக்குரிய மூலஸ்தான விக்ரஹங்களை சுத்தி செய்வதைக் குறிக்கிறது. விக்ரஹத்தின் மீதுள்ள நிர்மால்யங்களைக் களைந்து பின்னர் அபிஷேகம் செய்ய வேண்டும்.




அபிஷேகம் செய்வது இதில் அடங்குகிறது. அபிஷேகம் எங்ஙனம் செய்ய வேண்டும் என்பதைத் தனியாக விவரமாகத் தந்திருக்கிறோம். பின்னொரு பக்கத்தில் அது விவரம் காண்க.

# பூஜையின் பொதுவான தாத்பர்யம்

நமது வீட்டுக்கு யாராவது உறவினர்வந்தால் அவர்களை வணங்கி வரவேற்று வாங்க நமஸ்காரம்-எப்படி இருக்கிறீங்க-இப்பத்தான் வர்றீங்களா. நலமா இருக்கிறீர்களா என்று பாயோ விரிப்போ விரித்து அவர்களை அமரச்செய்து தண்ணீர் கொடுத்து-தேநீர் கொடுத்து- குளிக்க சொல்லி உணவு கொடுத்துத் தாம்பூலம் கொடுத்து அவருக்கு வேண்டிய உபசாரங்களை செய்கிறோமல்லவா அவ்வாறே இறைவன் இறைவிக்கு மனமுவந்து செய்கிற வழிபாட்டு உபச்சாரமே பூஜாமுறை!

[redacted]



பொதுவாகவே ஆசந பூஜை- கண்டா பூஜை- விக்னேஸ்வர பூஜை- கலச பூஜை- சங்க பூஜை- ஆத்ம பூஜை- பீடபூஜை- குருத்யானம்- பிராணப்பிரதிஷ்டை என்கிற வழிபாட்டு முறைகளைச் செய்தபிறகே பிரதான இறைவன் இறைவிக்குப் பூஜைகள் செய்யவேண்டும் என்பது மரபு.

# ஆசமனீயம்



தினமும் நாம் நமது உடம்பைச் சுத்தி செய்வதற்குப் பெயரே ஸ்நானம். ஆத்மாவைச் சுத்தி செய்வதற்கு பெயர் ஆசமனீயம்.

ஆசமனீயம் எப்படி செய்வது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம். காலையிலே ஸ்நானம் செய்தபின் கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ குந்திட்டு உட்கார்ந்து. கைகளை முழங்கால்களுக்குள்ளே வைத்துக் கொண்டு. சுண்டு விரலையும், மோதிர விரலையும் நீட்டி மற்ற விரல்களை சற்று உட்புறம் மடிக்கப் பள்ளமாக அமையும். பஞ்ச பாத்திரத்தில் உத்தரணியால், இடது கையால் சிறிதளவுக்கு ஜலத்தை எடுத்து உளுந்து மூழ்கிற அளவுக்கு வலது உள்ளங்கையிலே ஊற்றி.

ஓம் அச்சுதாய நம! என்று முதல் முறையும்
ஓம் அனந்தாய நம! என்று இரண்டாம் முறையும்
ஓம் கோவிந்தாய நம! என்று மூன்றாம் முறையும்
அல்லது
ஓம் ஆத்ம தத்வாய நம
ஓம் சிவதத்வாய நம
ஓம் ஸர்வதத்வாய நம

– சொல்லி எச்சில் படுத்தாமல் குடிப்பதாகும்.

1. கேசவா. என்று சொல்லி வலது கன்னத்தை வலது கையின் கட்டைவிரலால் தொடவும்.
2. நாராயணா என்று சொல்லி இடது கன்னத்தை வலது கையின் கட்டைவிரலால் தொடவும்.
3. மாதவா என்று சொல்லி வலது கண்ணை வலது கையின்

மோதிர விரலால் தொடவும்.

4. கோவிந்தா என்று சொல்லி இடது கண்ணை வலது கையின் மோதிர விரலால் தொடவும்.
5. விஷ்ணு என்று சொல்லி வலது மூக்கை வலது கையின் ஆள்காட்டி விரலால் தொடவும்.
6. மதுசூதனா என்று சொல்லி இடது மூக்கை வலது கையின் ஆள்காட்டி விரலால் தொடவும்.
7. த்ரிவிக்ரமா என்று சொல்லி வலது காதை வலது கையின் சுண்டு விரலால் தொடவும்.
8. வாமனா என்று சொல்லி இடது காதை வலது கையின் சுண்டு விரலால் தொடவும்.

[redacted] ஸ்ரீதரா என்று சொல்லி வலது தோள்பட்டையை வலது கையின் நடு விரலால் தொடவும்.

10. ஹ்ருஷிகேசா என்று சொல்லி இடது தோள்பட்டையை வலது கையின் நடு விரலால் தொடவும்.
11. பத்மநாபா என்று சொல்லி மார்பின் நடுமையத்தை ஐந்து விரல்களையும் விரித்து உள்ளங்கையால் தொடவும்.
12. தாமோதரா என்று சொல்லி உச்சந்தலையை ஐந்து விரல்களையும் விரித்து உள்ளங்கையால் தொடவும்.

என்று முத்திரையுடன் செய்யவேண்டும் சைவர்களாக இருந்தால் ஓம் அஸ்தராயபட் என்று பெருவிரலால் உதடுகளை துடைத்துக் கொள்ளவும் ஓம் அஸ்த்தராய பட் என்று சொல்லி சிறிது நீரெடுத்து கையை அலம்பவும். ஓம் ஹிருதயா யவௌஷட் என்று சொல்லி பெருவிரல் மற்றும் மோதிரவிரல் நுனிகளை சேர்த்து

| | | |
|---|---|---|
| வலது தாடை | - | இடது தாடை |
| வலது கண் | - | இடது கண் |
| வலது நாசி | - | இடது நாசி |
| வலதுகாது | - | இடது காது |
| வலது தோள் | - | இடது தோள் |

அடிவயிறு உச்சந்தலை இவைகளை தொடவேண்டும்.

# சுக்லாம்பரதரம்

பூஜை எதுவானாலும் முதன்முதலில் விநாயகருக்குப் பூஜையைச் செய்துவிடவும்.

விநாயகருக்கு முன்னால் அமர்ந்து வலக்கைகளால் இடது பக்க தலையிலும் இடக்கையில் வலதுப் பக்கத் தலையிலும் மெதுவாகக் குட்டி கொண்டு

சுக்லாம்பரதரம்விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரஸந்ந வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே

இந்த பாடலில் ஐந்து வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.


| | |
|---|---|
| சுக்லாம்பரதரம் | வெண்ணிற ஆடைதரித்திருப்பவர் |
| விஷ்ணும் | எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிற சர்வ வியாபி |
| சசிவர்ணம் | பால் நிலா போன்ற பொலிவுடையவர் |
| சதுர்புஜம் | கைகள் நான்கைக் கொண்டவர் |
| ப்ரஸந்நவதனம் | அன்றலர்ந்த செந்தாமரை முகத்தையுடையவர். |

## தமிழில்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞான கொழுந்தினை
புந்தியில் வைத்தடிபோற்றுகின்றேனே
என்றும் சொல்லலாம்.

### பிராணாயாமம்
### (மூச்சுப்பயிற்சி)

பிராணன் - உயிர் - (மூச்சு)



யாமம் - பயிற்சி

ஏதேனும் விரிப்பின்மேல் ஒரு ஆசனத்தில் அமர்ந்து மூச்சை கட்டுப்படுத்த வேண்டும்- மூச்சை கட்டுப்படுத்தினால் மனதை கட்டுப்படுத்தலாம். அலைபாயும் எண்ணங்களை தடுத்து நிறுத்தி உடலையும் உள்ளத்தையும் கட்டிப் போடுவதே பிராணாயாமம்.

ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மடக்கவும். மோதிர விரலையும் - கட்டை விரலையும் ஒன்றாக இணைத்து மூக்கின் இருபுறமும் தொட்டுக் கொண்டு வலது மூக்கை அழுத்திக் கொண்டு இடது மூ[redacted] வழியாக மெதுவாக காற்றை உள் நோக்கி இழுக்கவும் மூச்சை உள்ளே நிறுத்தி மெதுவாக வலது மூக்கின் வழியாக மூச்சை வெளியேற்றவும். மூச்சை இழுக்கும் போதும் - வெளியேற்றும் போதும் வேகம் ஒரே மாதிரியான அளவில் இருக்க வேண்டும்.

உள்ளே இழுப்பது பூரகம் - உள்ளே நிறுத்துவது கும்பகம் - வெளியே விடுவது ரேசகம் என்பதாகும்.

யம்யம் என்கிற பீஜ மந்திரத்தை பதினாறு முறை மனசுக்குள்ளேயே நினைத்து இடது நாசியால் மூச்சிழுக்கவும். ரம்ரம் என்ற மந்திரத்தை பதினாறு முறை நினைத்து மூச்சை நிறுத்தவும். லம்லம் என்று பதினாறு முறை நினைத்து வலது நாசியால் மூச்சை வெளியேற்றவும். வம்வம் என்கிற பீஜ மந்திரத்தை பதினாறு முறை நினைத்து வலது நாசியால் மூச்சிழுக்கவும். இதுதான் பிராணாயாமம். இவ்வாறு ஐந்துமுறை செய்யவும்.

ப்ரணாயாமத்துக்குப்பின் ஸங்கல்பம் செய்துதான் எந்த ஒரு சடங்கையும் அல்லது பூஜையையும் தொடங்க வேண்டும்.

வலது தொடைமேல் இடது கையை மேலாகப்
பார்க்கும் வண்ணம் வைத்து வலக்கையை மூடி
மந்திரம் சொல்வதே ஸங்கல்பமாகும்.

## ஸங்கல்பம்

மமோ பாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் (வைணவர் ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம்)

சுபே சோபனே முஹூர்த்தே அத்ய பிரஹ்மண த்வித்ய பரார்த்தே ச்வேத வராஹ கல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம் சதிதமே கலியுகே-ப்ரத மேபாதே - ஜம்புத்வீபே -பாரதவர்ஷே பரதகண்டே-மேரோ தக்ஷிணே -பார்ச்வே- சகாப்தே-அஸ்மின்-வர்த்தமாநே வ்யாவஹாரிகே-சாந்த்ரமாநேந ப்ரபவா தீ நாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸ்ராணாம்மத்யே நாம ஸ்ம்வத்ஸரே... அயநே...ருதௌ...மாஸே பக்ஷே... சுபதிதௌ....வாஸரயுக்தா யாம்...நக்ஷத்ர. சுபயோக, சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டா யாம் அஸ்யாம்...சுபதிதௌ

அஸ்மின் கிராமே வஸதாம் ஸர்வேஷாம் மஹாஜ னானாம் ஸர்வ மாங்கள ப்ராப்த்யர்த்தம். ஸர்வாரிஷ்ட நிவ்ருத்யர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் அஸ்மின் தேவாலயே ப்ரதிஷ்டித...

தேவதானாம் ப்ரஸாத ஸித்யர்த்தம் நித்ய பூஜாம் கரிஷ்யே.

அர்ச்சனை செய்ய விரும்பி ஆலயத்துக்கு வருவோரிடம் பெயர்-ஜன்ம நக்ஷத்திரம் ராசி-லக்னம் கோத்ரம். தாய்-தந்தை பெயர் ஆகியோர்களின் பெயர்களை கேட்டு நாம் சொல்வது அவர்கள் காதில் விழும்படி அஸ்மாகம் என்னுமிடத்தில் கோத்ரோத் பவஸ்ய, நக்ஷத்ரே,ராசௌ - ஜாதஸ்ய (அவரது பெயரை சொல்லி) ஸஹகுடும்பானாம் என்று ஸங்கல்பம் செய்வது முறையாகும்.

சுப காரியங்களையும் வேறு உத்யோக சமபந்தமான்வைகளையும் சங்கல்பத்தில் சேர்த்து சொல்லவும்.

### தமிழில் உறுதியேற்பு

இன்றுள பிரம்ம தேவர்க்கு
இரண்டாம் பரார்தம் தன்னில்
கன்றலில் சுவேத வராஹ
கற்பத்தில் ஏழாம் ஆட்சி
இன்றுள மனுவின் நாளில்
ஏழுநான்காம் கலியில் ஒன்றாம்
நன்றுறு பாதந் தன்னில்
........... வருட ........... திங்கள்

............. பிறை ............. நாள்
..............தாரகை நல்யோகத்தில்
நாவலந் தீவில் நண்ணும்
பாரதவர்ஷ நாப்பண்
மேவிடும் பரத கண்டம்
மேருவின் தென்பால் இந்த
தேவரும் விரும்பும் புண்ணிய
நாட்டில் பொலிவுறு இக்கிராமத்தில்
வாழ்ந்திடும் மக்கள் எல்லாம்
நலன்கள் யாவும் பெற்றிட
ஆழ்ந்திடும் அருளுடை
பூஜை செய்வேன்



[redacted]

### தனி நபரின் அர்ச்சனைக்கான ஸங்கல்பம்

தேவரும் விரும்பும் இப்புண்ணிய நாட்டில் பொலிவுறு
.......................இக்கிராமத்தில் ................................................
கோத்திரத்து ........................................................ராசியில்
.........................................நக்ஷத்திரத்தில் உதித்த நல்லன்பர்
.................................................ஸ்ரீமான்,
ஸ்ரீமதி.......................................அவர்களும் அவர்தம்
குடும்பத்தாரும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை உறுதிப் பொருளும், நற்பயன் பிறவும் பொருந்த நீண்ட நாள் வாழ்க வேண்டி அருளுடை...................... தாள் அடி பணிந்து பூஜை செய்வேன்.

### பூஜா சங்கல்ப மந்திரம் பொருள்

| | | |
|---|---|---|
| மமோபார்த்த ஸமஸ்த | - | என்னால் அடையப்பெற்ற அனைத்து |
| துரித க்ஷயத்வாரா | - | பாபங்களின் நிவர்த்திவாயிலாகவும் |
| ஸ்ரீபகவத்ப்ரீத்யர்:தம் | - | இறைவனின் ப்ரீதிக்காவும் |
| சுபேசோபனேமுஹூர்த்தே | - | சுபமான இந் நல்வேளையில் |
| அத்ய ப்ரஹ்மண | - | இன்றைய பிரம்மாவின் |
| த்விதீய பரார்தே | - | இரண்டாம் பிரம்மாவின் |
| ச்வேத வராஹ கல்பே | - | ச்வேத வராஹ கல்பத்தின் |

| | | |
|---|---|---|
| வைவஸ்வத மன்வந்தரே | - | வைவஸ்வத மன்வந்தரத்தின் |
| அஷ்டாவிம் சதிதமே | - | இருபத்தெட்டாவது |
| கலியுகேபிரதமே பாதே | - | கலியுகத்தின் முதல் கால் பாகத்தில் |
| ஜம்பூத் வீபே | - | ஜம்பூ த்வீபத்தில் |
| பாரத வர்ஷே | - | பாரத வர்ஷத்தில் |
| பரத கண்டே | - | பாரத கண்டத்தில் |
| மேரோர் தக்ஷிணே பார்சவே | - | மஹா மேருவாகிய ஹிமயத்தின் தென்பக்கம் |
| சகாப்தே | - | சக எனும் ஆண்டு கணக்கின்படி |
| அஸ்மின் வர்த்தமானே வ்யாவ ஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி | - | நமது தற்கால வழக்கிலுள்ள |
| ஸம்வத்ஸராணாம் மத்யே | - | பிரபவ முதல் தொடங்கும் அறுபது ஆண்டுகளினிடை |
| அமுக ஸம்வஸ்ஸரே | - | இன்ன பெயருள்ள ஆண்டின் |
| அமுக அயனே | - | இன்ன அயனத்தில் |
| அமுக ருதௌ | - | இன்ன ருதுவில் |
| அமுக மாஸே | - | இன்ன மாதத்தில் |
| அமுக பக்ஷே | - | இன்ன பக்ஷத்தில் |
| சுபதிதௌ | - | சுபதிதி (தேதி)யில் |
| அமுக வாஸர யுக்தாயாம் | - | இன்ன கிழமையும் |
| அமுக நக்ஷத்ர யுக்தாயாம் | - | இன்ன நஷத்திரமும் |
| சுபயோக சுபகரண | - | நல்யோகமும் கரணமும் |
| விசே க்ஷேண விசிஷ்டாயாம் | - | மிக விசேஷமும் |
| அஸ்யாம் சுபதிதௌ | - | கூடிய நல்ல நாளில் |
| ஸ்ரீ நாராயண ப்ரீத்யர்த்தம் | - | நாராயண ப்ரீதிக்காவும் |

(பரமேஸ்வரன் மற்றுமுள்ள அம்பிகை போன்ற தங்களின் உபாசனைக் கடவுளர்களின் பெயரைச் சொல்ல வேண்டும்).

| | | |
|---|---|---|
| அஸ்மாகம் ஸஹ குடும்பானாம் | - | நமது குடும்பத்தினரின் |
| க்ஷேமஸ்தைர்ய, தைரிய | - | க்ஷேமம், ஸ்திரத் தன்மை, தைர்யம், |
| வீர்ய விஜய ஆயுளாரோக்ய | - | வீரம்- வெற்றி வியாதியற்ற |

| | | |
|---|---|---|
| | | ஆயுளும் |
| அஷ்ட ஐச்வர்ய அபிவ்ருத்யர்தம் | - | எட்டு செல்வங்களும் பெருகும் பொருட்டும் |
| ஸ்மஸ்த மங்களா வாப்யர்தம் | - | அனைத்து மாங்களாங்களும் கிடைக்கும் பொருட்டு. |
| ஸமஸ்த துரிதோப சாந்த்யர்தம் | - | அனைத்து பாபங்களின் நிவர்த்திக்காவும் |
| தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித | - | அறம், பொருள், இன்பம், வீடு, நால்வகை |
| புருஷார்த்த ஸித்தியர்தம் | - | பேறுகள் கிட்டவும் |
| யாவாச்சக்தி தயாணாவா [redacted] ஹணாதி | - | சக்திக்கேற்ப, தியானம் ஆவாஹனம் கூடிய |
| பூஜாம் கரிஷ்யே | - | பூஜையை செய்கிறேன் |
| பூஜாம் கரிஷ்யாம் | - | பூஜையை செய்கிறோம். |

சில குறிப்பிட்ட பலன்களை வேண்டுவோர்கள் அந்தந்த வேண்டுதல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். அதாவது சதுர்வித புருஷார்த ஸித்தியர்தம் என்பதின் பின்

1. ஸத்ஸந்தான ப்ராப்தயர்தம்
2. ஸகல ரோக நிவர்த்யர்தம்
3. ராஜத்வாரே அனுகூலஸித்தியர்தம்
4. சீக்ரமேவ விவாஹ ப்ரஸ்த்யர்தம்
5. வியவஹார ஜய அவாப்யர்தம்
6. அபம்ருத்யு தோஷ நிவாரணார்தம் என்று சொல்லவும்

| | | |
|---|---|---|
| சந்தனமிடும் பொழுது | - | கந்தம் ஸமர்ப்பயாமி |
| புஷ்பம் சாத்தும் பொழுது | - | புஷ்பை பூஜயாமி |
| சாம்பிராணி மற்றும் ஊதுவத்தி காண்பிக்கையில் | - | தூபமாக்ராபயாமி |
| நெய்விளக்கு காண்பிக்கையில் | - | தீபம் தர்சயாமி |

நைவேத்யம்
படைத்தலின்போது - நைவேத்யம் நிவேதயாமி
கற்பூரம் காண்பித்தலின்
போது - நீராஜனம் தர்சயாமி
என்று சொல்லவும்.

நமது பூஜா ஸங்கல்ப மந்திரத்தின் பொருளைச் சற்று விரிவாக அறிவோம்.

### ஆத்ய ப்ரஹ்மண

ஒவ்வொரு கல்ப முடிவில் ப்ரளயமாகும் பொழுது, அந்த கல்பத்து பிரம்மாவின் சிருஷ்டி வைபவம் முடிந்து விடும். அப்படி கல்பங்களால் மாறாத, ஆதி பிரம்மாவின் என்று பொருள்.

### த்வீதிய பரார்தே

பரார்தம் என்பது பிரம்மாவின் அரை ஆயுட்காலமாகும். த்விதிய பரார்தே என்றால் பிரம்மாவின் ஆயுளில் இரண்டாவது பாதியில் என்று பொருள்.

### ச்வேதவராஹ கல்பே

ஒரு கல்பம் என்பது 1000சதுர் யுகங்களும், 14 மந்வந்தரங்களும் அடங்கிய 43 கோடியே 20 லக்ஷம் ஆண்டு காலமாகும். கல்ப முடிவில் பிரளயமாகி (இயற்கையில் லயமாகி) பின் மறுபடியும் ப்ரபஞ்சம் தோன்றுகிறது. இம்மாதிரியான கல்பங்களைப் பெயரிட்டு, இன்று நாம் வாழும் கல்பத்தை ச்வேத வராஹ கல்பம் என்கிறோம்.

### வைவஸ்த மன்வந்தரே

மன்வந்தரம்: மனு+ அந்தரம்= மன்வந்தரமாகும். அதாவது மனுவின் இடைப்பட்டகாலம் என்பது பொருள். பதினான்கு மனுக்களில் இப்பொழுது ஏழாவது வைவஸ்வத மனுவின் காலமாகும்.

### அஷ்டாவிம்சதிதமே

சதுர்யுகங்கள் ஆயிரம் என்று சொன்னோம். தற்பொழுது 28வது சதுர்யுகம் நடந்து கொண்டிருக்கிறது.

### கலியுகே ப்ரதமேபாதே

28வது சதுர்யுகத்தில், கலியுகத்தின் முதல் கால் பாகத்தில் வாழ்கிறோம். கலி பிறந்து இந்த விஜய வருடம் 5114ம் வருடமாகும்.

### ஜம்பூ த்வீபே

நமது உலகின் பூபாகத்தை ஏழு த்வீபங்களாகப் பிரித்து பெயரிட்டுள்ளோம். அவை ஜம்பூ த்வீபம், ப்லக்ஷ த்வீபம், ஷால்மலித்வீபம், குத த்வீபம், க்ரௌஞ்ச

த்வீபம், சாக த்வீபம், புஷ்கர த்வீபம் என்பனவாகும். நமது ஹிந்துதேசம் உள்ள பாகம் ஜம்பூ த்வீபத்தில் உள்ளது.

### பாரதவர்ஷே, பரதகண்டே

ஜம்பூ த்வீபத்தில் ஒன்பது வர்ஷங்களும் (தேசங்கள்) ஒன்பது கண்டங்களும் உள்ளன. அவற்றில் பாரதவர்ஷமும் பரதகண்டமும், ஒவ்வொன்றாகும். இதற்கு எல்லைகள் கீழ்கண்டவாறு வர்ணிக்கப்பட்டுள்ளன.

உத்தரம் யத் ஸமுத்ரஸ்ய ஹிமாத்ரேஸ்சைவ தக்ஷிணம்

வர்ஷம் தத் பாரதந்நாம பாரதி யத்ர ஸந்ததி. விஷ்ணு புராணம்

பொருள்:சமுத்திரத்திற்கு வடக்கேயும், ஹிமயமலைக்குத் தெற்கேயும், எங்கு பாரதியர் வசிக்கின்றனரோ, அதற்கு பாரத வர்ஷம் என்று பெயர்.

### மேரோர்தக்ஷிணே பார்ச்வே

[redacted]மயமலைக்குத் தெற்கே உள்ள நமது தேசம் என்று சொல்லப்பட்டுள்ளதன் [redacted]ம் நமது பஞ்சாங்க கணனம் இங்குள்ள பூகோள அமைப்பின்படி இயற்றப்பட்டுள்ளது. வேறு தேசங்களுக்கு இவை மாறுபடலாம்.

### சகாப்தே

விக்ரமாதித்யன் ஆண்ட காலத்திலிருந்து தொடங்கி ஸம்வத் என்று ஒரு வருட எண் தொடரும். அவருக்குப் பின் 135 ஆண்டுகள் கழித்துச் சாலிவாஹனன் ஆண்ட காலம் தொடங்கி சக என்னும் பெயரால் ஒரு தொடரும் இயங்கி வருகின்றன.

விஜய சித்திரையின் போது விக்ரம ஸம்வத் 2059ம், சாலிவாஹன சகாப்தம் 1925ம் ஆகும்.சகாப்தம் என்று நாம் வழக்கில் சொல்வது சக அப்தம் (சக ஆண்டு) என்பதின் மருவலாகும்.

### பிரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே

பாரத தேசத்தில், பஞ்சாங்கங்களை இரண்டு அடிப்படையில் கணிக்கிறோம். இங்கு தென் பாகத்தில் சூரிய சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஸௌரமான பஞ்சாங்கமும் வடபாகத்தில் சாந்திரமான பஞ்சாங்கமும் அனுசரிக்கப்படுகின்றன. அங்கு அமாவாசையின் மறுநாள் மாதப்பிறப்பாகும். மறு அமாவாசையுடன் மாதம் முடியும். சில ஆண்டுகளுக்கு ஒரு முறை அங்கு அதிக மாதம் (இரட்டை மாதம்) வந்து விடும். நமது தென்பாகத்தில் ஸௌரமான அடிப்படையில் அறுபது ஆண்டுகள் கொண்ட ஒரு கால அளவையை.

வருடங்களின் பெயரிட்டும், ஒவ்வொரு ஆண்டுகளின் மாதங்களுக்கும் தேதிகள் நிர்ணயித்தும் உள்ளனர். 32 தேதிகள் உள்ள மாதம் இங்கு உண்டு. ஆங்கிலேயர்கள் லீப் வருடம் என்று ஒரு தேதியை அதிகரிப்பர். நாம் அதையும் சமனப்படுத்தி அறுபதாண்டு கால அளவையைத் தயாரித்துள்ளோம். ப்ரபவ முதல் அக்ஷய வரையிலான அறுபது ஆண்டுகளில், நடப்பு வருட பெயரைச் சங்கல்பத்தில் சொல்கிறோம்.

### அயனே

தை மாத முதல் ஆனி முடிய உத்தராயணமும், ஆடி மாத முதல் மார்கழி முடிய தக்ஷிணாயனமுமாகும். சூரியன் பூமத்ய ரேகைக்கு வடக்கேயும், தெற்கேயும் சஞ்சரிப்பதைக் குறிக்கும் பெயர்களாகும். உத்தராயணத்தில் மங்கள காரியங்கள் செய்வதும் உத்தமமென்று சாத்திரங்கள் பகர்கின்றன. பீஷ்மாசாரியார் மஹாபாரதயுத்தத்தில் தக்ஷிணாயன முடிவில் சாய்ந்து விட்டாலும், இச்சாம்ருத்யு (தன்னிஷ்டப்படி மரணம் வரும்) வரம் பெற்றிருந்ததால் அம்புப் படுக்கையில் இருந்துகொண்டே உத்தராயணத்தில்தான் [redacted]யிர் துறந்தார்.

### ருதௌ

வருடத்தில், ஈரிரண்டு மாதங்களுக்கு ஒரு ருது வீதம் அமைகிறது. சித்திரை-வைகாசி ஆகிய இரண்டுமாதங்களுக்கு வசந்த ருதுவும், பின் அதே போல், க்ரீஷ்ம ருது, வர்ஷ ருது, சரத் ருது, ஹேமந்த ருது, சிசிர ருது ஆக ஆறு பருவங்கள் பங்குனியுடன் முடிகின்றன.

### மாஸே

நமது பன்னிரு மாதங்களின் அமைப்பும் அறியத்தக்கதாகும். மலையாளத்தில் 12 ராசிகளின் பெயர்களையே மாதங்களுக்குச் சூட்டியுள்ளனர். சித்திரை மாதத்தை மேடமாஸம் எனவும், வைகாசியை இடப (ரிஷப) மாஸம் எனவும் அங்கு சொல்வர்.

தமிழ் மாதங்கள் சூரியன், ராசிகளில் இருக்கும் நாட்களாகும். ஆனால் மாதங்களின் பெயர்களை நாடெங்கிலும், நக்ஷத்திரங்களின் பேரில் அமைத்துள்ளோம். அந்தந்த மாத பௌர்ணமியன்று என்ன நக்ஷத்திரம் வருமோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரை அம்மாதத்திற்கு வைத்துள்ளோம்.

சான்றாக, சித்திரை மாத பௌர்ணமியன்று சித்ரா நக்ஷத்திரம் அமையும், வைகாசி பௌர்ணமியன்று விசாகா நக்ஷத்திரமும், பங்குனி பௌர்ணமியன்று பால்குனி நக்ஷத்திரமும் அமையும். சில ஆண்டுகளில் ஒரு நாள் முன்பின் அமையும்.

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளும் 12 மாதங்கள், 30 தேதிகள் எனும்

நமது ஹிந்து அடிப்படையை ஒப்புக்கொண்டு இன்றும் தழுவி வருகின்றன.

**பக்ஷ**

வளர்பிறை நாட்கள் சுக்லபக்ஷம், தேய்பிறை நாட்கள் கிருஷ்ண பக்ஷமாகும். சுக்ல என்றால் வெண்மை, கிருஷ்ண என்றால் கருப்பு.

**திதௌ**

ஸம்ஸ்க்ருத திதி தான், ஆங்கிலத்தில் Date என்றும் தமிழில் தேதி என்றும் சொல்கிறோம். ஐரோப்பிய மொழிகளான பிரஞ்சு பாஷையில் Date எனவும், லத்தீன் மொழியில் Datum எனவும் உள்ளன. இதுபோன்று ஐரோப்பிய மொழிகட்கு ஸம்ஸ்க்ருதம் ஏராளமான மொழிக் கொடைகளை வழங்கியுள்ளது.

**வாஸரே**

ஏழு கிழமைகளின் பெயர்களையும் உலகிலேயே நமது ஹிந்து சமயம்தான் கொடுத்துள்ளது. ஞாயிற்றுக்கிழமையை நேர் மொழிபெயர்த்து Sunday [redacted]வும், திங்கட்கிழமையை Monday எனவும் உலகநாடுகள் இன்று வரை தழுவி வருகின்றன.

நமது பஞ்சாங்கப்படி பானு வாஸர, இந்து (ஸோம), வாஸர, பௌமவாஸர, ஸௌம்ய வாஸர, குருவாஸர, ப்ருகு வாஸர, ஸ்திர வாஸர என்று ஏழு கிழமைகளைச் சொல்கிறோம்.

**நக்ஷத்ரே**

அச்வினி முதல் ரேவதி வரையிலான 27 நக்ஷத்திரங்களை நாம் அறிவோம். ஜன்மத்திற்கு நக்ஷத்திரத்தையும் மரணத்திற்கு திதியையும் பிரதானமாக கொள்கிறோம். சான்றோர்களின் ஜெயந்திகளை நக்ஷத்திர அடிப்படையிலும், இறையெய்திய குரு பூஜைகளை அந்த திதி அன்றும் கொண்டாடுகிறோம்.

**யோகம்**

பஞ்சாங்கம் எனும் சொல்லிற்கு, ஐந்து அங்கங்களை விவரிக்கும் நூல் என்பது பொருள், கிழமை, திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், ஆகிய ஐந்தின் பலாபலன்களை பஞ்சாங்கம் விளக்குகிறது. விஷ்கம்பம் முதல் வைதிருதி வரை 27 யோகங்கள் உள்ளன. அவைகளின் பெயர்களை பஞ்சாங்கத்தில் பார்த்தறியலாம். ஒரு தடவை 27 யோகங்கள் முடிய 25 அல்லது 26 நாட்கள் ஆகின்றன.

**கரணம்**

பவம் முதல் கிம்ஸ்துக்னம் வரை 11 கரணங்கள் உள்ளன. ஒரு நாளில் இரண்டு கரணங்கள் வரும் எனவே ஒரு கரணம் அரை நாளுக்கு சமமாகும்.

# கலச பூஜை

பஞ்ச பாத்திரத்தில் (ஒரு டம்ளரில்) சுத்தமான நீர் பாதியளவுக்கு வைக்கவும். (பஞ்ச பாத்திரம் தேவ வடிவானவை) பஞ்ச பாத்திர நீர் புனித நீருக்கு ஒப்பானது. கங்கை-யமுனை-கோதாவரி-நர்மதே-சிந்து-காவேரியெனச் சொல்லி அனைத்து நதிகளையும் அங்கே எழுந்தருளவைப்பதே கலச பூஜையாகும்.



தீர்த்த கலசத்தை நன்றாக அலங்கரித்து அட்சதையும் புஷ்பமுமிட்டு கைகளால் தொட்டபடி மந்திரங்கள் சொல்லவும்.

கங்கேச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி!

நர்மதே ஸிந்து காவேரி ஜலே ஸமின் [redacted]ன்னிதம் குரு!!

சிறிது நீரெடுத்து பூஜா பொருள்களிலும் தன் மேலும் (கலச நீர்) தெளிக்கவும். அர்க்ய பாத்யமும், ஸ்நானம் ஆசமனீயமுமாகிய உபச்சாரங்களையெல்லாமே இப்புனித நீரினால் இறைவனுக்கு வழங்கிடவும். தர்ப்பைப்புல்லோ உத்தரணியோ புனித நீரெடுக்கப் பயன்படுத்தவும்.

# சங்க பூஜை

கலசதீர்த்தத்தால் சங்கை நிரப்ப வேண்டும். சங்கு இல்லாத கோவில்களில் சங்கு பூஜையைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சங்கைச் சந்தனம் குங்குமம் மற்றும் புஷ்பம் வைத்து அலங்கரிக்கவும்.

சங்கை கையால் எடுத்துச் சங்குக் காயத்ரி மந்திரத்தைச் சொல்லவும்.

பாஞ்ச ஜண்யாய வித்மஹே

பாவமானய தீமஹி தன்ன சங்கபிரசோதயாத்

புஷ்பத்தால் அர்ச்சனை செய்யவும்

சங்கயா நம

தவளாய நம

பாஞ்சஜன்யாய நம

ஜனார்த்தநாய நம

பிரஹ்மணே நம

த்வம் புராஸாதரோத்பந்நோ விஷ்ணு நாவித்ருதகரே

தேவைஸ்ச பூஜித-ஸர்வை பாஞ்ச ஜந்யநமோஸ்துதே

சங்கராஜாய நம-ஸமஸ்த உபசாரான் ஸமர்ப்பயாமி

சங்குதீர்த்தத்தால் தன்மீதும் பூஜாதிரவியங்களின் மீதும் தெளித்துக் கொள்ளவும்.

# ஆத்மார்த்த பூஜை

பிறர்நலனுக்காக பூஜை செய்வது பரார்த்த பூஜை அதாவது கோவிலில் விக்ரகங்களுக்கு செய்வது. நமது உடல் நலனுக்காக, ஆன்ம முன்னேற்றத்திற்காகச் ஜன்மா எடுத்ததின் கர்மாவை முடிப்பதற்காக செய்வதே ஆத்மார்த்த பூஜை. உடம்புக்குள்ளிருக்கும் உயிராகிய ஆன்மா வளர்ச்சிக்குரிய [redacted]ம பூஜையே ஆத்மார்த்த பூஜை.

**சந்தியாவந்தனம் செய்யலாம். (காலைமதியம்மாலை)**



ஓம் ஆத்மனேநம

ஓம் அந்தராத்மனேநம

ஓம் ஜீவாத்மனே நம

ஓம் ஞானாத்மனே நம

ஓம் பரமாத்மனே நம

சரணாகத்துள்ளே அழுந்திய மாணக்கங்

கானுமளவுங் கருத்தறிவாரில்லை

பேணிப்பெருக்கி நினைவோர்க்கு

மாணிக்கமாலை மனம் புகுந்தானே என்ற திருமத்திரத்தைச் சொல்லி த்யானிக்கவும்.

தனது இஷ்டதெய்வத்தைத் தியானிக்கவும்- நிகழ்கால எண்ணங்களே எதிர்கால வாழ்க்கை. எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்கிறது கீதை. கரப்பான் பூச்சிக் கருவண்டையே நினைத்துக் கொண்டுப் பறக்கத் தொடங்குகிறது. இதைத்தான் திருவள்ளுவர் வெள்ளத்தணய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தலையதுயர்வு என்று சொல்கிறார் தெய்வத்தை நினைத்து நினைத்து தெய்வ நிலைக்குச் சென்று இன்று அருள்வாக்கு சொல்கிறார்கள் பலர் பல இடங்களில்.

# பீட பூஜை

இறைஉருவைத் தாங்கி நிற்கிறப் பீடத்திற்குப் பூஜை செய்வது புனிதம் வாய்ந்தது.

பீடத்தை. சந்தனம். குங்குமத்தால் அலங்கரித்துப் புஷ்பத்தால் அர்ச்சனை செய்து தூபம் தீபம் காட்டவும்.

ஓம் ஆதார சக்தியை நம
ஓம் ஆதி வராஹாய நம
ஓம் ஆதி கூர்மாயை நம
ஓம் அநந்தயாய நம
ஓம் பிருதிவ்யை நம
ஓம் மூலப்பிரக்குதியை நம
ஓம் தசதிக்பாலேப்யோ நம
ஓம் அதித்யாதிநவக்ரஹ தேவதாப்யோ நம
ஓம் ஸகலகுணாத்மசக்தி யுக்தாய யோக பீடாத்மனே நம:

# குருத்யானம்

குரு இல்லாத வித்தை பலனற்றது என்பார்கள். நாம் முதலாவதாக வணங்க வேண்டிய தெய்வம் குரு. குரு என்பவர் நல்ல மார்க்கத்தை நமக்கு காண்பிப்பவர்.

குருவின் நினைப்பும்-மந்திரத்தின் உச்சரிப்பும், தெய்வத்தின் அனுக்ரமும் இருந்தால்தான் மந்திரங்களை சொல்லக்கூடிய ஞானம் வருகிறது ஒருவனுக்கு!

சமயத்தில் மறதி ஏற்பட்டு மந்திரம் சொல்லுகிற தகுதியை இழந்து விடுகிறான் ஒருவன். வெறும் புத்தகப் படிப்பால்மட்டும் மந்திரம் சொல்லக்கூடிய ஆற்றல் வந்து விடாது ஒருவனுக்கு! சமைத்துப்பார் என்றொரு புத்தகத்தை வாங்கி சமைத்துப்பார்த்தார். ஒருவர். ருசித்துப்பார்த்தார் வாயில் வைக்க முடியவில்லை.

புத்தகக் கடையில் என்னய்யா இது என்று கேட்டார். கடைக்காரர் சொன்னார் சமைத்துதான் பார்க்க சொன்னோம்- சாப்பிட்டுப் பார்க்கச் சொல்லவில்லை என்றாராம் அவர்!

குரு தியானத்தின் போது ஏதாவது ஒருவிரிப்பில் அமர்ந்து மிருகி முத்திரை. சின்முத்திரை- அல்லது ஸ்ரீமுக முத்திரை ஒன்றினை செய்து அந்த ஸ்திதியில் குருத்யானம் சொல்ல வேண்டும்.

முத்திரையுடன் செய்வதால் இறைவன் அல்லது இறைவிப் ப்ரீதி அடைவார்கள்.

# குருத்யானசுலோகம்

## குரு வந்தனம்

குரூர் ப்ரஹ்மா குரூர் விஷ்ணு: குரூர் தேவோ மஹேஸ்வரா!
குரு ஸாக்ஷாத் பரப்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம
குரவே ஸ்ர்வலோகானம் பிஷஜே பவரோகினாம்
நிதயே ஸர்வ வித்யானாம் தக்ஷிணாமூர்த்தயே நம
அல்லது
தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

[redacted] -திருமந்திரம்

## குரு காயத்ரி



த்யானரூபாய வித்மஹே ஞானதாத்ரேசதீமஹி
தன்னோ போத ப்ரசோதயாத்
தஷிணாஸ்யாய வித்மஹேத்யானரூபாயதீமஹி
தன்னோபோத பிரசோதயாத்

## ம்ருகிமுத்திரை

சுண்டுவிரலையும்-ஆள்காட்டி விரலையும் நீட்டிக் கொண்டு மோதிரவிரலையும் - நடுவிரலையும் மடக்கிக் கட்டை விரலைத் தொட்டுக் கொண்டிருக்கும்படி இரண்டு கைகளாலும் செய்து தலைக்கும் மேல் இரண்டு கைகளும் தொட்டுக் கொண்டிருக்கும்படி செய்தல் ம்ருகி முத்திரை எனப்படும். அதாவது மான்முத்திரை என்றும் சொல்லலாம்.

## சின் முத்திரை



கட்டைவிரல்ப் பரமாத்மாவாகவும் - ஆள் காட்டி விரல் ஜீவாத்மாகவும் கருதப்படுகிறது வலதுகையின்

கட்டைவிரலையும், ஆள்காட்டி விரலையும் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் நீட்டிப்பிடித்து வைத்தல் சின்முத்திரை என்பதாகும்.

## கண்டா பூஜை

பூஜை செய்வோர் வலக்கையில் மணியெடுத்து மும்முறை இடக்கையால் ஒலித்துப் பிறகே பூஜை செய்வது மரபு.

அந்த மணியையும் பூஜிப்பது தான் பூஜா முறையின் அங்கம். சிவாலய மணிகளில் நந்தி உருவமும். விஷ்ணு ஆலயங்களில் கருட உருவமும் பதிந்திருக்கும். அத்தகைய புனித மூர்த்திக்கும் கலச நீரைத் தெளித்துச் சந்தனமும் குங்குமமும் வைக்கவும்.

சைவ திருகோவில் மணிக்கு
நந்தீச்வர நமஸ்துப்யம் சிவ வாஹன ஸத்தம
க்ருபயாதே பவேத் பக்தி புத்திர்ஸித்திர்பலம் சந! என்றும்
வைஷ்ணவ திருக்கோயில் மணிக்கு
குங்குமாங்கிதவர்ணாய குந்தேந்து தவளாயசி!
விஷ்ணு வாஹ நமஸ்துப்யம் க்ஷேமம் குருஸதாமம
என்று சொல்லி மணி அடித்துக் கொண்டே
ஆகமார்த்தம்து தேவாநாம் கமநார்த்தம்து ராக்ஷஸாம்!
கண்டாரவம் கரோம் யாதௌதேவதா ஆஹ்வாந லாஞ்ச்சநம்
என்று சொல்ல வேண்டும். மணி ஒலிகேட்டு அசுர சக்தி மிரண்டோட தேவர்கள் வந்து இறங்கி அருள் பாலிப்பார்கள்.



## பிராணப் பிரதிஷ்டை

விக்ரகங்களை வழிபாடு செய்பவன் இந்து. அபிஷேக அலங்காரம் செய்பவன் இந்து. இந்திரியங்களை அடக்கி ஆள்பவன் இந்து என்றும் பொருள் கொள்ளலாம். வளமான வாழ்வுக்கும்-ஆன்மீக மேம்பாட்டுக்கும் இறை வழிபாட்டு முறையை நமக்கு அருளியுள்ளவர்கள் நமது முன்னோர்களான மகரிஷிகள்.

பக்தி மார்க்கங்கள்-விக்ரக ஆராதனைகள் யாகங்கள் அதில் அடங்கும்.

கடவுளின் சிறப்பான குணங்களை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட பலன்களைப் பெற அந்தந்த மூர்த்திகளின் பூஜைகளை உபாசனைகளை

செய்கிறோம். விஷேச பூஜைகளுக்கு பிராண பிரதிஷ்டை செய்யப்படவேண்டும்.

சூரியன் ஆரோக்கியத்திற்கும். சரஸ்வதி கல்விக்கும், லட்சுமி செல்வத்திற்கும், சக்தி-அனுமன் வீரத்திற்கும், தட்சிணாமூர்த்தி ஞானத்திற்கும் பூஜை செய்கிறோம்.

# 20 ஷோடச உபசாரங்கள்

நீர் நிலம் காய்கனி எல்லாம் படைத்தேன் பூமியில்நான். படைத்தவனுக்கே தராமல் பாராமுகமாய் சாப்பிடுபவன் திருடனுக்கு ஒப்பாவான் என்று சொல்கிறார் பகவான் கீதையில்! இருப்பதை இறைவனுக்கு படைத்து அதன்பிறகே நாம் அனுபவிக்க வேண்டும் என்பதே பூஜையின் நோக்கம்.

ஏழ்மை- கல்வி- வேலைநிமித்தம் காரணமாக ஏனையோரால் [redacted]வான பூஜையை செய்யமுடிவதில்லை இருப்பினும்- பணமோ- பொருளோ- இல்லாத நிலையில் சிறிய அளவிலோ-பெரிய அளவிலோ பூஜை செய்வதற்குரிய வழிமுறைகள் இடம் பெற்றுள்ளன.

வீட்டுக்கு வருகிற விருந்தாளிகளுக்கு உபசரிக்க எதுவுமில்லை என்பதற்காக கதவை கண்ணத்தில் அறைவதில்லை. அன்போடு உபசரித்து தன்னாலியன்றதை அவருக்கு கொடுக்கிறோம். அப்படித்தான் பூஜை பொருள்கள் இல்லாமற்போனாலும் மந்திரங்களை மட்டுமாவது சொல்லி இறைவனை வழிபட வேண்டும்.

பொன்னை வைத்த இடத்தில் பூவை வைக்க வேண்டும். பட்டாடைக்குப் பதில் பருத்தி ஆடை வைக்க வேண்டும். பல்சுவை விருந்துக்குப் பதிலாக பழங்கள் வைக்க வேண்டும். எதுவுமில்லையென்றால் தண்ணீரையாவது காணிக்கையாக்க வேண்டும்.

ஒரு சமயம் அரசன் கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்ய சிவனை அழைத்தார். அதே நாளில் சென்னைக்கு அருகே திருநின்றவூரில் பூசல நாயனார் உள்ளத்தில் கோவில்கட்டி அதே தேதியில் கும்பாபிஷேகம் செய்ய சிவனை மனமுருகி வேண்டினார். பகவானோ உள்ளத்தில் கட்டிய கோவிலுக்கே முதலில் வந்து கும்பாபிஷேகம் செய்தார். எனவே தன்னாலியன்ற சிறிய அளவிலோ பெரிய அளவிலோ பூஜைகள் செய்ய வேண்டும்.

1. **தியான சுலோகம்** - பூஜைகள் செய்வோர் மூர்த்தியை மனத்தால் நினைத்தோ மூர்த்திக்கு முன்னின்றோ மூர்த்தியை வர்ணித்தல்.

2. **ஆவாஹநம்** - தோன்றச் செய்தல்- பூஜை செய்கிறவர் விக்ரஹத்திலோ, கலசத்திலோ தேவதைக்குரிய மந்திரங்களைச் சொல்லி அக்ஷதையும் புஷ்பமுமிட்டு தெய்வத்தை எழுந்தருளச் செய்தல்.

3. **ஆசனம்** - அமர இடமளித்தல்- முன்னாடியே ஆசனத்திலமர்த்தியுள்ளதால் தேவதைக்குரிய சுலோகங்களைக் கூறியவாறு புஷ்பாக்ஷதைகளை முகத்தருகே காண்பித்து ஆசனத்திலமர்த்தியதாகப் பாவனை செய்தல்.

4. **பாத்யம்** - கால் அலம்புதல் - உத்தரணியில் தீர்த்தமெடுத்து தேவதைத் திருவடியருகே காட்டி வேறு பாத்திரத்திலிடுதல்.

[redacted] 5. **அர்க்யம்**- கையலம்ப நீரளித்தல் - உத்தரணியிலெடுத்த தீர்த்தத்தை தேவதை கைகளிரண்டிலும் அளிப்பது போன்ற பாவனையில் மாற்றுப் பாத்திரத்திலூற்றுதல்.

6. **ஆசமநீயம்**- குடிக்க நீர் கொடுத்தல்- சிறிதளவு தீர்த்தமெடுத்து தேவதை வாயருகே காட்டி இன்னொரு பாத்திரத்தில் ஊற்றுதல்.

7. **மதுபர்க்கம்**- நீராகாரமளித்தல்-பாலும் தயிரும், தேனும் நெய்யும் சம அளவிலே கலந்து பகவானின் வாயருகே காண்பித்தல்.

8. **பஞ்சாமிர்தம்** - பால் பழத்தோடு தேன் நெய்யும் சர்க்கரையும் கலப்பதால் கிடைக்கின்ற பஞ்சாமிர்தத்தை இறைவனுக்கு அபிஷேகம் பண்ணலாம். பிறகு பாத்திரத்திலே எடுத்து வைத்துப் பிரசாதமாகப் பக்தர்களுக்கு வழங்கலாம்.

9. **சுத்தோதக ஸ்நாநம்**- குளிக்க வைத்தல்-தூய்மையான நீரில் அபிஷேகம் செய்யவும்.

10. **வஸ்த்ரம்** - ஆடை அணிவித்தல் - புதிதாகவோ தூய்மையானதாகவோ ஒரு வஸ்த்திரத்தை உடுத்திவிடுதல்.

11. **உபவீதம்**- பூனூல் போடுதல்- பூனூல் ஒன்று அணிவிக்கவில்லையென்றால் அட்சதையை கொஞ்சம் ஸமர்ப்பிக்கவும்.

12. **கந்தம்**- சமயச் சின்னம் அணிதல் - சைவராக இருந்தால்,

விபூதியும், வைணவராக இருந்தால் திருமண்ணுமிட்டு நெற்றியிலும் மார்பிலும் சந்தனம் சமர்ப்பித்தல்.

13. **அக்ஷதை-** மஞ்சளாலோ குங்குமத்தாலோ ஆன அக்ஷதை ஸமர்ப்பித்தல்.

14. **புஷ்பம்-** மலர்மாலை அணிவித்ததும் பலவகையான உதிரிப் புஷ்பங்களினால் தலை, மார்பு, தோள் மற்றும் திருவடிகளில் ஸமர்ப்பிக்கவும்.

15. **தூபம்** - சாம்பிராணி- தசாங்கத்தைத் தணல்மேல் தூவி எழும்புகையை சுவாமிக்குக் காட்டவும்.

16. **தீபம்-** பலவகையான தீபங்களேற்றி பகவானுடைய முகத்திலிருந்து பாதங்கள் வரை பலமுறை பிரதக்ஷிணமாகச் சுற்றுதல்.

17. **நைவேத்யம்** - உணவு உண்பித்தல் அன்னமும்- [redacted] பாயஸமுமுள்ள -பாத்திரத்தில் கொஞ்சமாக நெய்யூற்றி இறைவர்க்கு ஸமர்ப்பித்தல்.

18. **மந்திரபுஷ்பம்** -வேத மந்திரங்களைச் சொல்லி புஷ்பங்களை ஸமர்ப்பித்தல்.

19. **நீராஜனம்** - கற்பூர ஆரத்தி செய்தல்.

20. **பிரார்த்தனை செய்தல்.**

## அபிஷேகம் செய்யும் வரிசை முறைபலன்

1. வாசனை தைலம் அல்லது எண்ணெய்
2. திருமஞ்சனத் திரவியப்பொடி அல்லது மஞ்சள் பொடி (அரிசி மாவு)
3. பஞ்சகவ்யம் (பசும்பால்-பசு நெய்-பசுந்தயிர் மற்றும் கோமயமும் கோஜலமும் கலந்தவை)
4. பஞ்சாமிர்தம் (தேன்-கற்கண்டு-முந்திரி-திராட்சை - பல்வகைப் பழங்கள் மற்றும் நாட்டுச் சர்க்கரை முதலியன)
5. நெய்
6. பால்
7. தயிர்
8. தேன்

9. பழச்சாறு-கறும்புச்சாறு-எலுமிச்சைச்சாறு
10. இளநீர்
11. அன்னம், சிவாலயங்களாக இருந்தால்
12. திருநீரு, சைவ ஆலயங்களாக இருந்தால், மஞ்சள் காப்பு வைணவ ஆலயங்களாக இருந்தால்.
13. சந்தனம் - பன்னீர் - கரைத்தும் உபயோகிக்கலாம்.
14. சங்கு நீர்

கும்பத்தில் தீர்த்தம் தனியாக மந்திரித்து வைக்காமல் போனால் சந்தன அபிஷேகமே நிறைவாகும், அதன்பின் வேறு எந்த அபிஷேகமும் பண்ணக் கூடாது அதையும் மீறி செய்தே ஆகவேண்டும் என்கிற இக்கட்டான சூழ்நிலை வந்து விட்டால், இறைவன் அல்லது இறைவியின் பாதத்தில் ஊற்றிவிடலாம்.

பூஜை செய்கையில் ஸ்நான அபிஷேகமென்றும் மற்றவைகளை அலங்காரமென்றும் அழைக்கிறோம்.

நைவேத்யானந்தரம் ஆசமணீயம் ஸமர்ப்பயாமி- கிண்ணத்தில் நீர் விடவும்.

மஹா கணபதயே நம தாம்பூலம் ஸமர்ப்பயாமி என்று சொர்லி வெற்றிலை பாக்கைச் சமர்ப்பிக்கவும்.

கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி
கற்பூர தீபம் காட்டவும்
மந்தர புஷ்பம் ஸமர்ப்பயாமி
(மலர்தூவி வணங்கவும்)
ஆத்மப்ரதக்ஷிணம், நமஸ்காரம் செய்து விநாயகர் துதிகள் சொல்லவும்.

## அபிஷேக விளக்கம்

விக்ரகங்களுக்கு அபிஷேகம் செய்கையில் அபிஷேகப் பொருட்களிலிருக்கும் மின் அலைகள் விக்ரகத்தில் பாய்ந்து ஆகர்சன சக்தியை உருவாக்குகிறது. வான வெளியில் மிதந்து கொண்டிருக்கிற மந்திர ஒலி அலைகளை ஈர்க்கிறது. தன்பால்!

தரிசிக்கும் பக்தர்களுக்கு விக்ரக சக்திவெளிப்பட்டு குளிர்ச்சியடையச் செய்கிறது பக்தர்களை, திருப்தியும்- மகிழ்ச்சியும் அடைகிறார்கள் பக்தர்கள். ஒளி அலைகளை ஈர்த்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் ஆண்டனா போல் விக்ரகம் செய்யப்படுகிறது. காற்றாடி இல்லாத கர்பக்கிரகம் சர்வகாலமும் குளிர்ச்சியாக உள்ளதே! கோடை வெய்யிலுக்கும் கொதிக்கும் அனலுக்கும்! அது எப்படி!

அர்ச்சகர் சொல்லும் மந்திரங்கள் விக்ரகத்தில் பட்டு எதிரொலிக்கப்பட்டு காற்றில் பரவி பக்தர்களினால் உணரப்பட்டு புத்துணர்ச்சியையும் புதுப்பொலிவும் மனநிறைவையும் மாங்கல்ய நலனையும் பெறுகிறார்கள்.

இம்மாதிரியான பலன்களை. ஆலயம் செல்வோர் தொடர்ந்து பெறவே ஆறுகால பூஜை உருவாக்கப்பட்டுள்ளது ஆலயங்களில்! விக்ரக பிரதிஷ்டை காலத்தில் மந்திர தகடு பதித்துள்ளதால் அர்ச்சகர் சொல்லுகிற மந்திரங்களை விக்ரகங்கள் வாயிலாக ஈர்த்து காந்தம் மெல்ல மெல்ல அருகிலுள்ள பொருளை காந்தமாக்குவது போல் பக்தர்களையும் ஈர்த்து ஆன்ம சக்தி பெற்றவர்களாக மாற்றுகிறது விக்ரகம்.

## அபிஷேக பலன்

| | | |
|---|---|---|
| தைலாபிஷேகம் | - | சுகம் கொடுக்கும் |
| [redacted]ப்பொடி | - | கடனைப் போக்கும் |
| ல்லி முள்ளிப்பொடி- | | வியாதியைப் போக்கும் |
| மஞ்சள் பொடி | - | வசீகரணம் உண்டாகும் |
| ஜலதிரவியம் | - | சௌபாக்கியம் தரும் |
| பஞ்சகவ்யம் | - | தூய்மை உண்டாக்கும் |
| பஞ்சாமிர்தம் | - | புஷ்டி அளிக்கும் |
| நெய் | - | வெற்றி மோட்சம் தரும் |
| பால் | - | ஆயுள் பெருகும் |
| தயிர் | - | மக்கட் பேறு அளிக்கும் |
| தேன் | - | சுகமளிக்கும் |
| கரும்புச்சாறு | - | பிணி நீக்கும் |
| சர்க்கரை | - | பகையை அழிக்கும் |
| வாழைப்பழம் | - | பயிரை வளர்க்கும் |
| மாம்பழம் | - | சந்தானத்தை அளிக்கும் |
| மாதுளை | - | கோபத்தை நீக்கும் |
| நாரத்தை | - | நேர்மை அளிக்கும் |
| எலுமிச்சை | - | எம பயத்தை அலிக்கும் |
| அன்னம் | - | சாம்ராஜ்யம் தரும் |
| இளநீர் | - | போகம் அளிக்கும் |
| சந்தனம் | - | செல்வத்தை அளிக்கும் |

# விநாயகர் பூஜை



சுப காரியம் என்று வந்துவிட்டாலே எல்லா இந்துக்களும் விநாயகரைத்தான் முதலில் வழிபடுவார்கள். காரணம் ஆதிக்கடவுள் என்பதால் அரியின் மகன் என்பதால் அனைத்துக் காரியமும் தடையின்றி நடக்கும் என்பதால்! இந்துக்களின் மரபாகத் தொன்று தொட்டு நடக்கிறது இவ்வழிபாடு.

## பூஜைக்கு தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| மஞ்சள்பொடி | ஊதுபத்தி |
| சந்தனம் | கற்பூரம் |
| குங்குமம் | பஞ்சபாத்திரம் |
| அட்சதை | தூபக்கால் |
| ஒரு முழம்பூ | சூடக்கால் |
| உதிரிப்பூ | தீபம் |
| தேங்காய் | தட்டு |
| பழம் | வாழை இலை |
| பொங்கல் | கிண்ணம் |
| தாம்பூலம் | மணி |

மங்கள சடங்கைத் தொடங்குவோர் குத்துவிளக்கேற்றி மணி அடிப்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

மஞ்சள் பொடியில் பிள்ளையார் செய்து சந்தனமும் குங்குமமிட்டுக் கிழக்காக வைக்கவும்.

பலகையிலோ விரிப்பிலோ பூஜை செய்பவர்கள் வடக்கு முகமாக அமரவும். எக்காரணத்தை முன்னிட்டும் வெறுந்தரையில் உட்காரக் கூடாது.

நுனி முறியாத பச்சரிசியில் மஞ்சள் பொடி கலப்பதே அட்சதையாகும்.

ஆக மார்த்தம் து தேவானாம் கமனார்த்தம் துரக்ஷஸாம்! தேவதா பூஜனார்த்தாய கண்டாநாதம் கரோம்யஹம் எனும் சுலோகம் சொல்லி வைதீக ஆசமனம் அல்லது தத்வ ஆசமனம் செய்யவும். கைகள் இரண்டிலும் கொஞ்சம் அட்சதை வைத்தபடித் தலையிலே குட்டிக்கொள்ளவும்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்!

ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே!

என்று சொல்லிப் பிராணாயாமம் செய்யவும். வலது தொடைக்கு மேல் இடக்கையைக் மேலாகப் பார்த்தும் வலக்கையை கீழாகப் பார்த்தும் வைத்து சங்கல்பம் செய்யவும்.

ததேவ லக்னம் சுதினம் ததேவ
தாராபலம் சந்த்ர பலம் ததேவ!
வித்யாபலம் தைவ பலம் ததேவ
லக்ஷ்மீ பதே அங்க்ரியுகம் ஸ்மராமி

கரிஷ்ய மாணஸ்ய கர்மண நிர்விகனேன பரிஸமாப்த் யர்த்தம் ஆதௌ மகாகணபதி பூஜாம் கரிஷ்யே

வலது கையால் அட்சதையை எடுத்து வடக்கிலே போட்டு
வழக்கம்போல் கையைத் தண்ணீரால் துடைக்கவும்.
அட்சதையும் புஷ்பமும் கையிலெடுத்து
அகஜானன பத்மார்க்கம் கஜானன மஹர்நிசம்!
[redacted] அநேகதந்தம் பக்தானாம் ஏக தந்த முபாஸ்மஹே!!
அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸ்ரீ முகம் கணபதிம்த்யாயாமி

ஆவாஹயாமி என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாரின் தலையிலே மெதுவாகப் போடவும்.

மஹா கணபதி நம: ஆஸ்னம் ஸமர்ப்பயாமி
(பிள்ளையார்மேல் அட்சதை
போடவும்)
பாத்யம் ஸமர்ப்பயாமி
(பஞ்ச பாத்திரத்திலிருக்கும்
நீரை சிறிதளவுக்கு
உத்தரணியிலெடுத்துப்
பிள்ளையாருக்கு
அருகாமையிலுள்ள
கிண்ணத்தில் விடவும்.)
: அர்க்யம் ஸமர்ப்பயாமி
: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
: மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி
: ஸ்நானம் ஸமர்ப்பயாமி
: மஞ்சள் பிள்ளையார்மேல்
மழைத்துளிகள் போல்
தண்ணீர் தெளிக்கவும்

: ஸ்நானாந்தரம் ஆசமணீயம்
ஸமர்ப்பயாமி
(அர்க்ய பாத்திரத்தில் தண்ணீர்விடவும்)
வஸ்த்ரார்த்தம்
அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(அட்சதை போட வேண்டும்)
உபவீதார்த்தம் அக்ஷதான்
ஸமர்ப்பயாமி கந்தன் தாராயாமி
(ஏற்கனவே சந்தனமும் குங்குமமும்
வைத்திருப்பதால்
பாவனை மட்டும் செய்யவும்)

மஹா கணபதியே நம: கந்தஸ் யோபரி ஹரித்ரா
குங்குமம் ஸமர்ப்பயாமி
(குங்குமம் இடுவது
[redacted]
போன்ற பாவனை) அக்ஷதான்
ஸமர்ப்பயாமி சிறிதளவு அட்சதை
போடவும்) புஷ்பாணி
ஸமர்ப்பயாமி முல்லைச்சரம்
அல்லது கதம்பச்சரம் சாற்றவும்.

: புஷ்பம் பூஜயாமி
: விநாயகருடைய பதினாறு
பெயர்களை ஒவ்வொன்றாகச்
சொல்லி மலர் தூவவும்.
ஓம் ஸுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்ணகாய நம
ஓம் லம்போதராய நம
ஓம் விகடாய நம
ஓம் விக்நராஜாய நம
ஓம் கணாதிபாய நம
ஓம் தூம கேதவே நம
ஓம் கணாத்யக்ஷாய நம
ஓம் பாலசந்த்ராய நம

ஓம் கஜான நாய நம
ஓம் வக்ரதுண்டாய நம
ஓம் சூர்ப்பகர்ணாய நம
ஓம் ஹேரம்பாய நம
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம
ஓம் மஹாகணாதிபதயே நம

: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி
: தூபம் பரிமள ஆக்ராபயாமி
: ஊதுபத்தி சாம்பராணி காட்டவும்
: தீபம் தர்சயாமி
: சிறிது தீபம் காட்ட வேண்டும்

பொங்கல் அவல் அபிஷேகங்களில் ஏதாவதொன்றில் நிவேதனம்
[redacted] செய்யவும்.


ஓம் ப்ரார்ப்பணம் ப்ரம்மஹவீர்
ப்ரம்மாக்ணௌ ப்ரம்மணாஹுதம்
ப்ரம்மைவ தேன கந்தய்வம்
ப்ரம்ம கர்ம ஸமாதின
ஓம் ப்ராணாய ஸ்வாஹா
ஓம் அபாணாய ஸ்வாஹா
ஓம் வயானாய ஸ்வாஹா
ஓம் உதானாய ஸ்வாஹா
ஓம் ஸ்மானாய ஸ்வாஹா
ஓம் ப்ரம்மனே ஸ்வாஹா

என்று நைவேத்யப் பொருட்களுக்கு மேல் நீரை சுற்றி மஹா கணபதியே நம. நாளிகேர கண்டத்வயம் (தேங்காய் மூடிகள் இரண்டு) கதலீபலம் (வாழைப்பழம்) மஹாநைவேத்யம் நிவேதயாமி என்று அர்க்ய கிண்ணத்தில் நீர்விடவும்.

கற்பூர நீராஜனம் செய்து நிறைவு செய்யவும்

வீடு தேடி வந்த உறவினரை வரவேற்று உபசரித்து ஆசனத்திலமர்த்தி அளவளாவி அகமகிழ்வோம். இறைவனையும் அப்படி வரவேற்று உபசரிப்பதே உண்மையான பூஜையாகும்.

# விநாயகர் தியான சுலோகம்



சிவ தனய வரிஷ்டம் சர்வ கல்யாண மூர்த்திம்
பரசு கமல ஹஸ்தம் பூஷிதம் மோதகேன
அருண குளிமமாலா வ்யாளலம் போதரம் தம்
மம ஹ்ருதய நிவாஸம் ஸ்ரீகணேசம் நமாமி!!

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலசார பக்ஷிதம்!
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்!!

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித ஸூத்ர!
வாமனரூப மஹேஸ்வர புத்ர
[redacted] விக்ன விநாயக பாத நமஸ்தே!!

### தமிழில்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

### காயத்ரீ

தத் புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி!
தன்னோ தந்திப் ப்ரசோதயாத்!!
ஏகதந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி!
தன்னோ தந்தி ப்ரசோதயாத்!!

## பூஜையினுடைய பொதுவான கருத்து

நமக்கு மிகவும் வேண்டிய ஒரு முக்கியமான பெரிய மனிதரையோ, உத்தியோகஸ்தரையோ, மந்திரியையோ, உறவினரையோ நமது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தால், அவருக்கு என்னென்ன விதமாகவெல்லாம் உபசாரம் செய்து, அவரை மகிழ்வித்து, அவரால் ஆகவேண்டிய காரியம் ஏதாவது இருந்தால் அவரிடம் அதைத் தெரிவித்து அந்தக் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி எப்படி கேட்டுக் கொள்வோமா, அதே போன்றதுதான் பூஜையின் போதும் நாம் செய்கின்ற காரியங்கள் அத்தனையும் என்பதை நீங்கள் நினைவில் கொண்டால், பூஜையின்போது ஏன் சில காரியங்களை, ஒரு குறிப்பிட்ட வரிசைக் கிரமத்திலேயே செய்கிறோம் என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரியும்.

**உதார[redacted]ாக**

நீண்ட தூரத்திலிருந்து ஒரு உறவினர் வந்தால் முதலில் அவரை 'வாருங்கள்' என்று வரவேற்று, அமருவதற்கு ஆசனம் (இருக்கை) தந்து, கை, கால் அலம்பத் தண்ணீர் கொடுத்து, குடிப்பதற்கு ஜலம் கொடுத்து, ஸ்நானம் செய்வித்து, ஆடை உடுக்கச் செய்து, அலங்காராதிகள் செய்த பிறகு, அறுசுவை உண்டி படைத்து மகிழ்வித்து, வெற்றிலை, பாக்கு, தாம்பூலம், பழவர்க்கங்களைக் கொடுத்து, பிறகு வந்த விஷயத்தைக் கேட்டு அல்லது நமது கோரிக்கைகளை அவர்முன் வைத்து, அவருடைய ஆசிகளையோ, ஆதரவையோ, வாக்குறுதிகளையோ பெற்று, அதன் பிறகு அவரை ஊருக்கு வழி அனுப்பி வைக்கிறோம்.



பூஜையின்போது, அதேபோல, அகிலாண்டகோடி பிரம்மாண்டங்களுக்கெல்லாம் நாயகனாக உள்ள பரம்பொருளை மனமுருக வேண்டி, நம்மிடத்திற்கு வரவழைத்து, மேற்சொன்னபடி அவருக்கு நமது பாவனைகளின் மூலம் பலவிதமாக மரியாதைகளைச் (உபசாரங்களைச்) செய்து, பிறகு

நமது வேண்டுகோளை அவரிடம் தெரிவித்து, அருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து, பிறகு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் அவரை வழி அனுப்பி வைக்கும் இந்தப் பக்தி பூர்வமான வரிசைக் கிரமத்தைத்தான் நாம் 'பூஜை' அல்லது 'வழிபாடு' என்று சொல்கிறோம்.

இந்தப் பூஜை அல்லது வழிபாடானது, அவரவர் சௌகரியம், நேரம் ஆகியவற்றை அனுசரித்து, சுருக்கமாகவோ அல்லது விஸ்தாரமாகவோ அமைந்திருக்கும். பூஜகர் ஆலயத்தில் செய்யும் பூஜையிலும் சரி அதுபோலவே பக்தர்கள் தத்தம் இல்லங்களில் செய்யும் பூஜையிலும் சரி-கீழ்க்கண்ட அங்கங்கள் அவசியம் அமையும்.

1. ஆசமனம்
2. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு சுக்லாம்பரதரம்
3. ப்ராணாயாமம்
4. ஸங்கல்பம்

[redacted]லச பூஜை

6. சங்க பூஜை
7. ஆத்ம பூஜை
8. பீட பூஜை
9. குரு தியானம்
10. ப்ராணப்ரதிஷ்டை
11. ஷோடஸோபசாரங்களான:

| | |
|---|---|
| ) அ. ஆவாஹனம், -1 | ஆ. ஸ்வாகதம், -10 |
| இ. ஆஸனம் -2 | ஈ. அர்க்யம் -11 |
| உ. பாத்யம், -3 | ஊ. ஆசமனீயம் -12 |
| எ.மதுபர்க்கம் -4 | ஏ.ஸ்நானம் -13 |
| ஐ.வஸ்த்ரம் -5 | ஒ. உபவீதம் ஆபரணம் -14 |
| ஓ. கந்தம் புஷ்பம் -6 | ஔ. தூபம் -15 |
| க. தீபம் -7 | கா. நைவேத்யம் தாம்பூலம் -16 |
| கி. நீராஜனம் -8 | கீ. மந்த்ர புஷ்பாஞ்சலி, -17 |
| கு. ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் -9 | கூ. அர்க்யம் -18 |

ஆலய மூர்த்திகளுக்குப் பூஜை செய்யும்போது ஸ்நானம்-**அபிஷேகம்** என்று வழங்கப்படும். வஸ்த்ரம், உபவீதம், ஆபரணம், கந்தம், புஷ்பம் ஆகியவை **அலங்காரம்** என்ற பொதுப் பெயரால் அறியப்படும்.

# ஆசமனம்

அகத்தை சுத்தி செய்து கொள்ள நாம் மேற்கொள்ளும் புறக் கிரியைதான் ஆசமனம் என்பது.

ஒரு உத்தரிணியில் சிறிதளவு நீர் (ஒரு முழு உளுந்து மூழ்கும் அளவு) எடுத்து வலது உள்ளங்கையில்-சுண்டு விரல், கட்டை விரல், ஒழிந்த கட்டை விரல் மற்ற மூன்று விரல்களையும் ஒன்றாய் இணைத்துச் சாய்த்துக் குழிந்த உள்ளங்கையில் விட்டு மூன்று தடவை வாயில் எச்சில் படாமல், அங்குஷ்டத்தின் அடி அதரத்திலே படும்படியாக அடி நாக்கு முதல் உந்தி வரை ஓர் நூலிழைப் பிரமாணம் செல்லும்படி நீரை உட்பருக வேண்டும்.



ஒவ்வொரு முறை அருந்தும் போதும் கீழ்க்கண்ட மந்திரங்களை முறையே கூற வேண்டும்.

ஓம் ஆத்ம தத்வாய நம:
ஓம் சிவ தத்வாய நம:
ஓம் ஸர்வ தத்வாய நம:

அல்லது

ஓம் ஆத்ம தத்வாய ஸ்வதா
ஓம் வித்யா தத்வாய ஸ்வதா
ஓம் சிவ தத்வாய ஸ்வதா

அல்லது

ஓம் அச்யுதாய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் கோவிந்தாய நம:

மூன்று முறை அருந்தியவுடன் 'ஓம் அஸ்த்ராய பட்' என்று பெருவிரலடியால் உதடுகளைத் துடைக்க.

'ஓம் அஸ்த்ராய் பட்' என்று கையலம்புக. 'ஓம் ஹ்ருதயாய வௌஷட்' என்று பெருவிரல் மோதிரவிரல் நுனிகளைச் சேர்த்து.

வலது தாடை — இடது தாடை
வலது கண் — இடது கண்
வலது நாசி — இடது நாசி
வலது காது — இடது காது
வலது தோள் — இடது தோள்

உந்தி
[redacted]
உச்சி

இவைகளைத் தொடுக.

இது சைவர்கள் பின்பற்றும் முறை:

வைதிக மார்க்கத்தில் ஸ்மார்த்த வைஷ்ணவர்கள் கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, விஷ்ணோ, மதுஸுதனா, த்ரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, ஹ்ருஷீகேசா, பத்மநாபா, தாமோதரா-என்று பன்னிரு திருநாமங்களைக் கூறி இந்த்ரியங்கள் அனைத்துக்கும் ரக்ஷை இடுவது மரபு.

ஆசமனம் கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ செய்ய வேண்டும். மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் செய்யக் கூடாது.

கைகள் முழந்தாள்களுக்கிடையில் அடங்கியிருக்கும்படி குந்திட்டு உட்கார்ந்து செய்ய வேண்டும்.

## 2. சுக்லாம்பரதரம்



எந்த ஒரு பூஜையைத் தொடங்குவதற்கு முன்னும் இடையூறுகள் எதுமின்றி அந்தப் பூஜை நடந்திட விக்னங்களைக் களையவல்ல விநாயகரை வேண்டி முன் தலையின் இருபுறங்களிலும் அதாவது நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வது வழக்கம். அப்போது சொல்லப்படும் சுலோகம் ''சுக்லாம்பரதரம்'' என்று தொடங்குவதால் எந்த ஒரு கார்யத்தையும் நாம் தொடங்க முனையும்போது'' என்ன இந்தச் செயலைச் செய்து முடிக்கிறதுன்னு சுக்லாம்பரதரம் குட்டிக் கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது'' என்று கேட்கும் பழக்கமே வந்து விட்டது.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே

இதில் கணேசரை வர்ணிக்க ஐந்து வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. சுக்லாம்பரதர: வெள்ளை வஸ்த்ரம் கட்டிக் கொண்டிருப்பவர்.
2. விஷ்ணும்: எல்லா இடத்திலேயும் பரவியிருப்பவர்
3. சசிவர்ணம்: நிலா மாதிரி பால் போன்ற நிறமுடையவர்.

4. சதுர்புஜ: நான்கு கைகள் உள்ளவர்

5. ப்ரஸந்ந வதனம்: நல்ல மலர்ந்த முகமுள்ளவர்.

இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும்.

வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக்கையால் வலப்புறத்திலும் முன் மண்டையில் முஷ்டிகளால் மெதுவாக குட்டிக் கொள்வது முறை.

தலையில் குட்டிக் கொள்ளும் இடத்தில் Temporal Lobe உள்ளது. பேச்சுத் திறன் நன்கு வளர்ச்சியடைய காது கேட்பது அவசியம். ஞாபக சக்தியைத் தூண்டும் நாடிகள் அமைந்துள்ள இடமும் இதுவே.

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும்போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி அங்கே உள்ள அமிர்தம் தேஹம் முழுவதும் பரவச் செய்வதற்கே என யோகிகள் கூறுவர்.


மேற்கண்ட சுலோகத்தைக் கூற இயலாதவர்கள் அல்லது தமிழில் [redacted]ழிபாடு செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட திருமந்திரப் பாடலைக் [redacted]றித் தலையில் குட்டிக் கொள்ளவும்.

இந்தப் பாடலிலும் விநாயகர் ஐந்து விதமாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறார்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## 3. ப்ராணாயாமம்

பூஜையில் ஈடுபடும்போது மனம் ஒருமைப்படுவது அவசியம். மனம் ஒருமைப்படட ப்ராணாயாமம் உதவுகிறது.



புறத்தே மூச்சினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அகத்தே ப்ராணசக்தியை நம் கட்டுக்குள் கொண்டு வர முயல்வதே ப்ராணாயாமம்.

ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மடக்கிக் கட்டைவிரல் மோதிர விரல்களால் மூக்கை இருபுறமும் தொட்டுக்கொண்டு வலது பக்கம் அழுத்தி இடது பக்கம் மெதுவாக மூச்சை இழுத்துப் பின் இருபுறமும் அழுத்தி மூச்சை நிறுத்தி முடிவில் வலது பக்கம் மெதுவாக மூச்சை விடவேண்டும்.

உள் இழுப்பது 'பூரகம்,' நிறுத்துவது 'கும்பகம்,' வெளி விடுவது 'ரேசகம்' எனப்படும்.

பூரக-கும்பக-ரேசகத்தின் கால அளவை 1:3:2 என்ற விகிதத்தில் இருத்தல் சிறந்தது. பூரக-கும்பக-ரேசக மூன்றும் சேர்ந்தது ஒரு ப்ராணாயாமம்.

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்
டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே

என்ற திருமூலர் வாக்கினை உய்த்து உணரவும்.

**இப்பாடலின் பொருள்:**

இடது நாசி மூலம் காற்றினை பதினாறு மாத்திரை அளவு உள்ளிழுத்து-இது ஸ்தூல சரீரத்தில் செய்யப்படுவது-சூக்ஷும சரீரத்தில் இடா நாடியின் மூலம் ப்ராணன் உள்ளிழுக்கப்படுகிறது- வலது நாசி மூலம் மூச்சினை முப்பத்திரண்டு மாத்திரை அளவு நிதானமாக வெளி விடுவது-இதன் மூலம் சூக்ஷும சரீரத்தில் பிங்கலாநாடியின் மூலம் ப்ராண சக்தி வெளிவிடப்படுகிறது-உள்ளிழுத்த காற்றை அறுபத்து நான்கு மாத்திரை அளவு உள் நிறுத்த வேண்டும். சூக்ஷும சரீரத்தில் சுஷும்னா நாடியில் ப்ராண சக்தி நிலை கொள்கிறது.

இந்த அளவு பயிற்சி உள்ளவர்கள் மட்டுமே மேற்கொள்ளத் தக்கது.

'யம்' என்ற பீஜ மந்திரத்தைப் பதினாறு தடவை மனத்தால் கூறியபடி இடது நாசியால் மூச்சை உள்ளிழுத்து, 'ரம்' என்று பதினாறு தடவை நினைத்து மூச்சை நிறுத்தி, 'லம்' என்று பதினாறு தடவை [redacted]னைத்து வலது நாசியால் மூச்சை வெளிவிட்டு, மீண்டும் 'வம்' என்ற பீஜ மந்திரத்தை பதினாறு தடவை நினைத்து வலது நாசியாலேயே மூச்சை உள் இழுத்துக் கொள்வதும் உண்டு. இப்படி மாறி மாறி குறைந்தது மூன்று ப்ராணாயாமம் செய்ய வேண்டும்.



# 4. ஸங்கல்பம்

## (தெளிந்த தீர்மானம்)

ப்ராணாயாமத்துக்குப் பின் ஸங்கல்பம் செய்துதான் எந்த ஒரு சடங்கையும் அல்லது பூஜையையும் ஆரம்பிக்க வேண்டும்.

வலது தொடைமீது இடது கையை மலர்ந்த நிலையில் அதாவது உள்ளங்கை மேல்புறம் இருக்கும்படியாக வைத்து அதன்மீது வலது உள்ளங்கையை வைத்து மூடிக் கொண்டு மந்திரம் சொல்லவும்.

ஸங்கல்பத்தின் ப்ரயோஜனத்தை சாந்தோக்ய உபநிஷத் தெளிவாகக் கூறுகிறது.

''ஸங்கல்பம் மனதினும் பெரிது. எப்போது ஒருவன் ஸங்கல்பிக்கிறானோ அப்போது யோசிக்கிறான்; பேச ஆரம்பிக்கிறான் பேச்[redacted]பெயர் வடிவாகிறது; பெயர் வடிவில் மந்திரங்கள் ஒடுங்குகின்றன மந்தி[redacted]ளில் கர்மங்கள் ஒடுங்குகின்றன.''

தனிமனிதர்கள் தங்கள் இல்லங்களில் பூஜை செய்யும்போது செய்து கொள்ளும் ஸங்கல்பத்தில் தங்கள் குடும்ப நலனுக்காக வேண்டிப் ப்ரார்த்திப்பார்கள்.

ஆலயங்களில் பூஜை செய்வோர் ஆலயம் அமைந்துள்ள கிராமத்தில் அல்லது நகரத்தில் வாழும் அனைத்து மக்களின் நலனுக்காகவும் ப்ரார்த்திக்க வேண்டும்.

ஸங்கல்ப மந்திரத்தில் நமது முன்னோர்களின் தெளிவான பூகோள அறிவும், காலக் கணக்கீட்டு அறிவும் எவ்வளவு துல்லியமானது என்று எடுத்துக் காட்டும் வரிகள் அமைந்துள்ளன.

இனி ஸங்கல்ப மந்த்ரத்தைப் பார்ப்போமா?

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் (வைணவத் திருக்கோயிலானால் ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம்)

சுபே சோபனே முஹூர்த்தே ச்வேத வராஹ கல்பே-வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம்சதிதமே கலியுகே-ப்ரதமேபாதே ஜம்பூத்வீபே-பாரதவர்ஷே-பரதகண்டே-மேரோ: தக்ஷிணே

பார்ச்வே-சகாப்தே-அஸ்மின் வர்த்தமாநே வ்யாவஹாரிகே-சாந்த்ரமாநேந ப்ரபவாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸ்ராணாம் மத்யே-... நாம ஸ்ம்வத்ஸரே ... அயநே... ருதௌ... மாஸே... பக்ஷே... சுபதிதௌ... வாஸரயுக்தாயாம்... நக்ஷத்ர, சுபயோக, சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம்... சுபதிதௌ அஸ்மின் கிராமே வஸதாம் ஸர்வேஷாம் மஹாஜனானாம் ஸர்வ மங்கள ப்ராப்த்யர்த்தம், ஸ்ர்வாரிஷ்ட நிவ்ருத்யர்த்தம், ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் அஸ்மின் தேவாலயே ப்ரதிஷ்டித ... தேவதானாம் ப்ரஸாத ஸித்யர்த்தம் நித்ய பூஜாம் கரிஷ்யே

**தனிநபர் தனது இல்லத்தில் பூஜை செய்யும்போது கீழ்க்கண்டவாறு கூறவும்:**

அஸ்மாகம் ஸஹகுடும்பானாம் க்ஷேம ஸ்த்தைர்ய, வீர்ய, விஜய [redacted] ஆயுராரோக்ய அஷ்ட ஐச்வர்யானாம் அபிவ்ருத்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், ஸமஸ்த துரிதோப சாந்த்யர்த்தம், தர்மார்த்த காம மோக்ஷ சதுர்வித புருஷார்த்த ஸித்யர்த்தம்... ப்ரஸாத ஸித்யர்த்தம் யதாசக்தி த்யாந-ஆவாஹநாதி ஷோடசோபசாரை: ... பூஜாம் கரிஷ்யே.

ஆலய அர்ச்சனை செய்ய வரும் பக்தர்களுக்காக பூஜகர் ஸ்ங்கல்பம் செய்து கொள்ளும்போது ''அத்ய பூர்வோக்த ஏவம் குண விசேஷேண'' என்று ஆரம்பிப்பது உண்டு.

ஒரு தடவை ஸங்கல்பத்தில் கால வர்த்தமானங்களை விவரித்து விட்டதால் திருப்பி விவரிக்காமல், ஏற்கெனவே சொல்லப்பட்ட (பூர்வோக்த) குண விசேஷங்களைக் கொண்ட என்று ஆரம்பிப்பது உண்டு.

அர்ச்சனை செய்ய வரும் பக்தர்களின் கோத்ரம், ஜன்ம நக்ஷத்ரம், ராசி, பெயர்களைச் சொல்லச் சொல்லி-அர்ச்சகர் 'அஸ்மாகம்' என்னும் இடத்தில் கோத்ரோத் பவஸ்ய, நக்ஷத்ரே, ராசௌ ஜாதஸ்ய-பெயர் சொல்லி 'ஸஹகுடும்பானாம்' என்று ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

அர்ச்சனை செய்ய வருவோரின் வேண்டுதல் அறிந்து அதனை ஸங்கல்பத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சதுர்வித புருஷார்த்த ஸித்யர்த்தம் என்பதன் பின் சேர்க்கவும்.

1. ஸத்ஸந்தான ப்ராப்த்யர்த்தம்
2. ஸகலரோக நிவர்த்யர்த்தம்
3. ராஜத்வாரே அனுகூல ஸித்யர்த்தம்
4. சீக்ரமேவ விவாஹ ப்ராப்த்யர்த்தம்
5. வ்யவஹார ஜய அவாப்யர்த்தம்
6. அபம்ருத்யு தோஷ நிவாரணார்த்தம்

என்புன போன்றவை.

ஸங்கல்ப மந்த்ரத்தைத் தமிழில் கூற விரும்பினால் கீழக்கண்டவாறு சொல்லவும்.

[redacted]



இன்றுள பிரம்ம தேவர்க்கு
இரண்டாம் பரார்தம் தன்னில்
கன்றலில் சுவேத வாரஹ
கற்பத்தில் ஏழாம் ஆட்சி

இன்றுள மனுவின் நாளில்
ஏழுநான்காம் கலியில் ஒன்றாம்
நன்றுறு பாதந் தன்னில்
...வருட ...த்திங்கள்
...பிறை ...நாள்
...தாரகை நல்யோகத்தில்
நாவலந் தீவில் நண்ணும்
பாரதவர்ஷ நாப்பண்
மேவிடும் பரத கண்டம்
மேருவின் தென்பால் இந்த
தேவரும் விரும்பும் புண்ணிய
நாட்டில் பொலிவுறு இக்கிராமத்தில்
வாழ்ந்திடும் மக்கள் எல்லாம்
நலன்கள் யாவும் பெற்றிட
ஆழ்ந்திடும் அருளுடை
...ப் பூஜை செய்வேன்

## தனி நபர் அர்ச்சனைக்கான ஸங்கல்பம்

தேவரும் விரும்பும் இப்புண்ணிய நாட்டில் பொலிவுறு இக்கிராமத்தில் ...கோத்திரத்து ...ராசியில் ...நக்ஷத்திரத்தில் உதித்த நல்லன்பர் ஸ்ரீமான்/ஸ்ரீமதி ...அவர்களும் அவர்தம் குடும்பத்தாரும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை உறுதிப் பொருளும், நற்பயன் பிறவும் பொருந்த நீண்ட நாள் வாழ்க வேண்டி அருளுடை............தாள் அடிபணிந்து பூஜை செய்வேன்.

## 5. கலச பூஜை

கலசம் என்பது வழிபடும் தெய்வத்துக்கு அளிக்கப்படும் அர்க்யம், பாத்யம், ஸ்நானம் (அபிஷேகம்) ஆசமநீயம் ஆகியவற்றிற்காக நாம் பயன்படுத்த உள்ள நீரை நிரப்பி வைக்கும் பாத்திரம் ஆகும்.



இது அன்றாடம் தூய்மையாக துலக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஆலயங்களில் அபிஷேக நீர் பெரிய பாத்திரத்திலும், அர்க்ய நீர் அர்க்ய பாத்திரம் எனப்படும் தனியான சிறிய பாத்திரத்திலும் இருக்கும்.

நீராடிவிட்டு ஈர வஸ்த்ரத்துடன் தூய்மையான குடங்களில் கிணற்றில் இருந்து, அல்லது குழாயிலிருந்து நீரைப் பிடித்து வந்து இந்தப் பாத்திரங்களில் நிரப்ப வேண்டும்.

உதவிக்கு ஆள் இல்லாத ஆலயங்களில் பூஜகரே இதனைச் செய்ய வேண்டும்.

அபிஷேக, அர்க்யத்திற்கான நீரை மந்த்ரங்களாலும், முத்ரைகளாலும், சுத்தி செய்வது கலச பூஜை எனப்படுகிறது.

ஏற்கெனவே தூய்மையான பாத்திரங்களில் நிரப்பப்பட்டுள்ள தூய நீர் இந்தப் பூஜையின் மூலம் அபிஷேக அர்க்யத்துக்கு ஏற்றப் புனிதநீர் ஆகிவிடுகிறது.

சந்தனம், குங்குமம், அக்ஷதை இவைகளால் தீர்த்த பாத்திரத்தை அலங்கரித்து பாத்திரத்தில் உள்ள நீருக்குக் கீழ்க்கண்ட மந்திரங்களுடனும் முத்ரைகளுடனும் பூஜை செய்ய வேண்டும்.

அபிஷேகத்திற்கான ஜலத்திலுள்ள அசுத்தம் நீங்கி அமிர்தத்துவம் உண்டாதற் பொருட்டு முதலில் கூற வேண்டிய த்யான சுலோகம்:

கையில் மலரும் அக்ஷதையும் கொண்டு தியானித்தவாறு கூறவும்:

கங்கே ச யமுநே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மிந் ஸந்நிதிம் குரு

அல்லது

கலசத்தில் உள்ள நீரில்
கங்கையும் யமுனைதானும்
கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதை
சிந்துவும் காவிரி தானும்
எழுந்தருளி இறையருள் தருவீர்.

பின் அந்த மலரையும் அக்ஷதையையும் கலச நீரில் இடவும்.

பின் மத்ஸ்ய முத்ரையை கலச தீர்த்தத்தின் மீது காட்டியவாறு

கங்கா கங்கேதி யோ ப்ருயாத் யோஜனானாம் சதைரபி
[redacted] முச்யதே ஸ்ர்வபாபேப்யோ ப்ரம்ஹலோகே மஹீயதே

அல்லது

மாற்றவ ளிடப்பான் மேவி வாழ்வதையுணர்ந்து வள்ளல்
போற்றுறும் வலப்பான் மேவிப் புரிந்து வந் தாடா நின்றோர்
சாற்றருங் கொடிய பாவத் தளையழித் தறங்க ளெல்லா
மேற்றிநன் கருளுந் தெய்வக் கங்கையை யிறைஞ்சல் செய்வாம்

பின்னர் மலர்களால் அபிஷேக தீர்த்தத்திற்கு பின்கண்ட மந்த்ரங்களைக் கூறி அர்ச்சனை செய்க:

ஓம் ஹ்ரீம் பாகீரத்யை நம:
ஓம் ஹ்ரீம் யமுநாயை நம:
ஓம் ஹ்ரீம் கோதாவர்யை நம:
ஓம் ஹ்ரீம் ஸரஸ்வத்யை நம:
ஓம் ஹ்ரீம் நர்மதாயை நம:
ஓம் ஹ்ரீம் ஸிந்தவே நம:
ஓம் ஹ்ரீம் காவேர்யை நம:


இதன் பின்னர் தேனு முத்திரை காட்டி வம் அம்ருதாத்மிகாயை நம: என்று கூறி அந்த நீரில் அமுதம் பொழிவதாக பாவிக்கவும்.

கலச பூஜை முடிவில் கலச தீர்த்தம் சிறிதளவு எடுத்து-

பூஜாத்ரவ்யாணி ப்ரோக்ஷ்ய
ஆத்மானஞ்ச ப்ரோக்ஷ்ய

என்று திரவ்யங்களையும், தெய்வத் திருவுருவையும், தன்னையும் ப்ரோஷணம் செய்து கொள்ளவும்.

## மத்ஸ்ய முத்ரையாவது



கீழ்முகமாக விரித்த வலது கைமேல் அவ்வாறே விரித்த இடது கை[redacted]வத்துக் கட்டை விரல்களை மீன் சிறகுகளைப் போல அசைத்து மற்ற விரல்களை அசையாமல் நீட்டி வைத்திருத்தல் மத்ஸ்யம்.

## தேனு முத்ரையாவது



இரு கைவிரல்களையும் நேர்முகமாகக் கோத்துக் கொண்டு சுண்டு விரல்களைப் பவித்ர விரல்களுடனும் ஆள் காட்டிகளை நடுவிரல்களுடனும் சேர்த்துக் கீழ்நோக்கிப் பிடித்தல் தேனு.

## 6. சங்க பூஜை

சங்கம் உள்ள திருக்கோயில் சந்நிதிகளில் மட்டும் செய்ய வேண்டிய பூஜை இது.

மூன்று கால்கள் கொண்ட முதுகுப்புறம் குழிவான ஆமை போன்ற ஆதார பீடத்தில் சங்கம் வைக்கப்பட்டிருக்கும்.

சங்கத்தை அதனுடைய பீடத்தில் வைக்கவும். கலச தீர்த்தத்தால் சங்கத்தை நிரப்பி அதற்கு சந்தனம் இடவும்.

சங்கத்தைக் கையால் தொட்டுக் கொண்டு-மூடிக் கொண்டு-சங்க காயத்ரியை ஜபிக்கவும்.

**பாஞ்சஜன்யாய வித்மஹே பாவமானாய தீமாஹி தன்ன: சங்க: ப்ரசோதயாத்.**

பின் புஷ்பத்தால் சங்கத்தை அர்ச்சிக்கவும்.

[redacted] ***சங்காய நம:***
***தவளாய நம:***
***பாஞ்சஜன்யாய நம:***
***ஜனார்த்தனாய நம:***
***ப்ரஹ்மணே நம:***

என்று ஐந்து நாமாக்கள் போதும்.

கங்காதி ஸர்வதீர்த்த கணம் ஆவாஹயாமி என்று கூறி கீழ்க்கண்ட சுலோகங்களைக் கூறவும். சங்கம் சந்த்ரார்க்கதைவத்யம் மத்யே வருணஸம்யுதம்

ப்ருஷ்ட்டே ப்ரஜாபதிஸ்ஸைவ அக்ரே கங்கா ஸரஸ்வதீ
த்ரைலோக்யே யானி தீர்த்தானி வாஸுதேவஸ்ய ச ஆக்ஞயா
சங்கே திஷ்ட்டந்தி விப்ரேந்த்ரா: தஸ்மாத் சங்கம் ப்ரபூஜயேத்
த்வம் புரா ஸாகரோத்பந்நோ விஷ்ணுநா வித்ருத: கரே
தேவைஸ்ச பூஜித: ஸர்வை: பாஞ்சஜந்ய நமோஸ்து தே
சங்க ராஜாய நம: ஸமஸ்த உபசாரான் ஸமர்ப்பாயாமி

சங்க தீர்த்தத்தால் தன்னையும் பூஜா த்ரவியங்களையும் மூன்று முறை ப்ரோக்ஷணம் செய்து கொள்ளவும்.

# 7. ஆத்ம பூஜை

புறத்தே வழிபாட்டுக்குரியதான தெய்வம் நம்முள்ளே இருப்பதால் முதலில் நம்முள்ளே உறையும் இறை சக்தியை பூஜிப்பதே ஆத்ம பூஜை

இடது உள்ளங்கையில் சிறிது அக்ஷதையை வைத்துக் கொண்டு வலது கை விரல்களால் எடுத்து ஹ்ருதயத்திற்கு நேராக வைத்துக் கொண்டு கீழ்க்காணும் மந்த்ரம் சொல்லி அர்ச்சனை செய்து கொள்ள வேண்டும்.

ஓம் ஆத்மனே நம:
ஓம் அந்தராத்மனே நம:
ஓம் ஜீவாத்மனே நம:
ஓம் ஞானாத்மனே நம:
ஓம் பரமாத்மனே நம:

**சரணாகத் துள்ளே அழுந்திய மாணிக்கங்**
**[redacted]ணுமளவுங் கருத்தறி வாரில்லை**
**பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு**
**மாணிக்க மாலை மனம்புகுந் தானே**

என்ற திருமந்திரத்தையோ அல்லது

**தேஹா தேவாலய: ப்ரோக்த: ஜீவோ தேவ: ஸநாதந:**
**த்யஜேத் அஜ்ஞாந நிர்மால்யம் ே ஹம் பாவேந பூஜயேத்**

என்ற சுலோகத்தையோ கூறி அதன் உட்பொருளை உய்த்துணர்ந்து தியானிக்கவும்.

நாம் இறை நிலையில் இருந்துதான் இறைவனை நேசிக்க முடியும்; தெய்வமாகியே தெய்வத்தைப் பூஜை செய்ய முடியும். எனவே பூஜை செய்கின்ற ஒருவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்வது மிகவும் முக்கியமானது. தன்னைத் தானே உயர்த்தி, தெய்வமாகி, அந்த நிலையில் அன்பு செய்யும்போதுதான் அது உண்மையான பக்தியாகிறது.

தெய்வம் என்னிலிருந்து வேறுபட்டவர். நான் தெய்வத்திலிருந்து வேறுபட்டவன் என்று நினைப்பவன் உண்மை அறியாதவன்.

அதாவது தெய்வநிலைக்குத் தன்னை உயர்த்தாமல் ஒருவன் செய்கின்ற பூஜை வெறும் கிரியை என்ற அளவிலேயே நிற்கும்; இறைவனுக்கும் நமக்கும் இடையில் ஓர் உறவை ஏற்படுத்துகின்ற பாலமாக அமையாது.

தெய்வீகத்தைப் பெறுவது எப்படி?

இதற்கான விடையே பூஜையின் இரண்டாவது அடிப்படை நியதியாக அமைகிறது. 'எப்படி நினைக்கிறானோ அப்படி ஆகிறான்' என்கிறது சாந்தோக்கிய உபநிஷதம் (3.14.1) ஒரு லட்சியத்தை எடுத்துக் கொண்டு தீவிரமாக பாடுபட்டால் அதனை அடைவது உறுதி. நாம் தெய்வீகமானவர்கள் என்பதைத் தொடர்ந்து நினைப்பதால் படிப்படியாக நாம் தெய்வீகமானவர்கள் ஆகிறோம். ஒரு தெய்வத்தைத் தொடர்ந்து தியானிக்கும்போது அந்த தெய்வத்தின் குணங்கள் நமக்கும் வருகிறது.



# 8. பீட பூஜை

தெய்வத் திருவுருவத்தை எழுந்தருளச் செய்திருக்கும் பீடத்திற்குப் பூஜை செய்வது மரபு.

கீழ்க்கண்ட மந்த்ரங்களைக் கூறி புஷ்பத்தால் பீடத்தை அர்ச்சிக்கவும்.

ஓம் ஆதாரசக்த்யை நமஃ
ஓம் ஆதிவராஹாய நமஃ
ஓம் ஆதிகூர்மாய நமஃ
ஓம் அநந்தாய நமஃ
ஓம் ப்ருதிவ்யை நமஃ
ஓம் மூல ப்ரக்ருத்யை நமஃ
ஓம் தச திக்பாலேப்யோ நமஃ
[redacted] ஓம் ஆதித்யாதி நவக்ரஹ தேவதாப்யோ நமஃ
ஓம் ஸகலகுணாத்ம சக்தி யுக்தாய யோக பீடாத்மனே நமஃ



# 9. குரு த்யானம்

குருவின் அருளின்றி இறையருள் சாத்தியமில்லை என்பது நம்மவர் நம்பிக்கை. ஆகவே பூஜை தொடங்கும் முன் குரு த்யானம் செய்வது மரபு.

நமக்கு உபதேசம் செய்துள்ள குரு இருப்பாரேயானால் அவரையே மனஸில் இருத்தி தியானம் செய்யலாம்.

இல்லையேல் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தை மனதில் தியானித்துக் கீழ்க்கண்ட த்யான சுலோகத்தை கூறவும்.

குரு தியானத்தின்போது பத்மாஸனத்திலோ சுகாஸனத்திலோ முதுகுத் தண்டு நேராக இருக்கும்படி அமர்ந்து தலையின் மீது ஸுமுகமுத்ரை, ம்ருகீ முத்ரை, சின் முத்ரை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை வைத்து குரு த்யான சுலோகத்தைக் கூறவேண்டும்.

[redacted]விடத்தில் முத்ரை என்பது கைவிரல்களைக் கொண்டு நாம் காண்பிக்கும் குறியீடுகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்தில் gesture என்பதுதான் இது. Ritualistic gestures-சடங்கு ரீதியான கைவிரல் குறியீடுகளே முத்ரைகள்.

முத்ரைகள் காட்டுவதால் ஏற்படும் பயன்களைப் பற்றிக் கூறும் தந்திர சாஸ்த்ரங்கள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றன.

**மோதனாத் ஸர்வதேவானாம் த்ராவணாத் பாபஸந்ததே ||**
**தஸ்மாத் முத்ரேதி ஸாக்யாதா ஸர்வ காமார்த்த ஸாதனீ||**

எல்லா தேவர்களையும் மகிழ்விப்பதாலும் பாவத் தொடர்பைப் போக்குவதாலும் (மோதனாத் த்ராவணாத்) முத்தரை என்று சொல்லப்படும்.

அது எல்லாக் கர்மங்களையும் அர்த்தங்களையும் கூட்டுவிக்கும்.

முத்தரைகளைக் காட்டுவதால் மந்த்ர தேவதைகள் ரீதியடைவார்கள்.

இங்கு மூன்று முத்ரைகளை எங்ஙனம் காட்டுவது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

## ஸுமுக முத்ரை

அஞ்ஜலியாகச் சேர்த்த இரு கைகளையும் மேல் நோக்கி மலர்த்திப் பக்கவாட்டில் சேர்த்து நீட்டி உயர்த்திப் பிடிப்பது ஸுமுக முத்ரை.



## ம்ருகீ முத்ரை




இருகைகளின் கட்டை விரல் (படம்) நடுவிரல் பவித்ர விரல்களை மடித்து நுனியில் சேர்த்து மற்ற விரல்களை மேல் நோக்கி நீட்டிப் பிடித்தல் ம்ருகீ முத்திரை எனப்படும்.

ம்ருகீ என்பது மான் போன்றத் தோற்றத்தைத் தருவதால் ஏற்பட்ட பெயர்.

## சின் முத்ரை

வலது கை கட்டை விரலும் ஆள் காட்டியும் சேர்த்து மற்ற (படம்) விரல்களை நீட்டி உயர்த்திப் பிடித்தல் சின் முத்ரை எனப்படும். இது ஞான முத்ரை எனவும் கூறப்படும்.



## குரு த்யான சுலோகம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணுஃ
குருர்தேவோ மஹேச்வரஃ।
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நமஃ॥

குரவே ஸர்வலோகானாம் பிஷஜே பவரோகினாம்।
நிதயே ஸர்வ வித்யானாம் தக்ஷிணாமூர்த்தயே நமஃ॥

அல்லது

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

-திருமந்திரம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற்கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக் கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

## குரு காயத்ரீ

த்யானரூபாய வித்மஹே ஞானதாத்ரே ச தீமஹி।
தன்னோ குரு ப்ரசோதயத்॥

தக்ஷிணாஸ்யாய வித்மஹே த்யானரூபாய தீமஹி।
தன்னோ போத ப்ரசோதயாத்॥

# 10. கண்டா பூஜை

பூஜையைத் தொடங்கும் முன்னர் கைமணி அடித்து ஒலி எழுப்புவது மரபு. இது மங்கல ஒலி. பூஜை தொடங்வதற்கான அறிவிப்பு ஒலியும் கூட.

அந்த மணியையும் பூஜிப்பது நமது மரபு.

சிவாலயங்களில் உள்ள மணியில் நந்தியின் திருவுருவம் இருக்கும்.

வைணவ ஆலயங்களில் உள்ள மணியில் கருடனின் திருவுருவம் இருக்கும்.

அந்தத் திருவுருவின்மீது கலச நீரை ஒரு உத்தரணி அளவு ப்ரோக்ஷித்து மணியின் நாவையும் ஜலத்தால் ப்ரோக்ஷித்து சந்தனம் குங்குமம் அணிவிக்கவும்.

பின் கீழ்க்கண்ட சுலோகத்தைக் கூறி மணியின் மீது மலரிடவும்.

**சை[redacted]ரபுவழித் திருக்கோவில் மணிக்கு**

நந்தீச்வர நமஸ்துப்யம் சிவ வாஹன ஸத்தம-
க்ருபயா தே பவேத் பக்தி: புத்திர்ஸித்திரீ பலம் ச ந:--

**வைணவ மரபுவழித் திருக்கோயில் மணிக்கு**

குங்குமாங்கிதவர்ணாய குந்தேந்து தவளாய ச।
விஷ்ணுவாஹ நமஸ்துப்யம் க்ஷேமம் குருஸதா மம॥

பின் வலக்கையால் மணியை அடித்தவாறே கீழ்க்கண்ட சுலோகத்தைக் கூறவும்.

ஆகமார்த்தம்து தேவாநாம் கமநார்த்தம்து ராக்ஷஸாம்।
கண்டாரவம் கரோம்யாதௌ தேவதா ஆஹ்வாந லாஞ்ச்சநம்॥

அல்லது

நன்மைசெய் தேவரெல்லாம் நண்ணவும் இங்கே வந்து
தின்மைசெய் அசுர ரெல்லாம் திசைதொறும் இரியவுந்தான்
முன்மணி அடித்து நன்றாய் முதல்வனைப் பூஜை செய்ய
இன்மணி நாதந் தன்னை எங்குமே முழக்குவேனே!

மணிஒலி கேட்டு துர்தேவதைகள், ராக்ஷஸர்கள் எல்லாம் ஓடிவிடுவர். தேவர்கள் யாவரும் வந்து சூழ்வர்.

# 11. ப்ராணப் பிரதிஷ்டை

[redacted] ஆலயங்களில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விக்ரஹங்களுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தின்போதே ப்ராணபிரதிஷ்டை - மந்த்ரங்களுடன் கூடிய ப்ரதிஷ்டை நிகழ்ச்சி நடைபெற்றுவிடுவதால் தினசரி ப்ராணப்ரதிஷ்டை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

இல்லங்களில் விசேஷ நாட்களில் நாம் செய்யும் பூஜையின்போது ப்ராணப்ரதிஷ்டை செய்யப்பட வேண்டும்.

# 12. ஷோடஸோபசாரங்கள்

## 1. ஆவாஹனம்


மந்த்ரம் அல்லது சுலோகம் சொல்லி புஷ்பம், அக்ஷதை இவைகளை மூர்த்தி மீது சேர்த்து அதில் அந்த தேவதை தங்கும்படி ப்ரார்த்திப்பதற்கே ஆவாஹனம் என்று பெயர்.

ஜீவ சைதன்யத்தை மூலாதாரத்திலிருந்து சுஷும்னா வழியாக மேலேற்றுவதாக பாவித்து சங்கல்பம் செய்தல்.

தமிழில் கீழ்க்கண்ட பாடலைச் சொல்லி ஆவாஹனம் செய்யவும்.

**அத்தனே அருட்சுடரே! அருவமாய் ப்ரம்மமாக மன்னியே**
**என்றும் எங்கும் மாஞானவானாய் நிற்கும்**
**உன்னையே பூஜித் துய்ய உன்னினோம் உருவம் தன்னில்**
**என்னையாட் கொள்ளவிங்கே எழுந்தருள் புரிவாய் நீயே**

[redacted] ஆவாஹனீ முத்ரை காட்டுதல் அவசியம்.




கைகளைப் பக்கவாட்டில் அஞ்ஜலியாகச் சேர்த்து (பவித்ர விரல்களின் அடிப்புருவங்களைக் கட்டை: விரல்களால் தொட்டுக் கொண்டு) மேலும் கீழும் அசைத்தல் ஆவாஹனீ. இதைச் செய்யும்போது 'ஆவாஹிதோ பவ' என்று கூற வேண்டும்.

## 2. ஆஸனம்

பூஜை செய்யும்-தெய்வத் திருவுருவிற்கு புஷ்பாக்ஷதைகளைக் கையில் எடுத்துக் கொண்டு சுலோகம் சொல்லி மூர்த்தி மீது சேர்த்து ஆஸநத்தில் அமர்த்தியதாக பாவனை செய்தல்.

இதனையே ஸ்தாபனம், ஸந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம் முதலியவற்றுக்குரிய முத்ரைகளுடன் இறைவனை மூர்த்தத்தில் எழுந்தருளப் ப்ரார்த்தித்து அமரச் செய்து, பூஜிக்கப்படும் மூர்த்தி நமக்கு அநுக்ரஹம் செய்யும் வண்ணம் ப்ரார்த்தித்து, பூஜை முடியும்வரை மூர்த்தத்தில் ஸாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு, விக்ரஹத்தைச் சுற்றி கவசமந்த்ரத்தால் மூன்று அகழ் உண்டாக்கி தடைகள் வராமல் அம்மந்த்ரத்தாலேயே அதனை மூட வேண்டும்.


## ஸ்தாபன முத்ரை



கைகளைப் பக்கவாட்டில் அஞ்சலியாகச் சேர்த்து (பவித்ர விரல்களின் அடிப்பருவங்களைக் கட்டை விரல்களால் தொட்டுக் கொண்டு) மேலிருந்து கீழ் நோக்கி அசைப்பது ஸமஸ்தாபனீ.

இப்படிச் செய்கையில் ஸ்தாபிதோ பவ- என்று கூறவும்.


## ஸந்நிதாபனீ முத்ரை



இரு முஷ்டிகளையும் அபிமுகமாகச் சேர்த்துக் கட்டை விரல்களை மேல் நோக்கிப் பிடித்தல் ஸந்நிதாபனீ.

இதைச் செய்யும்போது ஸந்நிஹிதோ பவ- எனக் கூறவும்.

## ஸந்நிரோதினீ முத்ரை



இருமுஷ்டிகளையும் அபிமுகமாகச் சேர்த்து கட்டை விரல்களை அபிமுகமாகச் சேர்த்து கட்டை விரல்களை முஷ்டிகளுக்குள் நுழைத்து மற்ற நகங்கள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருந்தல் ஸந்நிரோதினீ.

இதைச் செய்யும்போது ஸந்நிருத்தோ பவ- என்று கூறவும்.

## அவகுண்டனம்



இரு கை முஷ்டிகளைக் கீழ் நோக்கி வைத்து ஆள் காட்டி விரல்களை நீட்டி லக்ஷ்யத்தைச் சுற்றி தத்தம் பாகத்திலாரம்பித்து வலது விரலால் ப்ரதக்ஷிணமாகவும் சுற்றுதல் அவகுண்டனம்.

இதைச் செய்யும்போது 'அவகுண்டிதோ பவ' என்று கூறவும்.

பெண் தெய்வத் திருவுருவங்களுக்குப் 'ஆவாஹிதா பவ' 'ஸ்தாபிதா பவ' 'ஸந்நிஹிதா பவ', 'ஸந்நிருத்தா பவ', 'அவகுண்டிதா பவ' என்று கூறவேண்டும்.

**மாணிக்ய வஜ்ர வைடூர்ய நீலரந்தாதி ஶோபிதம்-**
**ரத்நஸிம்ஹாஸநம் திவ்யம் க்ருஹாண பரமேச்வரி--**

என்றும் கூறவும்.

தேவி ஸந்நிதியில் கீழ்க்கண்ட சுலோகம் கூறவும்:

**ஐந்தொழில் புரியும் ஈசர் ஐவரும் தாமே சேர்ந்து**
**மைநதுடைக கனக ரத்ன மஹாஸிம்மா சனமா யுள்ளார்**
**ஐந்தேழு படியோ டொன்றும் அதற்குள அதன்மீ தேறி**
**உய்ந்திட யாங்க ளுட்கார்ந் துவப்புட னிருப்பாய் தாயே**

**3. [redacted]யம்**

சந்தனம், அருகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருட்களையும் பாத்ய நீரில் கலந்து பாதத்தில் விடவேண்டும்.

கூறவேண்டிய சுலோகம்:

**வேதங்கள் சிலம்பாய் ஆர்க்கும் மேன்மைசேர் மலர்**
**போன்றுள்ள**
**பாதங்கள் அலம்ப நல்ல பாத்தியத் தீர்த்தம் கொண்டு**
**பாதங்கள் அலம்பி நல்ல பட்டினால் துடைத்து விட்டேன்**
**ஏதங்கள் அகலும் வண்ணம் ஏற்றருள் புரிவாய் நீயே**

**4. அர்க்யம்**

இறைவனுக்கு மூலமந்த்ரங் கூறி எள், யவநெல், தர்ப்பை நுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியவற்றைக் கலந்த நீரால் அர்க்யம் கொடுக்க வேண்டும். உத்தரிணியில் தீர்த்தம் எடுத்து தேவதையின் இருகைகளிலும் அளிப்பதுபோல பாவனை செய்து வேறு பாத்திரத்தில் சேர்க்க வேண்டும்.

நமஸ்தே தேவதேவேஶ (ஶி) நமஸ்தே தரணீதர (ரே)।
நமஸ்தே கமலாகாந்த (தே) க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே.

சொல்ல வேண்டிய பாடல் :

மலர்களை யொத்த கைகள் வதனமும் சுத்தி செய்ய
மலர்கமழ் அர்க்ய தீர்த்தம் மகிழ்வுட னளித்தேன் ஏற்றுப்
பலர்புகழ் அருளாம் செல்வ பாக்கியம் பெற்று வாழி
மலர்தலை யுலகிற் செய்வாய் மாண்புறு தேவ தேவ
(அல்லது) தேவி நீயே

## 5. ஆசமநீயம்

நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய், குங்குமப்பூ ஆகிய பொருட்களை இட்டு ஸம்ஹிதா மந்த்ரம் சொல்லி பாதத்தினடியில் வைக்கவும்.

[redacted] உத்தரிணியில் தீர்த்தம் எடுத்து தேவதா மூர்த்தியின் வாய்க்கு நேராகக் காட்டி வேறு பாத்திரத்தில் சேர்க்கவும்.

கர்ப்பூராகரு புஷ்பைஶ்ச வாஸிதம் நிர்மலம் ஜலம்।
பக்த்யா தத்தம் மயா தேவ குருஷ்வாசமநம் ப்ரபோ।

ஆசமனம் செய்ய நல்ல அமுதம்போல் தீர்த்தம் தந்தேன்
பாசமலம் போக்கி மேலாம் பதத்தினை அருள்வாய் நீயே!

## 6. மதுபர்க்கம்

தயிர், பால், தேன், நெய் இவைகளைச் சமமாகக் கலந்தது மதுபர்க்கம். இதனை இறைவனுக்கு சமர்ப்பிக்கும் பாவனையோடு முகத்திற்கு நேராகக் காட்டவேண்டும்.

மதுபர்க்கம் தரும்போது கூறவேண்டிய பாடல்:

தேனுவின் தயிரும் நெய்யும்
தேனொடு கலந்து செய்த
வானமது பர்க்கந் தன்னை
வைத்தனன் பொற்கிண்ணத்தில்

*நீறுகர்ந் தன்னாய்! எங்கள்*
*நிகிலமாம் வேட்கை தீர்ப்பாய்*
*நீறுகர் வனவெல் லாமும்*
*நின்றொண்டர் பொருட்டேயன்றோ!*

## 7. அபிஷேகம்

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வத் திருவுருவை ஒரு குழந்தையாக பாவித்து தாய் எப்படி தன் குழந்தைக்கு நீராட்டு செய்வாளோ அங்ஙனம் நீராட்டு செய்வதையே அபிஷேகம் என்கிறோம்.

அபிஷேகம் தொடங்கும் முன் கற்பூர ஆரத்தி செய்துவிட்டு அபிஷேகத்தைத் தொடங்க வேண்டும்.

அபிஷேகத்திற்கான நீரை ஏற்கெனவே எங்ஙனம் மந்த்ர பூர்வமாக புனிதமாக்குவது என்பதனைப் பார்த்து விட்டோம் (பக்கம்-)

[redacted]பிஷேக த்ரவ்யங்கள் 25 என்கிறது ஆகமம். சுருக்கமாக அபிஷேகம் செய்வதானால் 16 அல்லது 12 த்ரவ்யங்களைக் கொண்டு அபிஷேகம் செய்யலாம்.

பதினாறு த்ரவ்யங்களைக் கொண்டு அபிஷேகம் செய்யும்போது அதற்கான வரிசைக்ரமம் வருமாறு:

1. வாசனைத் தைலம் (சந்தனாதி தைலம்) அல்லது எள் எண்ணெய்
2. திருமஞ்சன த்ரவ்யப் பொடி (அல்லது அரிசி மாவு, மஞ்சள் பொடி)
3. பஞ்ச கவ்யம் ✱1
4. பஞ்சாமிர்தம் ✱2
5. பசு நெய்
6. பதம்பால்
7. பசுந்தயிர்
8. தேன்
9. கருப்பஞ்சாறு, ஆரஞ்சுச் சாறு அல்லது எலுமிச்சை சாறு
10. இளநீர்
11. திருநீறு- வைஷ்ணவ ஆலயங்களில் மஞ்சள் காப்பு
12. வில்வ பத்ர ஜலம் அல்லது துளசி பத்ர ஜலம்

13. ச்ருங்கோதகம் (சங்கு நீர்)

14. குசோதகம் (தர்ப்பை ஜலம்) விசேஷ அர்க்ய தீர்த்தம்

15. சந்தனம்

16. ஸ்நபன கும்பதீர்த்தம்

கும்ப தீர்த்தம் தனியே மந்த்ரித்து வைக்காதபோது சந்தனாபிஷேகமே நிறைவானது. அதன்பின் வேறு எந்தப் பொருளாலும் அபிஷேகம் செய்யக் கூடாது.

✱1 பஞ்ச கவ்யம்: 50 மி.லி. கோமூத்ரம், கட்டை விரலில் பாதி பசுஞ்சாணி, 350 மி.லி. தர்ப்ப ஜலம்- இந்தக் கலவையையே ப்ரம்ம கூர்ச்சம் அல்லது பஞ்ச கவ்யம் என்பர்.

✱2 பஞ்சாமிர்தம்: தேன், நெய், நாட்டுக் சர்க்கரை, தயிர், பால், வாழைப்பழம், திராக்ஷை, பேரிச்சம்பழம் முதலியவற்றைக் கலந்து தயாரிப்பது.

## [redacted] அபிஷேக பலன்

| | | |
|---|---|---|
| தைலாபிஷேகம் | : | சுகம் கொடுக்கும் |
| மாப்பொடி | : | கடனைப் போக்கும் |
| நெல்லிமுள்ளிப் பொடி | : | வியாதியைப் போக்கும் |
| மஞ்சள் பொடி | : | வசீகரணம் உண்டாக்கும் |
| ஜலதிரவியம் | : | ஸௌபாக்யம் தரும் |
| பஞ்சகவ்யம் | : | தூய்மை உண்டாக்கும் |
| நெய் | : | வெற்றியைத் தரும் |
| பால் | : | மோக்ஷ ஸாதனம் |
| தயிர் | : | மக்கட்பேறு அளிக்கும் |
| தேன் | : | சுகமளிக்கும் |
| கரும்புச்சாறு | : | பிணி நீங்கும் |
| இளநீர் | : | போகம் அளிக்கும் |
| பத்ரோதகம் | : | பயத்தை நீக்கும் |
| சந்தனம் | : | செல்வத்தைத் தரும் |

அபிஷேகத்தின்போது பல்வேறு சுலோகங்களைக் கூறியபடி- அந்தந்த தேவதைகளுக்குரிய காயத்ரீகளைக் கூறியவண்ணம் அபிஷேகம் செய்யலாம்.

சிவாலயங்களில் ருத்ரம் சமகம் சொல்லத் தெரிந்தவர்கள் இருந்தால் சொல்லச் செய்யலாம். திருமுறைப் பாடல்களையும் பாடச் செய்யலாம். வைஷ்ணவ ஆலயங்களில் புருஷஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம் கூறி திருமஞ்சனம் செய்வது மரபு. பெரியாழ்வார் பாசரங்களையும் சாதிக்கலாம்.

குறைந்த பக்ஷமாகக் கீழக்கண்ட பாடலை கூறலாம்:

கங்கையே முதலாம் மிக்க
கடவுண்மா நதிகள் தீர்த்தம்
தங்கமா கலசந் தம்மில்
தருமணம் சேர்த்து வைத்தோம்
அங்கமின் படையும் வண்ணம்
ஆடநீர் அபிஷே கித்தோம்
எங்களை ஆண்டு கொள்வாய்
[redacted]ச்வரா தேவ நீயே
(அல்லது ஈச்வரீ தேவி நீயே)

## பாலாபிஷேகத்தின்போது

தண்மையாய் இனிமை யாயும் தருமணம் சேர்ந்த தாயும்
வெண்மையாய் தூய்மை யான மிகுநல் பசுவின் பாலால்
உண்மையாய் அறிவா னந்த உருவமாம் ஈசன் நீதான்
உண்மகிழ்ந்தபிஷே கித்தோம் உவப்புடன் அருள்வாய்
நீயே!

# விஞ்ஞான விளக்கம்

**குற்றாலம் பராசக்தி கல்லூரி ஆராய்ச்சிக்குழு அறிக்கை**

கோயில்களில் நாள்தோறும் செய்யப்படும் அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை ஆகியவை விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் இணைப்பது எவ்வாறு?

ஆலயத்தில் மூல விக்கிரகத்திற்கு அபிஷேகம் செய்யும்போது என்னென்ன மாறுபாடுகள் நிகழ்கின்றன என்பதை நாங்கள் அறிய விழைந்தோம். எனவே, ஒரு கற்சிலைக்குத் தண்ணீர், எண்ணெய், பால், தேன், தயிர், குங்குமம், விபூதி ஆகியவை கொண்டு அபிஷேகம் செய்தோம். அப்பொழுது அந்தச் சிலையில், மேலே சொன்ன ஒவ்வொரு பொருளுக்கும் மின் கடத்துத்திறன் மாறுபடுவதை நாங்கள் கண்டோம். அவற்றைக் கீழ்காணும் அட்டவணையில் காட்டியுள்ளோம்.

[redacted]

## அபிடேகத்தின் போது சிலையின் மின் கடத்தும் திறன் மாறும் முறை

| அபிடேகப் பொருள் | மின்னோட்டம் | சிலையின் மின் கடத்தும் திறன் |
|---|---|---|
| தண்ணீர் | 028 | 2.8 |
| எண்ணெய் | 022 | 2.2 |
| பால் | 0.2 | 20 |
| தயிர் | 0.7 | 70 |
| சந்தனம் | 0.15 | 15 |
| தேன் | 0.10 | 10 |
| குங்குமம் | 0.036 | 3.6 |
| விபூதி | 0.018 | 1.8 |
| அலங்காரம் (பட்டுத்துணி) | 0.025 | 2.5 |
| தசாங்கம் | 0.007 | 0.7 |
| கற்பூரம் | 0.007 | 0.7 |

| | | |
|---|---|---|
| பூ | 0.018 | 1.8 |
| அபிடேகத்தின் முன் உலர்ந்த நிலையில் சிலை | 0.001 | 0.1 |

தயிர், பால், தண்ணீர், சந்தனம் ஆகிய அபிடேகங்களின் போது சிலையின் மின் கடத்துத்திறன் அதிகமாயுள்ளது. எண்ணெய், தேன், விபூதி, குங்குமம், பூ ஆகியவற்றால் அபிடேகம் செய்யும்போது சிலையின் மின்கடத்துத்திறன் குறைந்தாலும் நிலையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. அது போலவே தீப ஆராதனை செய்யும்போது சிலையின் மின்கடத்துத்திறன் நிலையாக இருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும் அபிடேகப் பொருட்களான குங்குமம், பால், தயிர், தேன், நீர் ஆகியவற்றின் பி.எச் மதிப்பும் அளவிடப்பட்டுள்ளன. ஓர் திரவத்தின் மதிப்பு அதிகரிப்பது. அதன் எதிர் மின்னூட்டம் அதிகரிப்பதையே குறிக்கும். குங்குமம், சந்தனம், மஞ்சள், தண்ணி ஆகியவை அதிக மதிப்[redacted]ளவை. இவற்றைக் கொண்டு அபிடேகம் செய்வதால், கர்ப்[redacted]கத்திலுள்ள காற்று மண்டலத்திலும் எதிர் மின்னூட்டங்கள் அதிகரிக்கும்.

## அபிடேகப் பொருள்களின் பி.எச். மதிப்பு

| பொருள் | பி.எச்.மதிப்பு |
|---|---|
| தண்ணீர் | 5.0 |
| பால் | 6.0 |
| தயிர் (கலக்கிய நிலையில்) | 4.0 |
| சந்தனம் | 5.5 |
| தேன் | 2.5 |
| எண்ணெய் | 3.0 |
| குங்குமக் கரைசல் | 7.5 |
| மஞ்சள் கரைசல் | 7.0 |
| பாலும் தேனும் கலந்த கலவை | 4.0 |

மேலே உள்ள பி.எச். மதிப்புகள் கடையில் வாங்கிய பொருட்களின் பி.எச். மதிப்புகளே ஆகும்)

அபிடேகம், அர்ச்சனையைத் தொடர்ந்து தீப ஆராதனை செய்யும் போது காற்று மண்டலத்தில் என்ன மாறுபாடு ஏற்படுகிறது என்றும் சோதனை செய்தோம்.

காற்று மண்டலத்தில் ஒரு மின் தேக்கியை அமைத்து, அதற்குக் குறிப்பிட்ட மின்னூட்டத்தைக் கொடுத்து, அதை அறிந்து குறித்துக் கொண்டோம். தூபம், தீபம் காட்டும்போது காற்று மண்டலத்தில் ஏற்படும் மாறுபாட்டால், மின் தேக்கியின் மின்னூட்டம் மாறுபடுவது சோதனை மூலம் தெரிய வருகிறது.

இதிலிருந்து கர்ப்பக்கிரகத்திலுள்ள காற்று மண்டலம் ஓரளவு அயனியாக்கப்படுவது தெளிவாகிறது. பி.எச்.மதிப்பு அதிகம் உள்ள பொருள்கள் கொண்டு, அபிடேகம் செய்யும்பொழுது காற்று மண்டலம் அதிக எதிர் மின்னூட்டம் பெறுவது தெரியவருகிறது.

மேலும் ஈரப்பதம் உள்ள காற்று மண்டலத்தில் பிராண வாயு [redacted]த்தம் அதிகரிக்கிறது என்றும், அந்தக் காற்று மண்டலம் பிராண வாயு மூலக்கூறுகளை அதிக அளவில் பெறுவதால் அக்காற்று உடலுக்கு நன்மை பயக்கும் என்பதும் தெரிகிறது.

மேலும், ஒளியின் திசைவேகம் ஈரப்பதமிக்க காற்றில் அதிகமாக இருக்கும் என்பது விஞ்ஞான உண்மை.

எதிர்மின்னூட்டமும், ஈரப்பதமும் உள்ள காற்று மண்டலம் கர்ப்பக் கிரகத்துள் அமைந்துள்ளது. அந்தக் காற்று மண்டலத்துள், ஓம் என்ற ஒலியுடன் (பிரணவமந்திரம்) அர்ச்சனை செய்யும்போது அவ்வொலி விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கப் படுகிறது. இதனால் அக்காற்று மண்டலம் பெரும் அலையும் ஒத்த தீர்வும் பெறுகிறது. இக்காற்று மண்டலத்தின் அயனியாக்கப்பட்ட மூலக்கூறுகள், எதிரேயுள்ள பக்தர்களை அடையும்போது, அவர்களுக்கு உள்ள வளத்திற்கு அடிப்படையான உடல் நலத்தை அளிக்கும் என்பது வித்தையல்ல. விஞ்ஞானம் தந்திடும் விளக்கமாகும்.

இந்த விஞ்ஞான உண்மையை அன்றே அறிந்திருந்த நம் முன்னோர்கள் குன்றுதோறும் குகனையும், கடற்கரைகளில் ஆலயங்களையும் அமைத்தோடல்லாமல் அருவிக்கரைகளையும் புண்ணிய தீர்த்தங்களாக ஆக்கி வழிபட்டு வந்தனர் என்பதை உணரும்போது நம் உள்ளம் பெருமிதத்தில் விம்முகிறது.

ஆலயங்களுக்குச் செல்பவர்கள் மேலே சொன்ன பலனைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்காகத்தான், ஆலயங்களில் ஆறுகால அபிடேகங்களும் அர்ச்சனைகளும் ஆராதனைகளும் நடத்தி வருகிறோம். அப்பொழுதுதான் அந்த விக்கிரகத்தில் தொடர்ந்து அதிர்வுகள் நிலைத்து இருக்கும் இவ்வதிர்வுகள் விக்கிரத்துக்கு அடியிலுள்ள தாமிரத்தகட்டில் ஆற்றலாகச் சேர்க்கப்படும் என்பதை நிருபிக்க ஆராய்ச்சிகளை இக்கல்லூரி தொடரும்.

மேலே விளக்கியுள்ள சோதனைகளையும் சிந்தனைகளையும் நாம் தொகுத்து காணும்போது ஆலயத்துள்ள உள்ள கர்ப்பக்கிரகம் ஒரு ஒத்ததீர்வு கலமாகவும், மூல விக்கிரம் ஒலி அலைகளின் எதிரொலிப் பானாகவும் மூல விக்கிரகத்தின் அடியிலுள்ள மந்திரத்தகடு ஆற்றல் சேமிப்புக் கலமாகவும், அயனியாக்கப்பட்ட காற்று மண்டலம் ஆற்றல் கடத்துபவனாகவும், அங்கே வழிபடுவோர் ஆற்றலை ஏற்போனாகவும் விளங்குகின்றன என்பதை அறிகின்றோம்.

[redacted]னவே, ஹிந்து சமயத்தின் ஆலய வழிபாடு விஞ்ஞானம் பாதையில் மெய்ஞ்ஞானத்தைப் படைக்கும் ஒரு சிறந்த சாதனம் என்பது தெளிவு.

---

### *8. அலங்காரம்*

---

ஆலயத்தில் உள்ள விக்ரஹங்களுக்கு அபிஷேகம் முடிந்தவுடன் திரையிட்டு அலங்காரம் தொடங்க வேண்டும்.

வஸ்திரத்தை முறையாக அணிவித்து ஆபரணங்களை அணிவித்து நெற்றியில், சிரஸில், மார்பில் சந்தனம் குங்குமம் இட்டு, புத்தம்புது மலர்களால் ஆன மாலைகளை அணிவித்து தேவதா மூர்த்தத்தை அழகுபடுத்துவதையே அலங்காரம் என்கிறோம். அழகுக்கு அழகு செய்து பார்க்கிறோம். ஒரு தாய் தன் குழந்தையை ஆடை அணிகலன் அணிவித்து அழகு பார்க்கும் அதே பாவனையுடன் பூஜகர் இந்த அலங்காரக் கைங்கர்யத்தைச் செய்ய வேண்டும்.

## வஸ்திரம் அணிவிக்கும்போது

(அம்பாள் சந்நிதியில்)

சேலையும் ரவிக்கை மேலும் செம்பட்டுச் ஜரிகைத் தங்க
நூலையே கொண்டு நெய்து நுதன அழகாய்த் தோன்றும்
வாலையின் தாயே தந்தேன் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வாய்
வேலைசூழ் உலகில் நாங்கள் மேன்மையாய் வாழுமாறே!

## ஆபரணம்

மணியணி மகுடம் கட்டி மகிழ்மூக் குத்தி காதில்
அணியறுந் தோடு தொங்கல் அட்டிகை பதக்கம் மூத்தும்
மணிகளும் கோத்த மாலை மாங்கல்யமுதலா யுள்ள
[redacted] அணிகல மெல்லா மேற்றே அருள்புரி அம்பா நீயே!

## கந்தம் ஸமர்ப்பிக்கும்போது

சந்தனம் புனுகு பன்னீர் ஜவ்வாது குங்கு மப்பூ
கந்தமார் அகரு பச்சைக் கர்ப்பூரம் கஸ்தூரித்தூள்
அந்தமாய் எல்லாம் ஒன்றாய் அரைத்துநான்
குழைத்துவைத்த
கந்தமும் பூசத் தந்தேன் காமேசீ ஏற்றுக் கொள்வாய்

## குங்குமம்

பொங்கும்உன் அருளைக் காட்டும் புத்தியும் சித்தி நல்கும்
துங்கவெண் ணீறும் மண்ணும் துலங்குற இட்டாரேனும்
இங்கிதை நடுவன் கொள்ளார்க் கெழில்முதலியாத மின்றாம்
குங்குமப் பொட்டு வைத்தேன் குறைகளை அம்பா நீயே!

## அக்ஷதை ஸமர்ப்பிக்கும்போது

அக்ஷரப் பிரம்ம மாயும் அனைவரின் ஆன்மா வாயும்
அக்ஷரம் ஐம்பத்தொன்றாய் அமர்ந்துள ப்ராண சக்தீ
அக்ஷய தேவி! பச்சை அரிசியில் மஞ்சள் சேர்த்த
அக்ஷதை அளித்தேன் ஏற்றே அக்ஷயப் பலனை ஈவாய்.

## புஷ்பம் ஸமர்ப்பிக்கும்போது

மல்லிகை ஜாதி ரோஜா மகிழ்மா தாழை பிச்சி
முல்லைசண் பகமே புன்னை முண்டகம் குவளை சோகம்
அல்லிசெங் கழுநீர் நீலம் அலரியே முதலாம் பூக்கள்
வல்லவா (வல்லியே) உனக்கு நானே
சாத்தினேன் அருள்வாய் நீயே!

[redacted]

## 8. தூபம்

சாம்பிராணி, தசாங்கம், குங்கிலியம் முதலியவைகளை தூபக்காலில் தணலிட்டு அதன் மீது தூவி அந்தப் புகையை தேவதைக்குக் காட்டுதலையே தூபம் என்கிறோம்.

தூபம்: தூ-ஸகல தோஷங்களையும் நீக்கி; ப-பரமானந்தம் தருவது.

சந்தனம்-7 பங்கு, சாம்பிராணி-6 பங்கு, குங்கிலியம்-5 பங்கு, குங்குமப் பூ-4 பங்கு, கோரைக் கிழங்கு-3 பங்கு, அருகு-2 பங்கு, பச்சைக் கற்பூரம்-1 பங்கு அளவில் திரவியங்கள் சேர்த்து கொஞ்சம் நெய்யுடன் கூட்டி காட்டப்படும் தூபத்திற்கு ''சீதாரி தூபம்'' என்று பெயர் என காரணாகமம் கூறுகிறது. இது தெய்வங்களை வசீகரிக்கும் ஆற்றல் உடையது.

தூபம் காட்டும்போது சொல்ல வேண்டிய சுலோகம்/ பாடல்:

வநஸ்பதி ரஸோத்பூதஃ கந்தாட்யோ கந்த உத்தமஃ!
ஆக்ரேயஃ ஸர்வ தேவாநாம் தூபோயம் ப்ரதிக்ருஹ்யதாம்||

அல்லது

குங்குலியம் தசாங்கம் சேர்ந்த குலசாம்பி ராணித் தூபம்
இங்குநீ முகரத் தந்தோம் எழில் மிகும் தேவதேவ (தேவீ)
எங்களுள்ளத்தி லுள்ள எண்ணங்கள் முடியுமாறு
கங்குக்கண் ணோக்கம் செய்வாய் கருணைவா நிதியே
போற்றி

---

**முருகன் சந்நிதியில் கீழக்கண்ட பாடலைக் கூறலாம்:**

---

சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏம வெற்புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே
தூமம் மெய்க்கு அணிந்த சுக லீலா
ஓம் எழுத்தில் அன்பு மிக ஊறி
[redacted] ஓவியத்தில் அந்தம் அருள்வாயே!

## 9. நைவேத்யம்

திரை போட்டே நைவேத்யம் செய்ய வேண்டும்.

அக்னி மூலையில் உள்ள திருமடப்பள்ளியிலோ அர்ச்சகர் வீட்டிலோ தூய்மையான முறையில் தயார் செய்யப்பட்ட அன்னத்தையே நிவேதிக்க வேண்டும்.

ஒரே கோவிலில் நிறைய சந்நிதிகள் இருக்குமானால் ப்ரதான சந்நிதியில் உள்ள தெய்வத் திருமூர்த்தத்திற்கு நிவேதனத்தின் மூன்றில் ஒரு பங்கை நிவேதித்து மீதமுள்ள பாகத்தை மற்ற சந்நிதிகளில் உள்ள தெய்வத் திருமூர்த்தங்களுக்கு சமமாக பங்கிட்டு நிவேதிக்க வேண்டும்.

யானை எப்படி விளாம்பழத்தின் உட்பாகத்தை க்ரஹிக்கிறதோ அதுபோல பகவான் நிவேதன ஸாரத்தைக் கிரஹிக்கிறார். வண்டு மலரை முகர்ந்து தேனைப் பருகினாலும் மலரின் மணமும் ரஸமும் போவதில்லை. அதுபோல பகவானுக்கு நிவேதித்த ப்ரஸாதங்களின் ரஸம் போவதில்லை.

நைவேத்யத்தின்போது இடக்கையால் மணி அடித்துக் கொண்டே வலக்கையால் நிவேதனம் செய்ய வேண்டும். நிவேதனப் பொருள்கள் மீது மலரிட்டுப் பின் உத்தரிணியில் நீரெடுத்து நிவேதனப் பொருள்களைச்

சுற்றி இறைவனை நோக்கி அன்னை குழந்தைக்கு அமுதூட்டும் பாவனையில் கைகளைக் காட்ட வேண்டும்.

நைவேத்யத்தின்போது சொல்ல வேண்டிய சுலோகம்/பாடல்:

அந்நம் சதுர்விதம் ஸ்வாது ரஸைஃ ஷட்பிஃ ஸமந்விதம்|
பக்ஷ்ய போஜ்ய ஸமாயுக்தம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம்||

நால்வகை அன்னம் ஆறு நாச்சுவை உடைய வாகப்
பால்வகைப் பழமும் சேர்த்து படைத்தனன் ஏற்றுக்கொண்டு
நூல்வகை எல்லாம் ஓர்ந்த நுண்ணறிவுடையேனாகக்
கால்வணங் கென்னைச் செய்வாய் கருணைவா ரிதியே
தேவதேவ (தேவீ)

அம்ருதே அம்ருதானனே அம்ருதோத்பவே
[redacted]தேச்வரீ அம்ருதவர்ஷிணி அம்ருத வர்ஷதாயிணீ
அம்ருதம் ச்ராவய ச்ராவயோ||

**முருகன் சந்நிதியில் சொல்ல வேண்டியது**

திணைஏத்தி அன்புசெய் வேந்தன்
பதாம் புயத்தில், பக்தி, புந்தி,
நைவேத்தியம், உகந்து ஏற்றினர்,
மாற்றினர், பாற்றினம், தீ, தின்
ஐவேத்தியர் நெறி செல்லாத
இந்திய தித்தியினத்தின் நைவு
ஏத்து இயங்கும் உயிர்
சற்று ஆரில் ஊசிடும்
சீ உடம்பே! முருகா!

நைவேத்யத்தில் தாம்பூலமும் இடம் பெறுகிறது.

தோஷமற்ற பாக்கு, வெற்றிலை, சங்க சூரணம், பச்சைக் கற்பூரம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி முதலிய வாசனைப் பொருள்களைக் கொண்டு தாம்பூலம் தயாரிக்கப்படுகிறது.

தாம்பூலம் கொடுக்கும்போது சொல்ல வேண்டியது.

**பாக்குகுங் குமப்பூ லவங்கம் பச்சைகர்ப்பூரம் ஏலம்**
**ஊக்குகஸ் தூரி ஜாதி உவப்புறு கத்தக் காம்பு**
**நோக்குவெற் றிலையிற் சேர்த்து நுடக்கியே வைத்து வீடி**
**ஆக்கிய தாம்பூ லத்தை அளித்தனம் தேவதேவ (தேவீ)**

## *10. தீபாராதனை*


பலவகை தீபங்களை ஏற்றி அதை பகவானுடைய முகத்திலிருந்து பாதம் வரை ப்ரதக்ஷிணமாகப் பலமுறை சுற்றுதல்-தீபம் காட்டுதலாகும்.

ஆலய வழிபாட்டில் நைவேத்யத்தை அடுத்து தீபாராதனை அமைகிறது.

தீபங்கள் 16 வகை.



தூபம், தீபம், மஹா தீபம் அலங்கார தீபம், [redacted]கதீபம், வ்ருஷ தீபம், புருஷாமிருக தீபம், சூலதீபம், கச்சப (ஆமை) தீபம், வ்யாக்ர தீபம், ஸிம்ஹ தீபம், த்வஜ தீபம், மயூர தீபம், ஐந்து தட்டுகளுடன் கூடிய பூரண கும்ப தீபம், நக்ஷத்திர தீபம், மேரு தீபம் ஆக பதினாறு தீபங்களை தாமரை நூல் திரி, நூல் திரி ஆகியவை கொண்டு நெய், இலுப்பை எண்ணெய், எள் எண்ணெய் (நல்லெண்ணெய்) ஆகிய ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தித் தயாரிக்கலாம்.



ஷோடச தீபங்களுக்கும் தேவதைகள் உண்டு. அவற்றை ஸமர்ப்பிக்கும்போது அத்தேவதைகளுக்குரிய மந்திரங்களைச் சொல்ல இயலாவிடில் ஆராதனை மூர்த்தியின் மூலமந்திரமாவது சொல்லப்பட வேண்டும்.





திருவடி முதல் நெற்றி வரை, திருக்கண் வரை, நாஸி வரை ப்ரதக்ஷிணமாக மூன்று முறை தீபாராதனை காட்ட வேண்டும். முதல் சுற்று உலக நன்மைக்காக, இரண்டாவது சுற்று கிராம நன்மைக்காக, மூன்றாவது சுற்று நாட்டின் நன்மைக்காக காட்டப்படுவதாக ஐதீகம்.



நீராஜனம் என்பது நெய்யிட்டுள்ள திரியுடன் கூடிய தீபமே ஆனாலும் கற்பூர நீராஜனம் என்பது தரமான கற்பூரத்தைக் கொண்டே காட்டப்படுவது.

கற்பூர ஹாரத்தியை பக்தர்களிடம் கொண்டு சென்று அவர்கள் கண்களில் ஏற்றிக் கொள்ளச் செய்யவேண்டும்.



[redacted]பூரம் அக்னி ரூபமாக இருக்கிறது. இந்த அக்னி ரூபமான ஜோதி ஜோதிரூபமான கண்ணின் அதிதேவதையான சூரியனுடன் கலந்து ஒன்றாகி கண் மார்க்கமாக உட்சென்று அம்ருத ரூபமான ப்ரும்மஜோதியில் கலக்க வேண்டும். அவ்விதம் கலந்து ''நான்'' என்ற நிலைமையற்று ப்ரும்மமாகவே விளங்குகிறது என்ற தத்துவத்தை உணர்த்தவே பக்தர்களுக்கு கற்பூர தீபத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்ள பூஜகர் எடுத்துச் செல்கிறார்.

கற்பூர ஆரத்தியின்போது கூறவேண்டிய பாடல்:


**திங்களில் ஜோதிநீ தினகரன் ஜோதிநீ**
**அங்கியில் ஜோதிநீ அனைத்திலும் ஜோதிநீ**
**எங்களுள் ஜோதிநீ ஈச்வர ஜோதிநீ**
**கங்கிலா ஜோதிநீ கற்பூர ஜோதியே**



அல்லது

***சந்த்ராதித்யௌ ச தரணி: வித்யுதக்னிஸ் த்வமேவ ச!***
***த்வமேவ ஸர்வஜ்யோதீம்ஷி ஆர்த்திக்யம்***
***ப்ரதிக்ருஹ்யதாம்!!***


முருகன் சந்நிதியில் தீபத்தின்போது கூற வேண்டியது:



குருந்தில் ஏறும் கொண்டலின்
வடிவினன் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை
குறமகள் மணாளா
திருந்த வேதம் தண்தமிழ்
தெரிதரு புலவோனே
சிவந்த காலும் தண்டையும்
அழகிய பெருமாளே
விளங்கு தீபம் கொண்டுஉனை
வழிபட அருள்வாயே!

குடை, சாமரம், விசிறி முதலான உபசாரங்கள் [redacted]டுத்தடுத்துச் செய்துப் பின்னர் நிறைவாக கற்பூர தீபம் காட்டும்போது கீழ்க்கண்ட மந்த்ரத்தைக் கூறலாம்.

ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய ஸாஹிநே
நமோவயம் வைச்ரவணாய குர்மஹே
ஸமே காமான் காம காமாய மஹ்யம்
காமேச்வரோ வைச்ரவணோததாது
குபேராய வைச்ரவணாய மஹாராஜாய நம:



முருகன் ஸந்நிதியில் கூறவேண்டியது:

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்!

## 14. மந்த்ர புஷ்பாஞ்சலி


கீழ்க்கண்ட மந்த்ரங்களைக் கூறி இறைவனுக்குப் புஷ்பங்களை ஸமர்பிக்க வேண்டும்.

யோபாம் புஷ்பம் வேத, புஷ்பவாந
ப்ரஜாவாந் பசுமான் பவதி
சந்த்ரமா வா அபாம் புஷ்பாம், புஷ்பவாந் ப்ரஜாவாந்
பசுமாந்பவதி॥

நமம் மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி

அல்லது

கொடியினிற் செடியற் றருவிற் குளத்தினிற் பூக்கும் பூவில்
கடிகமழ் வாசப் பூக்கள் கழிசெம்மை நிறமாம் பூக்கள்
விடியுமுன் னெடுத்து வைத்து விமலமந் திரமும் கூட்டி
அடிவரை முடியிற் றூவி அஞ்சலி செய்தே னருள்வாய்!



## 15. ப்ரதக்ஷிணம்-நமஸ்காரம்

யாநி காநி ச பாபாநி ஜந்மாந்தர க்ருதாநி ச-
தாநி தாநி ப்ரணச்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே--
அல்லது

ப்ரக்ருஷ்ட பாபநாசாய ப்ரக்ருஷ்ட பலஸித்தயே
ப்ரதக்ஷிணம் க்ரோமி த்வாம் ப்ரஸீத பரமேச்வர

ப்ரபஞ்ச மெல்லா மாகிப் பின்னுமப் பாலு முள்ள
ப்ரம்மமே இறைவா நீயே! பிரதக்ஷிணம் உன்னைச்
செய்தேன்
சிரம் முதற் கரத்தாற் காலால் சினைகளால் செய்த பாவம்
திரம்பெறா தழியு மாறு செய்கநீ ஜகதீச்வர(ரீ)!

என்று கூறி ப்ரதக்ஷிணம்-தன்னைத் தானேச் சுற்றிக் கொள்ள வேண்டும்.

பின்வரும் பாடலைக் கூறி நமஸ்காரம் செய்யவும்.

தலையோடு கையும் காலும் தகுமுரம் வயிறு தானும்
நிலமிசைப் படியுமாறு நினைவொடு துதியும் பாடி
மலர்தரு கண்களாலே வடிவினைப் பார்த்தும் ஏட்டு
நலமுறும் அங்கத் தாலே நாதனே! வணக்கம் செய்தேன்!

[redacted] பூஜையில் உள்ள குறைகளைப் பொறுத்தருள வேண்டி கூறும் சுலோகம்/பாடல்:

மந்த்ர ஹீநம் க்ரியா ஹீநம் பக்தி ஹீனம் ஸுரேச்வர!
யத் பூஜிதம் மயாதேவ பரிபூர்ணம் ததஸ்துதே!!


பூஜையும் அறியேன் உன்னைப் புகழ்தலும் அறியேன்உன்பால்
நேசமும் இல்லேன் திற்கு நேரிலாக் கருணை உள்ளாய்
ஆசையால் தேவதேவனே அறிந்தவா செய்தேன் பூஜை
ஈசருக்கெல்லாம் இறைவ ஏற்றருள் செய்வாய் நீயே!

## 16. அர்க்யம்

பூஜை நிறைவில் பாலில் ஜலம் கலந்து கொண்டு மூன்று முறை அர்க்யத்திற்கான மந்திரம் கூறி அர்க்ய பாத்திரத்தில் நீர் சேர்ப்பிக்கவும்.



# பகுதி - 2



# விநாயகருக்கான எளிய பூஜை

நாம் எந்த தெய்வத்திற்குப் பூஜை செய்வது ஆனாலும் முதலில் விநாயகப் பெருமானை வழிபட்டு அவரது அருளால் நாம் செய்ய இருக்கும் பூஜை எவ்வித இடையூறுமின்றி நல்ல முறையில் நடந்தேற வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொள்வது மரபு.

ஆகவே தினமும் ஆலயத்தில் பூஜை தொடங்கும் முன்னர் சுருக்கமான முறையில் கணபதியைப் பூஜிப்பது அவசியம்.

முதலில் மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து ஒரு தட்டில் வைத்து [redacted] அந்த மஞ்சள் பிள்ளையாருக்கு சந்தனம், குங்குமம் இட்டு ஒரு பூ வைத்துக் கீழ்க்கண்டவாறு செய்க.

முதலில் கை மணி அடித்து ஆசமனம் செய்து குரு வந்தனத்துடன் பூஜை தொடங்கும்.

பின்னர் கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு சுக்லாம்பரதரம், ப்ராணாயாமம். பின்னர் லகு ஸங்கல்பம்.

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர-ப்ரீத்யர்த்தம்-கரிஷ்யமாணஸ்ய கர்மண: நிர்விக்நேந பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌ விக்நேச்வர பூஜாம் கரிஷ்யே

அல்லது

**அவனருளாலே அவன்தாள் வணங்கி**
**இவன் செய்யும் பூஜையில் இடையூறு இன்றி**
**அனைத்தும் நலமாய் இனிதே நடந்தேற**
**ஆனைமுகனே அருள்வாய் நீயே**

அக்ஷதையை வலது கையில் சேர்த்து வடக்கில் போட்டு விடவும். கையைத் தண்ணீரால் சுத்தம் செய்யவும்.

பின்னர் ஆஸன பூஜை

ப்ருதிவ்யா: மேரு ப்ருஷ்ட்டருஷி: ஸுதலம் ச்சந்த:
கூர்மோ தேவதா!

ப்ருத்வி த்வயா த்ருதா லோகா தேவி த்வம் விஷ்ணுநா த்ருதா ।
த்வம் ச தாரய மாம் தேவி பவித்ரம் ச ஆஸநம் குரு ॥

பின்னர் கண்டா பூஜை செய்து மணி அடிக்கவும். கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு

கணாநாம் த்வா கணபதிம் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபமஸ்ரவஸ்தமம் ।
ஜ்யேஷ்ட ராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத
ஆந: ஸ்ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம் ॥

அல்லது

ஏகதந்தம் சூர்ப்பகர்ணம் கஜவக்த்ரம் சதுர்புஜம் ।
பாசா[redacted]சதரம் தேவம் த்யாயேத் ஸித்தி விநாயகம் ॥

அல்லது

திகடச் சக்கரச் செம்முக மைந்துளான்
சகடச் சக்கரத் தாமரை நாயகன்
அகடச் சக்கர வின்மணி யாவுறை
விகடச் சக்கரன் மெய்ப் பதம் போற்றுவாம்

என்று கூறி,

அஸ்மிந் ஹரித்ராபிம்பே மஹாகணபதிம் த்யாயாமி
மஹாகணபதிம் ஆவாஹயாமி
மஹாகணாதிபதயே ஆஸநம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே அர்க்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே பாத்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே ஔபசாரிகஸ்நாநம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே ஸ்நாநாந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதயே வஸ்த்ரார்த்தம் அக்ஷதாந் ஸமர்ப்பயாமி

மஹாகணாதிபதயே யக்ஞோபவீதார்த்தம் அக்ஷதாந்
ஸமர்ப்பயாமி

மஹாகணாதிபதயே கந்தாந் தாரயாமி

மஹாகணாதிபதயே கந்தஸ்யோபரி அக்ஷதாந் ஸமர்ப்பயாமி

மஹாகணாதிபதயே அலங்கரணார்த்தம் அக்ஷதாந்
ஸமர்ப்பயாமி

மஹாகணாதிபதயே ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி

மஹாகணாதிபதயே புஷ்பை பூஜயாமி

(புஷ்பம் அக்ஷதையால் மஞ்சள் பிள்ளையாருக்குப் பூஜை செய்யவும்.)

ஓம் ஸுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
[redacted]ம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்நராஜாய நம:
ஓம் கணாதிபாய நம:

ஓம் தூமகேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் பாலசந்த்ராய நம:
ஓம் கஜாநநாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் ஸுர்ப்ப கர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:

ஓம் மஹாகணாதிபதயே நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

ஓம் இன்முகத்தோனே போற்றி
ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
ஓம் கபில நிறத்தோனே போற்றி
ஓம் முறக்காதுடையோய் போற்றி
ஓம் மத்தள வயிறனே போற்றி
ஓம் விகடனே போற்றி
ஓம் விக்ந ராஜனே போற்றி
ஓம் கணபதியே போற்றி
ஓம் பேழை வயிற்றனே போற்றி
ஓம் பொங்கர வணிந்த புண்ணியமூர்த்தி போற்றி
ஓம் வித்தக விநாயக போற்றி

**ஓம் வேழ முகத்தோனே போற்றி**
**ஓம் மூஷிக வாகனனே போற்றி**
**ஓம் அறுமுக சோதர போற்றி**
**ஓம் பார்வதி மைந்த போற்றி**
**ஓம் ப்ரணவச் சுடரே போற்றி**

**ஓம் மஹாகணாதிபதயே நம: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி**

தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், நீராஜனம் முதலிய உபசாரங்களைச் செய்க

பின் பிரார்த்தனை

**துங்கக் கரிமுகத்துத் தூமணியே**
**எங்கள் கர்மம் யாவினும் கை கொடுத்து**
**வெற்றி [redacted]த்துவர வேண்டருள் புரிவாய் நீ!**

என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாருக்கு அர்ச்சித்த புஷ்பம் மங்காளக்ஷதையை சிரஸில் தரித்துக் கொள்ளவும்.

**வக்ரதுண்ட மஹாகாயே ஸூர்யகோடி ஸமப்ரப**
**அவிக்நம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா**

**கணபதி ப்ராஸாதம் சிரஸா க்ருஹ்ணாமி**

ப்ரதக்ஷிணமும் நமஸ்காரமும் செய்யவும்.

உத்தரிணி ஜலத்தால் கையைத் துடைத்துக் கொண்டு **''விக்நேச்வரம் யதாஸ்த்தாநம் ப்ரதிஷ்டாபயாமி; சோபநார்த்தே க்ஷேமாய புநராகமநாய ச''**

என்று மஞ்சள் பிள்ளையாரை வடக்குப் பக்கமாக நகர்த்த வேண்டும்.



## விநாயகர்

### தியான சுலோகம்

சிவ்தனயவரிஷ்டம் சர்வ கல்யாண மூர்த்திம்
பரசுகமலஹஸ்தம் பூஷிதம் மோதகேன ।
அருணகுஸுமமாலா வ்யாளலம்போதரம் தம்
மம ஹ்ருதயநிவாஸம் ஸ்ரீ கணேசம் நமாமி ॥

நமோ நமோ கணேசாய நமஸ்தே விச்வரூபிணே ।
[redacted]ர்விக்நம் குரு மே கார்யம் நமாமி த்வாம் கஜாநந ॥
விநாயகம் வரம் தேஹி மஹாத்மந் மோதகப்ரிய ।
அவிக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ॥

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

-கபிலதேவர்

நித்தியானந்த மாகி நிஷ்கள ஸ்வரூபமாகி
சக்தியாய் சிவமுமாகி ஸ்தாணுவாய் உலகுக்கெல்லாம்
சித்தியாய் முக்தியாகித் திகழ் பரமார்த்தமாகி
அத்தியின் உருவமான அண்ணலைப் பணிகுவோமே

-அருணகிரி

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

-கச்சியப்ப சிவாச்சார்யார்

[redacted]

## சிதறுகாய்

விநாயகர் முன் தேங்காய் விடலை இடுவர்.
இதனைச் சிதறு தேங்காய் என்பர்.
தேங்காய் சிதறுவது போல் நமது பாவங்கள் அல்லது நமக்கு ஏற்படும் இடையூறுகள் யாவும் சிதற வேண்டும் என்பது விடலையிடுவோர் உள்ளக் கருத்தாகும்.

## அர்ச்சனை நாமாக்கள்

(அருணகிரியார் வழங்கியது)

ஹரஹர சிவசிவ நமோ நமோ
ஓம் அகர முதலாய் நமோ நமோ
ஓம் அநாதரக்ஷகா நமோ நமோ
ஆகுவாகனனே நமோ நமோ
ஓம் ஆனந்த உருவே நமோ நமோ
ஓம் ஆதிமூலமே நமோ நமோ
இபமுகத்தோனே நமோ நமோ
ஈசுவரன் மகனே நமோ நமோ
உமையாள் சுதனே நமோ நமோ
ஓம் ஆதார சுருதியே நமோ நமோ
ஊனிற் பிரியாய் நமோ நமோ
ஓம் இளம்பிறை எயிற்றோய் நமோ நமோ
எமையாள்பவனே நமோ நமோ
ஓம் இச்சா சக்தியே நமோ நமோ
ஏழைப் பங்காளா நமோ நமோ
ஓம் ஈசான தேவனே நமோ நமோ
ஐயா துய்யாய் நமோ நமோ
ஓம் எருக்கினில் இருப்பாய் நமோ நமோ
ஒற்றை மருப்பாய் நமோ நமோ
ஓம் எளியவர்க்கிறைவா நமோ நமோ
ஓதிய மறையே நமோ நமோ
ஔவைக்கிணியாய் நமோ நமோ
கணநாயகனே நமோ நமோ
காரணப் பொருளே நமோ நமோ
கிருபைக் கடலே நமோ நமோ
ஓம் கீர்த்தியை அருள்வாய் நமோ நமோ
கீதகிண்கிணியாய் நமோ நமோ
குஞ்சரக் களிறே நமோ நமோ

ஓம் கும்பமுனி தேவே நமோ நமோ
கூறும் பரனே நமோ நமோ
ஓம் குணாநிதியே நமோ நமோ
கதியளிப்பவனே நமோ நமோ
ஓம் கூவிட வருவாய் நமோ நமோ
கேள்வி விசால நமோ நமோ
கை ஐந்தவனே நமோ நமோ
கொழுந்திடு முதலே நமோ நமோ
ஓம் கொழுக்கட்டைப் பிரியனே நமோ நமோ
கோவே தேவே நமோ நமோ
ஓம் கோவிந்தன் மருகனே நமோ நமோ
கௌவைத் துணையே நமோ நமோ
ஓம் சங்கரன் தன் புதல்வா நமோ நமோ
சதுர்மறைப் பொருளே நமோ நமோ
ஓம் சங்கட ஹரனே நமோ நமோ
சாய்மறைச் செவியாய் நமோ நமோ
ஓம் சதுர்த்தி நாயகனே நமோ நமோ
சிவன் கண் மணியே நமோ நமோ
ஜீவ சஞ்சிதமே நமோ நமோ
சுருதி விளக்கே நமோ நமோ
சூர ஸம்ஹாரா நமோ நமோ
ஜய ஜய விநாயக நமோ நமோ
சேய்நூற் கரசே நமோ நமோ
சைவ குருவே நமோ நமோ
சொல்லும் பொருளே நமோ நமோ
சோக விநாசா நமோ நமோ
சௌரியக் களிறே நமோ நமோ
தண்டைக் காலாய் நமோ நமோ
தாமரைக் கரத்தாய் நமோ நமோ
திருமால் மருகா நமோ நமோ
தீங்கு தீர்ப்பவனே நமோ நமோ
ஓம் தேவாதி தேவனே நமோ நமோ
ஓம் தும்பிக்கையாய் நமோ நமோ

| | |
|---|---|
| ஓம் ஸ்தூல சூக்ஷுமத்தோய் | நமோ நமோ |
| ஓம் கும்பக் களிறே | நமோ நமோ |
| ஓம் தெய்வ சிகாமணி | நமோ நமோ |
| ஓம் ஸ்தோத்திரப் பிரியாய் | நமோ நமோ |
| ஓம் தௌவைத் தீர்ப்பவனே | நமோ நமோ |
| ஓம் நம்புத் துணையே | நமோ நமோ |
| ஓம் நாகபூஷணனே | நமோ நமோ |
| ஓம் ப்ரணவஸ்வரூபா | நமோ நமோ |
| ஓம் வாரணத்தானே | நமோ நமோ |
| ஓம் பேழை வயிற்றோய் | நமோ நமோ |
| ஓம் பெரும்பார கோடோய் | நமோ நமோ |
| ஓம் பரிபூரண தத்துவா | நமோ நமோ |
| ஓம் ப்ரம்மச்சாரியே | நமோ நமோ |
| ஓம் பிறவித்தளை அறுப்பாய் | நமோ நமோ |
| ஓம் மஞ்சளில் தஞ்சம் ஆனாய் | நமோ நமோ |
| ஓம் நூறாப் பேறே | நமோ நமோ |
| ஓம் மத்தள வயிறனே | நமோ நமோ |
| ஓம் நாலிரு புயத்தோய் | நமோ நமோ |
| ஓம் நெற்றிக் கண்ணாய் | நமோ நமோ |
| ஓம் நேமியந் திரத்தாய் | நமோ நமோ |
| ஓம் நைவளந் துரந்தோய் | நமோ நமோ |
| ஓம் நௌவி தரித்தோய் | நமோ நமோ |
| ஓம் பாப விநாசா | நமோ நமோ |
| ஓம் பிணிக்கு மருந்தே | நமோ நமோ |
| ஓம் பீடை தீர்ப்பவனே | நமோ நமோ |
| ஓம் பூமகள் மருகா | நமோ நமோ |
| ஓம் பொன்றாக் குன்றே | நமோ நமோ |
| ஓம் போதப் பொருளே | நமோ நமோ |
| ஓம் முக்கண்ணுடையாய் | நமோ நமோ |
| ஓம் மூவரின் முதலாய் | நமோ நமோ |
| ஓம் மொழிவோர்க்கருளே | நமோ நமோ |
| ஓம் மோதகக் கையாய் | நமோ நமோ |
| ஓம் மௌவி தரித்தோய் | நமோ நமோ |

| | |
|---|---|
| ஓம் வல்லபை மணாளா | நமோ நமோ |
| ஓம் வாமன ரூபா | நமோ நமோ |
| ஓம் வித்திக் கிறைவா | நமோ நமோ |
| ஓம் உத்தம தேவே | நமோ நமோ |
| ஓம் வையம் புரந்தோய் | நமோ நமோ |
| ஓம் ஒப்பிலாமணியே | நமோ நமோ |
| ஓம் ஓங்கார வடிவே | நமோ நமோ |
| ஓம் வெள்ளிக் கொம்பா | நமோ நமோ |
| ஓம் இலவக் கொம்பொன்று ஏந்தியோய் | நமோ நமோ |
| ஓம் மூலாதாரத் துறைவோய் | நமோ நமோ |
| ஓம் முக்காலம் உணர்ந்தோய் | நமோ நமோ |
| ஓம் கப்பிய கரிமுக | நமோ நமோ |
| ஓம் ஞான முதல்வா | நமோ நமோ |
| ஓம் ஆதார சுருதியே | நமோ நமோ |

[redacted]

## கணேச காயத்ரீ

தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்திப் பிரசோதயாத் ||

ஏக தந்தாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி |
தன்னோ தந்திப் பிரசோதயாத் ||

## கணபதி மூல மந்த்ரம்

ஓம்-ஶ்ரீம்-ஹ்ரீம்-க்லீம்-க்லௌம்-கம்-கணபதயே வரவரத, ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா



# முருகன்

## தியான சுலோகம்

ஷடானனம் குங்கும ரக்த வர்ணம்
மஹாமதிம் திவ்ய மயூரவாஹனம் ।
[redacted]ரஸ்ய ஸூனம் ஸூர சைன்ய நாதம்
ப்ரும்மண்ய தேவம் சரணம் ப்ரபத்யே ॥

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம் ।
மஹீதேவதேவம் மஹாவேதபாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம் ॥

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குஹனே

எந்தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆணவை தீர்த்து எனையாள்,
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநாயகனே

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருளே போற்றி

கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி.

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் ஸ்கந்தாய நம:
ஓம் குஹாய நம:
ஓம் கார்த்திகேயாய நம:
ஓம் சிகிவாஹநாய நம:
ஓம் பிங்களாய நம:
ஓம் ஷண்முகாய நம:
ஓம் ப்ரபுவே நம:
ஓம் குமாராய நம:
[redacted] சக்திதராய நம:
ஓம் அக்நிஜந்மனே நம:
ஓம் விசாகாய நம:
ஓம் தேவஸேனாபதயே நம:
ஓம் கங்காசுதாய நம:
ஓம் சரவணபவாய நம:
ஓம் சங்கராத்மஜாய நம:
ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:
ஓம் வீரக்நாய நம:
ஓம் உமாஸுதாய நம:
ஓம் வள்ளிநாயகாய நம:
ஓம் வேதவேத்யாய நம:
ஓம் தேஜோநிதயே நம:
ஓம் கைவல்யாய நம:
ஓம் சமீகர்ப்பாய நம:
ஓம் ஆஹுதாய நம:
ஓம் சுபகராய நம:
ஓம் ரோகநாசனாய நம:
ஓம் அநந்தமூர்த்தயே நம:

## தமிழில்

| | |
|---|---|
| ஓம் ஹரஹர சேயே | நமோ நம: |
| ஓம் ஹரி மருகோனே | நமோ நம: |
| ஓம் அறுதியில்லானே | நமோ நம: |
| ஓம் அறுமுக வேளே | நமோ நம: |
| ஓம் இகபர மூலா | நமோ நம: |
| ஓம் இமையவர் வாழ்வே | நமோ நம: |
| ஓம் கருணை அதீதா | நமோ நம: |
| ஓம் பகவதி பாலா | நமோ நம: |
| ஓம் நாத விந்து கலாதீ | நமோ நம: |
| ஓம் பரிமள நீபா | நமோ நம: |
| ஓம் பரமகுரு நாத | நமோ நம: |
| ஓம் சுந்தரமான செந்திலே | நமோ நம: |
| [redacted] சரவணபவனே | நமோ நம: |
| ஓம் கார்த்திகேயனே | நமோ நம: |
| ஓம் ஒருதிரு முருகா | நமோ நம: |
| ஓம் பாலகுமாரா | நமோ நம: |
| ஓம் ரத்ந தீபா | நமோ நம: |
| ஓம் வேத மந்த்ர ஸ்வரூபா | நமோ நம: |
| ஓம் மலைமிசை மேவு பெருமாளே | நமோ நம: |
| ஓம் கதிர்காமமுடையோனே | நமோ நம: |
| ஓம் அமரர் மனமகிழ தாணவ நாசகனே | நமோ நம: |
| ஓம் கிரிராஜ குமாரி ஸுதனே | நமோ நம: |
| ஓம் பௌருஷ சீலா | நமோ நம: |
| ஓம் சததள பாதா | நமோ நம: |
| ஓம் சம்தள ஊரா | நமோ நம: |
| ஓம் தீர சம்ப்ரம வீரா | நமோ நம: |
| ஓம் தீப மங்கள ஜோதி | நமோ நம: |

வல்லீ தேவஸேநா ஸமேத ஸ்ரீஸுப்ரஹ்மண்யாய நம: நாநாவித பரிமள பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி

## ஸுப்ரஹ்மண்ய மூல மந்த்ரம்

ஓம்-ஶ்ரீம்-ஹ்ரீம்-க்லீம்,
ஐம்-ஈம்-நம்-லம்-ஸௌ: சரவணபவ

## ஸுப்ரஹ்மண்ய காயத்ரீ

தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி ।
தன்ன ஷண்முக ப்ரசோதயாத் ॥

கார்த்திகேயாய வித்மஹே சக்திஹஸ்தாய தீமஹி ।
தன்ன ஸ் ஸ்கந்த ப்ரசோதயாத் ॥

[redacted]

சரவணப் பொய்கையென்னும் கர்ப்பப்பையில் தங்கி குழந்தையாக உருவெடுத்ததால் 'சரவணபவன்' என்ற பெயர் உண்டாயிற்று, இந்த சரவணபவ என்ற ஆறெழுத்துதான் முருக ஷடாக்ஷரியாக மூலமந்திரமாக உள்ளது.

# சிவன்



## தியான சுலோகம்

சாந்தம் பத்மாஸநஸ்தம் சசிதரமகுடம்
பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம்
சூலம் வஜ்ரம் ச கட்கம் பரசுமபயதம்
தக்ஷிணாங்கே வஹந்தம்।
நாகம் பாசஞ்ச கண்டாம் வர டமருயுதம்
ச அங்குசம் வாமபாகே
நாநாலங்காரயுக்தம் ஸ்படிகமணி நிபம்
[redacted]
பார்வதீசம் நமாமி ॥

## இதன் பொருள்:

சாந்த மூர்த்தியும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், சந்திர கலையுடன் பிரகாசிக்கும் கிரீடங்களணிந்தவரும், ஐந்து முகங்களையுடையவரும், மூன்று கண்களுடையவரும், சூலம், வஜ்ரம், வாள், பரசு, அபயமுத்திரை ஆகியவற்றை வலது புறமும், பாம்பு, பாசம், மணி, டமருகம், அங்குசம் ஆகியவற்றை இடது புறமும் தரிப்பவரும், பலவிதமான அலங்காரமுடையவரும், ஸ்படிக மணி போன்றவரும் ஆகிய பார்வதீசனை நமஸ்கரிக்கின்றேன்.

ஓம் நமஸ்தேஸ்து பகவன் விச்வேச்வராய மஹாதேவாய
த்ரயம்பகாய த்ரிபுராந்தகாய த்ரிகாக்னிகாலாய
காலாக்னிருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய ஸர்வேச்வராய
ஸதாசிவாய ஸ்ரீமந் மஹாதேவாய நம:

வந்தே சம்பும் உமாபதிம் ஸுரகுரும் வந்தே ஜகத்காரணம்
வந்தே பன்னக பூஷணம் ம்ருக தரம் வந்தே பசூனாம்பதிம் ।
வந்தே ஸூர்ய சசாங்க வஹ்னிநயனம் வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்தஜனாச்ரயம் ச வரதம் வந்தே சிவம் சங்கரம் ॥

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் ஜோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

-சேக்கிழார்.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கு அசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

-சுந்தரர்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி
சூடிக்
[redacted]டைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே.

-திருஞான சம்பந்தர்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே.

என்செய லாவதி யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே.

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் சிவாய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் மஹேச்வராய நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் ஸாமப்ரியாய நம:
ஓம் ஸோமாய நம:
ஓம் ஸதாசிவாய நம:
[redacted] ஓம் வீரபத்ராய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் ஹராய நம:
ஓம் அநந்தாய நம:
ஓம் ஈசாநாய நம:
ஓம் நீலகண்டாய நம:
ஓம் த்ரியம்பகாய நம:
ஓம் உமாபதயே நம:
ஓம் விசுவநாதாய நம:
ஓம் கபாலீச்வராய நம:
ஓம் காலகாலாய நம:
ஓம் பரமேச்வராய நம:

## தமிழில்

அரைசே போற்றி அமுதே போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
அத்திக்கு அருளிய அரசே போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
[redacted] போற்றி அமலா போற்றி
[redacted] நாயேன் அடியேன் போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
அடியோடு நடுஈறு ஆனாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்பருக்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
ஆடுஅகம் மதுரை அரசே போற்றி
ஆ ஆ என் தனக்கு அருளாய் போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
ஆழாமே அருள் அரசே போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
ஆள் ஆனவர்கட்கு அருளே போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
இன்று எனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
இடைமருது உறையும் எந்தாய் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
இலங்குசுடர் எம் ஈசா போற்றி

இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
ஈங்கோம்மலை எம் எந்தாய் போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கினாய் போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
எம்தமை உய்யக் கொள்வாய் போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
ஏனம் குருளைக்கு அருளினை போற்றி
[redacted] போற்றி அணுவே போற்றி
[redacted] அற நிறைந்த ஒருவ போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
கண் ஆர் அமுதம் கடலே போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
களம் கொளக் கருத அருளாய் போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
கலை ஆர் அரிகேசரியாய் போற்றி
கரும் குருவிக்கு அன்று அருளினை போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
காவாய் கனகம் குன்றே போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
குற்றாலத்து எம் கூத்தா போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
குழைத்த சொல் மாலை கொண்டருள் போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
கைதர வல்ல கடவுள் போற்றி

கோகழி யாண்ட குருமணிதன் தாள் போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
சடையிடை கங்கை தரித்தாய் போற்றி
சந்தனம் சாந்தின் சுந்தர போற்றி
சே ஆர் வெல் கொடிச் சிவனே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
சென்னியில் வைத்த சேவக போற்றி
சீர் ஆர் திருவையாறா போற்றி
சிராப் பள்ளி மேவிய சிவனே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
செழும் மலர் சிவபுரத்து அரசே போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
[redacted] ஆர் உருவ விகிர்தா போற்றி
[redacted]தா போற்றி முதல்வா போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மற்று ஓர் பற்று இங்கு அறியேன் போற்றி
மானம் கயிலை மலையாய் போற்றி
மறையோர் கோலம் நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
மலை நாடு உடைய மன்னே போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
மந்திரம் மாமலை மேயாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
பஞ்சு ஏர் அடியாள் பங்கா போற்றி
படிஉறப் பயின்ற பாவக போற்றி
பரகதி பாண்டியர்க்கு அருளினை போற்றி
பரம்பரம் ஜோதிப் பரனே போற்றி
பார் இடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
பாகம் பெண் உரு ஆனாய் போற்றி

பாங்கு ஆர் பழனத்து அழகா போற்றி
நீர் இடை நான்காய் நிகழ்தாய் போற்றி
வளிஇடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
தீ இடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வெளிஇடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
பொருப்பு அமர பூவணத்து அரனே போற்றி
பேர் ஆயிரமுடைப் பெம்மான் போற்றி
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
புரம் பல எரித்த புராண போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நந்தேவன் அடி போற்றி
[redacted]ற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி
[redacted]ம் தெரிந்த சேவடியாய் போற்றி போற்றி
போற்றி போற்றி ஜயஜய போற்றி

## மூலமந்த்ரம்

### சிவ பஞ்சாக்ஷரீ

**ஓம் நம: சிவாய**

### சக்தி பஞ்சாக்ஷரீ

**ஓம் ஹ்ரீம் நம: சிவாய**

### ஸ்ரீ குருதாரக பஞ்சாக்ஷரீ

**ஓம் ஓங்காராய நம: சிவாய**
**ஓம் நகாராய நம: சிவாய**
**ஓம் மகாராய நம: சிவாய**
**ஓம் சிகாராய நம: சிவாய**
**ஓம் வகாராய நம: சிவாய**
**ஓம் யகாராய நம: சிவாய**

ஓம் நம: ஸ்ரீ குருதேவாய, பரம புருஷாய, ஸர்வதேவதா, வசீகராய, ஸர்வாரிஷ்ட-விநாசாய, ஸர்வதுர்மந்த்ரச் சேதனாய, த்ரைலோக்யம் வசமானய ஸ்வாஹா

## சிவ காயத்ரீ

ஓம் தத்புஷாய வித்ஹே மஹாதேவாய தீமஹி |
தன்னோ ருத்ர: ப்ரசோதயாத் ||

தத்வாதிகாய வித்மஹே கலாத்தாய தீமஹி |
தன்னோ ஈச ப்ரசோதயாத் ||

சந்த்ரசூடாய வித்மஹே தயாரூபாய தீமஹி |
தன்ன சிவ ப்ரசோதயாத் ||

[redacted]



# அம்பிகை

அம்பிகை எந்த வடிவில் எழுந்தருளியிருந்தாலும் சொல்லக்கூடிய பொதுவான த்யான சுலோகங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

மஹாலக்ஷ்மீ, ஸரஸ்வதி சந்நிதிகளில் கூறவேண்டிய த்யான சுலோகங்கள் தனியாக பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

மாரியம்மன், காளியம்மன் முதலான கிராம தேவதைகளுக்கும் [redacted]யாக தியான சுலோகங்கள் பின்னோரு பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

## த்யான சுலோகம்

நமோ தேவ்யை மஹா தேவ்யை லோகமாத்ரே நமோ நம:।
சிவாயை சிவரூபிண்யை பக்தாபீஷ்ட ப்ரதா பவ।।

புத்ரான் தேஹி தநம் தேஹி சௌபாக்யம் தேஹி ஸுவ்ரதே।
அந்யாம்ஸ்ச ஸர்வகாமாம்ஸ்ச தேஹி தேவி நமோஸ்துதே।।

ஹரான்விதாம் இந்துமுகீம் ஸ்ர்வாபரண பூஷிதாம் ।
விமலாங்கீம் விசாலாக்ஷீம் சிந்தயாமி ஸதாசிவாம் ।।

ரூபம் தேஹி யசோ தேஹி பகம் பகவதி தேஹி மே ।
புத்ரான் தேஹி தனம் தேஹி ஸர்வாந் காமாந் ப்ரதேஹி மே ।।

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே ।
சரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ।।

ஓம் நம சிவகாந்தாயை ஹ்ரீம் நம: சிவசக்தயே
ஸ்ரீம் நமோ ஜகதாம் மாத்ரே மம பூயாந் மநோரத:

'ஆறாத் துயர்கொண் டடியோன் சவிப்ப அது செவியில்
ஏறாம லேயிருந் தாலென்செய் வேணெங்கள் ஈசற்கொரு
கூறாகி அண்டமுதலாய் இளமை குலவுதவப்
பேறாகி வாழ்பவ ளேகுன்றை வாழும் பெரியம்மையே

-பெரிய நாயகியம்மை கலித்துறை

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி -கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமணங் குழைத்தென்னை எடுத்தாண்ட
[redacted] அங்கயற்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரண
நூபுரஞ்சிலம்பும் அடிகள் போற்றி

-திருவிளையாடற் புராணம்

## அம்பிகைக்கான பொதுவான அர்ச்சனை நாமாக்கள்

ஓம் தேவ்யை
ஓம் மங்கல்யாயை
ஓம் த்ரிபுவநேச்வர்யை
ஓம் பாபதாரிண்யை
ஓம் வரதாயை
ஓம் க்ருஷ்ணாயை
ஓம் குமார்யை
ஓம் சதுர்புஜாயை
ஓம் ஜயாயை
ஓம் விஜயாயை



| | |
|---|---|
| ஓம் கீர்த்யை | நம: |
| ஓம் ஸ்கந்தமாத்ரே | நம: |
| ஓம் ச்ரியை | நம: |
| ஓம் ஹ்ரியை | நம: |
| ஓம் த்ருத்யை | நம: |
| ஓம் ஸித்த்யை | நம: |
| ஓம் வித்யாயை | நம: |
| ஓம் ஸந்தத்யை | நம: |
| ஓம் மத்யை | நம: |
| ஓம் ஆயுர்தாயை | நம: |
| ஓம் ஸௌக்யதாயை | நம: |
| ஓம் ஆரோக்யதாயை | நம: |
| ஓம் ராஜ்யதாயை | நம: |
| [redacted]ம் சரண்யாயை | நம: |
| ஓம் அம்பிகாயை | நம: |
| ஓம் நித்யாயை | நம: |
| ஓம் நிர்மலாயை | நம: |
| ஓம் பாலாயை | நம: |
| ஓம் வ்யாதிநாசின்யை | நம: |
| ஓம் அமலாயை | நம: |
| ஓம் விரஜாயை | நம: |
| ஓம் கமலாயை | நம: |
| ஓம் ஸர்வமய்யை | நம: |
| ஓம் சூலிந்யை | நம: |
| ஓம் ஆர்யாயை | நம: |
| ஓம் சுந்தர்யை | நம: |

ஓம் மஹாதேவ்யை நம: நாநாவித பரிமள பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி ||

## தமிழில் அர்ச்சனை நாமாக்கள்

| | |
|---|---|
| ஓம் அருள் பொழிந்து எம்மை ஆள்வோய் | நமோ நம: |
| ஓம் அறிவினிக்கு அறிவாய் ஆனாய் | நமோ நம: |

ஓம் அறம்வளர் நாயகி அம்மையே நமோ நம:
ஓம் அளவிலாச் செல்வம் நல்குவாய் நமோ நம:
ஓம் அருமறைப் பொருளாம் ஆதி நமோ நம:
ஓம் அஞ்சல் என்றருளும் அன்பே நமோ நம:
ஓம் ஆகம முடிமேல் அமர்ந்தாய் நமோ நம:
ஓம் ஆதியும் அந்தமும் ஆனாய் நமோ நம:
ஓம் ஆனந்த அறிவொளி விளக்கே நமோ நம:
ஓம் அனைத்துமாய் விளங்கும் அம்பிகே நமோ நம:
ஓம் மனங்கவர் மலரே நமோ நம:
ஓம் வேய்கொண்ட தோளினாய் நமோ நம:
ஓம் மங்கலச் செல்வி நமோ நம:
ஓம் மரகத மலரே நமோ நம:
ஓம் மாணிக்கக் கரும்பே நமோ நம:
ஓம் மாந்தர்க்கு அருளும் மலர்மகளே நமோ நம:
ஓம் திருவென வளர்ந்த நங்காய் நமோ நம:
ஓம் அரு[redacted]றை இறைவி நமோ நம:
ஓம் கவு[redacted]ர்க்குப் பால்சுரந்த கலசம் நமோ நம:
ஓம் ஆதி கடவூரின் வாழ்வே நமோ நம:
ஓம் பரசமய இருள் நீங்க பரிந்தருள்வாய் நமோ நம:
ஓம் அனைத்துலக நாயகியே நமோ நம:
ஓம் நற்கதியருளும் நாயகியே நமோ நம:
ஓம் குனிதரும் சேவடிக்கோமளமே நமோ நம:
ஓம் பைரவி பஞ்சமி பாசாங்குசை நமோ நம:
ஓம் நாயகி நான்முகி நாராயணி நமோ நம:
ஓம் மாலினி சூலி வாராகி நமோ நம:
ஓம் கோமளவல்லியே நமோ நம:
ஓம் யாமள வல்லியே நமோ நம:
ஓம் சாமள மேனி சகலகலாமயிலே நமோ நம:
ஓம் மணியே மணியின் ஒளியே நமோ நம:
ஓம் அணியே அணியும் அணிக்கழகே நமோ நம:
ஓம் பிணியே பிணிக்கு மருந்தே நமோ நம:
ஓம் பாகம் பிரியா பராபரை நமோ நம:
ஓம் அந்தமில் இன்பம் அருள்வோய் நமோ நம:
ஓம் ஆவுக்கு நாயகியாய் அமர்ந்தாய் நமோ நம:
ஓம் கன்னலும் பூவும் அணிந்தாய் நமோ நம:
ஓம் வெண்முத்து மாலை மெய்யளே நமோ நம:

ஓம் பொருளே பொருள் முடிக்கும் போகமே நமோ நம:

ஓம் மருளே மருளில் வரும் தெருளே நமோ நம:

ஓம் அம்புஜாஸனத்து அம்பிகையே நமோ நம:

ஓம் ஈசர் பாகத்து நேரிழையே நமோ நம:

ஓம் ஒன்றே பல உருவே சமையவளே நமோ நம:

ஓம் அன்னே உலகுக்கு அருமருந்தே நமோ நம:

ஓம் கொடியே இளவஞ்சிக் கொம்பே நமோ நம:

ஓம் செங்கமலமுலையாள் மலையாள் நமோ நம:

ஓம் ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே நமோ நம:

ஓம் அமுதம் நிறைகின்ற வெண்திங்களே நமோ நம:

ஓம் அறைகின்ற நான்மறையின் அடிமுடியே நமோ நம:

ஓம் உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகமே நமோ நம:

ஓம் சிந்தூர வண்ணப் பெண்ணே நமோ நம:

ஓம் சிந்துரானன சுந்தரியே நமோ நம:

[redacted]ம் என்பாசத்தொடரை வந்தரியாய் நமோ நம:

ஓம் அந்தரி நீலி அழியாத கன்னிகையே நமோ நம:

ஓம் அறிவாய் நிறைந்த அமுதே நமோ நம:

ஓம் பூத்தவளே புவனம் பதினான்கையும் காத்தவளே நமோ நம:

ஓம் மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே நமோ நம:

ஓம் பரிமள யாமளைப் பைங்கிளியே நமோ நம:

ஓம் மனத்தே கிளர்ந்தொளிரும் ஒளியே நமோ நம:

ஓம் சூழும் சுடர்க்கு நடுவே சுடரும் கலைமதியே நமோ நம:

ஓம் சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பராசக்தி நமோ நம:

ஓம் முக்தியும் முக்திக்கு வித்தும் நமோ நம:

ஓம் அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் நமோ நம:

ஓம் வெங்கட் பணியணை மேல் துயில் கூடும் விழுப்பொருளே நமோ நம:

ஓம் கறுக்கும் திருமிடந்தான் இடப்பாகம் கலந்த பொன்னே நமோ நம:

ஓம் நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே நமோ நம:

ஓம் மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற ஆனந்தவல்லி நமோ நம:

ஓம் தாயே மலைமகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே நமோ நம:

ஓம் வல்வரவின் படங்கொண்ட அல்குல் பனிமொழியே நமோ நம:

ஓம் இறைவர் செம்பாகத்து இருந்தவளே நமோ நம:

ஓம் அன்று ஆலிலையில் துயின்ற பெம்மான் தங்காய் நமோ நம:
ஓம் அண்டம் எல்லாம் உய்ய அறம் செய்யும் நங்காய் நமோ நம:
ஓம் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி நமோ நம:
ஓம் தன்குறை தீர எங்கோன் சடைமேல்
வைத்த தாமரையே நமோ நம:
ஓம் ஆடகத் தாமரை ஆரணங்கே நமோ நம:
ஓம் அளியார் கமலத்தில் ஆரணங்கே நமோ நம:
ஓம் எங்கள் பெம்மான் இடையாளே என்னை
இனி படையாளே நமோ நம:
ஓம் பாலையும் தேனையும் பாகையும் போலும்
பணிமொழியே நமோ நம:
ஓம் என் அல்லல் எல்லாம் தீர்க்கும் திரிபுரையாள் நமோ நம:
ஓம் அயன் சிரம் செற்ற கையான்
இடப்பாகம் சிறந்தவளே நமோ நம:

ஓம் முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும்
[redacted] முகிழ் நகையே நமோ நம:
ஓம் குணக்குன்றே அருட்கடலே இமவான்
பெற்ற கோமளமே நமோ நம:
ஓம் பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா
மடப் பூங்குயிலே நமோ நம:
ஓம் கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த
கனங்குழையே நமோ நம:
ஓம் ஆத்தாளே எங்கள் அபிராமவல்லியே நமோ நம:

## மூல மந்த்ரம்

எளிமையாகக் கூறக்கூடியதை இங்கு தந்துள்ளோம்.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம்-ஸ்ரீம்

## தேவி காயத்ரீ

மஹாதேவ்யை ச வித்மஹே ருத்ர பத்ன்யை ச தீமஹி|
தன்னோ கௌரீ ப்ரசோதயாத்||

த்ரிபுராயை ச வித்மஹே பவான்யை ச தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

ஓம் காத்யாயனாய வித்மஹே கன்யாகுமரி ச தீமஹி ।
தன்னோ துர்கி: ப்ரசோதயாத் ॥

ஓம் மஹாமாயை ச வித்மஹே சண்டிகாயை ச தீமஹி ।
தன்னோ தேவி ப்ரசோதயாத் ॥

# துர்க்கை

## த்யான ஸ்லோகம்

[redacted]ர்காத் ஸந்த்ராயதே யஸ்மாத் தேவி துர்கேதி கத்யதே ।
ப்ரபத்யே சரணம் தேவீம் த்வம் துர்கே துரிதம் ஹர ॥

மஹிஷக்நீம் மஹாதேவீம் குமாரீம் ஸிம்ஹவாஹநாம் ।
தாநவாம்ஸ தர்ஜயந்தீம் ச ஸர்வகாமதுகாம் சிவாம் ॥

த்யாயாமி மநஸா துர்காம் நாபிமத்யே வ்யவஸ்த்திதாம் ।
ஆகச்ச வரதே தேவி தைத்ய தர்ப்ப நிபாதிநி ॥

பூஜாம் க்ருஹாண ஸுமுகி நமஸ்தே சங்கரப்ரியே ।
ஏஹி துர்க்கே மஹாபாகே ரக்ஷார்த்தம் மம ஸர்வதா ॥

நமஸ்தே சரண்யே சிவே ஸானுகம்பே
நமஸ்தே ஜகத்வ்யாபிகே விச்வரூபே ।
நமஸ்தே ஜகத்வந்த்ய பாதார விந்தே
நமஸ்தே தாரிணி த்ராஹி துர்க்கே ॥

# வன துர்கா

**மூல மந்த்ரம்**

ஓம் ஹ்ரீம் தும் ஜ்வல ஜ்வல தூம்ர
லோசனி சண்ட ஸம்ஹாரி
ஐம்-ஹ்ரீம்-க்லீம் நமோ பகவதி வன
துர்க்காயை ஹூம்பட் ஸ்வாஹா ॥

# குங்கும அர்ச்சனை

குங்கும அர்ச்சனை செய்தவர்க்கு அம்பாள்
கோடிக் கோடி பொன்னைக் கொடுப்பவளாம்
[redacted]ந்தனத்தால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
சர்வா பீஷ்டங்களும் கொடுப்பவளாம்
தேனால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
திவ்ய தரிசனம் கொடுப்பவளாம்
பாலால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
பல ஜென்ம பாவத்தைப் போக்குபவளாம்
கனியால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
கண் முன்னே வந்து நிற்பவளாம்
மனதால் எப்போதும் நினைப்பவர்க்கு அம்பாள்
மாங்கல்ய பாக்கியம் கொடுப்பவளாம்
மும்முறை வலம் வந்து தொழுபவர்க்கு அம்பாள்
முன்நின்று காத்தருள் புரிபவளாம்.
அடிமேல் அடிவைத்து அவளை வலம் வந்தால்
அஷ்ட சம்பத்தும் கொடுப்பவளாம்
கற்பூர ஜோதியைக் காண்பவர்க்கு அம்பாள்
கைமேல் பலன்களைக் கொடுப்பவளாம்
தீராத வினைகளைத் தீர்ப்பவளாம் தேவி
திருவடி சரணம் சரணம் அம்மா
உன் திருவடி சரணம் சரணம் அம்மா

# குங்கும மகிமை

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடி யினைக் காப்பது
குங்குமமாவது குணம தளிப்பது
குங்குமமாவது கொல்வினை தீர்ப்பதே

விதி வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை யீவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவ்ரதை குங்குமம்
கதிதனை யாள்வதும் குங்குமமாமே.

நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை யீவது பூரணி குங்குமம்
[redacted]ற்பர மாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்குமமாமே

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடுஞ் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
கஞ்சி காமாட்சியின் குங்குமமாமே.



# அபிராமி அந்தாதி பாடல்கள்

## அம்பாள் ஆவாஹனத்தின் போது

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மே! கொன்றை வார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தியெந் நாளும் பொருந்துகவே

## அலங்காரத்தின் போது

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதி[redacted]ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலமென்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே அணியும் திருவுடைய யானிடம் சேர்பவளே!

## நீராஜனம் செய்யும்போது

வாழும் படியொன்று கண்டுகொண்டேன்; மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும்படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டுமெட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

## பீடபூஜையின் போது

பாலினும் சொல்லினி யாய் பனி மாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
காலினும் சாலநன்றோ அடியேன்முடை நாய்த்தலையே?

## அம்மையின் திருப்பெயர்கள்

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

## வழிபடுவார் பெறும் பயன்

[redacted]கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகு
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

தனம் தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமிலா
இனம்தரும் நல்லனஎல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

## நமஸ்காரம் செய்யும் போது

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

## அபிஷேகம் செய்யும் போது

வந்திப் பவருன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

## மங்களம்

அன்[redacted] அன்னை அன்னை அன்னை அன்பினுக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக் கனந்த கோடி மங்களம்
என்னுளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சை யாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்
தாழ்விலாத தன்மையும் தளர்ச்சி அற்ற வன்மையும்
வாழ்வினால் பயன்களும் என் வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்து வந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க் கனேக போக பாக்கியங்கள் மேன்மையும்
என்றும் ஓங்க என் கரத்தி யற்கையான சித்தியைத்
தந்து ஞான மூர்த்தியாத் தனித்து வைத்த சக்தியாம் - (அன்னை)

நாமகீர்த்தனம் பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
மாறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞானதீப மேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
தர்ம சக்தி வாழ்க வென்று சந்ததம் கொண்டாடுவோம்
(அன்னை)

# மஹாவிஷ்ணு



## த்யான சுலோகம்

[redacted] சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் ஸுரேசம்
விச்வாதாரம் ககன ஸத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம் ।
லக்ஷ்மீகாந்தம் கமலநயனம் யோகிஹ்ருத் த்யானகம்யம்
வந்தே விஷ்ணும் பவ பயஹரம் ஸர்வலோகைக நாதம் ॥

மேகச்யாமம் பீதகௌசேயவாஸம்
ஸ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபோத்பாஸிதாங்கம்
புண்யோபேதம் புண்டரீகாய தாக்ஷம்
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைக நாதம் ॥

நமோஸ்து அனந்தாய ஸஹஸ்ர மூர்த்தயே
ஸஹஸ்ரபாதாக்ஷி சிரோருபாஹவே
ஸஹஸ்ரநாம்னே புருஷாய சாச்வதே
ஸஹஸ்ரகோடி யுகதாரிணே நம:

ஸசங்கசக்ரம் ஸகிரீடகுண்டலம்
ஸபீதவஸ்த்ரம் ஸரஸீருஹேக்ஷணம்:
ஸஹாரவக்ஷ ஸ்தல சோபி கௌஸ்துபம்
நமாமி விஷ்ணும் சிரஸா சதுர்புஜம் ॥

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

-திருமங்கையாழ்வார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு.

[redacted]
அருமறை முதல்வனை ஆழி மாயனை
கருமுகில் வண்ணனை கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி வாழ்த்துவோம்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் ஜோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சஜன்னியமும்
பல்லாண்டே

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை
இண்டைக் குலத்தையெடுத்துக் களைந்த ரிஷிகே சன் தனக்குத்
தொண்டக்குலத்திலுள்ளீர்! வந்தடிதொழுது ஆயிரநாமம்
சொல்லிப்

பண்டைக்குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டென்மினே

-பெரியாழ்வார்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன்- செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன் புரிசங்கம் கைக் கண்டேன்
என் ஆழி வண்ணன்பால் இன்று.

-பேயாழ்வார்

சிற்றஞ்சிறு காலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்த நீ
குற்றேவலெங்களைச் கொள்ளாமற்போகாது
இற்றைப்பறை கொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்குமே ழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமேயாவோமுனக்கே நாமாட் செய்வோம்
[redacted] முற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

-ஸ்ரீ ஆண்டாள்

துஞ்சும் போதழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம்

-பெரிய திருமொழி

கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

-நாச்சியார் திருமொழி

## அர்ச்சனை நாமாக்கள்

| | |
|---|---|
| ஓம் கேசவாய | நம: |
| ஓம் நாராயணாய | நம: |
| ஓம் மாதவாய | நம: |

ஓம் கோவிந்தாய நம:
ஓம் மதுஸூதநாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஹ்ருஷீகேசாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் அச்யுதாய நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் ந்ருஸிம்ஹாய நம:
ஓம் ஜநார்தனாய நம:
ஓம் வராஹாய நம:
ஓ[redacted]நமாலிநே நம:
ஓம் உபேந்த்ராய நம:
ஓம் ஸர்வேசாய நம:
ஓம் நீலமேகநிபாய நம:
ஓம் விச்வரூபாய நம:
ஓம் ஸர்வாத்மநே நம:
ஓம் லக்ஷ்மீபதயே நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் புண்டரீகாக்ஷாய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:

## தமிழில் அர்ச்சனை நாமாக்கள்

ஓம் அழுங்கியவானையின் அருந்துயர் கெடுத்த அரங்கத்தம்மா நமோ நம:
ஓம் வலமார்பினில் வாழ்கின்ற மங்கை மணாளா நமோ நம:
ஓம் இலங்கை பாழாளாகப் படைபொருதானே நமோ நம:
ஓம் இண்டைக் குலத்தையெடுத்துக்களைந்த ரிஷிகேசா நமோ நம:

ஓம் பையுடைநாகப் பகைக் கொடியோய் நமோ நம:
ஓம் திருவோணத் திருவிழவில் படுத்த பைந்நாகா நமோ நம:
ஓம் ஐந்தலைய பைந்நாகத் தலைப்பாய்ந்தவனே நமோ நம:
ஓம் பாற்கடலுள் பையத் துயின்ற பரமனே நமோ நம:
ஓம் ஓங்கியுலகளந்த உத்தமா நமோ நம:
ஓம் தூயப்பெருநீர் யமுனைத் துறைவா நமோ நம:
ஓம் ஆயர்குலத்தினில் தோன்று மணி விளக்கே நமோ நம:
ஓம் தாயைக்குடல் விளக்கஞ் செய்த தாமோதரனே நமோ நம:
ஓம் மல்லரை மாட்டிய தேவாதிதேவனே நமோ நம:
ஓம் நினைப்பரிய நீள் அரங்கத்து உள்ளானே நமோ நம:
ஓம் கருமா முகில் வண்ணா நமோ நம:
ஓம் கார்கடல் நீர்வண்ணா நமோ நம:
ஓம் உயர்வற உயர்நலம் உடையவா நமோ நம:
ஓம் மயர்வற மதிநலம் அருளியவா நமோ நம:
[redacted]ம் அயர்வறு அமரர்கள் அதிபதி நமோ நம:
ஓம் அனந்தபுரத்து அண்ணலார் கமலபாதம் நமோ நம:
ஓம் அச்சுதா அமரர் ஏறே நமோ நம:
ஓம் ஆயர்தம் கொழுந்தே நமோ நம:
ஓம் குலம் தந்து செல்வம் தந்திடும் நாராயணா நமோ நம:
ஓம் நிலம்தரம் செய்து நீள்விசும்பருளும் நாராயணா நமோ நம:
ஓம் பூமகள்கோன் தென்னரங்க பூங்கழலே நமோ நம:
ஓம் வண்ணம முகிய நம்பி நண்ணிலரியபிரானே நமோ நம:
ஓம் ஓங்கியுலகளந்த உம்பர் கோமானே நமோ நம:

ஸ்ரீ பூமிநீளா ஸஹித ஸ்ரீ மஹாவிஷ்ணவே நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

## மூலமந்த்ரம்

*அஷ்டாக்ஷரீ*

ஓம் நமோ நாராயணாய

## ஷடாக்ஷரீ

ஓம் நமோ விஷ்ணவே நம:

## த்வாதசாக்ஷரீ

ஓம் நமோ பகவதே வாசுதேவாய நம:
ஓம் ச்ரீம் ஸ்ரீயை நம:

## த்வய மந்த்ரம்

ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம:

## சரம சுலோகம்

[redacted]வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச

## காயத்ரீ

நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி ।
தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத் ॥

4



# விஷ்ணு கோயில்களில் தாயார் சந்நிதியில் த்யான சுலோகம்

[redacted]ஷ்ணுபத்னீம் க்ஷமாம் தேவீம்
மாதவீம் மாதவப்ப்ரியாம்।
விஷ்ணோ: ப்ரிய ஸகீம் தேவீம்
நமாம்யச்யுத வல்லபாம்॥
லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ர ராஜதனயாம் ஸ்ரீரங்க தாமேச்வரீம்
தாஸீபூத ஸமஸ்த தேவ வனிதாம் லோகைக தீபாங்குராம்
ஸ்ரீமந்மந்த கடாக்ஷலப்த விபவ
ப்ரஹ்மேந்த்ர கங்காதராம்
த்வாம் த்ரைலோக்ய குடும்பினீம்
ஸரஸிஜாம் வந்தே முகுந்தப்ரியாம்

நமோஸ்து நாளீக நிபாநநாயை
நமோஸ்து நாராயண வல்லபாயை।
நமோஸ்து ரத்நாகர ஸம்பவாயை
நமோஸ்து லக்ஷ்ம்யை ஜகதாம் ஜநந்யை ॥

திருமக ளேதிருப் பாற்கட லூடன்று தேவர்தொழ
வருமக ளேஉல கெல்லாமும் என்றென்றும் வாழவைக்கும்

ஒருமக ளேநெடு மால்உரத் தேஉற்(று) உரம்பெரிது
தருமக ளேதமி யேன்தலை மீதுநின் தாளை வையே.

-வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

கந்தருவ ரியக்கர் விஞ்சை வல்லவர்
வானகத்தமரர் கருவி யாழ்ப்பண்
முந்திருவ ராயிரங்க ணிந்திரரான்
முகன்மறையோர் முனிவர் நாகர்
வந்திருதாண் மலர்துதிப்ப மாயவன்
செம்மணி மார்பின் மருகி வாழுஞ்
செந்திருவின் நறுங்கமலச் சுந்தரப்
பொற்பாதமலர் சென்னி சேர்ப்பாம்.

-மச்சபுராணம்.

## தாயாருக்கான அர்ச்சனை நாமாக்கள்

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் ஸாகரஸம்பவாயை நம:
ஓம் நாராயணப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மஸௌந்தர்யை நம:
ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மிந்யை நம:
ஓம் விஷ்ணுவல்லபாயை நம:
ஓம் ஜகந்மாத்ரே நம:
ஓம் கமலவாஸின்யை நம:

ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

## தமிழில்

ஓம் லக்ஷ்மிதேவியே நமோ நம:
ஓம் தயாஸ்வரூபியே நமோ நம:
ஓம் பாற்கடல் உதித்தோய் நமோ நம:
ஓம் கோரும் வரம் அளிப்பாய் நமோ நம:
ஓம் ஆதி லஷ்மியே நமோ நம:
ஓம் அனந்த லக்ஷ்மியே நமோ நம:
ஓம் ஐஸ்வர்ய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் தைர்ய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் தான்ய லக்ஷ்மியே நமோ நம:
[redacted]ம் தன லக்ஷ்மியே நமோ நம:
ஓம் விஜய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் கஜ லக்ஷ்மியே நமோ நம:
ஓம் கனக லக்ஷ்மியே நமோ நம:
ஓம் ஸௌம்ய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் ராஜ்ய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் ஜய லக்ஷ்மியே நமோ நம:
ஓம் ஞானலக்ஷ்மியே நமோ நம:
ஓம் மஹாலக்ஷ்மியே நமோ நம:

## மஹாலக்ஷ்மீ மூலமந்த்ரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் மஹாலக்ஷ்ம்யை
கமலதாரிண்யை ஸிம்ஹவாஹின்யை ஸ்வாஹா ॥

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் கமலே கமலாலயே ப்ரஸீத ப்ரஸீத
ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் மஹாலக்ஷ்ம்யை நம ॥

## காயத்ரீ

ஓம் மஹாலக்ஷ்மீ ச வித்மஹே விஷ்ணுபத்னீ ச தீமஹி ।
தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத் ॥

# ஸ்ரீராமர்



## த்யான சுலோகம்

வாமே பூமிஸுதா புரஸ்ச ஹனுமாந்
பஸ்சாத் ஸுமித்ரா ஸுத:
ஶத்ருக்னோ பரதஸ்ச பார்ஸ்வதளயோ:
வாய்வாதி கோணேஷுச
ஸுக்ரீவஸ்ச விபீஷணஸ்ச யுவராட்
தாராஸுதோ ஜாம்பவாந்
மத்யே நீலஸரோஜ கோமலருசிம்
ராமம் பஜே ஸ்யாமளம்

ராமாய [redacted]பத்ராய ராமசந்த்ராய வேதஸே ।
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம ।

ஆபதாம் அபஹர்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம் ।
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோபூயோ நமாம்யஹம் ॥

ஆர்த்தானாம்ர்த்திஹந்தாரம் பீதானாம் பீதிநாசனம்
த்விஷதாம் காலதண்டம் தம் ராமசந்த்ரம் நமாம்யஹம் ॥

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம என்றிரண்டு எழுத்தினால்

நாடிய பொருள் கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவார்க்கே

-கம்பர் பிரான்

மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்த்ரம்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும்பதம்
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தது
செம்மைசேர் இராமன் என்னும் நாமம்தானே
ஊனின்மேய ஆவி நீ உறக்கமோ டுணர்ச்சிநீ
ஆனில்மேய ஐந்தும்நீ அவற்றுள் நின்ற தூய்மைநீ
வானினோடும் மண்ணும்நீ வளங்கடற் பயனும்நீ
யானும்நீய தன்றியெம் பிரானும்நீ இராமனே.

-திருமழிசையாழ்வார்.

## அர்ச்சனை நாமாக்கள்

| | |
|---|---|
| ஓம் ஸ்ரீராமாய | நம: |
| ஓம் ராமபத்ராய | நம: |
| [redacted] ராமசந்த்ராய | நம: |
| ஓம் ராஜீவலோசநாய | நம: |
| ஓம் ரகுபுங்கவாய | நம: |
| ஓம் ஸத்யவிக்ரமாய | நம: |
| ஓம் தாடகாந்தகாய | நம: |
| ஓம் த்ரிகுணாத்மகாய | நம: |
| ஓம் பித்ருபக்தாய | நம: |
| ஓம் வேதாத்மநே | நம: |
| ஓம் மஹாபுஜாய | நம: |
| ஓம் ஸௌம்யாய | நம: |
| ஓம் மஹாயோகிநே | நம: |
| ஓம் மிதபாஷிணே | நம: |
| ஓம் பூர்வபாஷிணே | நம: |
| ஓம் ராகவாய | நம: |
| ஓம் தநுர்த்தராய | நம: |
| ஓம் பராகாஸாய | நம: |
| ஓம் பராத்பராய | நம: |
| ஓம் ஶ்யாமாங்காய | நம: |
| ஓம் கஸ்தூரீ திலகாங்கிதாய | நம: |

| | |
|---|---|
| ஓம் ஸுதாபதயே | நம: |
| ஓம் தஶக்ரீவஶிரோஹராய | நம: |
| ஓம் ஜானகிவல்லபாய | நம: |

## தமிழில்

| | |
|---|---|
| அமரர் துயர் தீர அவதரித்த ஸ்ரீராமா | நமோ நம: |
| அயோத்தி என்னும் அணிநகரில் ஜனித்தவா | நமோ நம: |
| தயரதன் மகனாய் தோன்றியோய் | நமோ நம: |
| கௌசலை தன் குல மதலையாய் உதித்தோய் | நமோ நம: |
| மறைமுனிவன் வேள்வி காத்த ராகவா | நமோ நம: |
| தாடகை தன் உரத்தைக் கீறிய தாசரதே | நமோ நம: |
| கல்லைப் பெண்ணாக்கிய கார்மேகவண்ணா | நமோ நம: |
| மை[redacted]யை மணம் புணர்ந்த மாதவா | நமோ நம: |
| கைகேயி வரம் வேண்ட காடேகிய காகுத்தா | நமோ நம: |
| குஹனுக்கு உடன்பிறவாச் சோதரனானாய் | நமோ நம: |
| சித்திரகூடத்திருந்த ஸ்ரீராமா | நமோ நம: |
| தம்பிக்கு மரவடி தந்த மன்னவா | நமோ நம: |
| கரனோடு தூஷணனைக் கொன்றவனே | நமோ நம: |
| அமலிவேற் கண்ணாள் அகன்றாய் | நமோ நம: |
| ஜடாயுவை வைகுந்தத்து ஏற்றினாய் | நமோ நம: |
| கவந்தனை மடித்து சபரி தந்த கனியுவந்தாய் | நமோ நம: |
| வனமருவு கவியரசன் தன்னோடு காதல் கொண்டோய் | நமோ நம: |
| உருத்தெழு வாலி மார்பில் ஒருகணை உருவ ஓட்டியாய் | நமோ நம: |
| மாருதியை தூதனுப்பிய மைதிலி மணாளா | நமோ நம: |
| சிறு காக்கை முலை தீண்ட அதன் கண்ணை அறுத்தவனே | நமோ நம: |
| மைதிலிதான் உயிர் வாழ கணையாழி தந்தாய் | நமோ நம: |
| குரைகடலை அடலம்பால் மறுகஎய்திய மாவீரா | நமோ நம: |
| மலையாலணை கட்டி மறுகரையேறிய மன்னவனே | நமோ நம |

இலங்கை மன்னன் முடி யொருபதும் தோளிருபதும்
போயுதிர சிலை வளைத்தாய் நமோ நம:
அங்கணெடு மதில்புடைசூழ் அயோத்தி எய்தினாய் நமோ நம:
சீரிய சிங்காதனத்து ஏழுலகும் செங்கோல் செலுத்தினாய்
நமோ நம:

## மூல மந்த்ரம்

## ஸ்ரீராம ரக்ஷா மஹாமந்த்ரம்

ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜய ராம ॥

## ஸ்ரீராம தாரக மந்த்ரம்

ராம்-ராமாய நம:

[redacted]

## காயத்ரீ

தாசரதாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி ।
தன்னோ ராம ப்ரசோதயாத் ॥

# ஸ்ரீகிருஷ்ணர்

## த்யான சுலோகம்

வஸுதேவஸுதம் தேவம் கம்ஸ சாணூர மர்தனம் ||
தேவகீ பரமாநந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||
க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீநந்தனாய ச |
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம ||
கஸ்தூரீ திலகம் லலாடபலகே வக்ஷஃ ஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவமௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம் |
ஸர்வாங்கே ஹரிசந்தனம் ச கலயன் கண்டே ச முக்தாவளிம்
கோபஸ்த்ரீ பரிவேஷ்டிதோ விஜயதே கோபால சூடாமணி ||

## தமிழி[redacted]

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயப் பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர்கள் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவானின்றனவும்
தீயினில் தூசாகும் செப்போலோ ரெம்பாவாய்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்



திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தோலோ ரெம்பாவாய்.

-ஸ்ரீஆண்டாள்

மாலைநண்ணித் தொழுதெழு மினோவினைகெடக்
காலைமாலை கமலமலரிட்டு நீர்
வேலைமோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின் மேலாலமர்ந்தான் அடியிணைகளே.

பாதம் நாளும் பணியத் தணியும் பிணி
ஏதம்சாரா எனக்கேலினியென் குறை?
வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரத்
தாதியானை அடைந்தார்க்கு அல்லலில்லையே.

-நம்மாழ்வார்

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் ஸ்ரீ க்ருஷ்ணாய நமஃ
ஓம் வாஸுதேவாய நமஃ
ஓம் ஸநாதநாய நமஃ
ஓம் தேவகீநந்தனாய நமஃ
ஓம் கோவிந்தாய நமஃ
ஓம் மதுராநாதாய நமஃ
ஓம் த்வாரகாநாதாய நமஃ
ஓம் வநமாலிநே நமஃ
ஓம் கோபகோபீச்வராய நமஃ
ஓம் நவநீதநடாய நமஃ
ஓம் பரமபுருஷாய நமஃ
ஓம் கம்ஸாரயே நமஃ
ஓம் முராரயே நமஃ
ஓம் நரகாந்தகாய நமஃ
ஓம் ஸத்யஸங்கல்பாய நமஃ
ஓம் ஸத்யபாமாரதாய நமஃ

ஓம் ஜகத்குரவே நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் புண்யச்லோகாய நம:
ஓம் வேதவேத்யாய நம:
ஓம் தயாநிதியே நம:
ஓம் கோவர்தனகிரிதராய நம:
ஓம் காளீயமர்தனாய நம:
ஓம் கோபாலாய நம:
ஓம் கோபாலக்ருஷ்ண ஸ்வாமிநே நம:

## தமிழில்

ஆ[redacted]மேல் அமர்ந்தான் அடியிணைகள் நமோ நம:
உலகமுண்ட பெருவாயா நமோ நம:
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரா நமோ நம:
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் நமோ நம:
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நமோ நம:
பாழியந்தோளுடை பத்மநாபா நமோ நம:
மாயனே மன்னு வடமதுரை மைந்தனே நமோ நம:
தூயப் பெருநீர் யமுனைத்துறைவா நமோ நம:
ஆயர்குலத்துத் தோன்றும் அணிவிளக்கே நமோ நம:
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரா நமோ நம:
மல்லரை மாட்டிய தேவாதிதேவனே நமோ நம:
மாமாயன் மாதவன் வைகுந்தனே நமோ நம:
நென்னலே வாய் நேர்ந்த மாய மணிவண்ணா நமோ நம:
குன்று குடையாய் எடுத்தாய் நமோ நம:
ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளிந்து வளர்ந்தாய் நமோ நம:
கோபிகைகள் உயிர்நினைவாய் நின்றாய் நமோ நம:
பாஞ்சஜன்யம் முழக்கிய பார்த்தஸாரதி நமோ நம:
கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா நமோ நம:
பேய்ச்சிமுலையுண்ட ஆயர்குலக் கொழுந்தே நமோ நம:
பொன்ற சகட முதைத்த பரந்தாமா நமோ நம:

ஸ்ரீ ராதாருக்மிணி ஸத்யபாமா ஸமேத
ஸ்ரீ கோபாலக்ருஷ்ண ஸ்வாமிநே நம: பரிமள
பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

## மூலமந்த்ரம்

### ஸ்ரீராஜகோபால அஷ்டதசாக்ஷரீ

ஓம் க்லீம் க்ருஷ்ணாய கோவிந்தாய।
கோபீஜன வல்லபாய ஸ்வாஹா ॥

### ஸந்தான கோபாலக்ருஷ்ண மந்த்ரம்

ஓம்-ஸ்ரீம்-ஹ்ரீம்-க்லீம்-க்லௌம்। தேவகீஸுத
கோவிந்த வாஸுதேவ ஜகத்பதே। தேஹி மே
[redacted]பம் க்ருஷ்ண த்வாமஹம் சரணம் கத: ॥

### காயத்ரீ

ஓம் தேவகி நந்தனாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி ।
தந்நோ க்ருஷ்ண ப்ரசோதயாத் ॥

கோபாலாய வித்மஹே கோபீஜன வல்லபாய தீமஹி ।
தந்நோ கோபால ப்ரசோதயாத் ॥

ஓம் தாமோதராய வித்மஹே வாஸுதேவாய தீமஹி ।
தந்நோ க்ருஷ்ண: ப்ரசோதயாத் ॥



# ஸ்ரீ ஹநுமான்

## த்யா[redacted] ஸ்லோகம்

அஞ்ஜனா நந்தனம் வீரம் ஜானகீ சோக நாசனம்
கபீச மக்ஷஹந்தாரம் வந்தே லங்கா பயங்கரம்

உல்லங்க்ய ஸிந்தோ: ஸலிலம் ஸலீலம்
யஃ சோக வந்ஹிம் ஜனகாத்மஜயா ।
ஆதாய தேனைவ ததாஹலங்காம்
நமாமி தம் ப்ராஞ்ஜலி ராஞ்ஜநேயம் ॥

ஆஞ்ஜனேய மதி பாடலாநநம்
காஞ்சனாத்ரி கமனீய விரஹம் ।
பாரிஜாத தருமூல வாஸினம்
பாவயாமி பவமான நந்தனம் ॥

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருமஸ்த காஞ்ஜலிம் ।
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
மாருதிம் நமத ராக்ஷ ஸாந்தகம் ॥

மனோ ஜவம் மாருத துல்ய வேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம் ।
வாதாத்மஜம் வானரயூத வரிஷ்டம்
ஸ்ரீராம தூதம் சிரஸா நமாமி ॥

புத்திர்பலம் யசோ தைர்யம் நிர்பயத்வ மரோகதா ।
அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத்ஸ்மரணாத் பவேத் ॥

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக்
காப்பான்

## [redacted]ர்ச்சனை நாமாக்கள்

ஓம் ஆஞ்ஜனேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் ஹனுமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் கபீச்வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் ராமதூதாய நம:
ஓம் கேஸரீ ஸுதாய நம:
ஓம் விபீஷண ப்ரியகராய நம:
ஓம் தசக்ரீவ குலாந்தகாய நம:
ஓம் லக்ஷ்மணப்பராணதாத்ரே நம:
ஓம் வஜ்ரகாயாய நம:
ஓம் சிரஞ்ஜீவினே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் ஸுக்ரீவஸசிவாய நம:
ஓம் பிங்களாக்ஷாய நம:
ஓம் தைத்யகுலாந்தகாய நம:

ஓம் வாகதீசாய நம:
ஓம் தீனபந்தவே நம:
ஓம் மஹாத்மனே நம:
ஓம் தீராய நம:
ஓம் ராம கதா லோலாய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் ஸீதா சோக நிவாரணாய நம:
ஓம் அஞ்ஜனா கர்ப்ப ஸம்பூதாய நம:
ஓம் ஸர்வ துக்க ஹராயா நம:
ஓம் ஸர்வ லோக சாரிணே நம:
ஓம் ஹனுமந்தாய நம நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாநி ஸமர்ப்பயாமி॥

## மூலமந்த்ரம்

ஓ[redacted]ம் ஹ்ரீம்-ஸ்ரீம், ஹநுமதே
ராமதூதாய லங்காவித்வம்ஸனாய,
அஞ்ஜனாகர்ப்ப-ஸம்பூதாய, சாகினீ-டாகினீ-வித்வம்ஸனாய,
கிலகில பூ பூகாரிணே விபீஷணாய,
ஹனுமத்தேவாய
ஓம், ஐம்-ஹ்ரீம்-ஸ்ரீம்-ஹ்ராம்-ஹ்ரீம்-ஹ்ரூம்-பட் ஸ்வாஹா ॥

## காயத்ரீ

ஆஞ்ஜனேயாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி ।
தன்னோ ஹனுமத் ப்ரசோதயாத் ॥

அஞ்ஜனீஸுதாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி ।
தன்னோ ஹனுமந் ப்ரசோதயாத் ॥

மாருதாத்மஜாய வித்மஹே ஆஞ்ஜனேயாய தீமஹி ।
தன்னோ கவி ப்ரசோதயாத் ॥



# நவக்கிரஹங்கள்

## ஸூர்யன்

காசினி இருளை நீக்கும் கதிரொளி யாகி யெங்கும்
பூசன் உலகோர் போற்றப் புசிப்போடு சுகத்தை நல்கும்
வாசியே ழுடைய தேர்மேல் மஹாகிரி வலமாய் வந்த
[redacted]சிகா எனைரட் சிப்பாய் செங்கதி ரவனே போற்றி

ஜபாகுஸுமெ ஸங்காசம் காச்யபேயம் மஹாத்யுதிம் ।
தமோரிம் ஸர்வபாபக்னம் ப்ரணதோஸ்மி திவாகரம் ॥

## ஸூர்ய காயத்ரீ

அச்வத்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி ।
தன்ன ஸ் ஸூர்ய ப்ரசோதயாத் ॥

ஞாயிற்றுக்கிழமை தோறும் செந்தாமரை மலர் தூவி காயத்ரீ மந்த்ரம் சொல்லி ஸூர்யனை வழிபட்டால் துன்பம் விலகும்.

ஸூர்யனுக்கு உகந்த நிறம்-சிவப்பு, மலர்-செந்தாமரை, தானியம்-கோதுமை, வாஹனம்-குதிரை ரதம், ரத்னம்-மாணிக்கம், ஸமித்து-எருக்கு, நைவேத்யம்-சர்க்கரைப் பொங்கல், அதிதேவதை-சிவன்.

## சந்திரன் ஸ்துதி

அலைகடல் அதனில் நின்று அன்றுவந் துதித்த போது
மலைவளர் திங்க ளாகிக் கடவுள் என்று எவரும் ஏத்தும்
சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மாக வந்த மதியமே போற்றி போற்றி

ததிசங்க துஷாராபம் க்ஷீரோதார்ணவ ஸம்பவம் ।
நமாமி சசினம் ஸோமம் சம்போர் முகுட பூஷணம் ॥

## காயத்ரீ

கலாநாதாய வித்மஹே நிசாசராய தீமஹி ।
தன்ன ஸ் ஸோம ப்ரசோதயாத் ॥



[redacted]திரனுக்கு உகந்த நிறம்-வெண்மை, மலர்-வெளளெலி, தான்யம்-நெல், வாஹனம்-வெள்ளை குதிரை, ரத்னம்-முத்து, ஸமித்து-புரசு, நைவேத்யம்-நெய் கலந்த பாயசம், அதிதேவதை-கௌரீ.

## செவ்வாய் (அங்காரகன்)

வசனநல் தைரி யத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புஜபல பாரக்கி ரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிஜமுடன் அவர வர்க்கு நீணிலம் தனில ளிக்கும்
குஜனின் மகனாம் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி

தரணீகர்ப்ப ஸம் பூதம் வித்யுத்காந்தி ஸமப்ரபம் ।
குமாரம் சக்திஹஸ்தம் தம் மங்களம் ப்ரணமாம் யஹம் ॥

## காயத்ரீ

அங்காரகாய வித்மஹே பூமிபுத்ராய தீமஹி ।
தன்னோ குஜ: ப்ரசோதயாத் ॥

வீர த்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி ।
தன்னோ பௌம: ப்ரசோதயாத் ॥

அங்காரகனுக்கு உகந்த நிறம்-பவள நிறம், மலர்-சண்பகம், தான்யம்-துவரை, வாஹனம்-சிவப்பு ஆடு, ரத்னம்-பவழம், ஸமித்து-கருங்காலி, நைவேத்யம்-ஹவிஸ், அதிதேவதை-ஸுப்ரமண்யர்.

## புதன் ஸ்துதி

மதனனூல் முதலா வுள்ள மறைபுகழ் கல்வி ஞானம்
[redacted]தமுடன் அவர வர்க்கு விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன் பல சுபா சுபங்கள் சுகம்பல கொடுக்க வல்லன்
புதன்கவிப் புலவன்சீர்சால் பொன்னடி போற்றி போற்றி

ப்ரியங்குகலி காச்யாமம் ரூபேணாப்ரதிமம் புதம் ।
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம் தம் புதம் ப்ரமாம்யஹம் ॥

## காயத்ரீ



ஸோமபுத்ராய வித்மஹே கணித்க்ஞாய தீமஹி ।
தன்னோ புத: ப்ரசோதயாத் ॥

கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி ।
தந்நோ புத: ப்ரசோதயாத் ॥

புதனுக்கு உகந்த நிறம்-மஞ்சள், மலர்-வெண்காந்தல், தான்யம்-பச்சைப்பயிறு, வாஹனம்-சிங்கம், ரத்னம்-மரகதம், ஸமித்து-நாயுருவி, நைவேத்யம்-பால் அன்னம், அதிதேவதை-விஷ்ணு.

## குரு ஸ்துதி

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க் கரசன் மந்திரி
நறைசொரி கற்பகம் பொன் னாட்டினுக் கதிபனாகி
நிறைதனம் சிவிகை மண்ணில் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன் இருமலர்ப் பாதம் போற்றி

தேவானம்ச ரிஷீணாம் ச குரும் காஞ்சன ஸந்நிபம் ।
புத்திபூதம் த்ரிலோகேசம் தம் நமாமி ப்ருஹஸ்பதிம் ॥

## காயத்ரீ

தேவாசார்யாய வித்மஹே ஞானப்பரதாய தீமஹி ।
தன்[redacted] ஜீவ: ப்ரசோதயாத் ॥

வ்ருஷப த்வஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாய தீமஹி ।
தந்நோ குரு: ப்ரசோதயாத் ॥

குருவிற்கு உகந்த நிறம்-பொன் நிறம், மலர்-முல்லை, தானியம்-கொத்துக் கடலை, வாஹனம்-மஞ்சள் குதிரை, ரத்னம்-புஷ்பராகம், ஸமித்து-அரசு, நைவேத்யம்-தயிர் சாதம், அதிதேவதை-ப்ரம்மா.



## சுக்ரன் ஸ்துதி

மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையம்
காக்கவான் மழை பெய்விக்கும் கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச் செத்தவர் தமையெ ழுப்பும்
பார்கவான் சுக்ராச் சாரி பாதபங் கயமே போற்றி

ஹிமகுந்தம்ருணாலாபம் தைத்யானாம் பரமம் குரும் ।
ஸர்வ சாஸ்த்ரப்ரவக்தாரம் பார்கவம் ப்ரணமாம்யஹம் ॥

**காயத்ரீ**

**பார்கவாய வித்மஹே ஸுராச்சார்ய தீமஹி ।
தன்னோ கவிஃ ப்ரசோதயாத் ॥**

சுக்ரனுக்கு உகந்த நிறம்-வெள்ளை நிறம், மலர்-வெண் தாமரை, தானியம்-வெள்ளை மொச்சை, வாஹனம்-வெள்ளை குதிரை, ரத்னம்-வைரம், ஸமித்து-அத்தி, நைவேத்யம்-நெய் அன்னம், அதிதேவதை-இந்திரன்.



[redacted]

**சனைச்சரன் ஸ்துதி**

முனிவர் தேவ ரேழு மூர்த்திகள் முதலி னோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வு மகிமைய தல்லா துண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகம் ஏறும்
சனியனே உனைத்து திப்பேன் தமியனேற் கருள்செய் வாயே

நீலாஞ்சன ஸமாபாஸம் ரவிபுத்ரம் யமாக்ரஜம்।
சாயா மார்த்தாண்ட ஸம்பூதம் தம் நமாமி சனைச்சரம்॥

**காயத்ரீ**

**சனைஸ்சராய வித்மஹே சாயா புத்ராய தீமஹி ।
தன்னோ மந்த ப்ரசோதயாத் ॥**



சனீஸ்வரனுக்கு உகந்த நிறம்-கறுப்பு, மலர்-கருங்குவளை, தானியம்-எள், வாஹனம்-காக்கை, ரத்னம்-நீலம், ஸமித்து-வன்னி, நைவேத்யம்-எள் சாதம், அதிதேவதை-யமன்.

## ராகு ஸ்துதி

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈயப்
போகுமக் காலை யுன்றன் புணர்ப்பினால் சிரமே அற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற
ராகுவே உனைத்து திப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே!

அர்தகாயம் மஹாவீர்யம் சந்த்ராதித்ய விமர்தனம் ।
ஸிம்ஹ[redacted] கர்பஸம்பூதம் தம் ராஹூம் ப்ரணமாம்யஹம் ॥

## காயத்ரீ

ஸிம்ஹிகேகாய வித்மஹே உக்ரரூபாய தீமஹி ।
தன்னோ ராஹு: ப்ரசோதயாத் ॥

நகத்வஜாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி ।
தந்நோ ராஹு: ப்ரசோதயாத் ॥



ராகுவிற்கு உகந்த நிறம்-புகை நிறம், மலர்-மந்தாரை, தானியம்-உளுந்து, வாஹனம்-ஆடு, ரத்னம்-கோமேதகம், ஸமித்து-அருகம்புல், நைவேத்யம்-உளுந்தன்னம், அதிதேவதை-ம்ருத்யு (காளி, துர்க்கை)

## கேது ஸ்துதி

மாதுசேர் நெடுமால் முன்னால் மாகிரி வலமே போந்து
நீதியால் நடுவ குத்து நிறைதளர் தந்தையைச் சீர்க்கும்
மாதுசேய் கதிர்வி ழுங்கும் சிவன்கையில் சிரமே பெற்ற
கேதுவே உனைத் துதிப்பேன் கீர்த்தியால் ரட்சிப்பாயே

பலாசபுஷ்ப ஸங்காசம் தாரகாக்ரஹமஸ்தகம் ।
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம் தம் கேதும் ப்ரணமாம்யஹம் ॥

## காயத்ரீ

சித்ரவர்ணாய வித்மஹே பஹுரூபாய தீமஹி ।
தன்ன (ஹ்) கேதுః ப்ரசோதயாத் ॥

[redacted]

அச்வத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி ।
தந்நோ கேதுః ப்ரசோதயாத் ॥

கேதுவிற்கு உகந்த நிறம்-சித்ர வர்ணம், மலர்-செவ்வல்லி, தானியம்-கொள்ளு, வாஹனம்-சித்ரகபோதம், ரத்னம்-வைடூர்யம், ஸமித்து-தர்ப்பை, நைவேத்யம்-சித்ரான்னம், அதிதேவதை-சித்ரகுப்தன், விநாயகர்.





[redacted]

# பகுதி - 3

# பைரவர்

## தியான சுலோகம்

வந்தே பாலம் ஸ்படிகஸத்ருசம் குண்டலோத்
பாஸி வக்த்ரம் திவ்யாகல்பைர் நவமணிமயைః
கிங்கிணி நூபுராட்யைః தீப்தாகாரம் விசதவதனம்
ஸுப்ரஸன்னம் மஹேசம் ஹஸ்தாப்ஜாப்யாம்
வடுகமனிசம் சூலகட்கௌ ததானம்

பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் மகந்தையும் கொண்டுதண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்வோம்

[redacted]

தெருட்பெரு நலன வாவித் தீவிர தரத்துந் றோர்க்கு
மருட்பெரு மாயை நறி வல்வினைப் படலங் கீறிச்
சுருட் பெருங் கொடிய துக்கநிவர்த்தியுங் சுகத்தின்சேய
மருட் பெருஞ் செயலானல்கும் வடுகனையடைந்து
வாழ்வோம்

## கால பைரவர்

ரக்த ஜ்வால ஜடாதரம் ஸுவிமலம் ரக்தாங்க தேஜோமயம்
த்ருத்வா சூல கபால பாச டமருந் லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வானம்சுந வாஹனம் த்ரிநயனம் ஆனந்த கோலாஹலம்
வந்தே ஸர்வ பிசாநாத வடுகம் க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம் ।

சிவந்த ஜடையும் பரிசுத்தமான உடலும் சிவந்த தேஜஸும் சூலம் கபாலம் உடுக்கை முதலியவற்றை தரித்து உலகத்தை ரக்ஷிப்பவரும் நிர்வாணமாகவும் நாயினை வாஹனமாகவும் கொண்டு முக்கண்ணனாக, ஆனந்த வடிவினனாக, பூத ப்ரேதநாதனாக க்ஷேத்ரங்களை ரக்ஷிப்பவராக உள்ள பைரவரை நமஸ்கரிக்கிறேன்.

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யும்செம் முகமலரும்
கார்கொண்ட சாட்டையும் தண்டாயுதமும் கணங்களெட்டும்

கூர்கொண்ட மூவிலைச் சூலமும் கொண்டருள் கூர்ந்த கொன்றைத்
தார்கொண்ட வேணியனே காழியாபதுத் தாரணனே.

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் வடுகாய நம:
ஓம் காமதாய நம:
ஓம் பைரவாய நம:
ஓம் பூதநாதாய நம:
ஓம் வீராய நம:
ஓம் பலிப்ரியாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் காளிகாதனயாய நம:
ஓ[redacted]காரபுவே நம:
ஓ[redacted]ரபதயே நம:
ஓம் டக்காப்ரியாய நம:
ஓம் திவாநாதாய நம:
ஓம் பயங்கராய நம:
ஓம் பூதபதயே நம:
ஓம் பவானீஷாய நம:
ஓம் வனராஜாய நம:
ஓம் லம்படாய நம:
ஓம் சுதாநாதாய நம:
ஓம் ஹரித்ரகாய நம:
ஓம் கட்கபாலகாய நம:
ஓம் சூலஹஸ்தாய நம:
ஓம் ப்ரணாயகாய நம:
ஓம் விபாவஸவே நம:
ஓம் பைரவநாம்னே நம:
ஓம் பைரவ்தனாய நம:
ஓம் பஹுநேத்ரே நம:
ஓம் வடுகபைரவாய நம:
நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

## மூலமந்த்ரம்

ஓம் ஹ்ரீம் வம் வடுகாய ஆபதுத்தாரணாய
குரு குரு வடுகாய ஹ்ரீம் ॥
ஓம் ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம்: ஹ்ரைம்
ஹ்ரௌம், க்ஷம், க்ஷேத்ரபாலாய நம:

## காயத்ரீ

சுவாந த்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி ।
தந்நோ பைரவ: ப்ரசோதயாத் ॥

ஓம் தீக்ஷ்ணதம்ஷ்ட்ராய வித்மஹே க்ஷேத்ரபாலாய தீமஹி ।
[redacted]ந்நோ பைரவ ப்ரசோதயத் ॥

நிசாசராய வித்மஹே சுவைாஹய தீமஹி ।
தன்னே ருத்ர ப்ரசோதயாத் ॥

துன்பங்களை தடுப்பதற்கு என்ன வழி?

நாம் ஆசார - அனுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

அப்படியென்றால்?

வேதத்தின் கர்மகாண்டத்தில் ஆசாரம், அனுஷ்டானம் என்ற இருவகைப்பட்ட தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தனது உடலுக்கும் மனத்துக்கும் தெய்வீகமான தூய்மையைத் தரும் நடத்தைக்கு பெயர் ஆசாரம் வேதவிதிப்படி தேவர்கள், பித்ருக்கள், தாய் - தந்தை ஆசார்யார், முதியோர் அதிதிகள் ஆகியோருக்கு நடத்தப்பட வேண்டிய சடங்குகள் அனுஷ்டானம் எனப்படும். தமிழ் அறநூல்கள் ஆசாரத்தை ஒழுக்கம் என்றும் அனுஷ்டானத்தை வழக்கம் என்றும் சொல்லும். மறை வழக்கம் என்றால் வைதிக அனுஷ்டானம் என்று பொருள்படும்.

# கருப்பர்

## (கருப்பசாமி-கருப்பண்ண சுவாமி-கருப்பு)

### தியான சுலோகம்

தத்தக்ஷிணெ ஸமஸ்தித க்ருஷ்ண மூர்த்திம்
நாகோபவீதம் ஜடிலம் த்ரிநேத்ரம் ।
கபால சூலாந்வித வாமசவ்ய
கரம் மஹாகாள மஹம் ப்ரபத்யே ॥

ரக்தாக்ஷம் க்ருஷ்ணவஸ்த்ரஞ்ச த்விபுஜம் மோஹனாக்ருதிம்
கட்கம் தண்டம் ச பிப்ராணம் ஸர்வாலங்கார சோபினம் ।
பார்ச்வே குக்குட ஸம்யுக்தம் மஹாவிக்ரம சாலினம்
கருப்ப[redacted]தி விக்யாதம் ஸ்வாமிநம் பாவயேத் ஸதா ॥

சிவந்த கண்கள், கருமை ஆடை, இரண்டு கைகள், வசீகரமான முகம், கத்தியும் தண்டமும் தாங்கியவர், நிறைந்த அணிகலன்களால் ஒளிவீசுபவர், அருகில் கோழி, மிகுந்த ஆற்றல் உடையவர், கருப்பன் என்று புகழ் பெற்ற தெய்வத்தைச் சிந்திப்போம்.

### கருப்பர் துதி

முண்டாசு கட்டுண்டு முழுவல்ல வெட்டுண்டு
முதிர்ந்த பிரம்பு முண்டு
முறைகாவல் செல்வதற்கே சப்பாணிதன்னுடனே
முன்னோடி யானுமுண்டு
கொண்டாடும் பக்தருண்டு கோழி கிடா பலியுண்டு
குறையாத படைய லுண்டு
கொடுமைகள் அழித்தருளக் கொடுவாளும் அரிவாளும்
குத்தீட்டி தானுமுண்டு
கண்டாங்கி சேலையொளிர் ஏகாத்தா ராக்கம்மை
கனிவுமிகு அருளுமுண்டு

ஓம் க்ருஷ்ண புத்ராய வித்மஹே
தண்ட ஹஸ்தாய தீமஹி
தன்னோ கருப்பண்ண ப்ரசோதயாத்

கணப்போதும் துயிலாத உறங்காப் புளியுண்டு
துணைசின்னக் கருப்பனுண்டு
கொண்டாடிப் போற்றுவார் குறையெல்லாம் தீரவே
குலங்காத்து நிற்கும் அரசே
குறைவிலா ராங்கியத்தில் முறை காக்கும் பேரரசே
பெரியகருப் பண்ண துரையே

அருளாடும் ராங்கியக் கருப்பரிவர் ஓங்கியே
அரசாளும் கோயில் வாசல்
ஆதரவு தந்தருளும் மாதிருவர் ராக்கம்மை
ஏகாத்தா அமரும் வாசல்
இருளாடும் பேயனுடன் இராக்கதப் பிசாசுகளை
எதிரடக்கி நிறுத்தும் வாசல்
[redacted] ஏவலுடன் பில்லி சூன்யம் இன்னபிற மோடிகளைப்
போவெனவே விரட்டும் வாசல்

இருபேராம் சப்பாணி முன்னோடி யானென்றும்
முறைகாவல் புரியும் வாசல்
இரவுபகல் எப்போதும் உறங்காப் புளியெனும்
விருக்ஷமது வளரும் வாசல்
திருவாசல் தேடிவர பெருவாழ்வு புகழ்நல்கும்
கருப்பண்ணன் கோயில் வாசல்
சிறுபோது நினைத்தாலும் பெரும்பேறு தானருள்வான்
பெரியகருப் பண்ணதுரையே

-தேவகோட்டை மீ.சேவுகன் செட்டி

---

## அர்ச்சனை நாமாக்கள்

---

ஓம் க்ருஷ்ணபுத்ராய நமஃ
ஓம் ரக்தாக்ஷாய நமஃ
ஓம் நீலவஸ்த்ர தராய நமஃ க்ருஷ்ணா
ஓம் த்விபுஜாய நமஃ
ஓம் சுந்தர ஸ்வரூபாய நமஃ

ஓம் கட்க பாணிகன நம:
ஓம் தண்டஹஸ்தாய நம:
ஓம் அலங்கார சோவிதாய நம:
ஓம் குக்குட ப்ரியாய நம:
ஓம் விக்ரமசாலினே நம:
ஓம் க்ராம பாலகாய நம:
ஓம் பய நிவாரகாய நம:
ஓம் தயா மூர்த்தயே நம:
ஓம் நிசி நாதாய நம:
ஓம் ரோக ஹராய நம:
ஓம் கருப்ப ஸ்வாமினே நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

## காத்தவராயன்

### தியான சுலோகம்

ஏக வக்த்ரம் த்விநேத்ரஞ் ச
க்ரீட ஹாரான்விதம்
கட்கம் தக்ஷிண ஹஸ்தஞ்
கேடம் அந்ய ஹஸ்தகை
ஏவமேவ க்ரமே நைவ
வீரபுருஷம் பஜேத் குரு ॥

### காயத்ரீ

வீரபுருஷாய வித்மஹே சோரக்னாய தீமஹி
தன்னோ ராஜ ப்ரசோதயாத் ॥

# பச்சையம்மன்

## தியான சுலோகம்

நீலோத்பல தளச்யாமாம் ப்ரலம்பித கரான்விதாம்
த்விநேத்ரம் பீதவஸ்த்ராட்யாம் ஸ்வர்ண தாடங்க ஸம்யுதாம்।
வாமே நீலோத்பலம் சைவததீம் காந்தி சோபிதாம்
கஞ்சுகா பரனணர் யுக்தாம் மஹாவல்லீம் துபாவயே॥

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் ச்யாமாயை நம:
ஓம் ச்யாமளாயை நம:
ஓம் மந்த்ரநாயிகாயை நம:
[redacted]ம் மந்த்ரிண்யை நம:
ஓம் சுபப்ரியாயை நம:
ஓம் வீணவத்யை நம:
ஓம் வைணிக்யை நம:
ஓம் முத்ரிண்யை நம:
ஓம் நீபப்ரியாயை நம: ஓம் கதம்பவன வாஸன்யை நம:

உலகப் பொது நன்மையை முன்னிட்டு ஒவ்வொருவரும் தத்தம் கடமையை, ஈசுவரார்ப்பணமாகச் செய்து வர வேண்டும்.

இக்கடமைகள் சரிவர நடைபெறாவிடில் என்ன ஏற்படும்?

அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைக் கொடுக்காத மக்களுக்கு ஏற்படும் கதியே இவர்களுக்கும் ஏற்படும். அதனால்தான், அநீதியான யுத்தங்களும், நோய்களும், நாசங்களும், பஞ்சங்களும் - இன்னும் மனித சக்திக்கு அடங்காத அநேக விதமான இன்னல்களும் - ஏற்படுகின்றன.



# பத்ர காளீ

[redacted]

## தியான சுலோகம்

ச்யாமாங்காம் ரக்தவஸ்த்ராம் ஜ்வலிதசிகயுதாம்
அஷ்ட தீக்வா கராப்யாம்
சூலம் வேதாள கட்கம் டமருக ஸஹிதம்
வாம ஹஸ்தே கபாலம் ।

அந்யம் கண்டோர்த்வ கேடம் ஹலமுஸலயுதம்
ரௌத்ர பாவம் த்ரிநேத்ரம்
சாமுண்ட்யா ரூபமேதத் புவன பயகரீம்
பத்ரகாளீம் நமஸ்தே ॥

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் பத்ரகாள்யை நம:
ஓம் சூலஹஸ்தாயை நம:
ஓம் ஜ்வாலாசிகாயை நம:
ஓம் டமருக ஹஸ்தாய நம:

ஓம் பீமரூபாயை நம:
ஓம் ச்யாமாபாயை நம:
ஓம் ராக்தவஸ்த்ரதராயை நம:
ஓம் அஷ்டபுஜாயை நம:
ஓம் சாபஹஸ்தாயை நம:
ஓம் கபால தாரிண்யை நம:
ஓம் சாமுண்டாயை நம:
ஓம் வரப்ரதாயின்யை நம:

## காயத்ரீ

ஓம் பத்ரகாள்யை சவித்மஹே அஷ்ட்புஜாயை ச தீமஹி।
தந்நோ அகோரா ப்ரசோதயாத் ॥

## காவடிப் பாட்டு

சின்னக் சின்னக் காவடி
செந்தில் நாதன் காவடி
வண்ண வண்ணக் காவடி
வள்ளி நாதன் காவடி

(சின்ன)

இங்கும் அங்கும் காவடி
ஏர கத்தான் காவடி
அங்கும் இங்கும் காவடி
அழகு வேலன் காவடி

(சின்ன)

ஆட்டம் ஆடும் காவடி
ஆண்டி யப்பன் காவடி
பாட்டுப் பாடும் காவடி
பழனி யப்பன் காவடி

(சின்ன)

முன்னும் பின்னும் காவடி
முருக வேலன் காவடி
கண்ணும் மனமும் காவடி
கந்த வேலன் காவடி

(சின்ன)



இரத்தின வேல் காவடி
இன்ப மூட்டும் காவடி
பழனி மலைக் காவடி
பஞ்சம் தீர்க்கும் காவடி

(சின்ன)

சென்னி மலைக் காவடி
சேவற் கொடியோன் காவடி
தண்ணீர் மலைக் காவடி
[redacted]ம் தீர்க்கும் காவடி

(சின்ன)

பாலும் பழமும் காவடி
பஞ்சா மிர்தக் காவடி
வேலும் மயிலும் காவடி
வினைகள் தீர்க்கும் காவடி

(சின்ன)

## காளியம்மன் அருள் மாலை

### ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளியது

சுத்த வீர மாகாளி கமல மங்கலை
கருணையான வடிவழகி கனிந்து நின்றனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை.

மந்தமான புத்தியோட்டி மனமும் தந்தனை
மலரில் வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை

சொந்தமான காளியம்மா இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வுமாகி என்றும் தங்குவாய்.

நந்தவீர மாகாளி நயன மாலினி
நம்பிவந்த எம்மிடையே நலனும் காட்டுவாய்
இந்த வாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
இன்று நல்ல காலைவந்து இனிமை கூட்டுவாய்.

மந்தையோடு போல வாழ்வில் மயங்கி நில்லாமல்
முக்தியோடு செல்வ போகம் முழுதும் நாட்டுவாய்
சொந்தமான காளியம்மா இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வுமாகி என்றும் தங்குவாய்.

பொங்கு வீர மாகாளி பொய்மை தீர்மணி
பொறுமையோடு பெருமையாகிப் பொருளும் கூட்டினாய்
எந்தையான சிவனைத் தூது எடுத்து அனுப்பினாய்
[redacted] எழிலியாகி எண்ணமாகி என்னுள் ஆடினாய்.

பந்தணைந்த விரலிநீயும் பகைமை என்றதும்
பறந்துவந்து படைகளோட்டிப் பசுமை காட்டினாய்
சொந்தமான காளியம்மா இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வுமாகி என்றும் தங்குவாய்

விந்தை வீரு மாகாளி விரைந்து வந்திடின்
தெரிந்த நோயும் வந்த நோயும் தொலைவில் ஓடிடும்
எந்த மாயம் எம்மைத்தேடி வந்தபோதிலும்
என்னையீன்ற தாய்நினைப்பில் எரிந்து போய்விடும்.

சிந்தை வாழும் உந்தன் மஞ்சள் சிறிது பூசிடின்
கந்தனோடு கரியன் நீலகண்டன் காணலாம்
சொந்தமான காளியம்மா இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வுமாகி என்றும் தங்குவாய்.

# ஸ்ரீசக்தி ஸ்தோத்திரம்

ஆதிசக்தி ஜோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்மஜோதி சக்தியே
நீதிசக்தி நித்திய சக்தி நீறுபூசும் சக்தியே
நீலிசக்தி நிருத்தசக்த நீலமேனி சக்தியே.

காளிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
யோகசக்தி காயசக்தி காட்சி தந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழும் சக்தி சக்தியே.

ஸ்ரீ காளிகாம்பாள் போற்றி

செய்யுமிவ் அர்ச்சனை சேர்ந்த துதியை
அம்மையே ஏற்று அருள்க அருள்கவே
[redacted]
சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று
வாழ்க பல்லாண்டு வாழ்க அருள்கவே!

ஓம் அங்கையற்கண் அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
ஓம் அரசிளங் குமரியே போற்றி

ஓம் அப்பர் பிணி மருந்தே போற்றி
ஓம் அமுத நாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம்அருள் நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி

ஓம் ஆறு முகத்தின் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆனந்த வல்லியே போற்றி
ஓம் ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி

ஓம் இமயத் தரசியே போற்றி
ஓம் இடபத் தோன் துணையே போற்றி
ஓம் ஈசுவரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி

ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண்திசையும் வென்றாய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி
ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயம் தீர்ப்பாய் போற்றி

ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
ஓம் கற்றோருக்கு இனியோய் போற்றி
ஓம் கல்லோர்க்கு எளியோய் போற்றி
ஓம் கடம்பவன் சுந்தரியே போற்றி

ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணிக் குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணையூற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி

ஓம் கனகாம்பிகையே போற்றி
ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
ஓம் கற்பனைக் கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக் கினியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி

ஓம் காமாட்சி அம்பிகையே போற்றி
ஓம் காளிகாம்பாள் அம்பிகையே போற்றி
ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி

ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி

ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி

ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சித்தம் தெளிவிப்பாய் போற்றி
ஓம் சிவயோக நாயகியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி

ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
ஓம் சேனைத் தலைவியே போற்றி
ஓம் சொக்கர் நாயகியே போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி

[redacted]
ஓம் ஞானாம்பிகையே போற்றி
ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
ஓம் தமிழர் குலச்சுடரே போற்றி
ஓம் திருவுடையம்மையே போற்றி
ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி

ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி
ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி

ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் நற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி

ஓம் நீலாம்பிகையே போற்றி
ஓம் நீதிக் கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி

ஓம் பழமறையின் குருத்தே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி

ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி
ஓம் பாகம்பரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டிமா தேவியின் தேவி போற்றி

ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன்மயி லம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி

ஓம் மங்கள நாயகியே போற்றி
ஓம் மழலைக் கிளியே போற்றி
ஓம் மனோன்மணித் தாயே போற்றி
ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி

ஓம் மாணிக்கவல்லியே போற்றி
ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
ஓம் மீனாட்சி யம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி

ஓம் யாழ்மொழி யம்மையே போற்றி
ஓம் வடிவழகம்மையே போற்றி
ஓம் வேலவனுக்கு வேல் தந்தோய் போற்றி
ஓம் வேதநாயகியே போற்றி
ஓம் சௌந்திராம்பிகையே போற்றி

ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி
ஓம் அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி

# தர்மராஜா

## தியான சுலோகம்

ரத்னகுண்டல சோபாப்யாம் கிரீட மகுடோஜ்வலம்
பீதாம்பர தரம் தேவம் ஸர்வாபரணபூஷிதம் ।
தனுர்பாண கரோபேதம் ஞானவித்யாமயம் விபும்
க்ருஷ்ணாகுச முத்ரிதாங்கம் தர்மராஜமஹம் பஜே ॥

(செவிகளில் நவரத்ன குண்டலங்கள், சிரஸில் கிரீடம், பட்டாடை அணிந்து பலவித நகைகள் பூண்டு ஒளிமயமாய் விளங்குபவர். கையில் வில்லும் அம்பும் தாங்கியவர். நிறைஞானத்தின் உறைவிடம். பாஞ்சாலியினால் தழுவப்படுகிறவர். இத்தகைய தர்மராஜனை நான் துதிக்கிறேன்)

## அர்ச்[redacted] நாமக்கள்

ஓம் பாண்டுதனயாய நம:
ஓம் தர்மராஜரூபாய நம:
ஓம் தர்மபரிபாலகாய நம:
ஓம் ஞானவித்யாமயாய நம:
ஓம் அர்ஜுன ஸோதராய நம:
ஓம் பீதாம்பரதராய நம:
ஓம் ஸர்வாபரண பூஷிதாய நம:
ஓம் த்ரௌபத்நாதாய நம:
ஓம் பீஷ்ம ப்ரியாய நம:
ஓம் ஸத்ய தர்மினே நம:
ஓம் சுத்த சித்தாய நம:
ஓம் விஜயினே நம:

## மூல மந்த்ரம்

ஓம் பாண்டுதனயாய தர்ம பரிபாலகாய
ஸ்ரீ தர்மராஜாய நமோ நம ॥

## காயத்ரீ

ஓம் பாண்டவாய வித்மஹே குந்தீ புத்ராய தீமஹி।
தன்னோ தர்ம: ப்ரசோதயாத் ॥

## நாகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சந்நிதியில் த்யான ச்லோகம்

ஆதிசேஷ நமஸ்துப்யம் ஆதிமத்ய விவர்ஜித।
அஹிராஜ நமஸ்துப்யம் நாகராஜ நமோஸ்துதே ॥
அநந்தம் வாஸுகிம் சேஷம் பத்மநாபம் ச கம்பளம்।
சங்கபாலம் த்ருதராஷ்ட்ரம் தக்ஷகம் காளியம் ததா ॥
ஏதானி நவ நாமானி நாகானாம் ச மஹாத்மனாம்
ஸாயங்காலே படேந்நித்யம் ப்ராத: காலே விசேஷத:
[redacted]ஸ்ய நாஸ்தி விஷாத் பீதி: ஸ்ர்வத்ர விஜயீ பவேத்

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்-என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

ஸர்ப்பேச: ப்ரதிக்ருஹ்ணாதி ஸர்ப்பே சோ வை ததாதி ச।
ஸர்ப்பேசஸ் தாரகோ த்வாப்யாம் ஸர்ப்பேசாய நமோ நம:

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் அநந்தாய நம:
ஓம் தக்ஷகாய நம:
ஓம் கார்கோடகாய நம:
ஓம் த்ருதராஷ்ட்ராய நம:
ஓம் வாயு பக்ஷாய நம:

ஓம் பூமி தாரிணே நம:
ஓம் நாநாரூபாய நம:
ஓம் நாதப்பரியாய நம:
ஓம் ஹல்யஹீநாய நம:
ஓம் வாசுகயே நம:
ஓம் கம்பளகாய நம:
ஓம் காளியாய நம:
ஓம் பிங்களாய நம:
ஓம் சேஷாய நம:
ஓம் சுக்லரூபாய நம:
ஓம் ஸர்ப்பராஜாய நம:
ஓம் மஹாநாகாய நம:
ஓம் நாகராஜாய நம:
பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

### காயத்ரீ

ஸஹஸ்ரபணாய வித்மஹே நாகராஜாய தீமஹி।
தன்னோ அனந்த ப்ரசோதயத் ॥

# மாரியம்மன் (சீதளா தேவி)

### த்யான ஸ்லோகம்

அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருகதர சூலம் கட்க கேடௌ கபாலம்।
அநலநயன நாகம் பத்ம பீடஸ்தமீடே
நிகிலபுவன தைவம் சீதளம் மாரீரூபம்

அக்னிஜ்வாலாசிகாம் அக்னிநேத்ராம் அக்னிஸ்வரூபிணீம்
கரண்ட மகுடோபேதாம் கதா டக்கா கராம்புஜாம்।
வீராஸநாம் கபாலாஸி பாச ஹஸ்தாம் ரவிப்ரபாம்
வந்தே தேவீம் மஹாமாரீம் நாகாபரணபூஷிதாம் ॥

பக்தர்கள் சந்நிதியில் தரிசனம் செய்ய வரும்போது கற்பூர ஆரத்தி காட்டுகிறோம். ஒவ்வொரு முறை கற்பூர ஆரத்தி காட்டும்போதும் கீழ்க்கண்ட சுலோகங்களில் ஏதாவது ஒன்றைக் கூறலாம்.

வந்தேஹம் சீதளாம் தேவீம் ராஸபஸ்தாம் திகம்பராம் ॥
மார்ஜனீ கலசோபேதாம் சூர்ப்பாலங்க்ருத மஸ்தகாம் ॥

வந்தேஹம் சீதளாம் தேவீம் ஸர்வரோக பயாபஹாம் ॥
யாமாஸாத்ய நிவர்த்தேத விஸ்போடகபயம் மஹத் ॥

சீதளே த்வம் ஜகன்மாதா சீதளே த்வம் ஜகத்பிதா ॥
சீதளே த்வம் ஜகத்தாத்ரீ சீதளாயை நமோ நம: ॥

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் சீதளாயை நம:
[redacted]ம் மஹாமார்யை நம:
ஓம் ஸுரெநாயிகாயை நம:
ஓம் காலகண்ட்யை நம:
ஓம் வாமதேவ்யை நம:
ஓம் பசுலோக பயங்கர்யை நம:
ஓம் மாம்ஸ நிஷ்டாயை நம:
ஓம் மாஷான்ன போஜனாயை நம:
ஓம் காலஹந்தர்யை நம:
ஓம் பலிப்ரியாயை நம:
ஓம் மாயாயை நம:
ஓம் மதுமத்யை நம:
ஓம் சூர்ப்பஹஸ்தாயை நம:
ஓம் அக்னிஸ்வரூபிண்யை நம:
ஓம் பாசஹஸ்தாயை நம:
ஓம் சூலதாரிண்யை நம:
ஓம் ஸர்வாதீதாயை நம:
ஓம் மஹேச்யை நம:
ஓம் மஹத்யை நம :
ஓம் சண்டிகாயை நம:
ஓம் மஹாசனாயை நம:

ஓம் முண்டமாலிகாயை நமஃ
ஓம் ரக்தநயனாயை நமஃ
ஓம் ரோகநாசன்யை நமஃ
ஓம் விஸ்போடகபய நாசின்யை நமஃ
ஓம் மஹாவீர்யாயை நமஃ
ஓம் யாமசாரிண்யை நமஃ

ஓம் விச்வ பூத்யை நமஃ
நானாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி॥

## தமிழில்

ஓம் மாரியம்மனே நமோ நமஃ
ஓம் ஆதிசக்தியே நமோ நமஃ
ஓம் மஹாதேவியே நமோ நமஃ
[redacted] செங்கண் தேவியே நமோ நமஃ
[redacted] ஓங்கார சக்தியே நமோ நமஃ
ஓம் இறப்பிலும் உயிராய் ஆனாய் நமோ நமஃ
ஓம் பிணியிருள் கெடுக்கும் பேரொளி நமோ நமஃ
ஓம் துன்பமிலாத நிலையே நமோ நமஃ
ஓம் அன்பு கனிந்த கனிவே நமோ நமஃ
ஓம் சஞ்சலம் நீக்கும் தவமே நமோ நமஃ
ஓம் நலங்கள் ஏத்திட நல்லருள் செய்வாய் நமோ நமஃ
ஓம் இங்குள்ள யாவும் செய்வாய் நமோ நமஃ

ஓம் விள்ளற்கரியவளே நமோ நமஃ
ஓம் மாயாரூபிணி மாயையே நமோ நமஃ
ஓம் பயமதுபோக்கும் தாயே நமோ நமஃ
ஓம் கரிய குழலுடைத் தலைவி நமோ நமஃ

## காயத்ரீ

ஓம் பிசாசத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாயை தீமஹி
தந்நோ மாரீ ப்ரசோதயாத் ॥
ஓம் சீதளாயை ச வித்மஹே சூர்ப்பஹஸ்தாயை தீமஹி
தன்னோ மாரீ ப்சோதயாத் ॥

# வாகீஸ்வரி (அல்லது) பேச்சியாயி

எந்த அம்பிகையை சாஸ்த்ர வல்லுநர்கள் வாக்தேவி என்று சொல்லி வணங்குகிறார்களோ அவளை கிராமத்து ஜனங்கள் பேச்சியாயி என்றும் பேச்சியம்மன் என்றும் வழிபடுகின்றனர்.

## த்யான ஸ்லோகம்

மால்யேந்து சீர்ஷகாம் தேவீம் பூரணசந்த்ர நிபானனாம் ।
ச்யாமாபாம் யௌவனாடோபாம் வந்தே வாகீஸ்வரீம் ஸதா ॥
பாரதீம் பாவயே தேவீம் பாஷானா மதிதேவதாம் ।
பாவிதாம் ஹ்ருதயே ஸத்பி: பாமிநீம் பரமேஷ்ட்டித: ॥

மண்கண்ட, வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
[redacted]ண்கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும்யான்
எண்ணும்பொழுது எளிது எய்த நல்காய்: எழுதா மறையும்
விண்ணும் புவியும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே!

## அர்ச்சனை நாமாக்கள்

ஓம் மஹாவித்யாயை நம:
ஓம் வாக்தேவ்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் பாஷாரூபிண்யை நம:
ஓம் புஸ்தக தாரிண்யை நம:
ஓம் ஜ்ஞாநமுத்ராயை நம:
ஓம் பாரத்யை நம:
ஓம் வித்யாரூபாயை நம:
ஓம் அம்பிகாயை நம:
ஓம் கலாதராயை நம:
ஓம் ஹம்ஸாஸநாயை நம:

ஓம் ஜடிலாயை நம:
ஓம் ஸௌம்யாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் மஹாபுஜாயை நம:
ஓம் ஸுரவந்திதாயை நம:

ஓம் வாகீச்வர்யை நம:
நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி॥

## தமிழில்

ஓம் சகலகலாவல்லியே நமோ நம:
ஓம் பசும்பொற்கொடியே நமோ நம:
[redacted]ம் பங்கஜ ஆசன பொற்கொடியே நமோ நம:
ஓம் கவிமழை களிக்கும் கலாப மயிலே நமோ நம:
ஓம் காக்கும் கருணைக் கடலே நமோ நம:
ஓம் கண்ணும் கருத்தும் நிறைந்தாய் நமோ நம:
ஓம் கல்வி பெருஞ்செல்வப்பேறே நமோ நம:
ஓம் பதாம்புயத்தாளே நமோ நம:

ஓம் கண்கண்ட பெருஞ்செல்வப்பேறே நமோ நம:
ஓம் வீணைசெய்யும் ஒலியே நமோ நம:
ஓம் கருணை வாசகத்துட் பொருளே நமோ நம:
ஓம் வஞ்சமற்ற மாந்தர் குலதெய்வமே நமோ நம:
ஓம் தஞ்சமென்று வணங்கிடும் தெய்வமே நமோ நம:
ஓம் தீமைகாட்டி விலக்கிடும் தெய்வமே நமோ நம:
ஓம் உயிரினுக்குஉயிராகிய தெய்வமே நமோ நம:
ஓம் செம்மை நாடிப்பணிந்திடு தெய்வமே நமோ நம:
ஓம் தரணிமீது அறிவாகிய தெய்வமே நமோ நம:
ஓம் ஊக்கமும் பெருமையும் உதவிடுவாய் நமோ நம:

**மூலமந்த்ரம்**

ஓம்-ஐம்-க்லீம்-ஸௌ:-வத வத
வாக்வாதினி ஸ்வாஹா॥

**காயத்ரீ**

வாக்தேவ்யை ச வித்மஹே காமராக்ஞை ச தீமஹி।
தன்ன ஸ் ஸரஸ்வதி ப்ரசோதயாத் ॥

**செல்லியம்மன் த்யான ஸ்லோகம்**

வாமதக்ஷிண ஹஸ்தாப்யாம் தததீம் ஸ்ரீ பலாம்புஜே।
ஹேமாபாம் ஸகடேபாப்யாம் ப்லாவ்யமானாம் மஹாச்ரியம்॥

[redacted]

இடது வலது கைகளில் வில்வப் பழத்தையும் தாமரையையும் வைத்துக் கொண்டிருப்பவள், பொன்னிற மேனியள்; செல்வப் பெருக்கை அளிப்பவள்; இப்படிப்பட்ட செல்லியம்மனை வணங்குகிறேன்.

**காத்தாயி அம்மன் த்யான ஸ்லோகம்**

த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச ஸரத்ன மகுடோஜ்வலாம்।
தக்ஷிணே பத்ம ஸம்யுக்தாம் வாமேலம்ப கரான்விதாம்॥
வீரேண ரக்ஷிதாம் தேவீம் ச்யாமாபாம் சுப யௌவநாம்॥

**அர்ச்சனை நாமாக்கள்**

ஓம் காத்யாயன்யை நம:
ஓம் த்விபுஜாயை நம:
ஓம் த்விநேத்ராயை நம:
ஓம் ரத்ன மகுடோஜ்வலாயை நம:
ஓம் பத்ம ஹஸ்தாயை நம:
ஓம் வீரரக்ஷிகாயை நம:
ஓம் ச்யாமாபாயை நம:

ஓம் சுப யௌவநாயை நம:
ஓம் அபய ப்ரதாயை நம:
ஓம் வரவல்லி மஹாபட்டாரிகாயை நம:

## ஸ்ரீ மஹா சாஸ்தா (ஸ்ரீ ஐயப்பன்) / ஐயனார் த்யான ஸ்லோகம்

பூதநாதா சதானந்தா ஸர்வ பூதா தயாபரா ।
ரக்ஷ ரக்ஷ மஹா பாஹோ சாஸ்த்ரே துப்யம் நமோ நம: ॥

லோகவீரம் மஹா பூஜ்யம் சர்வரக்ஷா கரம்விபும் ।
[redacted]வதீ ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம் ॥

அருணோதய ஸங்காசம் நீலகுண்டல தாரிணம் ।
நீலாம்பரதரம் தேவம் வந்தேஹம் ப்ரும்ம நந்தனம் ॥

சாபபாணம் வாமஹஸ்தே ரௌப்யவேத ரஞ்ச தக்ஷிணே।
விலஸத் குண்டலதரம் வந்தேஹம் விஷ்ணு நந்தனம் ॥

வியாக்ரா ரூடம் ரக்த நேத்ரம் ஸ்வர்ணமாலா விபூஷணம் ।
வீரபட்டதரம் கோரம் வந்தேஹம் சம்பு நந்தனம் ॥

---

தமிழில்

---

ஹரிஹர புத்ரன்-வணங்கும்
அடியவர் மித்ரன்
ஏகாந்த தேவன் அவன்
ஏகஸ்வரூபன்
ஸௌரதரு கல்பம்-ஒரு
ஸோபன தீபம்
பாப விமோசன்-அவன்

பரம தயாளன்
பக்தர்களைக் காத்துவரும்
பாவன லோலன்
நினைத்ததை நிறைவேற்றும்
நீலவஸ்த்ரதாரி-வாழ்வில்
நிம்மதியை அளித்து வரும்
நித்ய ப்ரம்மச்சாரி
கற்பூர ஒளியுமவன்-தோன்றும்
காந்தமலை ஜோதியவன்
காண்பதற்கு எளியன் அவன்-அருள்
காட்சி தரும் வள்ளலவன்-தர்ம
சாஸ்தாவின் பதம் தன்னை
பூஜித்து நின்றேன்.



## அ[redacted]சனை நாமாக்கள்

ஓம் மஹா சாஸ்த்ரே நம:
ஓம் மஹாதேவஸுதாய நம:
ஓம் த்ரிலோக ரக்ஷகாய நம:
ஓம் தபஸ்வினே நம:
ஓம் பூத ஸைன்யகாய நம:
ஓம் மாருதாய நம:
ஓம் ஸிம்ஹரூடாய நம:
ஓம் வ்யாக்ரரூடாய நம:
ஓம் கஜாரூடாய நம:
ஓம் நானாப்ராணி நிஷேவகாய நம:
ஓம் தேவ சாஸ்த்ரே நம:
ஓம் பூத சாஸ்தரே நம:
ஓம் வ்யோககேசய நம:
ஓம் அக்ரண்யே நம:
ஓம் பூதேசாய நம:
ஓம் பூஜிதாய நம:
ஓம் தண்டநாயகாய நம:
ஓம் ஹரிஹராத்மஜாய நம:

ஓம் வரதஹஸ்தாய நமঃ
ஓம் அக்ரண்யே நமঃ
ஓம் மஹாநீதாய நமঃ
ஓம் மஹா ருத்ராய நமঃ
ஓம் விஷ்ணு பூஜகாய நமঃ
ஓம் வீரபத்ரேசாய நமঃ
ஓம் விபூதிதாய நமঃ
ஓம் பகவதே நமঃ

## தமிழில்

ஓம் ஹரிஹரஸுதனே நமோ நமঃ
ஓம் மோகினி ஸுதனே நமோ நமঃ
ஓம் மோஹன ரூபனே நமோ நமঃ
[redacted] ஓம் வில்லாளி வீரனே நமோ நமঃ
ஓம் வீரமணி கண்டரே நமோ நமঃ
ஓம் வன்புலி வாகனரே நமோ நமঃ
ஓம் பொன்னம்பல வாஸரே நமோ நமঃ
ஓம் காந்தமலை வாஸரே நமோ நமঃ
ஓம் சபரிகிரி வாஸரே நமோ நமঃ
ஓம் மஹா சாஸ்தாவே நமோ நமঃ
ஓம் வேத சாஸ்தாவே நமோ நமঃ
ஓம் வீர சாஸ்தாவே நமோ நமঃ
ஓம் துஷ்ட ஸம்ஹாரனே நமோ நமঃ
ஓம் இஷ்டவரம் தருபவரே நமோ நமঃ
ஓம் காருண்ய மூர்த்தியே நமோ நமঃ
ஓம் பக்தஜன ப்ரியரே நமோ நமঃ
ஓம் ஆபத் பாந்தவரே நமோ நமঃ
ஓம் சரணகோஷ ப்ரியரே நமோ நமঃ
ஓம் நெய்அபிஷேகப் ப்ரியரே நமோ நமঃ
ஓம் பாபவிமோசனனே நமோ நமঃ
ஓம் சச்சிதானந்த மூர்த்தியே நமோ நமঃ
ஓம் பூலோக நாதரே நமோ நமঃ
ஓம் ஹரனார் மகனே நமோ நமঃ

ஓம் அம்புஜ மலர்ப் பாதனே நமோ நம:
ஓம் பம்பா நதி பாலகரே நமோ நம:
ஓம் பந்தள ராஜ குமாரரே நமோ நம:
ஓம் ஐயப்ப தெய்வமே நமோ நம:
ஓம் ஹரிஹர புத்ர ஸ்வாமிநே நம:
நானாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி।

***காயத்ரீ***

*அஶ்வத்வஜாய வித்மஹே ஶ்ருணிஹஸ்தாய தீமஹி।*
*தன்னோ ஶாஸ்தா ப்ரசோதயத் ॥*

*கஜாரூடாய வித்மஹே பத்னித்வயாய தீமஹி।*
*தன்னோ ஶாஸ்தா ப்ரசோதயாத் ॥*

# சப்தமாதா

சில கோவில்களில், சப்தமாதாக்கள் என்று, வரிசையாக ஏழு பெண் தெய்வங்கள் காணப்படும். (மாத்ரு தேவதைகளின் எண்ணிக்கை எட்டு என்றும் சிலர் கூறுவர்)

ப்ராஹ்மீ, மாஹேஸ்வரி, கௌமாரீ, வைஷ்ணவீ, மாஹேந்த்ரீ, வாராஹீ, சாமுண்டா - இவை சப்தமாதாக்கள்.

இவர்களுக்கான காயத்ரி மந்திரம்

***1. ப்ராஹ்மீ***

*ப்ரஹமதபூதாயை வித்மஹே குசஹஸ்தாயை தீமஹி*
*தன்னோ ப்ரஹ்மாணீ ப்ரசோதயாத்*

## 2. மாஹேஸ்வரீ

மஹேஸ்வரபூதாயை வத்மஹே சூலஹஸ்தாயை தீமஹி
தன்னோ ரௌத்ரீ ப்ரசோதயாத்

## 3. கௌமாரீ

ஸ்கந்தபூதாயை வித்மஹே சக்திஹஸ்தாயை தீமஹி
தன்ன கௌமாரீ ப்ரசோதயாத்

## 4. வைஷ்ணவீ

விஷ்ணுபூதாயை வித்மஹே சக்ரஹஸ்தாயை தீமஹி
தன்னோ வைஷ்ணவீ ப்ரசோதயாத்

[redacted]

## 5. வாராஹீ

ப்ரஜாபதிபூதாயை வித்மஹே கதாஹஸ்தாயை தீமஹி
தன்னோ வாராஹீ ப்ரசோதயாத்

## 6. இந்த்ராணீ (மாஹேந்த்ரீ)

இந்தரபூதாயை வித்மஹே வஜ்ரஹஸ்தாயை தீமஹி
தன்ன இந்த்ரானீ ப்ரசோதயாத்

## 7.சாமுண்டி

ருத்ரபூதாயை வித்மஹே கட்கஹஸ்தாயை தீமஹி
தன்னஸ் சாமுண்டி ப்ரசோதயாத்

## 8. ந்ருஸிம்ஹீ (நாரஸிம்ஹீ)

பக்தரக்ஷாயை வித்மஹே தைத்யஹந்தர்யை ச தீமஹி
தன்னே ந்ருஸிம்ஹீ ப்ரசோதயாத்

# வழிபாட்டின் நிறைவில் ஓதத்தக்க சாந்திப் பாடல்கள் / அமைதி வேட்டல்

உலகெலாம் அன்புமேவி ஒருகுலமாக வாழ்க
கலகமும் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
நலமெலாம் விளைய ஞானஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்தஜோதி இறைவனே போற்றி போற்றி.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
[redacted]ங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

ஆறிருதடந் தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ஆனைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்

# சில கிராம தேவதைக்களுக்கான காயத்ரி

## வீரன்

கட்கஹஸ்தாய வித்மஹே பராக்ரமாய தீமஹி।
தன்னோ வீர ப்ரசோதயாத் ॥

## முனீஸ்வரன் (ஜடாமுனி, முனியன்)

பராக்ரமாய வித்மஹே முனிஸ்ரேஷ்டாய தீமஹி।
தன்னோ முனி ப்ரசோதயாத் ॥

## இடும்பன்

மஹாவீராய வித்மஹே, குஹபக்தாய தீமஹி।
தன்[redacted]டும்ப ப்ரசோதயாத் ॥

## கடம்பன்

மஹாசூராய வித்மஹே குஹபக்தாய தீமஹி।
தன்னோ கடம்ப ப்ரசோதயாத் ॥

## கருட காயத்ரீ

தத்புருஷாய வித்மஹே ஸுவர்ண பக்ஷாய தீமஹி।
தன்னோ கருட ப்ரசோதயாத் ॥

## நந்தி காயத்ரி

தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி।
தன்னோ நந்தி ப்ரசோதயாத் ॥



# பகுதி - 4

# பஞ்சாங்கம்

கிராமங்களில் உள்ள மனிதர்களுக்கு நல்ல நாள், நல்ல நேரம் ஆகியவற்றை அறிந்துகொள்வதில் கிராமக் கோவில் பூஜாரிகள் உதவ வேண்டும்.

எனவே பஞ்சாங்கம் என்ன என்பதையும், பஞ்சாங்கம் பார்ப்பது எப்படி என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள சில விவரங்கள் இங்கே தரப்படுகின்றன.

ஆண்டுகளைக் கணக்கிட நமது முன்னோர் சுழற்சி முறையில் அறுபது ஆண்டுகள் திரும்பத் திரும்ப வருவதாகக் கணக்கிட்டுத் தந்துள்ளனர்.

வான் மண்டலத் தொகுதி அல்ல ராசி மண்டலத் தொகுதி ஒரு வட்டப் பாதையாக 360 பாகைகளைக் கொண்டு விளங்குகிறது. நாம் முக்கியமானவை என்று கொண்டுள்ள 27 நக்ஷத்திரங்களும் இப்ப[redacted]யில் அமைந்துள்ளன. இதன் வழியாகவே ஒன்பது க்ரஹங்களும் சஞ்சரிக்கின்றன. 360 பாகைகளில் 12 ராசிகள் அடங்கியுள்ளன. எனவே ஒவ்வொரு ராசியும் 30 பாகைகளைக் கொண்டுள்ளது. சூரியன் வான் பாதையில் தினசரி 1 பாகை செல்கிறது. ஒரு முறை சுற்றிவர 365 நாள் 6 மணி நேரம் ஆகிறது.

குரு சுமார் ஒரு வருடத்தில் ஒரு ராசியைத் தாண்டும். சனி மாதத்திற்கு ஒரு பாகை நகரும். எனவே குரு ஒரு தடவை வானவட்டத்தைச் சுற்றிவர 12 வருடங்கள் ஆகின்றன. சனி ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றி வர 30 வருஷங்கள் ஆகின்றன.

சனியும் குருவும் சேர்ந்து அசுவதி நக்ஷத்திரத்தில் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை காணப்படுகிறது. அதுவே பிரபவ வருடம்-இதுவே முதல் வருடம். இதிலிருந்து 60 வருடங்கள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டின் பெயரும் காரணப் பெயராக அமைந்துள்ளது.

## ஆண்டுகள்-60

| | | |
|---|---|---|
| 1.பிரபவ | 2. விபவ | 3. சுக்கில |
| 4. ப்ரமோதூத | 5. ப்ரஜோத்பத்தி | 6ஆங்கிரஸ |
| 7. ஸ்ரீமுக | 8. பவ | 9. யுவ |
| 10. தாது | 11. ஈசுவர | 12. வெகுதான்ய |
| 13. ப்ரமாதி | 14. விக்கிரம | 15. விஷு |
| 16. சித்ரபானு | 17. சுபானு | 18. தாரண |
| 19. பார்த்திப | 20. விய | 21. ஸவர்ஜித் |
| 22. ஸர்வதாரி | 23. விரோதி | 24. விக்ருதி |
| 25. கர | 26. நந்தன | 27. விஜய |
| 28. ஜய | 29. மன்மத | 30. துர்முகி |
| 31. ஹேவிளம்பி | 32. விளம்பி | 33. விகாரி |
| [redacted]ர்வரி | 35. ப்லவ | 36. சுபகிருது |
| 37. சோபகிருது | 38. குரோதி | 39. விசுவாவசு |
| 40. பராபவ | 41. ப்லவங்க | 42. கீலக |
| 43. சௌமிய | 44. சாதாரண | 45. விரோதிகிருது |
| 46. பரிதாபி | 47. ப்ரமாதீ | 48. ஆனந்த |
| 49. ராக்ஷஸ | 50. நள | 51. பிங்கள |
| 52. காளயுக்தி | 53. சித்தார்த்தி | 54. ரௌத்ரி |
| 55. துன்மதி | 56. துந்துபி | 57. ருத்ரோத்காரி |
| 58. ரக்தாக்ஷி | 59. குரோதன | 60. அக்ஷய |

## தமிழ் மாதங்கள்

சௌரமான ஆண்டுக் கணக்கீட்டில் மாதம் என்பது ஸூர்யன் ஒரு ராசியைக் கடக்க எடுத்துக் கொள்ளும் 30 நாட்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஸூர்யன் எந்த ராசியில் என்று ப்ரவேசிக்கிறானோ அதுவே மாதத்தின் தொடக்க நாளாகவும் அந்த ராசியின் பெயரே மாதத்தின் பெயராகவும் உள்ளது.

ஸங்கல்பத்தில் நாம் மாதத்தின் பெயரைக் கூறும்போது இந்தப் பெயர்களையே பயன்படுத்துகிறோம். ஆனால் நடைமுறையில் தமிழ்

மாதங்களின் பெயர்கள்-அந்த மாதத்தில் எந்த நக்ஷத்திரத்தன்று பௌர்ணமி திதி வருகிறதோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரையே கொண்டதாக அமைந்துள்ளது.

## மாதங்களின் பெயர்கள்

| நடைமுறைப் பெயர் | ஸங்கல்பத்தில் கூற வேண்டியது |
|---|---|
| சித்திரை | மேஷ மாஸம் |
| வைகாசி | ரிஷப மாஸம் |
| ஆனி | மிதுன மாஸம் |
| ஆடி | கடக மாஸம் |
| ஆவ[redacted] | சிம்ம மாஸம் |
| புரட்டாசி | கன்னி மாஸம் |
| ஐப்பசி | துலா மாஸம் |
| கார்த்திகை | விருச்சிக மாஸம் |
| மார்கழி | தனுர் மாஸம் |
| தை | மகர மாஸம் |
| மாசி | கும்ப மாஸம் |
| பங்குனி | மீன மாஸம் |

எந்த மாஸத்தில் பூர்ணிமை, அமாவாஸ்யை இல்லையோ அந்த மாஸத்திற்கு விஷமாஸம் என்று பெயர்.

எந்த மாஸத்தில் இரண்டு பூர்ணிமையோ, இரண்டு அமாவாஸ்யையோ வருகிறதோ அதற்கு மலமாஸம் என்று பெயர்.

விஷ மாஸத்திலும், மலமாஸத்திலும் சுபகார்யங்களை விலக்க வேண்டும்.

ஆனால் சித்திரை, வைகாசி மாதத்தில் இவை நிகழுமானால் அந்த இரு மாதங்களுக்கும் இந்த தோஷம் கிடையாது.

## அயனங்கள்

ஒரு வருடம் இரண்டு அயனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஸூர்யன் மகர ராசியில் ப்ரவேசிக்கும்போது உத்தராயனம் தொடங்குகிறது. கடக ராசியில் ப்ரவேசிக்கும்போது தக்ஷிணாயனம் தொடங்குகிறது.

தை மாதம் தொடங்கி ஆனி ஈறாக 6 மாதங்கள் உத்தராயன காலமாகும். இக்காலகட்டத்தில் எல்லா நல்ல கார்யங்களும் செய்யலாம். கும்பாபிஷேகம், க்ரஹப்பிரவேசம் போன்றவை இக்காலகட்டத்தில் நிகழ்வது உத்தமம்.

ஆடி மாதம் தொடங்கி மார்கழி ஈறாக 6 மாதங்கள் தக்ஷிணாயனம் ஆகும். இக்காலகட்டத்தில் நல்ல காரியங்களைத் தொடங்குவதை தவிர்க்க முடியுமானால் தவிர்ப்பது நல்லது.

## [redacted]துக்கள்-6

**ஒரு வருடம் 6 ருதுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| **சித்திரை, வைகாசி** | **-வஸந்த ருது** |
| **ஆனி, ஆடி** | **-க்ரீஷ்ம ருது** |
| **ஆவணி, புரட்டாசி** | **-வர்ஷ ருது** |
| **ஐப்பசி, கார்த்திகை** | **-சரத் ருது** |
| **மார்கழி, தை** | **-ஹேமந்த ருது** |
| **மாசி, பங்குனி** | **-சிசிர ருது** |

## கிழமைகள்-7

ஒரு நாள் என்பது 60 நாழிகைகள் கொண்டது. ஸூர்ய உதயத்திலிருந்து மறுநாள் ஸூர்யோதயம் வரை ஒரு நாளாகும்.

சாயா க்ரஹங்கள் இரண்டு நீங்கலாக மீதமுள்ள ஏழு க்ரஹங்களுக்குரியதாக ஏழு நாட்கள் கொண்ட கால அளவு ஒரு வாரம் என்று தமிழில் அறியப்படுகிறது.

ஒரு நாளைக்குரிய பெயராக வாஸரம் என்ற சொல் ஸங்கல்பத்தில் பயன்படுத்தப்படுகிறது.

| நடைமுறைப் பெயர் | ஸங்கல்பத்தில் கூறவேண்டியது |
|---|---|
| ஞாயிறு | பானு வாஸரம் |
| திங்கள் | இந்து வாஸரம் |
| செவ்வாய் | பௌம வாஸரம் |
| புதன் | ஸௌம்ய வாஸரம் |
| வியாழன் | குரு வாஸரம் |
| வெள்ளி [redacted] | ப்ருகு வாஸரம் |
| சனி | ஸ்திர வாஸரம் |

## திதிகள் - 15

ஸூர்யன் இருக்குமிடம் முதல் 12 பாகைகள் சந்திரன் நடப்பினில் ஒரு திதியாகும்.

| | | |
|---|---|---|
| 1. ப்ரதமை | 2. த்விதியை | 3. த்ருதியை |
| 4. சதுர்த்தி | 5. பஞ்சமி | 6. ஷஷ்டி |
| 7. ஸப்தமி | 8. அஷ்டமி | 9. நவமி |
| 10. தசமி | 11. ஏகாதசி | 12. துவாதசி |
| 13. த்ரயோதசி | 14. சதுர்த்தி | 15. பூர்ணிமா (அல்லது) அமாவாஸ்யை |

மாதம் என்பது இருபக்ஷங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அமாவாஸ்யை அடுத்த ப்ரதமை முதல் பௌர்ணமி வரை சுக்லபக்ஷம் என்றும பௌர்ணமியை அடுத்து வரும் ப்ரதமை முதல் அமாவாஸ்யை வரை கிருஷ்ணபக்ஷம் என்றும் வழங்கப்படுகிறது.

தமிழில் இதனை வளர்பிறை என்றும் தேய்பிறை என்றும் கூறுகிறோம்.

திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் என்பவையே பஞ்சாங்கத்திலுள்ள ஐந்து அங்கங்களாகும்.

இவற்றில் திதி, வாரம், (வாஸரம்) ஆகிய இரண்டினைப் பற்றியும் மேலே கண்டோம். இனி மற்ற மூன்றினையும் அறிவோம்.

## நக்ஷத்திரங்கள்-27

வான் வட்டப் பாதையில் உள்ள நக்ஷத்திரங்கள் இருபத்தேழும் பன்னிரண்டு ராசிகளுக்குப் பங்கிடப்பட்டிருக்கின்றன.

## நக்ஷத்திரங்கள் 27-ம் வருமாறு

| நடைமுறைப் பெயர் | ஸங்கல்பத்தில் கூறவேண்டியது |
|---|---|
| அஸ்வதி | அஸ்வினி |
| பரணி | அபபரணீ |
| ரோகிணி | ரோகிணீ |
| மிருகசீர்ஷம் | ம்ருகசிரோ |
| திருவாதிரை | ஆர்த்ரா |
| புனர்பூசம் | புனர்வஸ ௌ |
| பூசம் | புஷ்யம் |
| ஆயில்யம் | ஆஸ்லேஷா |
| மகம் | மகா |
| பூரம் | பூர்வபல்குனி |
| உத்திரம் | உத்ரபல்குனி |
| ஹஸ்தம் | ஹஸ்த |
| சித்திரை | சித்ரா |
| சுவாதி | ஸ்வாதீ |
| விசாகம் | விசாகா |
| அனுஷம் | அனுராதா |
| கேட்டை | ஜ்யேஷ்டா |
| மூலம் | மூலா |
| பூராடம் | பூர்வ ஆஷாடா |
| உத்திராடம் | உத்ர ஆஷாடா |

| | |
|---|---|
| திருவோணம் | ச்ரவண |
| அவிட்டம் | ஸ்ரவிஷ்டா |
| சதயம் | சதபிஷக் |
| பூரட்டாதி | பூர்வப்ரோஷ்டபதா |
| உத்திரட்டாதி | உத்ரப்ரோஷ்டபதா |
| ரேவதி | ரேவதி |

## ராசிகள்-12

| | | |
|---|---|---|
| 1. மேஷம் | 2. ரிஷபம் | 3. மிதுனம் |
| 4. கடகம் | 5. சிம்மம் | 6. கன்னி |
| 7. துலாம் | 8. விருச்சிகம் | 9. தனுசு |
| 10. மகரம் | 11. கும்பம் | 12. மீனம் |

மேலே சொன்ன நக்ஷத்திரங்கள் இருபத்தி ஏழும் ஒவ்வொரு ராசிக்[redacted]1/4 நக்ஷத்திரம் வீதம் பங்கிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் நான்கு பாதங்கள் உண்டு. ஆகவே ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது பாதங்கள் அல்லது 2 1/4 நக்ஷத்திரங்கள் உண்டு.

## யோகங்கள்-27

| | | |
|---|---|---|
| 1. விஷ்கம்பம் | 2. ப்ரீதி | 3. ஆயுஷ்மான் |
| 4. சௌபாக்யம் | 5. சோபனம் | 6. அதிகண்டம் |
| 7, சுகர்மம் | 8. த்ருதி | 9. சூலம் |
| 10. கண்டம் | 11. வ்ருத்தி | 12. துருவம் |
| 13. வியாகாதம் | 14. ஹர்ஷணம் | 15. வஜ்ரம் |
| 16. ஸித்தி | 17. வ்யதீபாதம் | 18. வரியான் |
| 19. பரீகம் | 20. சிவம் | 21. ஸித்தம் |
| 22. ஸாத்தியம் | 23. சுபம் | 24. சுப்ரம் |
| 25. பராம்யம் | 26. மாஹேந்த்ரம் | 27. வைத்ருதி |

### காரணங்கள்-11

| | |
|---|---|
| 1. பவம் | -சிங்கம் |
| 2. பாலவம் | -புலி |
| 3. கௌலவம் | -பன்றி |
| 4. தைதிலம் | -கழுகு |
| 5. கரம் | -யானை |
| 6. வணிஜை | -எருது |
| 7. பத்ரம் | -கோழி |
| 8. சகுனி | -காக்கை |
| 9. சதுஷ்பாதம் | -நாய் |
| 10. நாகவம் | -பாம்பு |
| 11. கிமுஸ்துக்னம் | -புழு |

# இராகு காலம்

ஒவ்வொரு கிழமையிலும் இராகு காலம் எப்போது என்பதனை நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வரிப்பாட்டு ஒன்று சொல்லுவார்கள். அதனை மனதில் கொண்டும் கணக்கிட்டுச் சொல்லலாம்.

**'திருவிழா சந்தையில் வெளியில் புகுந்து விளையாட செல்வது ஞாயமா?'**

| கிழமை | இராகு கால நேரம் |
|---|---|
| ஞாயிறு | 04.30-06.00 |
| திங்கள் | 10.30-12.00 |
| செவ்வாய் | 09.00-10.30 |
| புதன் | 07.30-09.00 |
| வியாழன் | 06.00-07.30 |
| வெள்ளி | 03.00-04.00 |
| சனி | -01.00-03.00 |

# எமகண்டம்

இதே போல எமகண்ட காலம் எப்போது என்பதனை அறிய ஒரு வரிப்பாட்டு உண்டு.

விழாவிற்கு புதிதாக சென்று திரும்பும் ஞாபகம் சற்றும் வெறுக்காதே

| கிழமை | இராகு கால நேரம் |
|---|---|
| ஞாயிறு | 12.00-01.30 |
| திங்கள் | 10.30-12.00 |
| செவ்வாய் | 09.00-10.30 |
| புதன் | 07.30-909.00 |
| வியாழன் | 06.00-07.30 |
| வெள்ளி | 03.00-04.30 |
| ச[redacted] | 01.30-03.00 |

இராகு காலம், எமகண்டம் ஆகிய நேரங்களில் சுபச் செயல்களை நீக்க வேண்டும். குளிகை காலத்தில் அசுபச் செயல்களை நீக்க வேண்டும்.

| கிழமை | குளிகை நேரம் |
|---|---|
| ஞாயிறு | 03.00-04.30 |
| திங்கள் | 07.30-03.00 |
| செவ்வாய் | 12.00-01.30 |
| புதன் | 10.30-12.00 |
| வியாழன் | 09.00-10.30 |
| வெள்ளி | 07.30-09.00 |
| சனி | 06.00-07.30 |

# சில பத்ரம் - புஷ்பங்களின் சம்ஸ்க்ருதச் சொற்கள்

| தமிழ் | சம்ஸ்க்ருதம் |
|---|---|
| மாசிப்பச்சை | மாசீபத்ரம் |
| ஊமத்தை | துத்தூரபத்ரம் |
| மாவிலை | சூதபத்ரம் |
| நெல்லி இலை | ஆமலக பத்ரம் |
| மரு | மருவகம் |
| வன்னீ | சமீ |
| மந்தாரை | மந்தாரம் |
| மகிழம்பூ | வகுள |
| வெட்டிவேர் | அம்ருணாலம் |
| பாதிரி | பாடலீ |
| [redacted]ம்பை | த்ரோணபுஷ்பம் |
| அரளி | கரவீர |
| முல்லை | குந்தம் |
| பவழமல்லி | பாரிஜாதம் |
| புன்னை | புன்னாக |
| தாமரை | கமலம் |
| உளுந்துவடை | மாஷாபூபம் |
| அதிசரம் | குளாபூபம் |
| கொழுக்கட்டை | மோதகம் |
| இட்டிலீ | லட்டுகம் |
| அவல் | ப்ருதுகம் |
| பொறி | லாஜம் |
| தேன் | மது |
| உப்பு | லவணம் |
| கரும்புத்துண்டு | இக்ஷுகண்டம் |
| மஞ்சள் கொத்து | ஹரித்ராகுச்சம் |
| மாவிலை | சூதபத்ரம் |
| வெண்ணெய் | நவனீதம் |
| கரும்புக் கழி | இக்ஷுதண்டம் |

| | |
|---|---|
| தூயநீர் | சுத்தோதகம |
| சந்தனம் | கந்தம் |
| குங்குமம் | ஹரித்ராசூர்ணம் |
| திருநீறு | பஸ்ம, விபூதி |
| இனிப்பு மாவு | மதுரபிஷ்டகம் |
| கற்பூரம் | சூடம் நீராஜனம் |
| கல்கண்டு | ரஸகண்டம் |
| வெல்லம் | குளம் |
| சர்க்கரை | சர்க்கரா |
| தயிர் | ததி |
| பசும்பால் | கோக்ஷீரம் |
| மோர் | தக்ரம் |
| பானகம் | பானகம் |
| சுண்டல் | சணகம் |
| நெய் க்ருதம், | ஆஜ்யம் |
| ப[redacted]ாயாசம் | க்ஷீரபாயஸம் |
| பாயசம் | குளப் பாயஸம் |
| சாதம் | சுத்தான்னம் |
| சாம்பார், ரசம் | வ்யஞ்ஜனம் |
| சர்க்கரைப் பொங்கல் | குளான்னம் |
| வெண்பொங்கல் | முத்கான்னம் |
| எள்ளுஞ்சாதம் | திலான்னம் |
| | திலோதனம் |
| தேங்காய்ச் சாதம் | நாரிகேலாதனம், |
| | நாரிகேலான்னம் |
| எலுமிச்சை | ஜம்பீரம் |
| எலுமிச்சை சாதம் | ஜம்பீரபலான்னம் |
| புளியஞ்சாதம் | திந்த்ரிணீ அன்னம் |
| தயிர் சாதம் | தத்யன்னம் |
| தேங்காய் | நாரிகேளம் |
| வாழைப்பழம் | கதலீபலம் |
| வெற்றிலை,பாக்கு | தாம்பூலம் |
| பேரிக்காய் | பேரீபலம் |
| கொய்யாப் பழம் | பஹுபீஜபலம் |

| | |
|---|---|
| மாதுளை | தாடிமீபலம் |
| திராக்ஷை | த்ராக்ஷா |
| பேரீச்சம்பழம் | கர்ஜூரம் |
| பலாப்பழம் | பனஸம் |
| நாவல்பழம் | ஜம்பூபலம் |
| இலந்தை | பதரீபலம் |
| விளாம்பழம் | கபித்தபலம் |
| ஆரஞ்சு | நாரங்கபலம் |
| வெள்ளரி | உர்வாருகம் |
| மாம்பழம் | ஆம்ரபலம், சூதபலம் |
| பல்வகைப்பழங்கள் | பலவர்கம் |
| இரண்டு தேங்காய் மூடிகள் | நாரிகேள கண்ட த்வயம் |
| பல தேங்காய் மூடிகள் | நாரிகேள கண்டானி |
| பழங்கள் | பலானி |

[redacted]

# சில விசேஷ ப்ரார்த்தனை ஸ்லோகங்கள்

## ஜ்வரம் நீங்க

ஜ்வர(ஹர) தேவதையை மனதில் தியானித்து கீழ்க்கண்ட காயத்ரீயைக் கூறி திருநீ' மந்த்ரித்துத் தர ஜ்வரம் நீங்கும்.

பஸ்மாயுதாய வித்மஹே ஏகதம்ஷ்ட்ராய தீமஹி
தன்னோ ஜ்வர ப்ரசோதயாத்॥

பஸ்மாயுதாய வித்மஹே ரக்தநேத்ராய தீமஹி
தன்னோ ஜ்வர ப்ரசோதயாத்॥

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெ றாதிரு நீலகண்டம்.

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்

இறந்த பிறவியுண்டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

## பெண்களுக்கு திருமணம் நடைபெற

காத்யாயினி மஹாமாயே மஹாயோகின்யதீச்வரி
நந்தகோப ஸுதம் தேவி பதிம் மே குரு தே நம:

## ஆண்களுக்கு திருமணம் நடைபெற

பத்னீம் மனோரமாம்தேஹி மானோவ்ருத்தனு ஸாரிணீம்
தாரிணீம் துர்க ஸம்ஹார ஸாகரஸ்ய குலோத்பவாம்

[redacted]பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே.

கடுத்த மேனி யரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீள்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே.

## சுகப்ரசவம் ஆக

அன்று நீ தாயுமானாய் செட்டிப் பெண் ப்ரசவம் பார்க்க
இன்று நீ எனக்கருள்வாய் சுகப்பரசவம் நற்குழந்தை பெற்றெடுக்க

ஹே சங்கர ஸ்மரஹர ப்ரமதாதீ நாத
மன்னாத ஸாம்ப சசிசூட ஹர த்ரிசூலினீ
சம்போ ஸுகப்ரஸவக்ருத் பவ மே தயாளோ
ஸ்ரீமாத்ருபூத சிவ, பாலய யாம் நமஸ்தே.

## கெட்ட கனவுகள் வராமலிருக்க

அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம்
ஸோமம் ஜனார்த்தனம்
ஹம்ஸம் நாராயணம் க்ருஷ்ணம்
ஜபேத் துஸ்வப்ன சாந்தயே.

துஸ்ஸ்வப்ன துச்சகுந துர்கதி தௌர்மநஸ்ய
துர்பிக்ஷ துர்வ்யஸன துஸ்ஸஹதுர்ய சாம்ஸி
உத்பாத தாப விஷபீதி மஸத் க்ரஹார்த்திம்
வ்யாதீம்ஸ்ச நாசயது மே ஜகதாமதீச॥

கெட்ட ஸ்வப்னம், கெட்ட சகுனம், ஏழ்மை, மனக்கவலை, பஞ்சம், கொடிய துக்கம் ஸஹிக்க முடியாத கெட்ட கீர்த்தி, பூகம்பம் முதலிய உ[redacted]தம் மற்றும் பலவிதமான கஷ்டங்கள், விஷ பயம் கெட்ட கிரகங்கள் மூலம் உண்டாகும் பீடைகள், வியாதிகள் இவற்றை லோகநாதனான பரமேச்வரன் நாசம் செய்யட்டும்.

## படுக்கும் போது கூற வேண்டியவை

அகஸ்திர் மாதவச் சைவ மூசுகுந்தே மஹாபல॥
கபிலோ முனிரஸ்திகம் பஞ்சைதே ஸுகசாயினம்:

## கடன் தொல்லையிருந்து விடுபட

அங்காரக மஹாபாக பகவன் பக்தவத்ஸல
த்வாம் நமாமி மமாசேஷம் ருணமாச வினாசய

ருணரோகாதி தாரித்ரியம் யேசான்யே ஹ்யபம்ருத்யவ:
பயக்லேச மனஸ்தாபா நச்யந்து மம ஸர்வதா॥

மஹா பாக்யசாலியும் பகவானும் பக்தவத்ஸலனுமான ஹே அங்காரக தங்களை நமஸ்கரிக்கின்றேன். என்னுடைய எல்லாக்

கடனையும் சீக்கிரமாகப் போக்க வேண்டும்.

கடன் ரோகம் தாரித்திரியம் முதலியவைகளும் மற்றுமுள்ள அபம்ருத்யுக்களும் பயக்லேசம் மனஸ்தாபம் இவைகளும் எப்பொழுதும் எனக்கு நசிக்க வேண்டும்.

## திருவிளக்கு ஏற்றும்போது கூறவேண்டியது

சுபம் கரோதி கல்யாணம் ஆரோக்யம் தனஸம்பத :
சத்ரு புத்தி விநாசாய தீப ஜ்யோதிர் நமோஸ்துதே

## தொலைந்து போன பொருளைத் திரும்பப் பெற

ஆம் ஹ்லீம் க்ரோம் கார்த்தவீர்யார்ஜுன நம:
கார்த்தவீர்யார் ஜுனோ நாம ராஜா பாஹுஸஹஸ்ரவான்
தஸ்ய [redacted]ரனமாத்ரேன கதம் நஷ்டம் ச லப்யதே

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னோடும்
எத்துக் கிங்கிருந் தீர்எம்பிரானிரே.

முந்தி வானவர் தாந்தொழு முருகன்
பூண்டி மாநகர்வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்ட னூரன்
உரைத்தன பத்துங் கொண்(டு)
எந்தம் அடிகளை ஏத்துவாரிடர்
ஒன்றுந் தாம்இலரே.

## பல்வேறு பிணிகள் நீங்க

அச்யுதானந்த கோவிந்த நாமோச்சாரண பேஷஜாத்
நச்யந்தி ஸகலா ரோகா : ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செத்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

# நல்ல நாட்கள்

## ஏர் உழ

அனுஷம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, ரோகிணி, அவிட்டம், மகம், அசுவனி, உத்திரம், உத்திராடம், உத்திராட்டாதி, ரேவதி, மூலம் ஆகிய நக்ஷத்திரங்கள்.

ஞாயிறு, செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பூமியில் ஏர் உழுவதற்கு ஆரம்பம் செய்ய உத்தமம்.

திங்கள் மத்யமம்.

ப்ரதமை, அமாவாஸ்யை, வைத்ருதி, வ்யாகாதம், வ்யதீவாதம் ஆகிய யோகங்கள், பத்ர கரணம் ஆகியவற்றைத் தவிர்த்து மற்றைய சுபதினங்களில் ஏர் உழ ஆரம்பித்தல் நலம்.

## பயிர் செய்ய

விசாகம், ஹஸ்தம், ம்ருகசீர்ஷம், மகம், புனர்வசு, ரோஹிணி, அசுவனி, திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திராட்டாதி, மூலம், ரேவதி, சுவாதி, அனுஷம், பூரம் ஆகிய இந்த 18

நக்ஷத்திரங்களில் - செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய கிழமைகளில் ரிஷபம், மீனம், மிதுனம்.

## குழந்தையை தொட்டிலில் விடுதல்

உடல் வளர்ச்சிக்கு ஓய்வு அவசியம். குழந்தைகளுக்கு இறைவனாலேயே ஏற்படுத்தப்பட்ட உடற்பயிற்சிதான் கைகால்களை அசைத்துக் கொள்ளுவது. அவ்வுடற்பயிற்சிக்குப் பின்னர் ஓய்வு கொள்ள கண் வளர வேண்டும். குழந்தைப் பிறந்த 10, 12, 16 மற்றும் 22ம் நாளில் தொட்டிலில் இடுவது வழக்கம். இதற்கு ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி,ஏகாதசி, திரயோதசி சுபகோள்கள் பார்த்த லக்னமும் எட்டாமிடம் சுத்தியும் ஏற்றது.

## அரைஞாண் அணிவிப்பது

[redacted]ள்ளி அல்லது பொன் அரை ஞாண்-புண்ணியாஹ வசனம் செய்யும் நாளன்று அல்லது ஐந்தாவது மாதத்தில் கட்டலாம். அவ்வரைஞாணுடன் கருகமணி, செப்புக்காசு, (தொப்புள் கொடி விழுந்ததும் அதனை தாயத்து போன்றும் ஒரு சிலர் அணிவிக்கின்றனர்.) கட்டினால் தோஷங்கள் நீங்கும் எனப் பெரியவர்கள் கூறுவார்கள். சுபதிதிகள், சுபநட்சத்திரஙகள், அஷ்டம் சுத்தியுள்ள சுபலக்னத்தில் அரைஞாண் அணிவித்தால் குழந்தை ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் இருக்கும். எருக்கங்செடியின் நாரினால் அரைஞாண் கட்டினால் குழந்தை அடிக்கடிப் பாலைக்கக்குவது நிற்கும் என பாட்டி வைத்தியமும் கூறுகிறது.

## அன்னப்ராஸனம்-அமுதூட்டல்:

தாயமுதால் வளரும் குழந்தைக்கு சிறந்த உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தச் சிறந்த நாளைத் தேர்ந்தெடுப்பது மரபு. இது 6, 8,9 அல்லது 12வது மாதத்தில் அஸ்வினி, மிருக சீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திராடம், ஹஸ்தம், சித்திரை. சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் த்விதியை, திருதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகளில்

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகர, கும்பமாகிய லக்னங்களில் செய்வது உத்தமம். இதற்கும் எட்டாமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். லக்னம் பலம் வாய்ந்ததாக இருத்தலவசியம்.

### கேச கண்டமென்னும் முடியிறக்குதல்:

நல்ல உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. 3 அல்லது 5ஆம் ஆண்டு செய்வது வழக்கம். வளர்பிறை மிகவும் ஏற்றது. த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள் அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள். திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகள். ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம், மீனம் ஆகிய லக்னங்கள் ஏற்றது. எட்டாமிடம் சுத்தமாக இருத்தல் அவசியம். ஏழில் சூரியன், செவ்வாய் [redacted]க்கக்கூடாது.

### கர்ண பூஷணம்-காது குத்துதல்:

ஆக்யூபங்க்சர் என்னும் முறை இன்று மிகவும் பிரபலாமாகியுள்ளது. உடல் நலத்திற்கும், வளர்ச்சிக்கும், நோய் நிவாரணத்திற்கும் இம்முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. எல்லாவற்றிலும் மிகவும் உயர்ந்த நிலையை எட்டிய நமது முன்னோர்கள் இதனைக் கருத்திற்கொண்டே காது குத்தும் நிகழ்ச்சியைக் குழந்தைப் பருவத்திலேயே செய்வித்தனர். 6, 7 அல்லது 8வது மாதத்தில் பகலில் செய்ய வேண்டும். இரண்டு திதிகள் இரண்டு நட்சத்திரங்கள் கொண்ட நாட்களைத் தவிர்க்க வேண்டும். மிருக சீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, உத்திராடம், திருவோணம், அவிடடம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் த்விதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள். ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய லக்னங்கள் ஏற்றது. எட்டாமிடம் சுத்தமாக இருத்தலவசியம்.

## அக்ஷராப்யாஸம்-கல்வி புகட்டுதல்

'கல்வியின் சிறப்பைக் கூறுமிடத்து எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.' என்பார். ஐந்தாவது வருடத்தில் ஐந்தாவது மாதத்தில் ஐந்தாவது நாளில் செய்வது உத்தமம் எனப் பெரியோர்கள் கூறுவார்கள். அஸ்வினி, ரோகினி, திருவாதிரை-புனர்வசு, பூசம் உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியனவும். துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, மிதுனம், கடகம், மகரம், மீனம் ஆகியனவும் ஏற்றது. நான்கு எட்டு ஆகிய இடங்களில் கிரகங்கள் இருக்கக் கூடாது. லக்னத்தையும், நான்காமிடத்தையும் சுபகோள்கள் பார்த்தல் உத்தமம்.

## நிஸ்[redacted]ார்த்தம் அல்லது நிச்சயதாம்பூலம்:

த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி. ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி, அஸ்வினி, ரோகினி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், ஆஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியன ஏற்றது. கேந்திரகோணங்களில் பாவக்கோள்கள் இல்லாத லக்னமாக அமைய வேண்டும்.

## திருமாங்கல்யம் செய்ய:

அஸ்வினி, ரோகினி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், மகம், உத்திராடம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி, த்விதியை, திருதியை. பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி மற்றும் திரயோதசி, ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம், இரண்டாமிடம் சுத்தமான லக்னமும் ஏற்றது.

## கர்ப்பமான பெண்ணை தாய் வீட்டிற்கு அழைத்து வரல்:

த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி தசமி, திரயோதசி, திங்கள், புதன், வியாழன், சனிக்கிழமைகளிலும் பொதுவான சுப நட்சத்திரங்களில் பெண்ணிற்கு தாராபலமுள்ள நாளில், பிரயாணத்திற்குகந்த நாட்களில்

வாரசூலை, சுக்கிரன், எதிரில் இல்லாத நாளில் அழைத்து வரல் வேண்டும். ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் அழைத்து வர வேண்டும்.

## குழந்தை பெற்ற பின்னர் மாமியார் வீட்டிற்கு அனுப்புதல்:

குழந்தைக்கு 3, 5, 7, 9 அல்லது 11வது மாதத்தில் அனுப்பலாம். மூன்றாவது அல்ல ஐந்தவாது மாதம் அனுப்புதல் சிறந்தது. துவிதியை, திருதியை, சதுர்த்தி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, திதிகள், அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, குழந்தை-தாய் இருவருக்கும் தாராபலமுள்ள நாட்கள் ஏற்றன. ஆனந்தாதி யோகப்படி நல்ல நாள், குரு-சுக்ரமௌட்யமில்லாத நாள், வாரசூலை, தோஷமற்ற நாள் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும்.

## கிணறு வெட்டும் திசையின் பலன்:

வீட்டிற்கு கிழக்கு-விபத்து. தென்கிழக்கு-புத்திர நாசம், தெற்கு-மனைவிக்குப் பீடை, கெண்டம். தென்மேற்கு-எஜமானனுக்கு ஆபத்து, மேற்கு-உடல் ஆரோக்கியம், வடமேற்கு-ஆயுத பயம், வடக்கு-செல்வம் சேரும். வடகிழக்கு-சுபீட்சமான வாழ்வு.



# பகுதி - 5

# சில பொதுவான குறிப்புகள்

1. விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக் கூடாது. ( விநாயக சதுர்த்தியன்று மட்டும் ஒரு தளம் போடலாம்)
2. பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, பில்வம் கொன்றை முதலியன் விசேஷம், ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம்.
3. விஷ்ணுவை அக்ஷதையால் அர்ச்சிக்கக் கூடாது.
4. அம்பிகைக்கு அருகம்புல் உகந்ததல்ல.
5. லட்சுமிக்குத் தும்பை கூடாது.
6. பவளமல்லியால் சரஸ்வதியை அர்ச்சனை செய்யக் கூடாது.
7. விஷ்ணு சம்பந்தமான தெய்வங்களுக்கு மட்டுமே துளசி தளத்தால் அர்ச்சனை செய்யலாம். அதுபோல, சிவ சம்பந்தமுடைய தெய்வங்களுக்கே பில்வார்ச்சனை செய்யலாம்.

[redacted] துலுக்க சாமந்திப்பூவை கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது.

9. மலரை முழுவதுமாக அர்ச்சனை செய்ய வேண்டும். இதழ் இதழாக கிள்ளி அர்ச்சனை செய்யலாகாது.
10. வாடிப்போன, அழுகிப்போன, பூச்சிகள் கடித்த மலர்களை உபயோகிக்கக் கூடாது.
11. அன்றலர்ந்த மலர்களை அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும்.
12. ஒருமுறை இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களை எடுத்து, மீண்டும் அர்ச்சனை செய்யக்கூடாது. பில்வம், துளசி ஆகியவற்றை மட்டுமே மறுபடியும் உபயோகிக்கலாம்.
13. தாமரை, நீலோத்பலம் போன்ற நீரில் தோன்றும் மலர்களை தடாகத்திலிருந்து எடுத்த அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும் என்ற விதி இல்லை.
14. வாசனை இல்லாதது : முடி, புழு ஆகியவற்றோடு சேர்ந்திருந்தது. வாடியது; தகாதவர்களால் தொடப்பட்டது; நுகரப்பட்டது; ஈரத் துணி உடுத்திக் கொண்டு, கொண்டு வரப்பட்டது. காய்ந்தது.

பழையது. தரையில் விழுந்தது. ஆகிய மலர்களை அருச்சனைக்கு உபயோகப்படுத்தக் கூடாது.

15. சம்பக மொக்குத் தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

16. மலர்களை கிள்ளி பூஜிக்கக் கூடாது. வில்வம், துளசியைத் தளமாகவே அர்ச்சிக்க வேண்டும்.

17. முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா - இவை பஞ்ச வில்வம் எனப்படும். இவை சிவபூஜைக்கு உரியவை.

18. துளசி, முகிழ் (மகிழம்) சண்பகம், தாமரை, வில்வம், செங்கழுநீர், மருக்கொழுந்து, மருதாணி, தர்பம், அருகு, நாயுரவி, விஷ்ணுக்ராந்தி, நெல்லி ஆகியவற்றின் (இலை) பத்ரங்கள் பூஜைக்கு உகந்தவை.

19. பூஜைக்குரிய பழங்கள் நாகப்பழம், மாதுளை, எலுமிச்சை, [redacted]யம்பழம், கொய்யா, வாழை, நெல்லி, இலந்தை, மாம்பழம். [redacted]ப்பழம்.

20. திருவிழாக் காலத்திலும், வீதிவலம் வரும் போதும், பரிவார தேவதைகளின் அலங்காரத்திலும், மற்றைய நாட்களில் உபயோகிக்கத் தகாதென விலக்கப்பட்ட மலர்களை உபயோகிக்கலாம்.

21. அபிஷேகம், ஆடை அணிவிப்பது, சந்தன அலங்காரம், நைவேத்யம் முதலய முக்கிய வழிபாட்டுக் காலங்களில் கட்டாயமாகத் திரை போட வேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் இறை உருவைக் காணலாகாது.

22. குடுமியுள்ள தேங்காயைச் சமமாக உடைத்து, குடுமியை நீக்கிவிட்டு நிவேதனம் செய்ய வேண்டும்.

23. பெருவிரலும் மோதிரவிரலும் சேர்த்துத் திருநீறு அளிக்க வேண்டும். மற்ற விரல்களைச் சேர்க்கக் கூடாது.

24. கோவில்களில், பூஜகர்களிடமிருந்துதான் தீருநீறு போன்ற பிரசாதங்களைப் பெற வேண்டும். தானாக எடுத்துக் கொள்ள கூடாது.

25. பூஜையின் துவக்கத்திலும், கணபதி பூஜையின் போதும்; தூப தீபம் முடியும் வரையிலும் பலிபோடும் போதும் கை மணியை

அடிக்க வேண்டும். மணியின் சப்தமில்லாவிடில் அச்செயல்கள் பயனைத் தரமாட்டா.

26. ஒன்று.மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று அடுக்குகள் கொண்ட தீபத்துக்கு மஹாதீபம் அல்லது மஹாநீராஜனம் என்று பெயர்.

## பொதுவான கடமைகள்

1. வாரத்துக்கு ஒரு நாளேனும், குடும்பத்துடன் கோவிலுக்குச் செல்ல வேண்டும்.
2. தியானம் பழக வேண்டும்.
3. பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமயப் பேருரை நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டும்.

[redacted] துறவிகள், ஞானிகள், மாடாதிபதிகளைத் தரிசனம் செய்ய வேண்டும்.

5. வீட்டில், நாம சங்கீர்த்தனம், சிறப்பு வழிபாடு போன்றவற்றை, அண்டை அயலார்களின் ஒத்துழைப்புடன் நிகழ்த்த வேண்டும்.
6. வீட்டில் ஓம் படம் மாட்டி வைக்கவும்.
7. ஹிந்து தர்ம பிரசார இயக்கங்கள் பத்திரிகைகளுக்கு ஆதரவு அளிக்கவும்.
8. புராண, இதிஹாஸ, தேவார, திவ்யபிரபந்த நூல்கள் கட்டாயமாக ஒவ்வொரு ஹிந்துவின் வீட்டிலும் இருக்க வேண்டும்.
9. ஹிந்து பண்டிகைகளை, வெறும் விழாக்களாகக் கருதாமல் தெய்வங்களோடு ஒட்டுறவு கொள்ளும் தருணங்களாக மதித்துக் கொண்டாட வேண்டும்.
10. அருகிலுள்ள அனாதை இல்லம், முதியோர் இல்லம், கண் பார்வையற்றோர், செவிகேளாதோர் சேவை இல்லங்களுடன் தொடர்பு கொண்டு, இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.
11. பெற்றோர்களைத் தெய்வமாகப் போற்றிப் பணிந்து பணிவிடை செய்தல் வேண்டும்.

12. வீட்டில், தரக்குறைவான சினிமாப் பாடல்கள் ஒலிக்க அனுமதிக்கக் கூடாது. பாலுணர்வு, வன்முறை பழிக்குப்பழி, பேராசை ஆகிய தீய உணர்வுகளைப் பாராட்டும் புதினங்கள் - புத்தகங்களை வாங்கக் கூடாது.

## ஹிந்துக்களின் தினசரிக் கடமைகள்

1. தினமும் சூரியன் உதிப்பதற்கு முன் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவும்.
2. காலையில் எழுந்தவுடனும், நீராடிய பின்னும், உணவு கொள்ளும் போதும் இஷ்ட தெய்வத்தைச் சிந்திக்கவும்.
3. நெற்றியில் ஹிந்து சமயச் சின்னம் (திருநீறு, குங்குமம், சந்தனம், திருநாமம் - ஏதேனும்) அணியாமல் இருக்கக் கூடாது.
4. இறைவழிபாட்டுக்கு என, தனியே இடம் ஒதுக்கித் தவறாது [redacted]ழிபாடியற்றவும், காலை - மாலையில் விளக்கேற்றி நறுமணப் புகை பரவச் செய்யவும்.
5. சமய நூல்களை ஓத வேண்டும்.
6. படுக்கும்போது தெய்வத்தின் நினைவோடு படுக்க வேண்டும்.

உலகங்களை உற்பத்தி செய்து பரிபாலித்து வரும் பகவானுடைய அரசாங்கம் தான் மிகப் பெரிய அரசு ஆகும். முப்பத்து முக்கோடி தேவர்களும் பித்ருக்களும் ஈசுவரனுடைய அரசாங்கத்தின் அதிகாரிகள் ஆவர். வடக்கில் உள்ள தேவலோகமும் தெற்கில் உள்ள பித்ரு லோகமும் அவர்களுடைய இருப்பிடம் என்று மறைகள் கூறுகின்றன.

இந்த இறைவனது அரசுக்கு நாம் செலுத்தும் வரிகள். தேவர்கடனும் பிதிரர் கடனும்.

நம்மையெல்லாம் காக்கின்ற அவ்வாதிகாரிகளின் ஜீவனத்துக்கு என்ன வழி- வகை செய்துள்ளார், ஸர்வேசுவரன்?

நாம் செய்யும் தேவ யக்ஞங்களும் பித்ரு யக்ஞ்டகளுமே அவர்களை காப்பாற்றுகின்றன.

''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்என்று
ஐம்புலத்து ஆ(று) ஓம்பல் தலை''

என்பது திருவள்ளுவர் வாக்கு.

## கோவில்களில் பூஜைகள் எதற்காக ?

தமிழ்நாட்டில் வாழ்ந்த தலைசிறந்த சித்த புருஷர், திருமூலர். ஓர் ஆண்டு தவமிருந்து ஒரு பாடல் என்ற கணக்கில், மூவாயிரம் ஆண்டுகள் தவமியற்றி மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். அறிவாளர்கள் போற்றிப் பாராட்டும் அவை, திருமந்திரம் எனப்படும்.

இறைவன் உறையும் நிலையங்களான திருக் கோவில்களில் முறையான வழிபாடுகள் செய்யாவிட்டால், என்ன, குடியா மூழ்கிவிடும்? என்று கேட்போர்க்குத் திருமூலர் விடையளித்துள்ளார்.

ஆற்றரும் நோய்மிக்கு அவனி மழையின்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்;
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாம்
[redacted] சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. [திருமந்திரம் - 517]

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள; வாரிவளம் குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினியில்
என்னரும் நந்தி எடுத் துரைத்தானே. [திருமந்திரம்- 518]

திருக்கோவில்களில் பூஜைகள் நடக்காவிட்டால், நாட்டில் நோய்கள் பெருகும்; மழை பொழியாது; மன்னரின் தோள்வலி குன்றும்; திருட்டுப் புரட்டுகள் அதிகமாகும்; மன்னருக்குத் தீங்கு நேரும்.

இவ்வித அவலநிலை தோன்றக் கூடாது எனில், திருக்கோவில்களில் நித்தியபூஜை, சிறப்பு வழிபாடுகள், வருடாந்திரத் திருவிழாக்கள் முதலியன முட்டின்றி நடைபெற வேண்டும்.

## குருவின் பெருமை

குருநாதர் திருவடியை நினைப்போரெல்லாம்
குற்றமிலா நற்றவத்தைச் செய்தோ ராகும்
குருநாதர் திருவடியைக் காண்போ ரெல்லாம்
கொடியபிறப் பறுத்தாளும் கொள்கை யுற்றோர்
குருநாதர் திருவடியைப் பூசிப் போர்க்கு
கோடானு கோடிதவம் சித்தி யாகும்.
குருநாதர் திருவடியை அடைந்த பேர்க்குக்
குவலயத்தில் முத்தியென்று கூறும் வேதம்.

## விநாயகர் பிரார்த்தனை

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
[redacted] நாலும் கலந்து உனக்குநான் தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## குரு வந்தனம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு : குருர் தேவோ மஹேஸ்வர : |
குரு : ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம : ||

## சங்கல்பம் செய்யும் முறை

முதலில் ஆசமனம் செய்து, பிறகு, கணபதி தியானம் [அதாவது, சுக்லாம்பரதரம்.....சொல்லி தலையில் ஐந்து தடவை குட்டிக்கொண்ட பின்] பிராணாயாமம் செய்யவேண்டும். பிராணாயாமம் என்றால், மூச்சைக் கட்டுப்படுத்துதல் என்று பொருள். மந்திரம் சொல்லிக்கொண்டோ, மந்திரம் இல்லாமலோ இடது நாசியினால் மூச்சை இழுத்து, பின் நிறுத்தி, வலது நாசியினால் மூச்சை விடுவது என்பது பொதுவான முறை . "யம்" என்ற பீஜ மந்திரத்தைப் பதினாறு தடவை மனத்தால் கூறியபடி இடதுநாசியால் மூச்சை இழுத்து, "ரம்" என்று பதினாறு தடவை நினைத்து மூச்சை நிறுத்தி, "லம்" என்று

பதினாறு தடவை நினைத்து வலது நாசியால் மூச்சை விட்டு, மீண்டும் "வம்" என்ற பீஜத்தை பதினாறு தடவை நினைத்து வலது நாசியாலேயே மூச்சை இழுத்துக் கொள்வதும் இன்னொரு முறையாகும். தொடர்ந்து, ஸங்கல்பம். வலது தொடை மேல் இடது கையை, மேலே இருக்கும்படி வைத்து, அதன் மேல் வலது கையை வைத்து மூடிக்கொண்டு மந்திரம் சொல்ல வேண்டும்.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் [வைணவர்களானால், ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம்] சுபே சோபனே முகூர்த்தே அத்ய ப்ரம்மண: த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மன்வந்தரே, அஷ்டாவிம்சதி தமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபே பாரதவர்ஷே, பரத கண்டே மேரோ: தக்ஷிணே பார்ஸ்வே சகாப்தே, அஸ்மின் வர்த்தமனே வ்யாவஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே, .....நாம ஸம்வத்ஸரே, .....அயனே,.....ருதௌ,....மாஸே,...பக்ஷே,.......சுபதிதௌ, வா[redacted]து.....வாஸரயுக்தாயாம் சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் .....சுபதிதௌ,

அஸ்மின் கிராமே வஸதாம் ஸர்வேஷாம் மஹாஜனானாம் ஸர்வ மங்கள ப்ராப்த்யர்த்தம், ஸர்வாரிஷ்ட நிவ்ருத்யர்த்தம், ஸர்வாபீஷ்ட்ட ஸித்த்யர்த்தம் அஸ்மின் தேவாலயே ப்ரதிஷ்ட்டித தேவ தானாம் ப்ரஸாதஸித்த்யர்த்தம், நித்யபூஜாம் கரிஷ்யே.

இது, கோவில்களில் செய்யவேண்டிய சங்கல்பம்.[வீடுகளில் பூஜை செய்யும்போது; அஸ்மாகம் ஸர்வேஷாம் ஸர்வாபீஷ்ட்ட வித்த்யர்த்தம், அரோக த்ருட காத்ரதா ஸித்த்யர்த்தம். தேவதா ப்ரீத்யர்த்தம் பூஜாம் கரிஷ்யே - என்று சொல்லவும்]

ததங்கம் கலசபூஜாம் **ச** கரிஷ்யே.

---

அடிக்குறிப்பு :

1. தடித்த எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ள **ச** என்பதைப் படிக்கும் போது Cha என்பது போல உச்சரிக்க வேண்டும்.

2. வடமொழிச் சொற்களின் முடிவில் வந்துள்ள ' : ' ஹ என்ற ஒலிக்குறிப்புடையது.

## கலச பூஜை

பூஜையில் உபயோகப்படுத்துவதற்காக, ஒரு பஞ்சபாத்திரத்தில் தூயநீர் வைத்துக் கொள்கிறோம். அந்தப் பஞ்ச பாத்திரம் தான் கலசம் என்று குறிப்பிடப்படுகிறது.

அந்தப் பாத்திரம், தேவ வடிவமானது. அதில் வைக்கப்படும் தண்ணீர், கங்கை முதலிய புண்ணிய நதிகளின் நீருக்கு நிகரானது. இவ்விதம் அந்தந்த தேவதைகளையும் நதிகளையும் ஆவாஹனம் செய்வதே, கலசபூஜை எனப்படுகிறது.

முதலில், கலசத்தின் நான்கு புறங்களிலும் சந்தனப் பொட்டு வைக்கவும். தண்ணீரில் அக்ஷதையும் புஷ்பமும் போட்டு, கலசத்தைக் கையால் தொட்டுக்கொண்டு பின்வரும் சுலோகங்களை ஜபிக்க வேண்டும்.

க[redacted]ய முகே விஷ்ணு: கண்ட்டே ருத்ர: ஸமாச்ரித : ।
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா: ஸ்ம்ருதா : ॥

குக்ஷௌ து ஸாகரா: ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா ।
ரிக்வேதோऽத யஜுர்வேத: ஸாமவேதோபி அதர்வண : ॥

அங்கைஸ்ச ஸஹிதா: ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா : ।
ஆயாந்து தேவபூஜார்த்தம் துரிதக்ஷயகாரகா : ॥

கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி ।
நர்மதே ஸிந்து காவேரி ஜலேऽஸ்மின் ஸன்னிதிம் குரு ॥

[கலசத்திலிருந்து சிறிதளவு தண்ணீரை எடுத்து, தன் மீதும் பூஜைக்கான மற்ற சாமான்கள் மேலும் தெளிக்கவும். இனி வழிபடும் தெய்வத்துக்கு அளிக்கப்படும் அர்க்யம், பாத்யம், ஸ்நானம், ஆசமனீயம் முதலிய தண்ணீரால் செய்யப்படவேண்டிய எல்லா உபசாரங்களுக்கும், இந்த நீரையே உபயோகிக்க வேண்டும். நீர் எடுப்பதற்கு உத்திரணிக்குப் பதிலாக, தருப்பையினால் ஆன கூர்ச்சத்தைப் பயன்படுத்துவது, வைணவ மரபு.]

## விக்னேஸ்வர பூஜை

மங்கள காரியம் ஒன்றைத் தொடங்குவதற்கு முன், எளிய முறையில், விநாயகர் வழிபாடு செய்வது மரபு. ஹிந்து சமயத்தினர் அனைவருக்கும் பொதுவான வழிபாடு இது. முறையும் எளிது; செய்வதும் சுலபம். எனவே, இந்த விநாயக வழிபாட்டு முறையை எல்லாத் தரப்பு ஹிந்துக்களும் கண்டிப்பாய் அறிந்து கொண்டு அனுசரிக்க வேண்டும்.

<u>தேவையான சாமான்கள்:</u>

| | |
|---|---|
| மஞ்சட்பொடி | - [ஒரு சிறு கரண்டி] - சந்தனம்- குங்குமம் |
| அட்சதை | - ஒரு சாண் சரம்; சிறிது உதிரி புஷ்பம் |
| நிவேதனத்துக்கு | - தேங்காய், பழம், தாம்பூலம், ஊதுபத்தி, கற்பூரம் , பஞ்சபாத்திரம், தீபக்கால், சூடக்கால், தீபம். |

ம[redacted] பிள்ளையாரை வைத்துக் கொள்ள ஒரு தட்டு அல்லது இலை.

அர்க்யம் விடுவதற்குக் கிண்ணம், மணி.

மஞ்சட் பொடியில், தேவையான அளவு தண்ணீர் விட்டுப் பிசைந்து, கெட்டியாகப் பிள்ளையார் பிடித்துக் கொள்ளவும். சந்தனம், குங்குமம் இட்டு, பிள்ளையார் கிழக்குத் திசையை நோக்கி இருக்கிற மாதிரி வைத்துக் கொள்ளவும். பூஜை செய்கிறவர் வடக்கு முகமாக உட்காரவும். [பலகையில்தான் உட்கார வேண்டும்; தரையில் உட்காருவது கூடாது. பலகைக்குப் பதிலாக தர்ப்பாசனம், தடுக்கு அல்லது வேறு ஏதேனும் இருக்கை போட்டுக் கொள்ளலாம்.] அட்சதை என்பது நுனி முறியாத அரிசியில் மஞ்சட் பொடியைக் கலந்து வைப்பது.

குத்துவிளக்கு ஏற்றி வைத்து, மணி அடித்துவிட்டு மங்கலச் சடங்குகளைத் தொடங்குவது மரபு. மணி அடிக்கும்போது,

ஆகமார்த்தம் து தேவானாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம் ।
தேவதா பூஜனார்த்தாய கண்டாநாதம் கரோம்யஹம் ॥

என்ற சுலோகத்தைக் கூறவேண்டும்.

பின், வைதிக ஆசமனம் அல்லது தத்வ ஆசமனம் செய்யவும். இரு கைகளிலும் சிறிது அக்ஷதை வைத்துக்கொண்டு தலையில் குட்டிக் கொள்ளவும்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ।
ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே ॥

பின், வைதிக / தாந்த்ரிக முறையில் ப்ராணாயாமம் செய்யவும்.

வலது துடைமேல், இடதுகை கீழும் வலதுகை மேலுமாக வைத்துக் கொண்டு சங்கல்பம் செய்யவும்.

ததேவ லக்னம் சுதினம் ததேவ தாராபலம் சந்த்ரபலம் ததேவ ।
வித்யாபலம் தைவபலம் ததேவ லக்ஷ்மீபதே :அங்க்ரியுகம் ஸ்மராமி ॥

கரிஷ்யமாணஸ்ய கர்மண : நிர்விக்னேன பரிஸமாப்த்யர்த்தம்
[redacted] மகாகணபதி பூஜாம் கரிஷ்யே ।

அட்சதையை வலது கையில் சேர்த்து வடக்கில் போட்டு விடவும். கையைத் தண்ணீரால் துடைத்துக் கொள்ளவும். கையில் அட்சதை - புஷ்பம் எடுத்துகொண்டு,

அகஜானன பத்மார்க்கம் கஜானன மஹர்நிசம் ।
அநேகதம் தம் பக்தானாம் ஏகதந்த முபாஸ்மஹே ॥

அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸுமுகம் கணபதிம் த்யாயாமி ;
ஆவாஹயாமி -

என்று உச்சரித்தவண்ணம், மஞ்சட்பிள்ளையார் தலையில் போடவும்.

மஹா கணபதயே நம : ஆஸனம் ஸமர்ப்பயாமி.

பிள்ளையார் மேல்அட்சதை போடவும்

" பாத்யம் ஸமர்ப்பயாமி

பஞ்ச பாத்திரத்திலிருந்து உத்திரணியில் தண்ணீரெடுத்து , பிள்ளையாருக்கு அருகே வலதுபுறம் வைத்துள்ள கிண்ணத்தில் விடவும்

" அர்க்யம் ஸமர்ப்பயாமி "
" ஆசமனீயம் ஸமர்ப்பயாமி "
" மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி "

மஹா கணபதயே நம : ஸ்நானம் ஸமர்ப்பயாமி

பிள்ளையார் மேல் சில துளிகள் நீர் தெளிக்கவும்

" ஸ்நானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி :

அர்க்ய பாத்திரத்தில் நீர் விடவும்

" வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி :

அக்ஷதை போடவும்

" உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி :

" கந்தான் தாரயாமி

முன்னரே சந்தனம் இட்டிருப்பதால், இப்போது பாவனை செய்தால் போதும்

" கந்தஸ்யோபரி ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி

குங்குமம் இடுவதாக பாவனை

" அக்ஷதான் ஸமர்ப்பயாமி.

சிறிது அட்சதை போடவும்

" புஷ்பாணி ஸமர்ப்பயாமி

கதம்ப சரம் அணிவிக்கவும்

[redacted] புஷ்பை : பூஜயாமி

விநாயகரின் பதினாறு பெயர்களைச் சொல்லி மலர் தூவவும்

" நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

" தூபம் ஆக்ராபயாமி

சாம்பிராணி/ ஊதுபத்தி காட்டவும்

" தீபம் தர்சயாமி. சிறு தீபம் காட்டுக

பின்பு நிவேதனம்.

ஓம் ப்ராணாய ஸ்வாஹா
" அபானாய ஸ்வாஹா
" வ்யானாய ஸ்வாஹா
" உதானாய ஸ்வாஹா
" ஸமனாய ஸ்வாஹா
" ப்ரம்மணே ஸ்வாஹா

- என்று, நைவேத்யப் பொருட்களின் மேல் நீரைச் சுற்றி,

மஹா கணபதயே நம : நாளிகேர கண்டத்வயம் [=இரு தேங்காய் மூடிகள்], கதலீபலம் [=வாழைப்பழம்], மகாநைவேத்யம் நிவேதயாமி- என்றபடி, அர்க்ய கிண்ணத்தில் நீரை விடவும். நைவேத்யானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி-கிண்ணத்தில் நீர் விடவும்.

மஹா கணபதயே நம : தாம்பூலம் ஸமர்ப்பயாமி

என்று வெற்றிலை பாக்கு சமர்ப்பிக்கவும்.

" கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி

கற்பூர தீபம் காட்டவும்.

" மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி

மலர்தூவி வணங்கவும்

பின், ஆத்ம ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் செய்க. விநாயகர் துதிகள் கூறவும்.



[redacted]

## விநாயகர் துதி

1 கல்வியுண்டாம் குணமுண்டாம் கமலையின் நல்லருளுண்டாம்
செல்வநலச் சிறப்புண்டாம் சீர்மிக்க வாழ்வுண்டாம்
வெல்லறிய திடங்கொண்டான் வெற்பரசன் பெற்றெடுத்த
செல்வியின்சேய் கரிமுகத்தான் கருணைதனைப் பாடுவோர் தம்.

2 ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே.

3 மூஷிகவாஹன மோதகஹஸ்த சாமரகர்ண விலம்பிதஸூத்ர ।
வாமனரூப மஹேஸ்வரபுத்ர விக்னவிநாயக பாத நமஸ்தே ॥

4 வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப ।
அவிக்னம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ॥

5 அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் - நல்ல
குணமதிக மாம்அருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

## கணேச நாமாவளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஸுமுகாய | நம : | ஓம் | மான்யாய | நம : |
| " | ஏகதந்தாய | " | " | மஹன்மான்யாய | " |
| " | கபிலாய | " | " | புராணாய | " |
| " | கஜகர்ணகாய | " | " | ஸர்வஸ்மை | " |
| " | லம்போதராய | " | " | ஸர்வஸித்தாய | " |
| " | விகடாய | " | " | மஹோதராய | " |
| " | விக்னராஜாய | " | " | மங்களதாய | " |
| " | விநாயகாய | " | " | மோதகப்ரியாய | " |
| " | தூமகேதவே | " | " | கபித்தப்ரியாய | " |
| " | கணாத்யக்ஷாய | " | " | ஐஸ்வர்யதாய | " |
| [redacted] " | பாலசந்த்ராய | " | " | சிவப்ரியாய | " |
| " | கஜானனாய | " | " | பக்தநிதயே | " |
| " | வக்ரதுண்டாய | " | " | ஸத்யாய | " |
| " | சூர்ப்பகர்ணாய | " | " | சுப்ரதந்தாய | " |
| " | ஹேரம்பாய | " | " | பார்வதீநந்தனாய | " |
| " | ஸ்கந்தபூர்வஜாய | " | " | வல்லபா வல்லபாய | " |

## ஸ்ரீசுப்ரமண்ய நாமாவளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | ஸ்கந்தாய | நம : | ஓம் | சுபகராய | நம : |
| " | குஹாய | " | " | சந்த்ரவர்ணாய | " |
| " | ஷண்முகாய | " | " | மாயாதராய | " |
| " | சக்திதராய | " | " | மஹாமாயினே | " |
| " | தேவஸேனாபதயே | " | " | தேஜோநிதயே | " |
| " | பக்தவத்ஸலாய | " | " | பரமேஷ்டினே | " |
| " | உமாஸுதாய | " | " | வேதகர்பாய | " |
| " | குமாராய | " | " | ரோகநாசனாய | " |
| " | ஸேனான்யே | " | " | ஆனந்தாய | " |
| " | அக்னிஜன்மனே | " | " | அம்ருதாய | " |
| " | விசாகாய | " | " | ப்ராணாய | " |
| " | ஸர்வஸ்வாமினே | " | " | வீரக்னாய | " |
| " | கங்காஸுதாய | " | " | மஹாதே | " |
| " | ஆஹுதாய | " | " | ஸுப்ரமண்யாய | " |
| " | ஸுமனோஹராய | " | " | வல்லீநாயகாய | " |
| " | ப்ரஜாபதயே | " | " | வேதவேத்யாய | " |

வல்லீ தேவஸேனா ஸமேத ஸுப்ரமண்ய ஸ்வாமினே நம :
நாணாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

# முருகக் கடவுள் போற்றி

ஓம் ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி
" பாதியும் முழுதும் ஆனாய் "
" திருப்பரங் குன்றிடைத் திகழ்வாய் "
" ஆவிநன்குடி அமர்ந்தாய் "
" பழமுதிர்சோலை வேலவா "
" ஏரகத் துறையும் ஏந்தலே "
" நீரகச் செந்தில் நிலத்தோய் "
" குன்றுதோ றாடிய குமரா "
" வள்ளியூர் வாழும் மணாளா "
" கடற்கதிர் காமக் கலையோய் "
" முருகமர் சோலை முயங்குவாய் "
" பணிவார் பாவம் பாரிப்பாய் "
[redacted] அணிவார் நெஞ்சில் அமர்வாய் "
" சிவம்பெறும் கொழுந்தாய்த் திகழ்வாய் "
" கூவச் சரவணப் பிள்ளாய் "
" குன்றக் குடியுறை குமரா "
" மன்றிடை வன்னி உகந்தாய் "
" பொன்றாச் செல்வம் தருவாய் "
" சுவாமிமலை சுவாமி நாதா "
" சிக்கல் சிங்கார வேலவா "

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்[கு] உதித்தனன் உலக முய்ய.

- கந்தபுராணம்

உமாகோமள ஹஸ்தாப்ஜ ஸம்பாவித லலாடகம் |
ஹிரண்யகுண்டலம் வந்தே குமாரம் புஷ்கரஸ்ரஜம் ||

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!

– கந்தரலங்காரம்

## சிவன் அர்ச்சனை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | சிவாய | நம : | ஓம் | பரசு ஹஸ்தாய | நம : |
| ” | சம்பவே | ” | ” | ஜடாதராய | ” |
| ” | பிநாகினே | ” | ” | ஸாம ப்ரியாய | ” |
| ” | சசிசேகராய | ” | ” | பரமாத்மனே | ” |
| ” | வாமதேவாய | ” | ” | ஸதாசிவாய | ” |
| ” | சங்கராய | ” | ” | வீரபத்ராய | ” |
| ” | சூலபாணயே | ” | ” | ருத்ராய | ” |
| [redacted] | கங்காதராய | ” | ” | மஹாதேவாய | ” |

ஸ்ரீ பரமேஸ்வராய நம : பில்வார்ச்சனம் ஸமர்ப்பயாமி

## சிவபெருமான் போற்றி

எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாள் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டம் காதல் விமலா போற்றி.

-அப்பர்

போற்றிசைத்துன் அடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ணல் அரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மேல் இருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி.

-அப்பர்

சீர்வளர் மதியும் திருவளர் வாழ்க்கைச்
செல்வமும் கல்வியும் பொறையும்
பார்வளர் திறனும் பயன்வளர் பரிசும்
பக்தியும் எனக்[கு] அருள் புரிந்தே
வார்வளர் தனத்தாய்! மருவளர் குழலாய்!
மணிவளர்அணிமலர் முகத்தாய்!
ஏர்வளர் குணத்தாய்! இசை துலுக்காணத்து
இரேணுகை என்னும் ஒரு திருவே. - வள்ளலார்.

## அபிராமி அந்தாதிப் பாடல்கள்

### அம்பாள் ஆவாஹனத்தின்போது

மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்துசென்னிக்
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார் சடைமேல்
[redacted]தரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

### அலங்காரத்தின்போது

1. உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் கங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

2. கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே !

### நீராஜனம் செய்யும்போது

வாழும் படியொன்று கண்டு கொண்டேன்; மனத் தேயொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று; வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டுமெட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

## பீடபூஜையின்போது

பாலினும் சொல்லினி யாய்! பனி மாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினும் சாலநன்றோ, அடியேன்முடை நாய்த்தலையே?

## அம்மையின் திருப்பெயர்கள்

1. பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

2. நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
[redacted] சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்[று]
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே

## வழிபடுவார் பெறும் பயன்

1. கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகு
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய -
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

2. தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமிலா
இனம்தரும் நல்லனஎல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபிராமி கடைக்கண்களே.

## நமஸ்காரம் செய்யும்போது

1. இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

2. மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

<u>அபிஷேகம் செய்யும்போது</u>

வந்திப் பவருன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

## திருநீற்றின் பெருமை

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
[redacted] தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே.

– இரண்டாம் திருமுறை

## குங்கும மகிமை

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணம தளிப்பது
குங்குமமாவது கொல்வினை தீர்ப்பதே.

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை யீவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவ்ரதை குங்குமம்
கதிதனை யாள்வதும் குங்குமமாமே.

நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை யீவது பூரணி குங்குமம்
சிற்பர மாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்குமமாமே.

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடுஞ் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
கஞ்சி காமாட்சியின் குங்குமமாமே. -- காமாட்சி தாஸர்.

## தீபாராதனைப் பாடல்

திங்களில் ஜோதி நீ தினகரன் ஜோதி நீ
அங்கியில் ஜோதி நீ அனைத்திலும் ஜோதி நீ
எங்களுள் ஜோதி நீ ஈஸ்வர ஜோதி நீ
[redacted] கங்கிலா ஜோதி நீ கற்பூர ஜோதியே.

[சூடம்/கற்பூரம் கொளுத்தினால் கரும்புகை சுவர்களில் படிந்துவிடும். எனவே, நெய்த்திரி ஏற்றிக் காட்டும் முறையைப் பின்பற்றலாம்]

## வழிபாட்டின் நிறைவில் ஓதத்தக்க
## சாந்திப் பாடல்கள்/அமைதி வேட்டல்

1. உலகெலாம் அன்புமேவி ஒருகுலமாக வாழ்க
கலகமும் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
நலமெலாம் விளைய ஞானஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்தஜோதி இறைவனே போற்றி போற்றி

2. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

3. வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

4. ஆறிருதடந் தோள்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ஆனைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.

[redacted]

## பூஜையின்போது அனுசரிக்க வேண்டியவை

பெண் தெய்வங்களுக்கு, அர்ச்சனை முடிவில், ஸாங்காயை ஸாயுதாயை, ஸவாஹனாயை, ஸபரிவாராயை [துர்காம்பிகாயை நம :] பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி' என்று சொல்லலாம். [துர்க்கை என்னுமிடத்தில், அந்தந்த அம்பிகையின் பெயரைச் சொல்லிக் கொள்ளவேண்டும்.]

எவ்வளவு சிறிய கிராம தேவதையாக இருந்தாலும், அதற்கு ஆயுதம், வாஹனம், பரிவாரம் முதலியன உண்டு. அதனால், அவற்றோடு கூடியிருப்பதாகவே கொள்ளுதல் வேண்டும்.

அதேபோல "ஸாங்காயை...." என்ற தொடரை, நிவேதனம் செய்யும்போது தீபாரதனை காட்டும்போதும் சொல்லலாம்.

தூபம் [சாம்பிராணிப் புகை] காட்டும்போது சொல்ல வேண்டியது.

தசாங்கம் குக்குலம் தூபம் ஸுகந்தம் ஸுமனோஹரம் ।
ஆக்ரேயஸ் ஸர்வதேவானாம் தூபோயம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥

ஸ்ரீ மஹாகணபதயே நம : |
[ - ஸ்ரீ சுப்ரமண்யாய நம : |
- ஸ்ரீ ராமசந்த்ராய நம : |
- நவக்ரஹ தேவதாப்யோ நம : |
- பைரவாய நம : | ]

என்ற மாதிரியாக, ஆண் தெய்வங்களுக்கும்,

- ஸ்ரீ பத்ரகாள்யை நம : |
- ஸ்ரீ சீதளா தேவ்யை நம : |
- ஸ்ரீ அங்காள பரமேஸ்வர்யை நம : |
- ஸ்ரீ கங்கா தேவ்யை நம : |

என்ற மாதிரியாகப் பெண் தெய்வங்களுக்கும் கூறி,

[redacted]ரபம் ஆக்ராபயாமி'

என்றபடி, தெய்வத்தின் முகத்தருகில் நறுமணப் புகையைக் காட்டவேண்டும்.

<u>தீபம் காட்டும்போது</u>

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வன்ஹிநா யோஜிதம் மயா |
க்ருஹாண மங்களம் தீபம் த்ரைலோக்ய திமிராபஹம் ||

என்று, முன்போலவே கூறி, 'தீபம் ஸந்தர்சயாமி'

என்றபடி, முகத்தருகே காட்டவும்.

<u>தாம்பூலம் நிவேதனம் செய்யும்போது</u>

பூகீபலஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் |
கர்பூரசூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ||

என்று கூறி, ஆண்-பெண் வேற்றுமைக்கு ஏற்றபடி தேவதையின் பெயரைச் சொல்லி,

'தாம்பூலம் ஸமர்ப்பயாமி'

என்றபடி, மலரால் வெற்றிலை-பாக்கைச் சுற்றி, தெய்வத்திடம் ஸமர்ப்பிக்கவும்.

நைவேத்யம் செய்யும்போது, உத்தரணியில் தீர்த்தம் எடுத்து, நிவேதனப் பொருட்களை, 'ஓம் பூர்புவஸ்ஸுவ :' என்றபடி சுற்றியபின், அதன் மேலே தெளிக்கவும். மீண்டும் தண்ணீர் எடுத்து, 'அம்ருதோபஸ்தரணமஸி' என்று சொல்லி, தேவதையின் முன்பாக உள்ள தீர்த்த பாத்திரத்தில் விடவும். பின், புஷ்பம் எடுத்துக் கொண்டு, தெய்வத்துக்கு உணவு ஊட்டும் பாவனையாகக் கையைக் காட்டி,

ஓம் ப்ராணாய ஸ்வாஹா
ஓம் அபானாய ஸ்வாஹா
ஓம் வ்யானாய ஸ்வாஹா
ஓம் உதானாய ஸ்வாஹா
[redacted] ஓம் ஸமானாய ஸ்வாஹா
ஓம் பிரம்மணே ஸ்வாஹா

ஸ்ரீ மகா கணபதயே நம : நைவேத்யம் நிவேதயாமி என்று கூறி, மலரைத் தேவதையிடம் சேர்க்கவும். "நிவேதனானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி" என்று, ஓர் உத்தரணி தீர்த்தம் எடுத்து அர்க்ய கிண்ணத்தில் விடவும்.

<u>புஷ்பாஞ்ஜலி செய்யும்போது</u>

யோபாம் புஷ்பம் வேத !
புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி !
சந்த்ரமாவா அபாம் புஷ்பம் !
புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி !!

- என்ற மந்திரம் கூறவேண்டும்.

## சங்கு பூஜை

[சங்கு = சங்கம்]

சங்கை, அதனுடைய பீடத்தில் வைக்கவும். கலச தீர்த்தத்தால் நிரப்பி, சந்தனம் இடவும். பின்,

ப்ரஹ்மணே நம :
ஜனார்த்னாய நம :
சந்த்ரசேகராய நம :

- என்று, மலர் போடவும்.

தொடர்ந்து, பின்வரும் சுலோகங்களைக் கூறவும்.

சங்கம் சந்த்ரார்க்கதைவத்யம் மத்யே வருணஸம்யுதம் |
ப்ருஷ்ட்டே ப்ரஜாபதிஸ்சைவ அக்ரே கங்கா ஸரஸ்வதீ ||

த்ரைலோக்யே யானி தீர்த்தானி வாஸுதேவஸ்ய ச ஆக்ஞயா |
சங்கே திஷ்ட்டந்தி விப்ரேந்த்ரா : தஸ்மாத் சங்கம் ப்ரபூஜயேத் ||

த்வம் புரா ஸாகரோத்பன்ன : விஷ்ணுனா வித்ருத : கரே |
பூஜித : ஸர்வதேவைஸ்ச்ச பாஞ்சஜன்ய நமோஸ்து தே ||

<u>அம்பிகைக்கு நமஸ்காரம் செய்யும்போது</u>

[redacted]

1. ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே |
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்து தே ||

2. யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ||

[லக்ஷ்மீரூபேண, தயாரூபேண, புத்திரூபேண, மாத்ருரூபேண-என்றும் சொல்லலாம்.]



## அங்காள பரமேஸ்வரி தியானம்

ஏகவக்த்ராம் த்ரிணேத்ராம் ச ஜடாமகுட மண்டிதாம்
ஜ்வாலாகேசாம் கராளம் ச தக்ஷிணே நக்ர குண்டலாம் ।

வாமகர்ணே பத்ரபூஷாம் ஸர்வாபரண பூஷிதாம்
பாசசூல கபாலோக்ர டங்க ஹேதி விராஜிதாம்
பீதாம்பராம் வ்ருஷாரூடாம் அங்காள பரமேஸ்வரீம்
வந்தே சதுர்புஜாம் உக்ராம் குங்குமாபாம் சுபப்ரதாம் ॥

(ஒரு முகமும் மூன்று கண்களும் நான்கு கைகளும் உடையவள்; அக்கினிச் சுவாலை போன்று சிவந்த கூந்தலை மகுடமாகக் கொண்டவள்; பயங்கரி; வலது செவியில் முதலை வடிவில் அமைந்த குண்டலத்தையும், இடது செவியில் தாமரை போன்ற பத்ர குண்டலத்தையும் அணிந்தவள்; எல்லா அணிகலன்களும் பூண்டவள்; பாசக் [redacted] சூலம், கபாலம், உளி (அல்லது, கோடரி), ஹேதி என்ற கூர்மையான ஆயுதம் [redacted]கியவள்; வெண்பட்டாடை உடுத்தியவள்; காளை மேல் வீற்றிருப்பவள்; குங்குமப் பூ நிறத்தினள்; நலன்களை வழங்குபவள் – ஆகிய அங்காள பரமேஸ்வரியை வணங்குகிறேன்.)

## அங்காள பரமேஸ்வரி பாடல்கள்

சூலம் கபாலம் கையிலேந்திய சூலிக்கு
நாலாம் கரத்திலுள்ள நாக பாசாங்குசமும்
மால் அயன் அரன் அறியாத வடிவுக்கு
மேலங்கமாய் மெல்லிடை கொண்ட மெல்லியளே!
மேகத்தைப் போல் அங்கம் நின்றாளே, அங்காள பரமேஸ்வரி !

பன்மணி சந்திரகோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதிழைக் கன்னி
நன்மணி சூரிய சோம நயனத்தாள்
பொன்மணி வன்னியும் பூரிக்க
பூவிதழாய் நின்றாளே, அங்காள பரமேஸ்வரி !

பரித்த பூவிதழ் எட்டனுக்குள்
காரியத்தாள் உண்டாங்கென்பீர் கன்னிப்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சக்தியை தாங்கள் கண்டு
கரம் கூப்பி நின்றாளே அங்காள பரமேஸ்வரி !

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | பரமேஸ்வர்யை | நம : |
| ” | ஏகமுக்யை | ” |
| ” | த்ரி ணேத்ராயை | ” |
| ” | சந்த்ரலேகா விபூதிதாயை | ” |
| ” | வரப்ரதாயை | ” |
| ” | அபயதாயின்யை | ” |
| ” | பூதாதிஸேவிதாயை | ” |
| ” | ஸர்வசத்ரு விநாசின்யை | ” |
| ” | பீடாப ஹாரிண்யை | ” |
| ” | முண்ட மாலிகாயை | ” |
| ” | பரசு ஹஸ்தாயை | ” |
| [redacted] ” | ச்மகான வாஸின்யை | ” |
| ” | பயங்கர்யை | ” |
| ” | மங்களாயை | ” |
| ” | ஜடாம குடமண்டிதாயை | ” |
| ” | குங்கும வர்ணாயை | ” |
| ” | நக்ர குண்டலின்யை | ” |
| ” | பத்ர பூஷாயை | ” |
| ” | அனுக்ரஹதாயை | ” |
| ” | சதுர்புஜாயை | ” |
| ” | வ்ருஷா ரூடாயை | ” |
| ” | அட்ட ஹாஸின்யை | ” |
| ” | ரோகஹராயை | ” |
| ” | அங்காள்யை | ” |
| ” | மகா மாயாயை | ” |
| ” | மகா பாதக நாசின்யை | ” |
| ” | சுர வந்தி தாயை | ” |
| ” | தேவ்யை | ” |
| ” | மகாபலாயை | ” |
| ” | சிவாயை | ” |
| ” | அம்பிகாயை | ” |
| ” | காமப்ரதாயை | ” |

## ரேணுகா தியானம்

வாமே சூல கபாலயுக்மம் இதரே
கட்கம் குணம் டிண்டிமம் |

பிப்ராணாம் கரபங்கஜை : த்ரிணய நாம்
நாகாஷ்ட பூஷோஜ்வலாம் ||

நானா கோடி யுகாந்த ஸூர்யஸத்ருசீம்
திவ்யாம்பராலங்க்ருதாம் |

தக்ஷா லம்பித வாம நித்ரித பதாம்
ஸ்ரீ ரேணுகாம் பாவயே ||

(இடது கைகளில் சூலம், இரு கபாலம், வலது கைகளில் கத்தி, டிண்டிமம் என்னும் சிறு பறை, கயிறு; எட்டு சர்ப்பங்களை அணியாகக் கொண்டவள்; பிரளய காலத்தில் தோன்றும் கோடிக்கணக்கான சூரியர்களைப் போல் ஒளி வீசுபவள்; சிறந்த ஆடைக[redacted]அணிந்தவள்; வலது காலை ஊன்றிக் கொண்டும் இடது காலைச் சிறிது மடக்கியும் வைத்துக் கொண்டிருப்பவள்; இப்படிப்பட்ட ரேணுகையை வணங்குகிறேன்.)

## காத்தவராயன் தியானம்

ரக்தவர்ணம் த்விநயநம்
விருத்தாலக பூஷிதம்
தீர்க்க க்ருஷ்ண த்ருட ஸ்மஸ்ரும்
க்ரூர த்ருஷ்டி யுதம் சுபம் |
கட்கம் தண்டம் ச பிப்ராணம்
ஸர்வாலங்கார சோபிதம்
சுரத்ன பாதுகாரூடம்
வீராஸன ப்ரதிஷ்டிதம் |
வாணிஜ்ய விப்ர கன்யேதி
சக்தி த்வய ஸமன்விதம்
காத்தவராக்யம் தேவம் கௌமாரீ
புத்ரகம் பஜேத் ||

(சிவந்த மேனி; இரு கண்கள்; முன்னுச்சி கேசத்தால் அழகுபடுத்தப்பட்ட வட்டமான முகம்; நீண்ட, கருமையான, உறுதியான மீசை; அச்சமூட்டும் பார்வை; நன்மை செய்பவர்; கத்தி, தண்டம் கைக்கொண்டிருப்பவர்; எல்லா ஆபரணங்களாலும் அழகாக விளங்குபவர்; ரத்தினங்கள் பதித்த பாதுகை; வணிகப் பெண், அந்தணப் பெண் ஆகிய இரு சக்திகளை உடையவர்; கௌமாரியின் மைந்தர்; காத்தவராயன் என்று அழைக்கப்படும் தேவனை வணங்குகிறேன்.)

## காளி தியானம்

துகூலவஸனோபேதாம் ஸர்வாலங்கார சோபிதாம் ।
சாதகும்பநிபாம் த்யாயேத் காளீம் முஸலதாரிணீம் ॥

## மாரியம்மன் தியானம்

அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருகதரசூலம் கட்க கேடௌ கபாலம் ।

[redacted]லநயனநாகம் பத்மபீடஸ்தமீடே
நிகிலபுவனதைவம் சீதளம் மாரிரூபம் ॥ 1

ஹஸ்தே பாசம் கபாலம் டமருக ஸஹிதம் சோர்த்வ கேசம் கரண்டம்
கட்கம் தாடாங்கயுக்மம் ஸ்தனபரயுகளம் கஞ்சுகம் வந்ஹிநேத்ரம் ।

ரௌத்ரம் வீராஸனஸ்தம் ஜ்வரபய துரிதம் ஸ்போடகாத் யுக்ர ரோகம்
ஸாந்நித்யம் நிம்பவிருக்ஷஸ்திதம் அருணநிபம் சீதளம் மாரிரூபம் ॥

முக்தாபாம் திவ்யவஸ்த்ராம் ம்ருகமததிலகாம் புல்ல கல்ஹார மாலாம்
கேயூரைர் மேகலாத்யை : நவமணிகசிதை : பூஷிதை : பாஸமானாம்

கற்பூராமோதஹஸ்தாம் அபரிமிதக்ருபா - பூர்ணநேத்ராऽரவிந்தாம்
ஸ்ரீதேவீ மார்யாக்யாம் பசுபதி ஹ்ருதயாம் விஸ்வபூத்யை நமாமி ॥ 2

## நாமாவளி

ஓம் சீதளாயை நம :
" மஹாமார்யை "
" மங்களாயை "
" மஹாசண்ட்யை "
" மார்யாயை "
" மாஷான்னபோஜனாயை "
" முண்டமாலிகாயை "
" மருணாளின்யை "

ஓம் மாம்ஸபலிப்ரியாயை நம :
" யஜமான்யை "
" யாமசாரிண்யை "
" யோகின்யை "
" ரக்தநயனாயை "
" ராஜன்யை "
" ரோகநாசின்யை "
" வாமாயை "

## மாரியம்மன் துதி

அன்னை மகமாயி அன்புமலர்ப் பாதங்களை
அன்றலர் மலர்கொண்டு அன்புடன் பூசிப்போர்
தென்னர் தமிழ்நாட்டில் தெவிட்டாத இன்பமுடன்
மன்னரும் போற்றிட மகிழ்வுடன் வாழ்வராமே.

## மாரியம்மன் போற்றி

ஓம் அன்னையே போற்றி
" அனைத்துலக நாயகியே "
" அரியணை அமர்ந்த அரசியே "
" குலமகளே "
" குண்டலினியே "
" பவானியே "
" பயமது போக்கும் தாயே "
[redacted] " பாபம் போக்கும் பரசிவை "
" கரிய குழலுடைத்தலைவி "
" மாயாரூபிணி மாயையே "
ஓம் தாமரைக்கண்ணி நீயே போற்றி
" ஞானவடிவே தாயே "
" கருணை அமுதக் கடலே "
" ஆதிசக்தியே தேவீ "
" காலனை வதைக்கும் சூலினி "
" அன்னமளிக்கும் பூரணி "

1. சமயபுரத்தம்மா தஞ்சமடைந் தேனம்மா
இமைப்பொழுதும் உனைமறவா இதயமெனக்கருள்வாயம்மா
உமையவளே உனையன்றி ஒருதுணையும் காணேனம்மா
இமைப்பொழுதில் ஏற்றருள்வாய் என்தாயே காளியம்மா.

2 கண்கண்ட தெய்வமென்று கருதிடும் ஏழையென்னை
கண்கொண்டு பாராவிட்டால் கதியென்ன சொல்லம்மா
கொண்டதோர் விரதமெல்லாம் குலமாதா உனையன்றித்
தொண்டினில் கண்டதில்லை; தோத்தரித்தேன் மாரியம்மா.

3 ஸர்வமங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ||

4. சீதளே த்வம் ஜகன்மாதா சீதளே த்வம் ஜகத்பிதா |
சீதளே த்வம் ஜக்த் தாத்ரீ சீதளாயை நமோ நம : ||

## மகாமாரீ தியானம்

அக்நிஜ்வாலாசிகாம் அக்னிநேத்ராம் அக்னிஸ்வரூபிணீம்
கரண்ட மகுடோபேதாம் கதா டக்கா கராம்புஜாம் |
வீராஸநாம் கபாலாஸி பாச ஹஸ்தாம் ரவிப்ரபாம்
வந்தே தேவீம் மஹாமாரீம் நாகாபரணபூஷிதாம் ||

## வாகீஸ்வரீ தியானம்

மா[redacted]பந்து சீர்ஷகாம் தேவீம் பூர்ணசந்த்ர நிபானனாம் |
சியாமாபாம் யௌவனாடோபாம் வந்தே வாகீஸ்வரீம் ஸதா ||

## அய்யனார் தியானம்

அய்யனார், கிராமத்துக் காவல் தெய்வங்களுள் ஒருவர். நீருண்ட மேகம் போன்ற கருமையான தலைமுடிமேல் வெண்தாமரை சூடிக்கொண்டிருப்பவர். வெண்மையான அழகிய சரீரம். ஒளி வீசும் சந்திரனைப் போன்ற முகம். ஸ்ரீதண்டம் என்னும் செண்டு, அங்குசம், பாசம், சூலம் முதலியவைகளை கையில் ஏற்றுக் கொண்டுள்ளவர். மதம் கொண்ட யானைமேல் வீற்றிருப்பவர். எதிரிகளை நாசம் செய்பவர். இப்படிப்பட்ட முழுமுதற்கடவுளான மகாசாஸ்தாவை நெஞ்சார வணங்குகிறேன்-என்கிறது, தியான சுலோகம்.

சாஸ்தா என்ற வடசொல், காலப்போக்கில், சாத்தன் என்று மருவிய வடிவம் பெற்றுள்ளது. புராணங்களிலும் சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளவர், அய்யனார். பூர்ணா, புஷ்கலா என்ற இரு தேவியர் இவருக்கு உண்டு.மிக வைதிக முறையிலும் கிராமிய முறையிலும் ஆராதிக்கப் படுகிறார், இவர். அய்யனார் கோவில் முன்புறத்தில் பெரிய யானை, குதிரைச் சிலைகளை நிலைநிறுத்துவார்கள். யானை, குதிரை இரண்டுமே அய்யனாரின் வாகனங்கள் தாம்.

பன்னெடுங்காலமாகத் தமிழ் நாட்டில் போற்றப்பட்டு வரும் அய்யனாருக்கும், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பழக்கத்துக்கு வந்த கேரளநாட்டு ஐயப்பனுக்கும் நிறைய வேற்றுமைகள் உள்ளன. ஐயப்பன், பிரும்மசரிய விரதம் காப்பவர்; யோக ஸ்வரூபம். காட்டில் புலிக் கூட்டத்திடையே வாழ்பவர்.

தூர்வாச முனிவரின் சாபத்தால், அசுரர்களிடம் தோற்று, பதவி இழந்து, மண்ணுலகில் அடைக்கலம் புகுந்து எவராலும் அறியப்படாமல் இந்திரன் வாழ்ந்து கொண்டிருந்தபோது, அவனுடைய மனைவி இந்திராணி, சீர்காழிப் பகுதியில், மூங்கில் காட்டில் தவமியற்றுங்கால், அவளைப் பாதுகாத்து வந்தவர், அய்யனார் !

ஹரி-ஹர புத்திரராதலால், இவர் வழிபாட்டில் வில்வத்தையும் துளசியையும் உபயோகிக்கிறார்கள்.

சபரிமலை ஐயப்பனுக்கு, விரதமிருந்து, இருமுடி கட்டிக்கொண்டு யாத்[redacted] செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகி வருகிறது. ஆனாலும், அய்யனாரைக் குல தெய்வமாகக் கொண்டுள்ள பல்லாயிரம் குடும்பத்தினர் நிரந்தர பக்தர்களாக இருந்து வருகிறார்கள்.

## அய்யனார்

### தியானம்

கல்ஹாரோஜ்ஜ்வல நீலகுந்தலபரம் காலாம்புதஸ்யாமலம்
கர்ப்பூராகலிதாபிராம வபுஷம் காந்தேந்து பிம்பாననம் ।
ஸ்ரீ தண்டாங்குச பாசசூல விலஸத் பாணிம் மதாந்த த்விபாரூடம்
சத்ருவிமர்தனம் ஹ்ருதி மஹா சாஸ்தாரமாத்யம் பஜே ॥

### மூல மந்திரம்

ஓம் ஹ்ரீம் ஹரிஹரபுத்ராய புத்ர லாபாய சத்ருநாசாய மதகஜ வாஹனாய மஹாசாஸ்த்ரே நம : ।

அய்யனாருக்கு இரண்டு சக்திகள் உள்ளனர். பூர்ணா, புஷ்கலா என்று பெயர்.

## பூர்ணா தேவி தியானம்

த்விநேத்ராம் த்விபுஜாம் ச்யாமாம்
கரண்ட மகுடான்விதாம் ।
வரதோத்பல ஸம்யுக்தாம் சாஸ்த்ரு
தக்ஷஸ்த்திதாம் சுபாம் ॥
கிஞ்சித் குஞ்சித தக்ஷாங்க்ரீம்
ஸர்வாபரணபூஷிதாம் ।
த்யாயேத் பூர்ணாம் மஹாதேவீம்
ச்சாஸ்த்ருபத்னீம் குணோஜ்வலாம் ॥

(இரண்டு கைகளும், இரண்டு கால்களும் உடையவள்; கருமை நிறத்தினாள்; கரண்டம் என்ற மகுடம் அணிந்தவள்; வரத முத்திரை; நீலோத்பல மலர் கொண்டவள்; அய்யனாரின் வலது பக்கம் உறைபவள்; நன்மை செய்பவள்; வலது காலைச் சற்று மடித்து வைத்துக்கொண்டிருப்பவள்; எல்லா அணிகலன்களாலும் அ[redacted]ிக்கப்பட்டவள்; நற்குண ஒளி வீசுபவள்; அய்யனாரின் மனைவி; பூர்ணா என்ற பெயருடைய மகாதேவியைத் தியானிக்கிறேன்.)

## புஷ்கலா தியானம்

த்விநேத்ராம் த்விபுஜாம் பீதாம்
கிரீட மகுடோஜ்வலாம் ।
பாச ஹஸ்தாம் மனோக்ஞாங்கீம்
ஸர்வாபரணபூஷிதாம் ॥
ஈஷத் குஞ்சித வாமாங்க்ரீம்
ஸர்வாலங்கார சோபிதாம் ।
சாஸ்த்ருவாம ஸ்திதாம் தேவீம்
வந்தேஹம் புஷ்கலாம் சுபாம் ॥

(இரண்டு கைகள், இரண்டு கால்களும் உடையவள்; மஞ்சள் மேனியள்; கிரீடம் அணிந்தவள்; பாசக்கயிற்றினள்; மனம் கவரும் திருமேனியள்; எல்லா அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பட்டவள்; வளைந்து மடக்கிய இடது கால்; எல்லா அலங்காரங்களாலும் ஒளி வீசுபவள்; அய்யனாரின் இடது பக்கம் வீற்றிருப்பவள்; நலன் அருள்கின்றவளான புஷ்கலா தேவியை வணங்குகிறேன்.)

## அய்யனார் நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | மஹா சாஸ்த்ரே | நம : |
| ,, | மஹா தேவாய | ,, |
| ,, | மஹாதேவ சுதாய | ,, |
| ,, | தபஸ்விநே | ,, |
| ,, | கஜாரூடாய | ,, |
| ,, | ஹ்யாரூடாய | ,, |
| ,, | வீராய | ,, |
| ,, | பூஜிதாய | ,, |
| ,, | மாருதாய | ,, |
| ,, | புஷ்ப பாணாய | 10 |
| ,, | மாயாதேவீ சுதாய | ,, |
| ,, | வைஷ்ணவாய | ,, |
| ,, | பைரவாய | ,, |
| ,, | மஹா யோகினே | ,, |
| ,, | நாகஹாராய | ,, |
| [redacted] ,, | ஸநாதனாய | ,, |
| ,, | நிர்குணாய | ,, |
| ,, | நித்யாய | ,, |
| ஓம் | த்ரிமூர்த்தயே | நம : |
| ,, | புருஷோத்தமாய | 20 |
| ,, | காமதாய | ,, |
| ,, | கமலேக்ஷணாய | ,, |
| ,, | கல்பவ்ருக்ஷாய | ,, |
| ,, | பசுலோக பயங்கராய | ,, |
| ,, | ப்ராண தாத்ரே | ,, |
| ,, | நீதிமதே | ,, |
| ,, | புஷ்கலா நாதாய | ,, |
| ,, | பூர்ணா ஸம்யுக்தாய | ,, |
| ,, | பரமாத்மனே | ,, |
| ,, | பகவதே | ,, |
| ,, | தேவேசாய | ,, |
| ,, | பக்தவத்ஸலாய | 32. |

நமஸ்காரம் செய்யும்போது

பூதநாத ஸதானந்த ஸர்வபூத தயாபர !
ரக்ஷ ரக்ஷ மஹாபாஹோ! சாஸ்த்ரே துப்யம் நமோ நம :
- என்று சொல்லவும்.

## கங்கையம்மன்

சதுர்புஜாம் த்ரிநயனாம் சத்தஸ்படிகஸந்நிபாம் |
த்யாயேஹம் மகராரூடாம் சுப்ரவஸ்த்ராம் சுசிஸ்மிதாம் ||

வெள்ளைநல் வாணியைப்போல மெல்லிசை மீட்டிச் செல்வாள்
கள்ளவிழ் தாமரைத் திருவாய் கவின்பொழில் வளர்த்துச் செல்வாள்
துள்ளிடும் துர்க்கை யென்ன துணிந்துயிர் வாங்கிச் செல்வாள்
வெள்ளமாய்ப் பாயும் சக்தி விமலையாம் கங்கை வாழ்க!

அறம் வளர்க்கும் நாயகியே அன்னமிகத் தருபவளே
மறமொழிக்கும் மாண்பினளே மகாதேவன் சடையொளிர்வாய்
நறவநிகர் நன்னீரோய் நால்வேதப் புகழுடையோய்
உறைபனியின் கோமுகத்தில் உதிப்பவளே வாழி வாழி.

4 வாமே நீலோத்பலம் தக்ஷே பூர்ணகும்பம் ச பிப்ரதீம் |
வ[redacted] கங்காம் ஸிதாம் தேவீம் மகராஸன ஸுஸ்த்திதாம் ||

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | கங்காயை | நம : |
| " | ஹரவல்லபாயை | " |
| " | ஸிந்து காமின்யை | " |
| " | பாகீரத்யை | " |
| " | பகீரதானுகாயை | " |
| " | த்ரிலோகபத காமின்யை | " |
| " | நித்யசுத்தாயை | " |
| " | ரம்யாயை | " |
| " | ஸலிலாவாஸாயை | " |
| " | உமா ஸபத்ன்யை | 10 |
| " | தவலாம்பராயை | " |
| " | த்ரிவேண்யை | " |
| " | சம்சார விநாசின்யை | " |
| " | ப்ரயாக நிலயாயை | " |
| " | புண்யதாயை | " |
| " | பீஷ்ம மாத்ரே | 16 |

## வீரபத்திரர்

ஓம் இந்து சேகராய நம :
" பரசு ஹஸ்தாய "
" டமரு தராய "
" கட்க கேட யுக்தாய "
" கபாலதாரிணே "
" சூலஹஸ்தாய "
" வரதாய "
" அபயதாய "
" த்ரிணயனாய "
" வ்யாக்ரசர்மவாஸஸே "
" வேதாள வாஹனாய "
" நாக பூஷணாய "

[redacted] ஓம் கணாத்யக்ஷாய நம :
" அதிக்ரூராய "
" ருத்ரகோபஸம்பவாய "
" ஸர்வதுஷ்டநிபர்ஹணாய "
" வீரபத்ர ஸ்வாமினே "

---

## வீரன் தியானம்

வீரன் என்று கிராம மக்களால் அழைக்கப்படும் தெய்வம், மன்மதன் என்ற காமவேள் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

காமன் பண்டிகை, நாட்டுப்புறத் திருவிழாக்களில் குறிப்பிடத் தக்கதாகும். எவராலும் வெல்ல முடியாதவராதலால், காமவேள் தான், வீரன் என்று காரணப் பெயரோடு விளங்குகிறார் என்று கொள்ளலாம். என்றாலும், பயங்கரமான தோற்றமுடைய வீரனும் உண்டு.

இரண்டு வகையான தியானங்களும் இங்கே கொடுக்கப் படுகின்றன.

ஜபாகுஸுும ஸங்காசம் மீனகேதும் ஸ்வலங்க்ருதம் ।
இக்ஷு பாசாங்குசோபேதம் வீரம் புஷ்பசரம் பஜே ॥

(செம்பருத்திப் பூப்போன்ற சிவந்த மேனியர்; மீன் சின்னக் கொடியினர்; அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டவர்; கரும்பு வில், அங்குசம், மலர் அம்பு

த்ராவிடோக்தி ப்ரவீணம்
ச ஸ்வாமிநம் வீரமாஸ்ரயே ||

(பெரிய வடிவினர்; மலர்ந்த முகத்தினர்; திருநீறு அணிந்தவர்; கோடரி ஏந்தியவர்; கூப்பிய கையினர்; நன்மை செய்பவர்; வெண்ணிற ஆடையினர்; வீரர்; சிவனடியார்களில் முதன்மையானவர்; திராவிட மொழி வல்லுநர்; தலைவர் – ஆகிய வீரனை அடைக்கலம் புகுகின்றேன்.)

## காத்தாயி அம்மன் தியானம்

த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச ஸரத்ன மகுடோஜ்வலாம் |
தக்ஷிணே பத்ம ஸம்யுக்தாம் வாமே லம்ப கரான்விதாம் |
வீ[redacted] ரக்ஷிதாம் தேவீம் ச்யாமாபாம் சுப யௌவநாம் ||

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | காத்யாயன்யை | நம : |
| " | த்விபுஜாயை | " |
| " | த்விநேத்ராயை | " |
| " | ரத்னமகுடோஜ்வலாயை | " |
| " | பத்ம ஹஸ்தாயை | " |
| " | வீர ரக்ஷிதாயை | " |
| " | ச்யாமாபாயை | " |
| " | சுப யௌவநாயை | " |
| " | அபய ப்ரதாயை | " |
| " | வரவல்லி மஹாபட்டாரிகாயை | " |

## பச்சையம்மன் தியானம்

நீலோத்பல தள ச்யாமாம் ப்ரலம்பித கரான்விதாம்
த்விநேத்ராம் பீதவஸ்த்ராட்யாம் ஸ்வர்ண் தாடங்க ஸம்யுதாம் |
வாமே நீலோத்பலம் சைவ தததீம் காந்தி சோபிதாம்
கஞ்சுகாபரணைர் யுக்தாம் மஹாவல்லீம் விபாவயே ||

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | ச்யாமாயை | நம : |
| " | ச்யாமளாயை | " |
| " | மந்த்ர நாயிகாயை | " |
| " | மந்த்ரிண்யை | " |
| " | சுபப்ரியாயை | " |
| " | வீணாவத்யை | " |
| " | வைணிக்யை | " |
| " | முத்ரிண்யை | " |
| " | நீபப்ரியாயை | " |
| " | கதம்பவன வாஸின்யை | " |

## பத்ரகாளீ

[redacted]

"பத்ர" [Bhadhra] என்பது தான் சரியான உச்சரிப்பு ; Pathra என்பது தவறு.

பத்ர என்ற சொல்லுக்கு இனிய, மகிழ்ச்சிகரமான, வளமான, நன்மையான, முதன்மையான, சிறந்த என்று பல பொருட்கள் உண்டு. அதாவது, இவ்வுயர் நலன்களையெல்லாம் தரக்கூடிய காளி, பத்ரகாளி. இந்த அன்னையை வழிபடும் அடியார்களுக்கு வாழ்வில் பாதுகாப்பும் செழிப்பும் கிடைக்கும்.

காளீ என்றும் காளியம்மன் என்றும் காளியாத்தா என்றும் பேசப்படும் அன்னை, சில கிராமங்களில், மஹாகாளீ என்றும் அழைக்கப்படுகிறாள். மஹாகாளீ என்றால் மிகுந்த அருட்சக்தி வாய்ந்த காளீ என்றுதான் பொருள். மிகவும் பயங்கரமான தோற்றமுடைய, அல்லது, மிகவும் தொல்லை கொடுக்கக்கூடிய காளி என்று பொருள் கொள்ளக்கூடாது.

வடபத்ரகாளீ என்று சில கிராமங்களில் சொல்வார்கள். வடவிருக்ஷத்தின் [ஆலமரத்தின்] அடியில் எழுந்தருளியிருக்கும் பத்ரகாளீ என்று இதற்குப் பொருள். கண்ணபெருமானை, வடபத்ரசாயீ [ஆலிலையில் உறைபவன்]என்கிறோம். இந்த பத்ரம் வேறு; அந்த பத்ரம் வேறு. காளியுடன் சொல்லும்போது Bhadhra என்றும் கண்ணனுடன் சொல்லும்போது, Pathra மாதிரியும் உச்சரிக்கவேண்டும்.

## தியானம்

ச்யாமாபாம் ரக்தவஸ்த்ராம் ஜ்வலன சிகயுதாம் அஷ்டஹஸ்தாம் த்ரிணேத்ராம்
சூலம் வேதாள கட்கம் டமருக ஸஹிதம் வாமஹஸ்தே கபாலம் ।
அன்யே கண்டாம் து கேடாம் அபயவரயுதாம் சாபஹஸ்தாம் ஸுதம்ஷ்ட்ராம்
சாமுண்டாம் பீமரூபாம் புவனபயகரீம் பத்ரகாளீம் நமாமி ॥ 1

[கருநிறத்தவள். செவ்வாடை அணிந்தவள். நெருப்பினை நிகர்த்த கூந்தலாள். எட்டுக் கைகளுடையவள். முக்கண்ணாள். கைகளில் சூலம், வேதாளம், கத்தி, டமருகம், சிறு கிண்ணம், மணி, தண்டம், வில், அபய-வரதம் தாங்கியவள். அழகிய பல்வரிசை அச்சமூட்டும் வடிவம். உலகத்துக்குப் பயங்கரமான செயலாற்றும் திறத்தாள். சண்டமுண்ட அசுரர்களை அழித்தவள். இத்தகைய பத்ரகாளியை வணங்குகிறேன்.]

யா பஸ்மோத்தூளிதாங்கீ புஜக பரிவ்ருதா வ்யாக்ரசர்மோத்தரீயா
நிர்மாம்ஸீ மாம்ஸபக்ஷீ வித்ருத நரசிரோ பத்தமாலா கராலீ ।
சாமு[redacted]டா ரக்தகண்ட்டீ சவசயனரதா பத்தமுண்டப்ரசண்டா
நிஸ்ஸங்கா கோடராக்ஷீ பயதுரிதஹரீ பத்ரகாளீ ப்ரஸன்னா ॥ 2

(உடலில் சாம்பலைப் பூசிக் கொண்டிருப்பவள்; பாம்புகளால் சூழப்பட்டவள்; புலித்தோல் மேலாடை அணிந்தவள்; சதைப் பற்றில்லாதவள்; மாமிசம் உண்பவள்; மனிதத் தலை மாலையினாள்; செவ்விய கழுத்தினாள்; உயிரற்ற உடல் மேல் வீற்றிருப்பவள்; வளைந்த கண்ணாள்; பாவத்தையும் அச்சத்தையும் அகற்றுபவள்; மலர்ந்த முகத்தினாள்; சாமுண்டா என்ற பெயரினள்; முண்ட பிரசண்டர்களை அடக்கியவள் – ஆகிய பத்ரகாளீ (நம்மைக் காப்பாற்றுவாளாக.)

### நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | பஸ்ம தாரிண்யை | நம : |
| " | புஜங்கபூஷணாயை | " |
| " | வ்யாக்ரசர்மோத்தரீயாயை | " |
| " | மாம்ஸபக்ஷிண்யை | " |
| " | நிர்மாம்ஸ சரீரிண்யை | " |
| " | நரசிரோமாலின்யை | " |
| " | கரால்யை | " |
| " | சாமுண்டாயை | " |
| " | ரக்த கண்ட்யை | " |
| " | சவாஸனாயை | " |
| " | முண்ட ப்ரசண்டதமனாயை | " |
| " | கோடராக்ஷ்யை | " |
| " | பய ஹராயை | " |
| " | துரித நிவாரகாயை | " |
| " | சத்ருஸம்ஹாரிண்யை | " |
| " | | |

ஓம் பம் பத்ரகாள்யை நம : என்ற மந்திரத்தினால் அன்னையை ஆராதிக்கலாம்.

## வேம்படி நாகம்மன்

ஊத்தங்காடு படவேடு உலகளந்தாள் சமயபுரம்
கண்ணபுரம் கடும்பாடி கடலோர வீராம்பட்டினம்
சீர்பெரிய பாளையத்து அம்மன் சிறந்த நாகமாகி
கரகம் பம்பை வேம்பு சூலம் சிலம்புடுக்கை பிரம்பேந்தி

புற்றுதனில் வீற்றிருக்கும் வேம்படி நாகம்மையே !
ஏற்றவரம் மக்களுக்கு எளிதில் தானளிக்கும்
கண்கண்ட தாயாகி கலியுகத்தில் வாழ்ந்து வரும்
அன்னை பராசக்தி பாதம் அன்புடன் பணிவோமே !

## செல்லியம்மன்

வைகுண்டநாதனான ஸ்ரீமந் நாராயணனின் சக்தியாக விளங்கும் மகாலக்ஷ்மி தான், செல்வி[செல்வி]யம்மன் என்ற பெயரில் கிராம மக்களின் வழிபாட்டுக்கு உரிய தோற்றம் கொண்டு அருள் செய்கிறாள். எனவே, லக்ஷ்மியை வழிபடுவதைப் போலவே, இந்தத் திருமகளையும் முறையாய் வழிபடலாம்.

தியானம்

வாமதக்ஷிண ஹஸ்தாப்யாம் தததீம் ஸ்ரீபலாம்புஜே !
ஹேமாபாம் ஸகேடாப்யாம் ப்லாவ்ய மானாம் மஹாஸ்ரியம் ||

[வலதுகையில் தாமரையையும், இடது கையில் வில்வப்பழத்தையும் வைத்துக்கொண்டிருப்பவள். பொன்னிற மேனியள். செல்வப் பெருக்கை அளிப்பவள்.]

மூல மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் கமலே கமலாலயே ப்ரஸீத ப்ரஸீத ஸ்ரீம்
ஹ்ரீம் ஸ்ரீம் மஹாலக்ஷ்ம்யை நம : ||

## அர்ச்சனைக்கு நாமாவளி

ஓம் மஹாசல்யை நம :
" வரலக்ஷம்யை "
" இந்திராயை "
" சுந்தர்யை "
" பத்ம ஹஸ்தாயை "
" கமல வாஸின்யை "
" ரமாயை "
" தன்யாயை "
" அம்ருதாயை "
" கருணாயை "
" லோகமாத்ரே "
" வித்யர்யை "
" சந்த்ராயை "
[redacted] " பில்வநிலயாயை "
" தாரித்ரிய நாசின்யை "
" ஹேமமாலின்யை "
" லக்ஷ்மீ மஹாபட்டாரிகாயை "

நமஸ்காரம் செய்யும்போது

**யா தேவீ ஸர்வபூதேஷு லக்ஷ்மீரூபேண ஸம்ஸ்த்திதா ।**
**நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம : ॥**

### கருப்பன் - கருப்பசாமி - கருப்பண்ணசுவாமி - கருப்பு.

கிராம மக்களைப் பாதுகாக்கும் தெய்வங்கள் பல. இவர்கள் எல்லாம் மிக்க பலம் பொருந்தியவர்களாகவும் எதிராளியைத் தாக்கும் சக்தி படைத்தவர்களாகவும் வருணிக்கப்படுகிறார்கள். தெய்வாம்சம் கொண்டு விளங்கினாலும் நம்மைப் போலவே ஒரு முகமும், இரு கைகளும் உடையவர்கள். அதாவது, கிராம மக்களால் நெருங்கத்தக்க, ஆனால், விரோதிகளால் அணுகமுடியாத தோற்றம் உடையவர்கள். காவல் தெய்வங்களை வழிபடுவதனால் மனத்தில் நிம்மதியும் பாதுகாப்பு உணர்ச்சியும் தோன்றுகின்றன.

த்யானம்

ரக்தாக்ஷம் க்ருஷ்ணவஸ்த்ரஞ்ச த்விபுஜம் மோஹனாக்ருதிம்
கட்கம் தண்டம் ச பிப்ராணம் ஸர்வாலங்கார சோபினம் ।
பார்ஸ்வே குக்குட ஸம்யுக்தம் மஹாவிக்ரமசாலினம்
கருப்பன் இதி விக்யாதம் ஸ்வாமினம் பாவயேத் ஸதா ॥

[சிவந்த கண்கள். கருமை ஆடை. இரண்டு கைகள். வசீகரமான முகம். கத்தியும் தண்டமும் தாங்கியவர். நிறைந்த அணிகலன்களால் ஒளி வீசுபவர். அருகில், கோழி. மிகுந்த ஆற்றல் உடையவர். கருப்பன் என்று புகழ்பெற்ற தெய்வத்தை எப்போதும் சிந்திக்க வேண்டும்.]

## நாமாவளி

[redacted]

ஓம் க்ருஷ்ணபுத்ராய நம :
" ரக்தாக்ஷாய "
" நீலவஸ்த்ரதராய "
" த்விபுஜாய "
" சுந்தரஸ்வரூபாய "
" கட்க தராய "
" தண்ட ஹஸ்தாய "
" ஸர்வாலங்கார சோபிதாய "
" குக்குட ப்ரியாய "
" விக்ரமாய "
" க்ராமபாலகாய "
" பயநிவாரகாய "
" தயாமூர்த்தயே "
" நிசிநாதாய "
" ரோகஹராய "
" பக்தரக்ஷகாய [16]

## வீரபத்ரசுவாமி

இவர் சிவாம்சம் பொருந்தியவர். சிவத்தோற்றம் உடையவர்.

கைலாசபதியான சிவபெருமானே, எளிய மக்களின் உணர்வுக்கு ஏற்ற வகையில் வீரபத்ர சுவாமியாகக் காட்சி தருகிறார்.சிவனுக்குரிய தோத்திரங்களாலும் வழிபாட்டு முறைகளாலும் வீரபத்ரரைக் கொண்டாடலாம்.

<u>தியானம்</u>

ஸ்வேதாங்கம் சேஷபூஷாங்கம் கட்க வீணாதரம் சுபம்
த்ருத க்ருஷ்ணம்ருகம் வீரம் சார்தூலாஜிந வாஸஸம் ।
அர்தோன்மீலித நேத்ரம் தம் த்ரிணேத்ரம் ச ஜடாதரம்
ஸுகந்திபுஷ்பமாலம் ஸ்ரீ வீரபத்ரம் நமாம்யஹம் ॥

[redacted] [வெண்ணிற உடல், சர்ப்பமே அணிகலன். கத்தி, வீணை தாங்கியுள்ள மங்கள வடிவம். புலித்தோலை ஆடையாக அணிந்து, வீரம் பொருந்திய இவர், ஒரு மானையும் தாங்கியுள்ளார். முக்கண்ணர். சற்றே திறந்த கண்கள். சடாமுடியினர். நல்ல வாசனையுடைய மலர்களாலான மாலை அணிந்தவரான ஸ்ரீ வீரபத்திரரை நான் நமஸ்காரம் செய்கிறேன்.]

### நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | சிவஸ்வரூபிணே | நம : |
| ” | ஸ்வேதாங்காய | ” |
| ” | சேஷபூஷணாய | ” |
| ” | கட்க ஹஸ்தாய | ” |
| ” | வீணாதராய | ” |
| ” | ம்ருகதாரிணே | ” |
| ” | சார்தூலாஜிந வாஸஸே | ” |
| ” | த்ரிணேத்ராய | ” |
| ” | ஜடாதராய | ” |
| ” | சுகந்திமாலினே | ” |
| ” | திவ்யாங்காய | ” |
| ” | பஸ்மதாரிணே | ” |
| ” | ரக்ஷகாய | ” |
| ” | பில்வப்ரியாய | ” |
| ” | சுபகராய | ” |
| ” | [illegible] | ” |

# பைரவர்

**<u>தியானம்</u>**


ரக்த ஜ்வால ஜடாதரம் சசிதரம்
ரக்தாங்க தேஜோமயம் ।
டக்கா சூல கபால பாசகதரம்
ரக்ஷாகரம் பைரவம் ॥
நிர்வாணம் சுனவாஹனம் த்ரிணயனம்
ச ஆனந்த கோலா ஹலம் ।
வந்தே பூத பிசாச நாத வடுகம்
க்ஷேத்ரஸ்ய பாலம் சுபம் ॥

(செவ்விய சுவாலை நிகர்த்த ஜடையை உடையவர்; பிறைசூடி; சிவந்த ஒளி மிக்க மேனியர்; உடுக்கை, சூலம், கபாலம், பாசக்கயிறு வைத்திருப்பவர்; காவலர்; பயங்கரத் தோற்றத்தினர்; ஆடை அணியாதவர்; நாய் வாகனம் உடையவர்; முக்கண்ணர்; எப்போதும் ஆனந்தமாய் விளங்குபவர்; பூத – பிசாசுக் கூட்டங்களுக்குத் தலைவர். பிரும்மசாரி; ஊர்க் காவலராகிய பைரவரை நான் வணங்குகிறேன்.)

[redacted]

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | அஸிதாங்க பைரவாய | நம : |
| ” | ருரு | ” |
| ” | க்ரோத | ” |
| ” | உன்மத்த | ” |
| ” | கபால | ” |
| ” | பீஷண | ” |
| ” | சண்ட | ” |
| ” | ஸம்ஹார | ” |



## மதுரை வீரன்

**த்யானம்**

த்விபுஜம் ச த்விநேத்ரம் ச ரக்தவர்ணம் மஹாபலம் |
மதுராநகரஸ்தித்யம் வல்லிரக்ஷண விக்ரஹம் ||

ஸ்வேதாம்பரதரம் சைவ ஸுகேசம் ஸுநாஸிகம் |
வந்தேஹம் மஹாவீரம் ஸர்வபய நிவாரகம் ||

### நாமாவளி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | மஹாவீராய | நம : | ஓம் | ஸ்வேதாம்பரதராய | நம : |
| " | த்விபுஜாய | " | " | மஹாபலாய | " |
| " | ஸுகேசாய | " | " | மதுரா வாஸினே | " |
| " | த்விநேத்ராய | " | " | பய நிவாரகாய | " |
| " | ஸுநாஸிகாய | " | " | சுந்தராய | " |
| " | சிவஸம்பூதாய | " | " | உக்ர தேஜஸே | " |
| [redacted] | ரக்தவர்ணாய | " | " | மகா புருஷாய | " |
| | குமாரீரக்ஷகாய | " | " | பக்த ப்ரியாய | " |

**மூல மந்திரம்**

ஓம் மதுராபுரி நிவாஸ வீராய நம : ||

## திரௌபதி

பஞ்ச பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதி, கற்புக்கரசிகளில் ஒருவர். தினந்தோறும், விடியற்காலையில் படுக்கையிலிருந்து எழுந்ததும் நெஞ்சில் நினைத்து வணங்கப்பட வேண்டிய ஐந்து மங்கையரில் திரௌபதியின் பெயரும் உண்டு.

அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா மண்டோதரீ ததா |
பஞ்ச கன்யா : ஸ்மரேந்நித்யம் மஹாபாதக நாசனம் ||

- என்பது சுலோகம்.

கண்ணனிடம் எல்லையில்லாத பக்திகொண்டிருந்த திரௌபதிக்கு ஆச்சரியமான உதவிகளை அவர் செய்திருக்கிறார். திரௌபதியை வழிபடுவோர்க்கு, கோகுலத்துக் குழந்தை துணை நிற்பான்.

**தியானம்**

த்விநேத்ராம் ஏகவக்த்ராம் ச பத்மாபய கராம்புஜாம்
ஹரித்ராவஸ்த்ர ஸம்யுக்தாம் கிரீட மகுடோஜ்வலாம் ।

மல்லிகா புஷ்ப ஸமன்விதாம் ஸர்வாபரணபூஷிதாம்
ஞான வைராக்ய தாத்ரீம் ச மோக்ஷ ஸாம்ராஜ்ய காரிணீம் ।

கபால பாச டக்கோக்ர சூல ஹேதி விராஜிதாம்
த்யாயே த்ரௌபதீம் ஹேம வர்ணாங்கீம் ஸர்வ சுபப் தாயினீம் ॥

[ஒரு முகமும் இரு கண்களும் உடையவள். கையில் தாமரையும் அபய மூத்திரையும் தாங்கியவள். மஞ்சள்நிற ஆடை அணிந்து, கிரீடத்தோடு விளங்குபவள். மல்லிகை மலர், அணிகலன்களால் அழகாய் விளங்குபவள். ஞானத்தையும் வைராக்கியத்தையும் தந்து மோக்ஷப் பேற்றினை அருள்பவள். கபாலம் என்னும் கிண்ணம், பாசம் என்னும் கயிறு, டக்கா என்னும் பெரிய டமாரம், உக்ர-சூல-ஹேதி எனப்படும் ஆயுதங்கள் கொ[redacted]ருப்பவள். பொன்வண்ணத்தாள். எல்லா நலன்களையும் அளிக்க வல்ல திரௌ[redacted]தையை சிந்திக்கிறேன்.]

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | பத்மஹஸ்தாயை | நம : |
| ” | அபயமுத்ராயை | ” |
| ” | ஹரித்ராவஸ்த்ரதாரிண்யை | ” |
| ” | மகுடோஜ்வலாயை | ” |
| ” | மல்லிகா ப்ரியாயை | ” |
| ” | ஸர்வாபர்ணபூஷிதாயை | ” |
| ” | ஞான ப்ரதாயின்யை | ” |
| ” | வைராக்ய தாத்ர்யை | ” |
| ” | மோக்ஷகாரிண்யை | ” |
| ” | அஸ்த்ர தராயை | ” |
| ” | ஹேமாபாயை | ” |
| ” | மங்களாயை | ” |
| ” | க்ருஷ்ணாயை | ” |
| ” | யாகஸம்பூதாயை | ” |
| ” | பதிவ்ரதாயை | ” |
| ” | த்ரௌபத்யை | ” |

திரௌபதியம்மன் சந்நிதியில் மாவிளக்கு ஏற்றுவதாலும், சுமங்கலிகளுக்குத் தாம்பூலம் அளிப்பதாலும், பெண்மணிகள் கோரிய பலனைப் பெறுவார்கள்.

## தர்மராஜா

இங்கே குறிப்பிடப்படும் தர்மராஜா, பாண்டவர்களில் மூத்தவரான தருமபுத்திரர் எனப்படும் யுதிஷ்ட்டிரர். [எமதர்ம ராஜன் அல்ல.]

தருமபுத்திரர், அறத்தின் வழியே செல்பவர்; அறம் அல்லாததை மனத்தாலும் சிந்திக்கத் தெரியாதவர்.

தருமத்தின் வடிவமாகவே இவர் விளங்கியதால், இவருடைய தேரின் சக்கரங்கள் மண்ணில் பதியாமல், பூமிக்குச் சற்று மேலேயே செல்லும் திறன் படைத்திருந்தனவாம்.

[redacted] உடலோடு சுவர்க்கம் சென்ற மாமனிதர்.இவரை வழிபடுவதால் நற்குணம், நேர்மை, சாந்தம், மனநிறைவு முதலியன கிடைக்கும். பிறருக்குத் தீங்கு நினையாத நற்சிந்தனையும் தோன்றும். அண்டியவருக்கு அடைக்கலம் அளிக்கும் நற்பண்பு இயல்பாக அமையும்.

ஓம் பாண்டுதனயாய தர்மபரிபால நாய ஸ்ரீதர்மராஜாய நமோ நம : ||

~ என்பது, மூலமந்திரம்.

ஓம் பாண்டவாய வித்மஹே குந்தீபுத்ராய தீமஹி
தன்னோ தர்ம : ப்ரசோதயாத் || ~ என்பது, காயத்ரீ.

## தியானம்

ரத்ன குண்டல சோபாட்யம் கிரீட மகுடோஜ்வலம்
பீதாம்பரதரம் தேவம் ஸர்வாபரண பூஷிதம் |

தனுர்பாண கரோபேதம் ஞானவித்யாமயம் விபும்
க்ருஷ்ணாகுச முத்ரிதாங்கம் தர்மராஜமஹம் பஜே ||

[செவிகளில் நவரத்ன குண்டலங்கள். சிரசில் கிரீடம். பட்டாடை அணிந்து பலவித நகைகள் பூண்டு ஒளிமயமாய் விளங்குபவர். கையில் வில்லும் அம்பும் தாங்கியவர். நிறைஞானத்தின் உறைவிடம். பாஞ்சாலியினால் தழுவப்படுகிறவர். இத்தகைய தருமராஜனை நான் துதிக்கிறேன்.]

## நாமாவளி

ஓம் பாண்டுதனயாய நம :
" ரத்னகுண்டலதராய "
" தர்மபரிபாலகாய "
" ஞானவித்யா ஸ்வரூபிணே "
" ஸர்வாபரணபூஷிதாய "
" தனுர்பாணதராய "
[redacted] " பீதவஸ்த்ராய "
" குந்தீபுத்ராய "
" த்ரௌபதீநாதாய "
" பீஷ்மப்ரியாய "
" சுத்த சித்தாய "
" சாந்தாய "
" க்ருஷ்ணஸகாய "
" ஸத்யதர்மிணே "
" மஹாவீராய "
" விஜயினே "

## நாகராஜர்

ஜாதகத்தில் ஸர்ப்ப தோஷம் காணப்பட்டால், அந்தத் தம்பதியருக்குக் குழந்தை பிறக்காமல் போகக்கூடும்; தப்பித் தவறி பிறந்தாலும், ஏதேனும் நோய்வாய்ப்பட்டு அல்லல் பட்டுக் கொண்டிருக்கும். ஸர்ப்பம், மந்திரத்துக்குக் கட்டுப்படும் தன்மையுடையது; ஒரு நெறியில் நிற்பது; தெய்வாம்சம் பொருந்தியது.ஸர்ப்ப சாந்தி, நாகப் பிரதிஷ்டை செய்வதன் மூலம் நல்ல புத்திரப் பேற்றையும் நோயற்ற வாழ்வையும் அடையலாம்.

அரசமரத்தினடியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகருக்குப் பால் அபிஷேகம் செய்வது, வலம் வருவது, மலர் சார்த்துவது போன்றவைகளால் நாகரின் அருளைப் பெறமுடியும்.

நாகராஜ நமஸ்துப்யம் புத்ரஸௌபாக்ய தாயக ।
பூஜாம் க்ருஹாண பகவன் அபீஷ்டபல ஸித்தயே ॥

என்று பிரார்த்தித்துக் கொண்டு அர்ச்சனை செய்யவும்.

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | அனந்தாய | நம : |
| " | தக்ஷகாய | " |
| " | கார்கோடகாய | " |
| " | மஹாபத்மாய | " |
| [redacted] " | பத்மாய | " |
| " | சங்க்காய | " |
| " | சிவப்ரியாய | " |
| " | சங்க்கபாலாய | " |
| " | குளிகாய | " |
| " | நாகராஜாய | 10 |
| " | புராணாய | " |
| " | தக்ஷாய | " |
| " | அக்ஷராய | " |
| " | புண்ய மூர்த்தயே | " |
| " | வாயுபக்ஷாய | " |
| " | புத்ரப்ரதாய | " |
| " | புண்யரூபாய | " |
| " | பன்னகேசாய | " |
| " | பரமேஷ்ட்டினே | " |
| " | தயாரூபாய | 20 |
| " | மஹாமாயினே | " |
| " | பீமகாயாய | " |
| " | சுக்லரூபாய | " |
| " | சுபப்ரதாய | " |

| | | |
|---|---|---|
| ஓம் | ஸந்தானதாயினே | நம : |
| " | லக்ஷ்மீகராய | " |
| " | ராமபக்தாய | " |
| " | பாதாளவாஸினே | " |
| " | பூமிதாரிணே | " |
| " | நாநாரூபாய | " |
| " | ஜராஹீனாய | " |
| " | ஹரபூஷணாய | [32] |

நாகராஜாய நம : ஹவிஷ்யான்னம், கோக்ஷீரம் நிவேதயாமி. [கஞ்சி வடிக்காத அன்னம், ஹவிஷ்யான்னம்; கோக்ஷீரம் என்றால் பசும்பால். இவை இரண்டும் நாகராஜருக்குப் பிரியமானவை.]

நமஸ்காரம் செய்யும்போது

[redacted] நாகராஜ மஹாபாக ஸர்வாபீஷ்ட பலப்ரத ।
நமஸ்கரோமி தேவேச த்ராஹி மாம் கருணாநிதே ॥

என்று வேண்டிக் கொள்ளவும்.

## பெரியாண்டவர்

[மஹாமுனீஸ்வரர்]

### தியானம்

வந்தே ராஜஸ ரூபகம் த்ரிணயனம் பாலார்க்க கோடி ப்ரபம் ।
ஹஸ்தே புஸ்தகதாரிணம் ஜபமணீ அத்யுக்ர தேஜோஜ்வலம் ॥

வீணாதண்டதரம் தேவம் ஜடாமகுட தரம் பீதாம்பராலங்க்ருதம் ।
பக்தாபீஷ்ட வரப்ரதம் பயஹரம் அபயதம் மஹாமுனீஸ்வரம் ॥

### நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | பாலார்க்க ப்ரபாய | நம : । |
| " | ராஜஸரூபிணே | " |
| " | த்ரிணயனாய | " |
| " | புஸ்தகதாரிணே | " |
| " | ஜபமணி ஹஸ்தாய | " |

ஓம் உக்ர தேஜஸே நம : ।
" வீணாதண்டதராய "
" ஜடா மகுடாய "
" பீதவஸ்த்ராய "
" வர ப்ரதாய "
" பய நிவாரகாய "
" அபயதாய "
" மஹா சைவாய "
" ஸர்வ ஜனரக்ஷகாய "
" தபஸ்வினே "
" மஹா முனீஸ்வராய நம : ।

மூல மந்திரம்

ஓம் நம: சிவாய மஹாமுனீஸ்வராய நம : ॥

[redacted]

## ஸ்ரீகிருஷ்ணன் - கண்ணன்

1. க்ருஷ்ணாய வாசுதேவாய தேவகீநந்தனாய ச ।
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம : ॥

2. வசுதேவஸுதம் தேவம் கம்ஸசாணூரமர்தனம் ।
தேவகீபரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ॥

### நாமாவளி

ஓம் ஸ்ரீ க்ருஷ்ணாய நம :
" கமலாநாதாய "
" வாசுதேவாய "
" தேவகீநந்தனாய "
" யசோதா வத்ஸலாய "
" கோவிந்தாய "
" வனமாலினே "
" நவனீத நடாய "
" கோபாலாய "
" த்வாரகாநாயகாய "

ஓம் பார்த்தஸாரதயே நம :
" வேணுநாதவிசாரதாய "
" புண்டரீகாக்ஷாய "
" ஸத்யஸங்கல்பாய "
" தாமோதராய "
" நாராயணாய "

ஸ்ரீ ராதா ருக்மிணி ஸத்யபாமா ஸமேத ஸ்ரீ கோபாலக்ருஷ்ண ஸ்வாமினே நம :
பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।

## திருமால் ஆலயங்களில்
## தாயாருக்கான பொதுவான நாமாவளி

[redacted]

ஓம் வரலக்ஷ்ம்யை நம:
" பீதாம்பரதாரிண்யை "
" ஹரிப்ரியாயை "
" இந்திராயை "
" கம்புகண்ட்யை "
" ஸுந்தர்யை "
" கமலவாஸின்யை "
" லோகமாத்ரே "
" ரமாயை "
" நீலகுந்தளாயை "
" ஹிரண்மய்யை "
" அம்ருதாயை "
" கருணாயை "
" பாஸ்கர்யை "
" ஹேமமாலின்யை "
" மங்களாயை "

## ஸ்ரீராமர்

1. ஆபதாம் அபஹர்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம் ।
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம் ॥

2. அக்ரத : ப்ருஷ்டதஸ்சைவ பார்ஸ்வதஸ்ச்ச மஹாபலௌ ।
ஆகர்ணபூர்ணதன்வானௌ ரக்ஷேதாம் ராமலக்ஷ்மணௌ ॥

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | ஸ்ரீராமாய | நம : |
| " | ராமபத்ராய | " |
| " | ராமசந்த்ராய | " |
| " | ராஜீவலோசனாய | " |
| [redacted] | ரகுபுங்கவாய | " |
| " | ஜானகீவல்லபாய | " |
| " | ஜனார்தனாய | " |
| " | தாடகாந்தகாய | " |
| " | அஹல்யா சாப சமனாய | " |
| " | சுமித்ரா புத்ர ஸேவிதாய | " |
| " | ராகவாய | " |
| " | தனுர்தராய | " |
| " | பித்ருபக்தாய | " |
| " | கௌஸலேயாய | " |
| " | தசக்ரீவசிரோஹராய | " |
| " | ஸத்ய விக்ரமாய | " |

ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர ஸ்வாமினே நம : பரிமள புஷ்பாணி [துளஸீ தளானி]
ஸமர்ப்பயாமி ॥

## பொதுவாக, விஷ்ணு அர்ச்சாமூர்த்திகளுக்கு

### நாமாவளி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓம் | வாஸுதேவாய | நம : | ஓம் | ஸ்ரீதராய | நம : | |
| " | ஸங்கர்ஷணாய | " | " | ஹ்ருஷீகேசாய | " | |
| " | ப்ரத்யும்னாய | " | " | பத்மநாபாய | " | |
| " | அநிருத்தாய | " | " | தாமோதராய | " | |
| " | கேசவாய | " | " | புருஷோத்தமாய | " | |
| " | நாராயணாய | " | " | அதோக்ஷஜாய | " | |
| " | மாதவாய | " | " | ந்ருஸிம்ஹாய | " | |
| " | கோவிந்தாய | " | " | அச்யுதாய | " | |
| " | விஷ்ணவே | " | " | ஜனார்தனாய | " | |
| " | மதுஸூதநாய | " | " | உபேந்த்ராய | " | |
| " | த்ரிவிக்ரமாய | " | " | ஹரயே | " | |
| " | வா[redacted]ாய | " | " | க்ருஷ்ணாய | " | [24] |

1. நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமஎன் றிரண்டு எழுத்தினால்.

2. நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவோர்க்கே.

3. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

# ஆஞ்ஜநேயர்

1. மனோஜவம் மாருததுல்யவேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்ட்டம் ।
வாதாத்மஜம் வானரயூதமுக்யம்
ஸ்ரீராமதூதம் சிரஸா நமாமி ॥

2. யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருத மஸ்தகாஞ்ஜலிம் ।
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
மாருதிம் நமதராக்ஷஸாந்தகம் ॥

3. எவ்விடத்தும் இராமன் சரிதையாம்
அவ்விடத்திலும் அஞ்சலி பத்தனாய்
[redacted] பவ்வ மிக்க புகழ்த் திருப்பாற்கடல்
தெய்வ தாசனைச் சிந்தை செய்வாம்.

4. அஞ்சனை மைந்தா போற்றி ! அஞ்சினை வென்றாய் போற்றி!
வெஞ்சினக் கதிர்பின் சென்று முழுமறை உணர்ந்தாய் போற்றி!
மஞ்சன மேனி ராமன் மலர்ப்பதம் மறவாய் போற்றி!
எஞ்சலில் ஊழியெல்லாம் இன்றென விருப்பாய் போற்றி!

ஸ்ரீராமதூதாய, ஆஞ்ஜநேயாய, வாயுபுத்ராய, மஹாபலாய, ஸீதாதுக்க நிவாரகாய, லங்கா விதாஹகாய, மஹாபல ப்ரசண்டாய, பல்குனஸகாய, ஸகல ப்ரம்மாண்ட பாலகாய, ஸப்த ஸமுத்ர நிராலங்கிதாய, பிங்கள நயநாய, அமித விக்ரமாய, ஸஞ்ஜீவிநீ ஸமாநயன ஸமர்த்தாய, அங்கத லக்ஷ்மண கபிஸைந்ய ப்ராண நிர்வாஹகாய, தசகண்ட வித்வம்ஸநாய, ராமேஷ்டாய, ஸீதாஸஹித ராமசந்த்ர ப்ரஸாதகாய ஹநூமதே நம : ॥

[1] ஆஞ்ஜநேய மாலா மந்திரம்

# நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | ஆஞ்ஜனேயாய | நம : |
| ” | மஹாவீராய | ” |
| ” | மாருதாத்மஜாய | ” |
| ” | கபீஸ்வராய | ” |
| ” | ஸர்வரோக ஹராய | ” |
| ” | ராமதூதாய | ” |
| ” | வானராய | ” |
| ” | கேஸரிஸுதாய | ” |
| ” | ஸீதாசோகநிவாரணாய | ” |
| ” | விபீஷண ப்ரியகரா | [10] |
| ” | தசக்ரீவ குலாந்தகாய | ” |
| ” | வஜ்ரகாயாய | ” |
| ” [redacted] | சிரஞ்ஜீவிநே | ” |
| ” | ராமபக்தாய | ” |
| ” | மஹாதபஸே | ” |
| ” | ஸ்ரீமதே | ” |
| ” | லங்காபுர விதாஹகாய | ” |
| ” | பீமாய | ” |
| ” | சூராய | ” |
| ” | காமரூபிணே | [20] |
| ” | பிங்களாக்ஷாய | ” |
| ” | சதுர்பாஹவே | ” |
| ” | மஹாத்மனே | ” |
| ” | பக்தவத்ஸலாய | ” |
| ” | தாந்தாய | ” |
| ” | சாந்தாய | ” |
| ” | ராமகதா லோலாய | ” |
| ” | ஸீதாந்வேஷண தத்பராய | ” |
| ” | வஜ்ரநகாய | ” |
| ” | லோகபூஜ்யாய | [30] |
| ” | ஸர்வமந்த்ர ஸ்வரூபவதே | ” |
| ” | ஸீதாஸமேத ஸ்ரீராமபாத ஸேவா துரந்தராய | ” |

## நவக்ரஹங்களின் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கு

அஞ்ஜனாகர்பஸம்பூதம் குமாரம் ப்ரம்மசாரிணம் ।
துஷ்டக்ரஹ விநாசாய ஹநூமந்த முபாஸ்மஹே ॥
- என்ற சுலோகத்தையும்,

## எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெறுவதற்கு

ராமதூத மஹாதீர ருத்ரவீர்ய ஸமுத்பவ ।
அஞ்ஜனாகர்பஸம்பூத வாயுபத்ர நமோஸ்து தே ॥

- என்ற சுலோகத்தையும் தொடர்ந்து ஜபித்து வரலாம்.

## நாலாயிர திவ்ய பிரபந்தம்

1. [redacted]வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

2. குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரச் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.
- திருமங்கை ஆழ்வார்.

3. பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

4. குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டித் தென்திசை இலங்கைநோக்கிக்
கடல் நிறக்கடவுள் எந்தை அரவணைத் துயிலு மாகண்டு
உடல் எனக்கு உருகு மாலோ என்செய்வேன்உலகத்தீரே?

- தொண்டரடிப்பொடி ஆழ்வார்

5. சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்-என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

- பொய்கை ஆழ்வார்

[redacted]

6. வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்கா-வையத்துச்
சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்கவே என்று.

- பொய்கை ஆழ்வார்

7. மனத்துளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
நினைப்பரிய நீள்அரங்கத்து உள்ளான்-எனப்பலரும்
தேவாதிதேவன் எனப்படுவான் முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன்.

8. என்றும் மறந்தறியேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
நின்று நினைப்பு ஒழியா நீர்மையால் - வென்றி
அடல்ஆழி கொண்ட அறிவனே இன்பக்
கடலாழி நீயருளிக் காண்.

- பூதத்தாழ்வார்

9. திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று.

10. கண்ணும் கமலம் கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும் மற்றவையே எண்ணின்
கருமா முகில்வண்ணன் கார்கடல் நீர்வண்ணன்
திருமா மணிவண்ணன் தேசு.

- பேயாழ்வார்.

11. உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதுஎழு என்மனனே.

12. புண்ணியம் செய்துநல்ல புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம் இப்பிறப்பறுக்கும்அப்பால்
திண்ணம்நாம் அறியச்சொன்னோம் செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார் அமரர் ஆவார்.

- நம்மாழ்வார்.

## துலுக்காணத்தம்மன்

கிராமப்புறங்களில் வழிபடும் அம்மனின் பெயர்கள் கணக்கிலடங்கா. தி[redacted]தி, மாரி, முத்துமாரி, தண்டுமாரி, காளி, இளங்காளி, கங்கை, கருமாரி, படைவெட்டி மாரி, முத்தாலம்மன், எல்லையம்மன் என்பன போன்ற பெயர்களுடன் துலுக்காணத்தம்மன் என்ற பெயரும் காணப்படுகிறது. இந்தப் பெயருக்கும் துலுக்க சமயத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

சரத்ருது காலமாகிய ஐப்பசியில் சாரத நவராத்திரியும் வஸந்தருது காலமாகிய சித்திரையில் வஸந்த நவராத்திரியும் நகர்ப்புற மக்களால் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இக்காலங்களில் கிராம மக்கள் தத்தம் தொழில்களில் ஈடுபட்டிருப்பதால், மனத்திற்குகந்த வேறு ஒரு காலத்தை தேர்ந்தெடுத்து அம்மனை வழிபட்டனர் போலும்.

இலையுதிர் காலத்தைத் தொடர்ந்து வருவது துளிர் காலம். எங்கும் பசுமை விளங்கும் துளிர்காலத்தில் வழிபடப்படுகிற அம்மன் துளிர்காலத்தம்மன், நாளடைவில், நாட்டுப் புற மக்களின் நாவில் துலுக்காணத்தம்மனாக மருவி விட்டது என்ற விளக்கம் பொருத்தமாக இருக்கிறது.

அவள் துளிர்காலத்தம்மனாக இருந்தாலும் சரி, துருக்காணத்தம்மனாக இருந்தாலும் சரி, காலம் கடந்து நிற்கும் ஆதிபராசக்தி, நேரம்-காலம் பாராது அருள்மழை பொழிகிறாள் என்பது நித்தியமான உண்மையல்லவா?

## ஸ்ரீ ஆபதுத்தாரணர் மாலை

சீர்காழிப் பகுதியிலுள்ள சட்டைநாதரைப் போற்றி, தருமையாதீனம் பத்தாவது குரு மகா சன்னிதானம் அருளிய தெய்விகப் பாடல்கள், இவை. இறையருளினால் வெளிப்பட்டமையால் அருட்சக்தியும் பொருட்சக்தியும் நிரம்பித் ததும்புவதை அனுபவத்தால் உணரலாம். எல்லாக் கோவில்களிலும் அருள்மிகு பைரவர் திருச்சன்னதியில் இப்பாடல்களை ஓதி மகிழலாம்.

### காப்பு

விண்ணார் மலர்ப்பொழில் சூழ்காழி மாமலை மேலமர்ந்த
தண்ணார் மதிபுனை வேணியன் ஆபதுத் தாரணன்மேல்
பண்ணாரப் பாடிய மாலைக்கு மாமுகன் பாதமும்நீள்
கண்ணா றிரண்டுள கந்தன்பொற் பாதமும் காத்திடுமே.

[redacted]

### நூல்

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யும்செம் முகமலரும்
கார்கொண்ட சட்டையும் தண்டாயுதமும் கணங்களெட்டும்
கூர்கொண்ட மூவிலைச் சூலமும் கொண்டருள் கூர்ந்த கொன்றைத்
தார்கொண்ட வேணியனே! காழி யாபதுத் தாரணனே. 1

தெள்ளும் புனுகும் பனிநீரும் குங்குமச் சேறும் செந்தேன்
விள்ளும் மலரும்நின் பாதத்திற் சார்த்தி, விடாமல் இன்பம்
கொள்ளும் படியன்பு தந்து, எனை ஆண்டருள்; கூற்றுவனைத்
தள்ளும் பதாம்புயனே! காழி யாபதுத் தாரணனே. 2

3. சாயாத சூலதண் டாயுத னே!பச்சைச் சட்டையனே!
வேயார்விண் ணோர் தொழு மேனிய னே! என்மிடி தவிர்ப்பாய்;
வாயார உன்னைத் துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயா கியஅப்ப னே! காழி யாபதுத் தாரணனே. 3

வட்டையொப் பாகு மினியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டையப் பா! மிக யானிளைத் தேன்; பண்டிருவர்க் கெட்டா
நெட்டையப் பா! மறை காணாத சேவடி நீ அருள்வாய்;
சட்டையப் பா! வடுகா! காழி யாபதுத் தாரணனே 4

மட்டுப் படாத யமதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபொடி யாக்குமுன் காத்தருள்! தோடணிந்த
பட்டுப் புயத்தினும் தண்டா யுதத்தினும் பாதத்தினும்
தட்டுப் புழுகணி யும்காழி யாபதுத் தாரணனே. 5

நெறியும் பொறியும் தவமும்மெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழும் கொடுத்தருள் வாய்; புரம் காய்ந்தவனே!
குறியும் குணமும் கடந்தவ னே! குழக் கன்றுகட்டும்
தறியின்கண் வந்தவனே! காழி யாபதுத் தாரணனே. 6

[redacted]
அடியார் மனத்தி னினைத்த கரும மனைத்து மங்கே
முடியாத தேது? முடித் தருள்வாய் ; முரு காரலங்கல்
கடியாத மலர்க் கொன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந் தியகையனே! காழி யாபதுத் தாரணனே. 7

முட்டற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க் கல்வியும்
எட்டுணை யேனும் கொடுத்துண் டிருக்கஎனக் கருள்வாய்;
வட்ட மதிச்சடை யானே! சிகர மலைக்கமர்ந்த
சட்டம் உடையவனே! காழி யாபதுத் தாரணனே. 8

பொய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மெய்யாம் இதுஎன நம்பிவிட்டேன்; வினை யேனைக் கண் பார்;
மையாடு கண்ணியர் பின்செலத் தாரு வனத்திற் சென்ற
சைவா கமப்பொருளே! காழி யாபதுத் தாரணனே. 9

நீலக் கயல்விழி மானார் கலவியின் நேசம் வைத்தே
ஆலைக் கரும்பது போல்ஆய் விடாதுஉன் அருள்புரிவாய்;
வாலைக் கலைமதி வேணியனே! வடுகா! அடியார்
சாலத் தொழும்ஐய னே! காழி யாபதுத் தாரணனே. 10

செந்தமி ழோர்தொழும் தண்டாயுதமும் திருவழகும்
கந்தா மும்பச்சைக் கஞ்சுகம் தானும் கருதரிய
இந்தணி வட்டச் சடையும் கண்மூன்றும் இருபதமும்
சந்ததமும் மறவேன் காழி யாபதுத் தாரணனே. 11

படிக்கும்தண் டாயுத மென்போர்க்கு நோய்வினை பற்றறுப்பர்
பிடிக்கும்தண் டாயுதம்; எண்ணெருங் கோடிபிர மாண்டமெமல்லாம்
முடிக்கும்தண் டாயுதனே! மூதண்டந் தாண்டு முகந்தன் சென்னி
தடிக்கும்தண் டாயுதனே! காழி யாபதுத்தாரணனே. 12

அரம்பிடிக் கும்கண்ணி னார்ஆசை மேற்கொண் டலைவ தெல்லாம்
வரம்பிடிக் கும்கருத் துண்மைகண் டார்க்கில்லை; வந்தருள்கூர்
உரம்பிடிக் கும்துட்ட வேதாள பூதத்தையோட்டி வெட்டித்
தரம்[redacted] கும்வடுகா!காழி யாபதுத் தாரணனே. 13

பெருகா ரணியத்தில் யான்சென்ற போதும் பெரும் பொருளால்
வருகா தல்கொண்டுஇ ரவில்துயில் போதும்இம் மண்டலத்தில்
துருவா தியர்கள் சபையில்செல் போதும் துணை எனக்கு
வருவாய்; உனை நம்பினேன் ; காழி யாபதுத்தாரணனே. 14

செம்மலை மீதினில் சாமள கஞ்சுகம் சேர்வடிவும்
அம்மலை போலும்நற் றண்டா யுதமும்கொண் டன்புடனே
எம்மலை வேதம் தவிர்த்தருள்வாய்; கடுவேந்தி விண்ணோர்
தம்மலை யோட்டும் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே. 15

மாடும்தண் டாமம் அணிந்திடும் மைந்தரும் மாதர்களும்
வீடும்தண் டாமம் எனமகிழாமல் உன்மென் மலர்த்தாள்
பாடும்தண் டாத்தமிழ் ஈந்தருள்; பூத பிசாசுகளைச்
சாடும்தண் டாயுதனே காழி யாபதுத் தாரணனே. 16

வெடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
பொடிக்கும் கனல்விழிப் புண்ணியனே! புவி யோர்கள்நெஞ்சம்
துடிக்கும் பொல்லாத பிசாசுகள் தம்மைத் துரத்தி வெட்டி
அடிக்கும் தண்டாயுதனே!காழி யாபதுத் தாரணனே. 17

இலையென் னொருவர்க் கிதம் சொல்லி என்றும் இரங்கிநில்லா
நிலையென் றும்நீ அளித் தாண்டருள் வாய்; நித்தனே! புகலி
மலையொன் றிய வடுகேச கங்காள வயிரவனே!
தலையொன் றியகைய னே! காழி யாபதுத் தாரணனே. 18

பாடிக்கொண் டாடிப் பணிந்திடும் அன்பர்தம் பாதமலர்
சூடிக்கொண் டாடித் திரிந்திட வேளனைத் தொண்டு கொள்வாய்;
தேடிக்கொண் டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கையெல்லாம்
சாடிக்கொண் டாடிய வா! காழி யாபதுத் தாரணனே. 19

தெவ்விடத் தாய திசை பிழைத் தாலும், சின அரவம்
கவ்விடத் தான்வெய்ய கான்நடந் தாலும், கருதரிய
எவ்விடத் தேனும் இருந்தாலும், என்றன் இடரையெல்லாம்
தவ்விட நீ வரு வாய்,காழி யாபதுத் தாரணனே. 20

நீடும்தண் டாயுதம்நித் தம்தண்டாயுதம் நித்தம் அன்பர்
தேடும்தண் டாயுதம் ஈரே ழுலகமும் சேவித்துக்கொண்
டாடும்தண் டாயுதம்;அண்டாது பேய்கள் அலறிவிழச்
சாடும்தண் டாயுதனே ; காழி யாபதுத் தாரணனே. 21

வங்கம் கலிங்கம் குலுங்கம் தெலுங்கம் மராடம்முதல்
எங்கெங் கும்போக இடர்வரும் போதும் இனிமையுடன்
அங்கங்கு நீதுணை யாய்வரு வாய் ; அந்தி வான்மதியம்
தங்கும் சடாடவி யாய்! காழி யாபதுத் தாரணனே. 22

'ஈனம் தரும் இது'என் றெண்ணாமலே இடும்பான் மெலிந்திங்கு
ஊனம்தரும் இந்தச் செல்வருக் கிச்சையுரை உரைத்தேன்;
வானம்தரும் உம்பருக்காய் அவுணரை மாட்டி நல்ல
தானம் தரும் அண்ணலே! காழியாபதுத் தாரணனே. 23

அடிக்குப் பணியும்நின் அன்பரைக் காயுமவர் உடலை
வெடித்துப் பொடிபட நீவிழிப்பாய்; எட்டு வெற்பும் செற்றே
இடித்துப் பொடிபட வல்லா யுதம்பதினெட்டும் உன் கைத்
தடிக்குப் பெரியதுண் டோ ?காழி யாபதுத் தாரணனே. 24



உளப்பரி வில்லவர் தம்மில்லில் சென்றங்கு உரை உரைத்துக்
கொளப்பரி வான மொழிபல கூறிக் குறைகள்சொல்வீர்
இளைப்பறக் காப்பவன் யாவன்என் றால், அர விந்தம் எல்லாம்
தலைப்பரும் செல்வி வளர் காழி யாபதுத் தாரணனே. 25

கலையா வும்முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியும் நீயருள்வாய்;
மலையா சன, வடுகேச! கங்காள வயிரவனே!
தலைமா லைசூழ்புய னே!காழி யாபதுத் தாரணனே. 26

வாட்கொண்ட கண்ணியர் மாயையில் வீழ்ந்து மருண்டுபல
நாட்கெ[redacted] தீயேனை ஆட்கொண்டு காத்து அருள் நல்குவையோ?
கோட்கொண்ட காலனுக் கஞ்சிய பாலனைக் கூர்ந்தளித்து
ஆட்கொண்டு காத்தவனே! காழி யாபதுத் தாரணனே. 27

நிட்டைக்குள் வாழ்வும் நின்னடி போற்றவும் நேர்ந்தறியா
ஒட்டைச் சடலத்தை யான்எடுத் தேன் ; ஒளி ஓங்கு செம்பொற்
பட்டைப் புனைந்த புயமீது மாயன் படிவம் தந்த
சட்டைக் கிடம்தந் தருள்; காழி யாபதுத் தாரணனே. 28

'சொல்லா கியபொருள் எல்லாம் உணர்ந் துனைத் தோத்தரிக்க
வல்லார் தமைத்தொழ வல்லான்' என, என்னை வைப்பதுண்டோ?
கல்லாற் சிலைதொட்ட நல்லார் எல்லார்க்கும் கதியளிக்கும்
சல்லாப மானவனே! காழி யாபதுத் தாரணனே. 29

இந்திரன் வாழ்க்கையும் நான்முகன் வாழ்க்கையும் ஈர்ந்துளவோன்
நந்தமிழ் வாழ்க்கையும் பெற்றாலும் நின்னடி யார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை ஒவ்வாது காண்; ஒளி பூண்ட இளஞ்
சந்திர சேகரனே! காழி யாபதுத் தாரணனே. 30

## காயத்ரீ மந்திரங்கள்

காயத்ரீ என்பது வடமொழி யாப்பிலக்கணத்தைச் சார்ந்த பெயர் - குறள், வெண்பா என்று தமிழில் சொல்வதைப் போல, வேதப் பகுதிகளில் காணப்படும் காயத்ரீயைப் போலவே புராணங்களிலும் ஆகம நூல்களிலும் பற்பல தெய்வங்களுக்கான காயத்ரீ மந்த்ரங்கள் காணப்படுகின்றன. இவை எல்லாம் மந்திரங்களே. அந்தந்த தேவதைகளுக்குரிய காயத்ரீயை முன்மொழிந்தே, உபசாரங்களையும் வழிபாடுகளையும் செய்வதால் அதிகப் பயன் ஏற்படும்.

காயத்ரீ அமைப்பு முறை ஒரு நிலையாக இருப்பதால், மனத்தில் இருத்திக் கொள்வது எளிது. மற்ற மந்திரங்களைக் கற்றுக் கொள்ள முடியாதவர்களும், காயத்ரீயை மிகவும் சுலபமாக மனப்பாடம் செய்து விடலாம்.

[redacted]றிப்பிட்ட தேவதையின் அருளைப் பெறுவதற்கு, அந்த தேவதையின் காயத்ரீயையே உருவேற்றலாம். காயத்ரீக்கு அளவிடமுடியாத தெய்விக ஆற்றல் உண்டு.

### குரு

குரு நிரஞ்ஜனாய வித்மஹே நிராபாஸாய தீமஹி।
தன்னோ அதனுஸூக்ஷ்ம ப்ரசோதயாத் ॥

### நந்தி

1. தத்புருஷாய வித்மஹே சிவசித்தாய் தீமஹி ।
தன்னோ நந்தி ப்ரசோதயாத் ॥

### விநாயகர்

2. தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி।
தன்னோ தந்தி : ப்ரசோதயாத் ॥

3. ஏகதந்தாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி ।
தன்னோ தந்தி : ப்ரசோதயாத் ॥

## முருகன்

1. தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி ।
தன்னஷ் ஷண்முக : ப்ரசோதயாத் ॥

2. கார்த்திகேயாய வித்மஹே சக்திஹஸ்தாய தீமஹி
தன்னஸ் ஸ்கந்த : ப்ரசோயாத் ॥

## தட்சிணாமூர்த்தி

1. த்யானரூபாய வித்மஹே ஞானதாத்ரே ச தீமஹி ।
தன்னோ குரு ப்ரசோதயாத் ॥

2. தக்ஷிணாஸ்யாய வித்மஹே த்யானரூபாய தீமஹி ।
தன்னோ போத ப்ரசோதயாத் ॥

[redacted]

## லிங்கோத்பவர்

ஹரிஸேவ்யாய வித்மஹே விதிபூஜ்யாய தீமஹி ।
தன்னோ ஹர ப்ரசோதயாத் ॥

## சண்டிகேஸ்வரர்

1. த்வனிச்சண்டாய வித்மஹே சிவசித்தாய தீமஹி ।
தன்னோ சண்ட ப்ரசோதயாத் ॥

## பைரவர்

1 நிசாசராய வித்மஹே சுனவாஹாய தீமஹி ।
தன்னோ ருத்ர ப்ரசோதயாத் ॥

## துர்கை

1. காத்யாயனாய வித்மஹே கன்யகுமாரி தீமஹி ।
தன்னோ துர்கி : ப்ரசோதயாத் ॥

## சிவன்

1. தத்வாதீதாய வித்மஹே கலாதீதாய தீமஹி ।
   தன்னோ ஈச ப்ரசோதயாத் ॥

2. சந்த்ரசூடாய வித்மஹே தயாரூபாய தீமஹி ।
   தன்னஸ் சிவ: ப்ரசோதயாத் ॥

3. தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி ।
   தன்னோ ருத்ர : ப்ரசோதயாத் ॥

## அம்பிகை

1. மஹாதேவ்யை ச வித்மஹே ருத்ரபத்ன்யை ச தீமஹி ।
   தன்னோ கெளரீ ப்ரசோதயாத் ॥

[redacted]

2. த்ரிபுராயை ச வித்மஹே பவான்யை தீமஹி ।
   தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

## கலைமகள் [சரஸ்வதி, பேச்சியாயி]

1. வாக்தேவ்யை ச வித்மஹே காமராக்ஞை ச தீமஹி ।
   தன்னஸ் ஸரஸ்வதீ ப்ரசோதயாத் ॥

## பிரும்மா [நான்முகன்]

1. ஹம்ஸாரூடாய வித்மஹே பத்மஹஸ்தாய தீமஹி ।
   தன்னோ பிரம்மா ப்ரசோதயாத் ॥

2. வேதாத்மனாய வித்மஹே ஹிரண்யகர்பாய தீமஹி ।
   தன்னோ பிரம்மா ப்ரசோதயாத் ॥

## சாஸ்தா [அய்யனார்]

1. பூதாதிபாய வித்மஹே மஹாதேவாய தீமஹி ।
   தன்னோ சாஸ்தா ப்ரசோதயாத் ॥

## ஸப்தமாதா

**1. ப்ராஹ்மி**

ஹம்ஸாரூடாயை வித்மஹே ப்ரஹ்மாஸ்யை தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

2. இந்த்ராணீ

கஜாரூடாயை வித்மஹே வஜ்ரஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

**3. கௌமாரீ**

சிகிவாஹாயை வித்மஹே சக்திஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

**4. வைஷ்ணவீ**

[redacted] விஷ்ணுரூபாயை வித்மஹே சக்ரஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

**5. வாராஹீ**

வாராஹ்யை ச வித்மஹே உக்ரரூபாயை தீமஹி ।
தன்னோ வார்த்தாளீ ப்ரசோதயாத் ॥

**6. மாஹேஸ்வரீ**

வ்ருஷாரூடாயை வித்மஹே சூலஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ தேவீ ப்ரசோதயாத் ॥

**7. சாமுண்டா**

கோரரூபாயை வித்மஹே சூலஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ சாமுண்டா ப்ரசோதயாத் ॥

**நாகராஜர்**

ஸஹஸ்ரபணாய வித்மஹே நாகராஜாய தீமஹி ।
தன்னோ அனந்த : ப்ரசோதயாத் ।

**ஆதிசேஷன்[நாகர்]**

ஓம் ஸஹஸ்ரசீர்ஷாய வித்மஹே விஷ்ணுதல்பாய தீமஹி।
தன்னோ விஷ்ணு : ப்ரசோதயாத் ।

நாராயணன் [மகாவிஷ்ணு]

நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி ||
தன்னோ நாக: ப்ரசோதயாத்||

திருமகள் [லக்ஷ்மி]

மஹாலக்ஷ்ம்யை ச வித்மஹே விஷ்ணுபத்ன்யை ச தீமஹி|
தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத் ||

ராமன்

தாசரதாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி |
தன்னோ ராம : ப்ரசோதயாத் ||

கருடன்

தத்புருஷாய வித்மஹே சுவர்ணபக்ஷாய தீமஹி |
[redacted] தன்னோ கருட ப்ரசோதயாத் ||

ஸ்ரீகிருஷ்ணர்

ஓம் தாமோதராய வித்மஹே ருக்மிணீ வல்லபாய தீமஹி|
தன்னோ கிருஷ்ண: ப்ரசோதயாத்||

ஹனுமான்

1. ஆஞ்ஜனேயாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி |
தன்னோ ஹனுமன் ப்ரசோதயாத் ||
2. மாருதாத்மஜாய வித்மஹே ஆஞ்ஜனேயாய தீமஹி |
தன்னோ கவி : ப்ரசோதயாத் ||
3. ஆஞ்ஜநேயாய வித்மஹே பாவமானாய தீமஹி |
தன்னோ ஹரி : ப்ரசோதயாத் ||

சங்கு [சங்க்கம்]

பாஞ்சஜன்யாய வித்மஹே பாவமானாய தீமஹி |
தன்ன[ஸ்] சங்க்க: ப்ரசோதயாத் ||

மாரியம்மன் [மகாமாரீ]

சீதளாயை ச வித்மஹே சூர்ப்பஹஸ்தாயை தீமஹி |
தன்னோ மாரீ ப்ரசோதயாத் ||

காளியம்மன்

1. காளிகாயை வித்ம்ஹே ஸ்மசானவாஸின்யை தீமஹி ।
   தன்னோ கோரே ப்ரசோதயாத் ॥
2. பிசாசத்வஜாயை வித்மஹே சூலஹஸ்தாயை தீமஹி ।
   தன்னோ காளீ ப்ரசோதயாத் ॥

## சப்தமாதா

சில கோவில்களில், சப்தமாதாக்கள் என்று, வரிசையாக, ஏழு பெண் தெய்வங்கள் காணப்படும். [மாத்ரு தேவதைகளின் எண்ணிக்கை எட்டு என்றும் சிலர் கூறுவர்]

ப்ராஹ்மீ, மாஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, மாஹேந்த்ரீ, வாராஹீ, சாமுண்டா-இவை சப்தமாதாக்கள்.

<u>இவ[redacted]க்கான காயத்ரி மந்திரம் :</u>

### 1. ப்ராஹ்மீ

ப்ரஹ்மபூதாயை வித்மஹே குசஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ ப்ரஹ்மாணீ ப்ரசோதயாத் ॥

### 2. மாஹேஸ்வரீ

மஹேஸ்வரபூதாயை வித்மஹே சூலஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ ரௌத்ரீ ப்ரசோதயாத் ॥

### 3. கௌமாரீ

ஸ்கந்தபூதாயை வித்மஹே சக்திஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ : கௌமாரீ ப்ரசோதயாத் ॥

### 4. வைஷ்ணவீ

விஷ்ணுபூதாயை வித்மஹே சக்ரஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ வைஷ்ணவீ ப்ரசோதயாத் ॥

### 5. வாராஹீ

ப்ரஜாபதிபூதாயை வித்மஹே கதாஹஸ்தாயை தீமஹி ।
தன்னோ வாராஹீ ப்ரசோதயாத் ॥

6. இந்த்ராணீ [மாஹேந்த்ரீ]

இந்த்ரரூதாயை வித்மஹே வஜ்ரஹஸ்தாயை தீமஹி ||
தன்னோ இந்த்ராணீ ப்ரசோதயாத் ||

7. சாமுண்டி

ருத்ரரூதாயை வித்மஹே கட்கஹஸ்தாயை தீமஹி |
தன்னோ சாமுண்டி ப்ரசோதயாத் ||

8. ந்ருஸிம்ஹீ [நாரஸிம்ஹீ]

பக்தரக்ஷாயை வித்மஹே தைத்யஹந்த்ர்யை ச தீமஹி |
தன்னோ ந்ருஸிம்ஹீ ப்ரசோதயாத் ||

வீரபத்திரன்

[redacted] ஜஷத்வஜாய வித்மஹே பாணஹஸ்தாய தீமஹி |
தன்னோ வீர : ப்ரசோதயாத் ||

வீரன்

கட்கஹஸ்தாய வித்மஹே பராக்ரமாய தீமஹி |
தன்னோ வீர : ப்ரசோதயாத் ||

முனீஸ்வரன் [சடாமுனி]

பராக்ரமாய வித்மஹே முனிஸ்ரேஷ்டாய தீமஹி |
தன்னோ முனி ப்ரசோதயாத் ||

இடும்பன்

மஹாவீராய வித்மஹே குஹபக்தாய தீமஹி |
தன்னோ இடும்ப ப்ரசோதயாத் ||

கடம்பன்

மஹாசூராய வித்மஹே குஹபக்தாய தீமஹி |
தன்னோ கடம்ப ப்ரசோதயாத் ||

**கோ காயத்ரி (பசு காயத்ரி)**

க்ஷீரதாயை வித்மஹே தயாரூபாயை தீமஹி |
தன்னோ தேனு : ப்ரசோதயாத் ||

## ஜ்வர[ஹர] தேவதை காயத்ரீ

இந்த மந்திரங்களை ஜபம் செய்து, திருநீறு அணிவித்தால் காய்ச்சல் துன்பம் அறவே நீங்கும்.

பஸ்மாயுதாய வித்மஹே ஏகதம்ஷ்ட்ராய தீமஹி।
தன்னோ ஜ்வர: ப்ரசோதயாத் ।

பஸ்மாயுதாய வித்மஹே ரக்தநேத்ராய தீமஹி
தன்னோ ஜ்வரஹர: ப்ரசோதயாத்॥

## திக் பாலகர்களுக்கு பலி அளித்தல்

எட்டுத் திசைகளிலும் இருப்பிடம் கொண்டு, உலகத்தைப் பாதுகாத்து வரும் தெய்வங்களுக்கு திக் பாலகர் என்று பெயர். வேள்[redacted]ளிலும் திருவிழாக்களிலும் திக் பாலகர்களுக்கும் சிறப்புச் செய்ய வேண்டும்.

பலி கொடுத்தல் என்றால் ஆடு வெட்டுதல் என்று எண்ணிவிடக் கூடாது. பிரதானமான தெய்வங்களுக்கு விரிவாகப் பூஜைசெய்து, பல்வகை உணவு வகைகளைப் படைத்தலை "நிவேதனம் செய்தல்- நைவேத்யம்" என்று சொல்கிறோம்.

அதற்கு அடுத்த கீழ்நிலையில் உள்ள தேவதைகளும் நமது வழிபாட்டுக்கு உரியவர்களேயானாலும், முக்கிய தெய்வங்களுக்குச் செய்வதைப் போன்று விஸ்தாரமாக வழிபாடு செய்ய வேண்டியதில்லை. அதே போல், பரிவார தேவதைகள்- திக் பாலகர்கள் - பலி தேவதைகள் என்றழைக்கப்படும் தேவக்கூட்டத்துக்குப் படைப்பதற்கு என்று தனியே நைவேத்யம் தயாரிப்பதும் இல்லை. முதன்மைத் தெய்வங்களுக்கு நைவேத்தியம் செய்யப்பட்டவைகளிலிருந்து சிறிதளவு எடுத்து, இந்தச் சிறு கடவுளர்களுக்கு அளிப்பது வழக்கம். இதுவே "பலி கொடுப்பது" எனப்படும்.

கிராமப் பொதுச் சடங்கான திருவிழா போன்றவைகளில், அந்தந்த கிராம சம்பிரதாயப்படி, குறிப்பிட்ட வேளையில், சில விசேஷத் தயாரிப்புகளை ஒவ்வொரு திசைக்கும் சென்று பலியிடுவார்கள்.

சமீப காலத்தில் இத்தகைய சம்பிரதாயம் நிறுத்தப்பட்டிருந்தால், அதனை உயிர்ப்பிப்பது மிகவும் அவசியம். கூடியவரை, பன்னெடுங்காலமாக நிலவி வரும் பலி பூஜைமுறையைப் பின்பற்றுவதே சாலச் சிறந்தது. இதுவரை மந்திரமில்லாமல் கொடுக்கப்பட்டு வந்த பலியை, இனி, பின்வரும் மந்திரங்களைக் கூறிச் செய்யலாம். பலி தேவதைகளை, சிறு கடவுளர் என்று அலட்சியப்படுத்திவிடக் கூடாது. அவர்களுடைய அருளும் நமக்குத் தேவை. உரிய முறையில் அவர்களை வணங்கி, மலர்தூவி, பலி கொடுக்காவிட்டால், சிறுசிறு இடையூறுகள் தோன்றி நம்மைக் கவலைக்கு உள்ளாக்கலாம்.

எட்டுத் திசைகளும் அவற்றின் நாயகர்களும் :

| திசை | நாயகர் |
|---|---|
| கிழக்கு | இந்திரன் |
| தென்கிழக்கு | அக்னி |
| [redacted] தெற்கு | யமன் |
| தென்மேற்கு | நிர்ருதி |
| மேற்கு | வருணன் |
| வடமேற்கு | வாயு |
| வடக்கு | குபேரன்[ஸோமன்] |
| வடகிழக்கு | ஈசானன் |

இவற்றுடன் பூமியின் மேலே, பூமியின் கீழே - என்று, இரண்டு திசைகளைச் சேர்த்து, பத்துத் திக்குகள் என்று கூறுவதும் ஒரு மரபு.

பூமிக்கு உயரே உள்ள பகுதியின் நாயகர் - பிரும்மா;
கீழே, அடித்தளமாக நின்று தாங்குபவர் - அனந்தன்.

பலி மந்திரம் :

1. பூர்வ திக்பாகே இந்த்ரம் லோகபாலகம் ஆவாஹயாமி |

இந்த்ராய வஜ்ரஹஸ்தாய ஸுராதிபதயே ஐராவத வாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்திபரிவாராய ஸர்வாலங்கார பூஷிதாய ஏஷ பலிர் நம : ||பலிம் பக்ஷ |திசம் ரக்ஷ| வரதோ பவ | அனேன் பலிதானேன இந்த்ர: ப்ரீயதாம் ||

2. ஆக்னேயதிக்பாகே அக்னிம் லோகபாலகம் ஆவாஹயாமி |

அக்னயே சக்திஹஸ்தாய தேஜோதிபதயே அஜவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்திபரிவாராய ஸர்வாலங்கார ...

பலிர் நம :|பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன அக்னி: ப்ரீயதாம் |

3. தக்ஷிணதிக்பாகே யமம் லோகபாலகம் ஆவாஹயாமி |

யமாய தண்டஹஸ்தாய தர்மாதிபதயே மஹிஷவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்திபரிவாராய ஸர்வாலங்காரபூஷிதாய ஏஷ பலிர் நம : | பலிம் பக்ஷ | திசம் ரக்ஷ | வரதோ பவ| அனேன பலிதானேன யம: ப்ரீயதாம் ||

4. நைர்ரிததிக்பாகே நிர்ரிதிம் லோகபாலகம் ஆவாஹயாமி|

நிர்ருதயே கட்கஹஸ்தாய ரக்ஷோதிபதயே நரவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்திபரிவாராய ஸர்வாலங்காரபூஷிதாய ஏஷ பலிர் நம:| பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன நிர்ருதி: ப்ரீயதாம் ||

5.[redacted] பஸ்சிமதிக்பாகே வருணம் லோகபாலகம் ஆவாஹயாமி |

வருணாய பாசஹஸ்தாய ஜலாதிபதயே மகரவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்தி பரிவாராய ஸர்வாலங்கார பூஷிதாய ஏஷ பலிர் நம:| பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன வருண: ப்ரீயதாம் ||

6. வாயவ்யதிக்பாகே வாயும் லோகபாலகம் ஆவாஹயாமி |

வாயவே அங்குச ஹஸ்தாய ப்ராணாதிபதயே ம்ருக வாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்தி பரிவாராய ஸர்வாலங்காரபூஷிதாய ஏஷ பலிர் நம:| பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன வாயு ப்ரீயதாம்||

7. உத்தரதிக்பாகே ஸோமம் லோகபாலகம் ஆவாஹயாமி |

ஸோமாய அம்ருதகலசஹஸ்தாய நக்ஷத்ராதிபதயே அஸ்வவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்தி பரிவாராய ஸர்வாலங்காரபூஷிதாய ஏஷ பலிர் நம:| பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன ஸோம: ப்ரீயதாம்||

8. ஈசானதிக்பாகே ஈசானம் லோகபாலகம் ஆவாஹயாமி|

ஈசானாய த்ரிசூலஹஸ்தாய பூதாதிபதயே வ்ருஷபவாஹனாய ஸாங்காய ஸாயுதாய ஸசக்தி பரிவாராய ஸர்வாலங்காரபூஷிதாய ஏஷ பலிர் நம:| பலிம் பக்ஷ| திசம் ரக்ஷ| வரதோ பவ| அனேன பலிதானேன [illegible] ||

## பக்தனின் இலக்கணம்

**1. அகத்திலக்கணம் [தன் உள்ளத்தில் எழுவது]**

தன் இஷ்டதெய்வத்தின் புகழைக் கேட்கும் காலத்தில்

1. மிடறு விம்முதல்
2. நாத் தழு தழுத்தல்
3. இதழ் துடித்தல்
4. உடல் குலுங்குதல்
5. மயிர் சிலிர்த்தல்
6. உடல் வியர்த்தல்
7. தொண்டையில் சொல் எழாமை
8. கண்ணில் நீர் அரும்புதல்
9. வாய் விட்டழுதல்

[redacted] 10. மெய்மறத்தல்

**2. புறத்திலக்கணம் [தன் உடலால் செய்வது]**

1. ஹிந்து சமயச் சின்னங்களை நெற்றியிலும் உடலிலும் அணிதல்.
2. பெற்றோர், குரு, சான்றோர்களை வணங்குதல்
3. அடியார்களின் பாடல்களை அன்புடன் ஓதுதல்
4. நாளின் முப்பொழுதிலும் இறை நாமத்தை உச்சரித்தல்
5. தெய்வபூஜை செய்தல்; பிறர் செய்வதற்கு உதவுதல்
6. புண்ணியச் செயல்கள் செய்தல்; செய்வித்தல்
7. புராணம், அறநூல்கள் கேட்டல்
8. ஆலய வழிபாடு, திருப்பணி செய்தல்; உறுதுணை புரிதல்
9. அடியார்களுக்கு உதவுதல்
10. அடியார்களின் இல்லங்களில் மட்டுமே உண்ணுதல்;
11. அடியார்களுடன் உண்ணுதல்.

**அயனம் - 2**

தை முதல் ஆனி முடிய - உத்தராயணம்
ஆடி முதல் மார்கழி முடிய - தக்ஷிணாயனம்

## தமிழ் ஆண்டுகள்-60

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பிரபவ | 21 | ஸர்வஜித் | 41 | ப்லவங்க |
| 2 | விபவ | 22 | ஸர்வதாரி | 42 | கீலக |
| 3 | சுக்ல | 23 | விரோதி | 43 | ஸௌம்ய |
| 4 | பிரமோதூத | 24 | விக்ருதி | 44 | ஸாதாரண |
| 5 | பிரஜோத்பத்தி | 25 | கர | 45 | விரோதிக்ருத் |
| 6 | ஆங்கீரஸ | 26 | நந்தன | 46 | பரிதாபீ |
| 7 | ஸ்ரீமுக | 27 | விஜய | 47 | ப்ரமாதீச |
| 8 | பவ | 28 | ஜய | 48 | ஆனந்த |
| 9 | யுவ | 29 | மன்மத | 49 | ராக்ஷஸ |
| 10 | தாது | 30 | துர்முகி | 50 | நள |
| 11 | ஈஸ்வர | 31 | ஹேவிளம்பி | 51 | பிங்கள |
| 12 | வெகுதான்ய | 32 | விளம்பி | 52 | காளயுக்தி |
| 13 | பிரமாதி | 33 | விகாரி | 53 | ஸித்தார்த்தி |
| [redacted] | விக்ரம | 34 | சார்வரி | 54 | ரௌத்ரி |
| 15 | விஷு | 35 | பிலவ | 55 | துன்மதி |
| 16 | சித்ரபானு | 36 | சுபக்ருத் | 56 | துந்துபி |
| 17 | சுபானு | 37 | சோபக்ருத் | 57 | ருத்ரோத்காரி |
| 18 | தாரண | 38 | க்ரோதி | 58 | ரக்தாக்ஷி |
| 19 | பார்த்திப | 39 | விஸ்வாவசு | 59 | க்ரோதன |
| 20. | விய | 40 | பராபவ | 60 | அக்ஷய |

## ருதுக்கள் - 6

| | | | |
|---|---|---|---|
| சித்திரை, வைகாசி | - வஸந்த ருது | ஐப்பசி, கார்த்திகை | - சரத் ருது |
| ஆனி, ஆடி | - க்ரீஷ்ம ருது | மார்கழி, தை | - ஹேமந்த ருது |
| ஆவணி, புரட்டாசி | - வர்ஷ ருது | மாசி, பங்குனி | - சிசிர ருது |

## மாதங்கள்-12

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | - மேஷம் | ஐப்பசி | துலாம் |
| வைகாசி | - ரிஷபம் | கார்த்திகை | - விருச்சிகம் |
| ஆனி | - மிதுனம் | மார்கழி | - தனுசு |
| ஆடி | - கடகம் | தை | - மகரம் |
| ஆவணி | - சிம்மம் | மாசி | - கும்பம் |
| புரட்டாசி | - கன்னி | பங்குனி | - மீனம் |

## கிழமைகள்- 7

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | - | பானுவாஸரம் |
| திங்கட்கிழமை | - | இந்துவாஸரம் |
| செவ்வாய்க்கிழமை | - | பௌமவாஸரம் |
| புதன்கிழமை | - | ஸௌம்யவாஸரம் |
| வியாழக்கிழமை | - | குருவாஸரம் |
| வெள்ளிக்கிழமை | - | ப்ருகு/சுக்ரவாஸரம் |
| சனிக்கிழமை | - | ஸ்திரவாஸரம் |

## நக்ஷத்திரங்கள் - 27

| | | | |
|---|---|---|---|
| 1. | அஸ்வதி | - | அஸ்வினீ |
| 2. | பரணி | - | அபபரணீ |
| 3. | கார்த்திகை | - | க்ருத்திகா |
| 4. | ரோகிணி | - | ரோகிணீ |
| [redacted] | மிருகசீர்ஷம் | - | ம்ருகசிரோ |
| 6. | திருவாதிரை | - | ஆர்த்ரா |
| 7. | புனர்பூசம் | - | புனர்வசு |
| 8. | பூசம் | - | புஷ்யம் |
| 9. | ஆயில்யம் | - | ஆஸ்லேஷா |
| 10. | மகம் | - | மகா |
| 11. | பூரம் | - | பூர்வபல்குனி |
| 12. | உத்திரம் | - | உத்தரபல்குனி |
| 13. | ஹஸ்தம் | - | ஹஸ்த |
| 14. | சித்திரை | - | சித்ரா |
| 15 | சுவாதி | - | ஸ்வாதீ |
| 16. | விசாகம் | - | விசாகா |
| 17. | அனுஷம் | - | அனூராதா |
| 18. | கேட்டை | - | ஜ்யேஷ்டா |
| 19. | மூலம் | - | மூலா |
| 20. | பூராடம் | - | பூர்வாஷாடா |
| 21. | உத்திராடம் | - | உத்ராஷாடா |
| 22. | திருவோணம் | - | சிரவண |
| 23. | அவிட்டம் | - | ஸ்ரவிஷ்டா |
| 24. | சதயம் | - | சதபிஷக் |
| 25. | பூரட்டாதி | - | பூர்வப்ரோஷ்டபதா |
| 26. | உத்திரட்டாதி | - | உத்ரப்ரோஷ்டபதா |
| 27. | ரேவதி | - | ரேவதி |

## மலர் வழிபாடுபற்றி...

1. விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக்கூடாது.

    [விநாயக சதுர்த்தியன்று மட்டும் ஒரு தளம் போடலாம்]

2. பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, பில்வம், கொன்றை முதலியன விசேஷம் ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம்.

3. விஷ்ணுவை அக்ஷதையால் அருச்சிக்கக்கூடாது.

4. அம்பிகைக்கு அருகம்புல் உகந்ததல்ல.

5. லட்சுமிக்குத் தும்பை கூடாது.

6. பவளமல்லியால் சரஸ்வதியை அருச்சனை செய்யக்கூடாது.

7. விஷ்ணு சம்பந்தமான தெய்வங்களுக்கு மட்டும் துளசி தளத்தால் அர்ச்சனை செய்யலாம். அதுபோல, சிவ சம்பந்தமுடைய தெய்வங்களுக்கே பில்வார்ச்சனை செய்யலாம்

8. துலுக்க சாமந்திப்பூவை கண்டிப்பாக உபயோகப்படுத்தக் கூடாது.

9. மலரை முழுவதுமாக அருச்சனை செய்ய வேண்டும். இதழ் இதழாகக் கிள்ளி [redacted]சினை செய்யலாகாது.

10. வாடிப்போன, அழுகிப்போன, பூச்சிகள் கடித்த மலர்களை உபயோகிக்கக் கூடாது.

11. அன்றலர்ந்த மலர்களை அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும்.

12. ஒருமுறை இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களை எடுத்து மீண்டும் அருச்சனை செய்யக்கூடாது. பில்வம், துளசி ஆகியவற மட்டுமே மறுபடியும் உபயோகிக்கலாம்.

13. தாமரை, நீலோத்பலம் போன்ற நீரில் தோன்றும் மலர்களை தடாகத்திலிருந்து எடுத்த அன்றைக்கே உபயோகப்படுத்த வேண்டும் என்ற விதி இல்லை.

14. வாசனை இல்லாதது; முடி, புழு ஆகியவற்றோடு சேர்ந்திருந்தது; வாடியது; தகாதவர்களால் தொடப்பட்டது; நுகரப்பட்டது; ஈரத் துணி உடுத்திக்கொண்டு, கொண்டு வரப்பட்டது; காய்ந்தது; பழையது; தரையில் விழுந்தது ஆகிய மலர்களை அருச்சனைக்கு உபயோகப்படுத்த கூடாது

15. சம்பக மொக்குத் தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

16. மலர்களைக் கிள்ளி பூஜிக்கக் கூடாது. வில்வம், துளசியைத் தளமாகவே அருச்சிக்க வேண்டும்.

17. முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா - இவை பஞ்ச வில்வம் எனப்படும். இவை சிவபூஜைக்கு உரியவை.

18. துளசி, முகிழ் [மகிழம்], சண்பகம், தாமரை, வில்வம், செங்கழுநீர், மருக்கொழுந்து, மருதாணி, தர்பம், அருகு, நாயுருவி, விஷ்ணுக்ராந்தி, நெல்லி ஆகியவற்றின் [இலை] பத்ரங்கள் பூஜைக்கு உகந்தவை.

19. பூஜைக்குரிய பழங்கள்: நாகப்பழம், மாதுளை, எலுமிச்சை, புளியம்பழம், கொய்யா, வாழை, நெல்லி, இலந்தை, மாம்பழம், பலாப்பழம்.

20. திருவிழாக் காலத்திலும், வீதிவலம் வரும்போதும், பரிவார தேவதைகளின் அலங்காரத்திலும், மற்றைய உபயோகிக்கத் தகாதென விலக்கப்பட்ட மலர்களை உபயோகிக்கலாம்

21. அபிஷேகம், ஆடை அணிவிப்பது, சந்தன அலங்காரம், நைவேத்யம் முதலிய முக்கிய வழிபாட்டுக் காலங்களில் கட்டாயமாகத் திரை போட வேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் பிறர் இறை உருவைக் காணலாகாது.

22. குடுமியுள்ள தேங்காயைச் சமமாக உடைத்து, குடுமியை நீக்கிவிட்டு நிவேதனம் செய்ய வேண்டும்.

23. பெருவிரலும் மோதிரவிரலும் சேர்த்துத் திருநீறு அளிக்க வேண்டும். மற்ற விரல்களைச் சேர்க்கக்கூடாது.

2[redacted]ாவில்களில், பூஜகர்களிடமிருந்துதான் திருநீறு போன்ற பிரசாதங்களைப் பெற வேண்டும்; தானாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

25. பூஜையின் துவக்கத்திலும், கணபதி பூஜையின் போதும், தூப-தீபம் முடியும் வரையிலும் பலிபோடும்போதும் கை மணியை அடிக்க வேண்டும். மணியின் சப்தமில்லாவிடில் அச்செயல்கள் பயனைத் தரமாட்டா.

26. ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று அடுக்குகள் கொண்ட தீபத்துக்கு மஹாதீபம் அல்லது மஹாநீராஜனம் என்று பெயர்.

## அபிஷேக வரிசைமுறை

அபிஷேகத்தில் உபயோகிக்கும் பொருட்களை - பால், பழங்கள், சந்தனம், இளநீர் முதலியன-அபிஷேகத்ரவ்யம் என்று கூறுவர்.

பழங்களை தண்ணீர்விட்டுக் கழுவிவிட வேண்டும். வாழை, ஆரஞ்சுப் பழங்களை நமது கைவிரல் நகம் படாமல் தோல் உரிக்க வேண்டும்.

தாம்பாளம், சொம்பு போன்ற பாத்திரங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கத்தி, அரிவாள், 'அரிவாள்மனை ஆகிய ஆயுதங்களையும் சுத்தமாகத் துடைத்துவிட வேண்டும்.

பால், தயிர்- திரிந்து போகாமலும் கைத்துப் போகாமலும் இருக்கக்கூடிய பாத்திரங்களில் வைக்கப்படவேண்டும்.

பூஜை முற்றிலும் முடிவதற்கு முன்னதாகத் தோல்களை வெளியே போட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்தால் கால்நடைகள் அவற்றைத் தின்றுவிடக் கூடும். அதனால் தோஷம் ஏற்படும்.

## ஹிந்துக்களின் தினசரிக் கடமைகள்

1. தினமும் சூரியன் உதிப்பதற்கு முன் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவும்.
2. காலையில் எழுந்தவுடனும், நீராடிய பின்னும், உணவு கொள்ளும்போதும் இஷ்ட தெய்வத்தைச் சிந்திக்கவும்.
3. நெற்றியில் ஹிந்து சமயச் சின்னம் [திருநீறு, குங்குமம், சந்தனம், திருநாமம்-ஏதேனும்] அணியாமல் இருக்கக் கூடாது.
4. இறை வழிபாட்டுக்கு என, தனியே இடம் ஒதுக்கித் தவறாது வழிபாடியற்றவும். காலை-மாலையில் விளக்கேற்றி
   நறுமணப் புகை பரவச் செய்யவும்.
5. சமய நூல்களை ஓத வேண்டும்.
6. படுக்கும்போது தெய்வத்தின் நினைவோடு படுக்க வேண்டும்.

உலகங்களை உற்பத்தி செய்து பரிபாலித்து வரும் பகவானுடைய அரசாங்கம்தான் மிகப் பெரிய அரசு ஆகும். முப்பத்துமுக்கோடி தேவர்களும் பித்ருக்களும் ஈசுவரனுடைய அரசாங்கத்தின் அதிகாரிகள் ஆவர். வடக்கில் உள்ள தேவலோகமும் தெற்கில் உள்ள பித்ரு லோகமும் அவர்களுடைய இருப்பிடம் என்று மறைகள் கூறுகின்றன.

இந்த [redacted]வனது அரசுக்கு நாம் செலுத்தும் வரிகள், தேவர்கடனும் பிதிரர் கடனும்

நம்மையெல்லாம் காக்கின்ற அவ்வதிகாரிகளின் ஜீவனத்துக்கு என்ன வழி வகை செய்துள்ளார், ஸர்வேசுவரன் ?

நாம் செய்யும் தேவ யக்ஞங்களும் பித்ரு யக்ஞங்களுமே அவர்களைக் காப்பாற்றுகின்றன.

"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்று
ஐம்புலத்துஆ[று] ஓம்பல் தலை" - என்பது திருவள்ளுவர்வாக்கு.

உலகப் பொது நன்மையை முன்னிட்டு ஒவ்வொருவரும் தத்தம் கடமையை, ஈசுவரார்ப்பணமாகச் செய்துவர வேண்டும். இக்கடமைகள் சரிவர நடைபெறாவிடில் என்ன ஏற்படும்?

அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைக் கொடுக்காத மக்களுக்கு ஏற்படும் கதியே இவர்களுக்கும் ஏற்படும். அதனால் தான், அநீதியான யுத்தங்களும், நோய்களும், நாசங்களும், பஞ்சங்களும்-இன்னும் மனித சக்திக்கு அடங்காத அநேக விதமான இன்னல்களும் ஏற்படுகின்றன. துன்பங்களைத் தடுப்பதற்கு என்ன வழி ? நாம் ஆசார-அனுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

அப்படியென்றால் ?

வேதத்தின் கர்மகாண்டத்தில் ஆசாரம், அனுஷ்டானம் என்ற இருவகைப்பட்ட தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. தனது உடலுக்கும் மனத்துக்கும் தெய்வீகமான தூய்மையைத் தரும் நடத்தைக்குப் பெயர் ஆசாரம்; வேதவிதிப்படி தேவர்கள், பித்ருக்கள், தாய்-தந்தை, ஆசார்யார், முதியோர், அதிதிகள் ஆகியோர்க்கு நடத்தப்பட வேண்டிய சடங்குகள், அனுஷ்டானம் எனப்படும். தமிழ் அறநூல்கள் ஆசாரத்தை ஒழுக்கம் என்றும் அனுஷ்டானத்தை வழக்கம் என்றும் சொல்லும். மறை வழக்கம் என்றால் வைதிக அனுஷ்டானம் என்று பொருள்படும்.

# எளிய பூஜை முறை

சில குறிப்பிட்ட புண்ணிய காலங்களில் நாம் நமது வீட்டில் செய்யும் பூஜை முறையை கல்பம் என்ற நூலில் சொல்லியபடி செய்கின்றோம். விநாயக சதுர்த்தியன்று விநாயகர் பூஜை, ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி நாளில் ஸ்ரீ கிருஷ்ணருக்கும், சிவராத்திரியில் பரமசிவனுக்கும், ஸ்ரீராம நவமியில் ராமபிரானுக்கும், நவராத்திரி முடிவில் சரஸ்வதிக்கும், பொங்கல் நன்னாளில் சூரிய நாராயணனுக்கும் வரலட்சுமி விரத நாளில், மகாலக்ஷ்மிக்கும், கந்த சஷ்டியில் முருகப் பெருமானுக்கும், வைகுண்ட ஏகாதசியில் ஸ்ரீமந் நாராயணனுக்கும் – இப்படியாகப் பல தெய்வங்களுக்கும் பூஜை செய்கிறோம்.

அவரவர்களுடைய குடும்ப நிலை, தொழில், நேரம் போன்ற பல[redacted]ற அனுசரித்து, பூஜை அல்லது வழிபாட்டை, விரிவாகவோ, சுருக்கமாகவோ செய்யும் வகையில் பெரியோர்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

64, 32, 25, 16, 5 வகையான உபசாரங்களுடன் பூஜையை நிறைவேற்றலாம்.

ஐந்து வகையான உபசாரங்களுடன், தினசரி பூஜையை வேண்டுமானால் செய்யலாம். ஆனால் விசேஷ நாட்களில், பதினாறு (ஷோடசோபசாரம்) வகை உபசாரங்களுடன் வழிபாடு செய்வது சாலச் சிறந்தது.

## ஷோடச (16) உபசார வரிசை முறை

| | | |
|---|---|---|
| 1. | த்யான ஆவாஹனம் | (படம், உருவச் சிலையில் அந்த தெய்வத்துக்கு உரிய தியான சுலோகத்தைக் கூறி, 'எழுந்தருள்க' என, வேண்டுதல். |
| 2. | ஆஸனம் | ('அமர்ந்தருள்க' என வேண்டுதல்) |
| 3. | பாத்யம் | கை – கால் கழுவி, |

| | | |
|---|---|---|
| 4. | அர்க்யம் | நீர் அருந்தும்படியும் |
| 5. | ஆசமனீயம் | சுவையான பழக்கலவை |
| 6. | மதுபர்கம் | ஏற்கும்படியும் வேண்டுதல். |
| 7. | ஸ்நானம் | (நீராட்டுதல்) |
| 8. | வஸ்த்ரம் | (ஆடை அளித்தல்) |
| 9. | உபவீதம் / ஆபரணம் | |
| 10. | கந்தம் | (சந்தனம் இடுதல் |
| 11. | புஷ்பம் | (மலர் மாலை சார்த்தி, அர்ச்சனை செய்தல்) |
| 12. | தூபம் | |
| 13. | தீபம் | |
| 14. | நைவேத்யம் | |
| 15. | [redacted]ம்பூலம் | |
| 16. | நீராஜனம் | |

நீராஜனத்திற்குப் பின், புஷ்பாஞ்சலி செய்தல், பிரார்த்தனை, வலம் வந்து நமஸ்கரித்தல், பூஜையில் நிகழ்ந்த குறைகளைப் பொறுத்தருளும்படி இறைஞ்சுதல் முதலியன செய்ய வேண்டும்.

அடுத்ததாக, உத்தராங்க பூஜை என்று, சில உபசாரங்கள் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, சிவ பூஜை முடிவில்,

ஸாம்ப பரமேஸ்வராய நம :<br>
ச்சத்ரம் ஸமர்ப்பயாமி<br>
சாமரம் ஸமர்ப்பயாமி<br>
ந்ருத்தம் „<br>
கீதம் „<br>
வாத்யம் „<br>
ஆந்தோளிகாம் „<br>
ஸமஸ்த ராஜோபசார,<br>
தேவோபசார பூஜா : ஸமர்ப்பயாமி.

– என்று, அந்தந்த தேவதைக்கு ஏற்றபடி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு உபசாரத்துக்கும், ஒவ்வொரு தேவதைக்கும் தனித்தனியே சுலோகம் உண்டு. அந்த சுலோகத்தைச் சொல்லிவிட்டுத் தான் அந்த உபசாரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

அக்னிபுத்ர மஹாபாக
கார்த்திகேய ஸுரார்ச்சித ।
ரத்ன ஸிம்ஹாஸனம் தேவ
க்ருஹாண வரதாவ்யய ॥
ஸ்ரீவல்லீ தேவஸேனா ஸமேத ஸுப்ரஹ்
மண்ய ஸ்வாமிநே நம : ஆஸனம் ஸமர்ப்பயாமி

– என்பதுதான், சரியான முறை. ஆனால், சுலோகம் தெரியவில்லை என்பதால், உபசாரத்தை விட்டுவிடக் கூடாது. 'ஸ்ரீவல்லி தேவஸேனா ஸ[redacted] ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிநே நம : ஆஸனம் ஸமர்ப்பயாமி' என்றாவது கூறியபடி, அட்சதையைப் போடலாம்.

பீதாம்பரதரானந்த கோபீவஸ்த்ராய ஹாரக ।
வஸ்த்ரம் ததாமி தே க்ருஷ்ண
க்ருஷ்ணா து : க்க நிவாரக ॥
ஸ்ரீ பாலகோபால க்ருஷ்ணாய
நம : வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி.

– என்பது, முறை. சுலோகம் வரவில்லை என்றால், 'ஸ்ரீ பால கோபால க்ருஷ்ணாய நம : வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி' என்பதையாவது சொல்ல வேண்டும்.

எந்த தெய்வத்துக்குப் பூஜை செய்வதாக இருந்தாலும், முதலில், மஞ்சள்பொடியில் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூஜை செய்துவிட்டு, அவர் திருமுன்னிலையில் சங்கல்பம் செய்து கொண்டு, கலச பூஜை செய்து, பின்னர் அந்த விசேஷ நாளுக்கு உரிய பூஜையை விரிவாகச் செய்யவேண்டும்.

உதாரணத்துக்கு, ஸ்ரீ ராமசந்திர பூஜை முறையைக் காண்போம்.

ஸ்ரீ சீதாராமர் படத்தை அலங்கரித்து வைக்கவும்.

முதலில், கண்டா நாதம். (மணி அடித்தல்)

ஆசமனம்
தலையில் குட்டிக் கொள்ளுதல்
பிராணாயாமம்
மஞ்சள் பிள்ளையார் பூஜை
சங்கல்பம் (மமோபாத்த ஸமஸ்த...)
மஞ்சள் பிள்ளையார் உத்வாஸம்
[redacted]னுப்பி வைத்தல்)
கலச பூஜை
தியானம் –

வைதேஹீஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹா மண்டபே
மத்யே புஷ்பகமாஸனே மணிமயே வீராஸனே ஸுஸ்த்திதம் ।
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜன ஸுதே
தத்த்வம் முனிப்ய : பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி : பரிவ்ருதம்
ராமம் பஜே ச்யாமலம் ॥

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன
ஹனுமத் ஸமேத ஸ்ரீராம சந்த்ரம் த்யாயாமி.

(ப்ராண ப்ரதிஷ்டை)

ஸ்ரீராமசந்த்ரம் ஆவாஹயாமி

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம :

| | | |
|---|---|---|
| | ஆஸனம் | ஸமர்ப்பயாமி |
| ,, | பாத்யம் | ,, |
| ,, | ஆர்க்யம் | ,, |
| ,, | மதுபர்கம் | ,, |
| ,, | ஸ்நானம் | ,, |

(ஸ்நானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி)

| | | |
|---|---|---|
| ,, | வஸ்த்ரம் | ,, |
| ,, | உபவீதம் | ,, |
| ,, | ஆபரணம் | |
| [redacted] | | |
| ,, | கந்தான் தாரயாமி | ,, |

(கந்தஸ்யோபரி ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி)

| | | |
|---|---|---|
| ,, | அக்ஷதான் | ,, |
| ,, | புஷ்பாணி | ,, |
| | | (அர்ச்சனை) |
| ,, | தூபம் | ஆக்ராபயாமி |
| ,, | தீபம் | ஸந்தர்சயாமி |
| ,, | நைவேத்யம் | நிவேதயாமி |
| ,, | தாம்பூலம் | ஸமர்ப்பயாமி |
| ,, | நீராஜனம் | ,, |
| ,, | மந்த்ரபுஷ்பம் | ,, |
| ,, | ப்ரதக்ஷிண நமஸ்காரான் | ,, |
| ,, | சத்ரம் | |
| ,, | சாமரம் | ,, |
| ,, | கீதம் | ,, |
| ,, | வாத்யம் | ,, |
| ,, | ஆந்தோளிகாம் | ,, |
| ,, | ராஜோபசார | ,, |
| ,, | தேவோபசார பூஜா : | ,, |

இதே முறையை எல்லா தேவதைகளுக்கும் அனுசரிக்கலாம்.

## ஸரஸ்வதீ தியானம்

பாரதீம் பாவயே தேவீம்
பாஷாணாம் அதிதேவதாம்
பாவிதாம் ஹ்ருதயே ஸத்பி :
பாமினீம் பரமேஷ்ட்டின : ।

சதுர்புஜாம் சந்த்ர வர்ணாம்
சதுரானை வல்லபாம்
ஆவாஹயாமி வாணி த்வாம்
ஆச்ரிதார்த்த ப்ரதாயினீம் ॥

## வரலக்ஷ்மி தியானம்

[redacted]

பதமாஸனாம் பத்மகராம்
பத்ம மாலா விபூஷிதாம்
க்ஷீரஸாகர ஸம்பூதாம்
ஹேம வர்ணஸம ப்ரபாம் ।

க்ஷீர வர்ணஸமம் வஸ்த்ரம்
ததானாம் ஹரிவல்லபாம்
பாவயே பக்தியோகேன பார்கவீம்
கமலாம் சுபாம் ॥

## பாலக்ருஷ்ண தியானம்

த்யாயாமி பாலகம் க்ருஷ்ணம்
மாத்ரங்கே ஸ்தன்யபாயினம் ।
ஸ்ரீவத்ஸ வக்ஷஸம் காந்தம்
நீலோத்பலதளச்சவிம் ॥

## காமண்டீஸ்வரர் தியானம்
## (காமன், மன்மதன்)

கல்யாணவேஷம் கந்தர்பம் காஞ்சீநூபுர மண்டிதம் ।
கிரீடினம் ஹரித்வர்ணம் த்ருதரத்னாங்குலீயகம் ॥

ஹேமாம்பரதரம் ரம்யம் ப்ரேமாக்ஷம் சுகவாஹனம் ।
வாமஹஸ்த லஸச்சாபம் தக்ஷஹஸ்தாத்த புஷ்பகம் ॥

இக்ஷி கோதண்ட ஹஸ்தம் ச மலயாநில ஸாரதிம் ।
வஸந்த மித்ரம் சந்த்ராப்தம் தனதூதம் பிகஸ்வரம் ॥

ரத்யோபக்ருத கார்யம் ச காமதம் க்ராம தைவதம் ।
நமாமி மன்மதம் தேவம் லோக கல்யாணதம் சுபம் ॥

[redacted]

## நாமாவளி

| | | |
|---|---|---|
| ஓம் | கல்யான வேஷாய | நம : (நமஹ) |
| ஓம் | கிரீடினே | நம : |
| ஓம் | ரம்யாய | நம : |
| ஓம் | சுகவாஹனாய | நம : |
| ஓம் | மாராய | நம : |
| ஓம் | புஷ்ப பாணாய | நம : |
| ஓம் | வஸந்த மித்ராய | நம : |
| ஓம் | பிக ஸ்வராய | நம : |
| ஓம் | மகர த்வஜாய | நம : |
| ஓம் | அனங்காய | நம : |
| ஓம் | மீன கேதனாய | நம : |
| ஓம் | ஸ்ருஷ்ஷ பீஜாய | நம : |
| ஓம் | ப்ரிய தர்சனாய | நம : |
| ஓம் | காமேசாய | நம : |
| ஓம் | வராய | நம : |
| ஓம் | காமதாய | நமஹ |



அபிஷேகமான பொருட்களை பக்தர்களுக்கு விநியோகம் செய்யும்போது, சிந்தாமலும் வீணாகாமலும் இருக்கும்வகையில் கட்டுப்பாடான ஏற்பாடுகளைச் செய்துகொள்வது மிகவும் தேவையானது.

பஞ்சகவ்யம் என்பது, பசும்பால், பசுஞ்சாணம், பசுமூத்திரம், பசுநெய், பசுந்தயிர் ஆகியவைகளை உரிய விகிதப்படி கலந்து வைப்பதாகும். இவற்றுடன், புனிதத்தைக் கருதி, தர்ப்பையையும் போடுவது வழக்கம்.

## அபிஷேகப் பொருள்களும் அருளும் பலன்களும்

| | |
|---|---|
| தண்ணீர் அபிஷேகம் | - மனசாந்தி |
| பஞ்ச கவ்யம் | - ஆத்மசுத்தி, பாவநிவர்த்தி |
| நல்லெண்ணை | - பக்தி |
| சந்தனாதித்தைலம் | - சுகம் |
| அரிசிமாப் பொடி | - மலநாசம் |
| வாழைப்பழம் | - பயிர் விருத்தி |
| மாம்பழம் | - சகல வசியம் |
| பலாப்பழம் | - உலக வசியம் |
| திராட்சைப்பழம் | - பயம் நீங்குதல் |
| [redacted] மாதுளம்பழம் | - பகை நீக்கம் |
| தம்பரத்தம் பழம் | - பூமிலாபம் |
| நாரத்தம் பழம் | - நல்ல புத்தி |
| தேங்காய் துருவல் | - அரசுரிமை |
| சர்க்கரை | - பகையை அழித்தல் |
| பஞ்சாமிர்தம் | - தீர்காயுள் |
| தேன் | - சங்கீத [இசை] வன்மை |
| நெய் | - மோட்சம் |
| பால் | - ஆயுள் விருத்தி |
| தயிர் | - சந்தான [மக்கள்] விருத்தி |
| எலுமிச்சம்பழம் | - யமபயம் நீக்கம் |
| இளநீர் | - நல்ல புத்திரப்பேறு |
| கருப்பஞ்சாறு | - சாஸ்த்திர தேர்ச்சி |
| வாசனைத் திரவியம் | - ஆயுள் வலிமை |
| மஞ்சள் பொடி | - ராஜ வசியம் |
| நெல்லிமுள்ளிப்பொடி | - நோய் நீக்கம் ஆயுள்ஆரோக்கியம் |
| அன்னம் | - தேசம் அபிவிருத்தி |
| கஸ்தூரி | - வெற்றி உண்டாகுதல் |
| கோரோசனை | - ஜபம் சித்திக்கும் |
| விபூதி | - ஞானம் |
| பச்சைக்கற்பூரம் | - பயம் நீக்குதல் |
| சந்தனம் | - செல்வம், சுவர்க்கபோகம் |
| பன்னீர் | - வாழ்வு வளமாக |
| வலம்புரி சங்கு | - தீவினை நீங்கும் |
| சொர்ணம் [தங்கம்] | - வைராக்கியம் |
| சஹஸ்ரதாரை | - லாபம் |

| | |
|---|---|
| கும்பம் [ஸ்நபனம்] | - அஸ்வமேத யாகப்பலன் |
| வஸ்திரம் | - ராஜயோகம் |
| புஷ்பம் | - மகிழ்ச்சி |

## அபிஷேக வரிசைக் கிரமம்

1. வாசனைத் தைலம்/எண்ணெய்
2. திருமஞ்சனத் திரவியப் பொடி [அல்லது, அரிசிமாவு, மஞ்சள்பொடி]
3. பஞ்சகவ்யம் [பசுமாட்டிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களின் கலவை]
4. பஞ்சாமிர்தம் [பல்வகைப் பழங்கள், நாட்டுச் சர்க்கரை, தேன், கல்கண்டு, திராக்ஷை, முந்திரிப் பருப்பு, பேரீச்சம்பழம்]
5. நெய் 6. பால் 7. தயிர் 8. தேன்
9. கருப்பஞ்சாறு, எலுமிச்சை சாறு, ஆரஞ்சுச் சாறு, நாரத்தைச்சாறு, பழரசம்.
10. இளநீர்
11. அன்னம் [சிவாலயங்களில், முக்கிய நாட்களில் செய்யப்படுவது]
12. திருநீறு [குறிப்பாக, சிவலிங்கம், முருகனுக்குச் செய்யப்படுவது]
13. சந்[redacted] [பன்னீரில் கரைத்து உபயோகிக்கலாம்]
14. சங்கு நீர்

கும்ப தீர்த்தம் தனியே மந்திரித்து வைக்காதபோது, சந்தனாபிஷேகமே கடைசியானது. அதன்பின் வேறு எந்தப் பொருளாலும் அபிஷேகம் செய்யக் கூடாது.

## சம்ஸ்க்ருதச் சொற்கள்

| தமிழ் | சம்ஸ்க்ருதம் |
|---|---|
| மாசிப்பச்சை | மாசீபத்ரம் |
| ஊமத்தை | துத்தூரபத்ரம் |
| மாவிலை | சூதபத்ரம் |
| நெல்லி இலை | ஆமலக பத்ரம் |
| மரு | மருவகம் |
| வன்னி | சமீ |
| மந்தாரை | மந்தாரம் |
| மகிழம்பூ | வகுள |
| வெட்டிவேர் | அம்ருணாலம் |
| பாதிரி | பாடலீ |
| தும்பை | த்ரோணபுஷ்பம் |
| தாழம்பூ | கேதகீ |
| கொன்றை | சம்பாகம் |
| செங்கழுநீர் | கல்ஹாரபுஷ்பம் |
| அரளி | கரவீர |
| முல்லை | குந்தம் |
| பவழமல்லி | பாரிஜாதம் |
| புன்னை | புன்னாக |
| தாமரை | கமலம் |

## நைவேத்தியப் பொருட்கள்

| தமிழ் | சம்ஸ்க்ருதம் |
|---|---|
| உளுந்துவடை | மாஷாபூபம் |
| அதிரசம் | குளாபூபம் |
| கொழுக்கட்டை | மோதகம் |
| இட்டிலி | லட்டுகம் |
| அவல் | ப்ருதுகம் |
| பொறி | லாஜம் |
| தேன் | மது |
| உப்பு | லவணம் |
| கரும்புத்துண்டு | இக்ஷுகண்டம் |
| கரும்புக்கழி | இக்ஷுதண்டம் |
| மஞ்சள்கொத்து | ஹரித்ராகுச்சம் |
| வெண்ணெய் | நவனீதம் |
| தூயநீர் | சுத்தோகம் |
| [redacted]ந்தனம் | கந்தம் |
| குங்குமம் | ஹரித்ராசூர்ணம் |
| திருநீறு | பஸ்ம, விபூதி |
| இனிப்புமாவு | மதுரபிஷ்டகம் |
| மணி | கண்டா |
| கற்பூரம், சூடம் | நீராஜனம் |
| கல்கண்டு | ரஸகண்டம் |
| வெல்லம் | குளம் |
| சர்க்கரை | சர்க்கரா |
| தயிர் | ததி |
| பசும்பால் | கோக்ஷீரம் |
| மோர் | தக்ரம் |
| பானகம் | பானகம் |
| சுண்டல் | சணகம் |
| நெய் | க்ருதம், ஆஜ்யம் |
| பால்பாயாசம் | க்ஷீரபாயஸம் |
| சாதம் | சுத்தான்னம் |
| சாம்பார், ரசம் | வ்யஞ்ஜனம் |
| சர்க்கரைப் பொங்கல் | குளான்னம் |
| வெண்பொங்கல் | முத்கான்னம் |
| எள்ளுஞ்சாதம் | திலான்னம், திலோதனம் |
| தேங்காய்சாதம் | நாரிகேலோதனம், நாரிகேலான்னம் |
| எலுமிச்சை | ஜம்பீரம் |
| எலுமிச்சை சாதம் | ஜம்பீரபலான்னம் |
| புளியஞ்சாதம் | திந்த்ரிணீ அன்னம் |
| தயிர்சாதம் | தத்யன்னம் |
| தேங்காய் | நாரிகேளம் |

| தமிழ் | சம்ஸ்க்ருதம் |
|---|---|
| வாழைப்பழம் | கதலீபலம் |
| வெற்றிலை-பாக்கு | தாம்பூலம் |
| பேரிக்காய் | பேரீபலம் |
| கொய்யாப்பழம் | பஹுபீஜபலம் |
| மாதுளை | தாடிமீபலம் |
| திராக்ஷை | த்ராக்ஷா |
| பேரிச்சம்பழம் | கர்ஜூரம் |
| பலாப்பழம் | பனஸம் |
| நாவல்பழம் | ஜம்பூபலம் |
| இலந்தை | பதரீபலம் |
| விளாம்பழம் | கபித்தபலம் |
| ஆரஞ்சு | நாரங்கபலம் |
| வெள்ளரி | உர்வாருகம் |
| மாம்பழம் | ஆம்ரபலம், சூதபலம் |
| பல்வகைப்பழங்கள் | பலவர்கம் |
| இரண்டு தேங்காய் மூடி | நாரிகேள கண்டத்வயம் |
| பல தேங்காய் மூடிகள் | நாரிகேள கண்டானி |
| [redacted] பழங்கள் | பலானி |

## பொதுவான கடமைகள்

1. வாரத்துக்கு ஒரு நாளேனும், குடும்பத்துடன் கோவிலுக்குச் செல்ல வேண்டும்.
2. தியானம் பழக வேண்டும்.
3. பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமயப் பேருரை நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டும்.
4. துறவிகள், ஞானிகள், மடாதிபதிகளைத் தரிசனம் செய்ய வேண்டும்.
5. வீட்டில், நாம சங்கீர்த்தனம், சிறப்பு வழிபாடு போன்றவற்றை, அண்டை அயலார்களின் ஒத்துழைப்புடன் நிகழ்த்த வேண்டும்.
6. வீட்டில் ஓம் படம் மாட்டி வைக்கவும்.
7. ஹிந்து தர்ம பிரசார இயக்கங்கள், பத்திரிகைகளுக்கு ஆதரவு அளிக்கவும்.
8. புராண, இதிஹாஸ, தேவார, திவ்யபிரபந்த நூல்கள் கட்டாயமாக ஒவ்வொரு ஹிந்துவின் வீட்டிலும் இருக்க வேண்டும்.
9. ஹிந்துப் பண்டிகைகளை, வெறும் விழாக்களாகக் கருதாமல் தெய்வங்களோடு ஒட்டுறவு கொள்ளும் தருணங்களாக மதித்துக் கொண்டாட வேண்டும்.
10. அருகிலுள்ள அனாதை இல்லம்/முதியோர் இல்லம், கண்பார்வையற்றோர்/செவிகேளாதோர் இல்லங்களுடன் தொடர்புகொண்டு, இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.
11. பெற்றோர்களைத் தெய்வமாகப் போற்றிப் பணிந்து பணிவிடை செய்தல் வேண்டும்.
12. வீட்டில், தரக்குறைவான சினிமாப் பாடல்கள் ஒலிக்க அனுமதிக்கக் கூடாது. பாலுணர்வு, வன்முறை, பழிக்குப்பழி, பேராசை ஆகிய தீய உணர்வுகளைப் பாராட்டும் புதினங்கள் புத்தகங்களை வாங்கக் கூடாது.

## ஸ்ரீ வெக்காளி தோத்திரம்

அக்னி கேசாம் மஹாதேவீம் ஸர்ப்பா வேஷ்டித மஸ்தகாம் ।
ஆஸீனாம் பத்ரபீடே ச ஸ்ரீ வெக்காளீம் பஜாம்யஹம் ॥

சூல டக்கோரகா : வாமே ஹஸ்தே யஸ்யா : லஸந்தி வை ।
தக்ஷே கபால பாசாம் ச தாம் வெக்காளீம் பஜாம்யஹம் ॥

க்ராமாதி தேவதாம் காளீம் ஸர்வ சத்ரு விநாசினீம் ।
துர்பிக்ஷ பய ஸம்ஹர்த்ரீம் ஸ்ரீ வெக்காளீம் பஜாம்யஹம் ॥

குலதைவத மஸ்மாகம் ஸர்வ துக்க நிவாரிணீம் ।
ஸர்வாபீஷ்ட ப்ரதாம் பத்ராம் ஸ்ரீ வெக்காளீம் பஜாம்யஹம் ॥

[redacted]

## ஸ்ரீ வெக்காளி அர்ச்சனை

| | | |
|---|---|---|
| ஓம் | அக்னி கேசாயை | நம : (நமஹ) |
| ஓம் | மஹா தேவ்யை | நம : |
| ஓம் | சதுர் ஹஸ்தாயை | நம : |
| ஓம் | சூல தாரிண்யை | நம : |
| ஓம் | டக்கோரக ஹஸ்தாயை | நம : |
| ஓம் | கபால பாச தராயை | நம : |
| ஓம் | பத்ர பீடாஸனாயை | நம : |
| ஓம் | காள்யை | நம : |
| ஓம் | ஸர்வ சத்ரு விநாசின்யை | நம : |
| ஓம் | துர்பிக்ஷ பய ஹராயை | நம : |
| ஓம் | ஸர்ப்பா வேஷ்டித மஸ்தகாயை | நம : |
| ஓம் | தீக்ஷ்ண தம்ஷ்ட்ராயை | நம : |
| ஓம் | குல தேவதாயை | நம : |
| ஓம் | துக்க நிவாரிண்யை | நம : |
| ஓம் | வர ப்ரதாயை | நம : |
| ஓம் | ஸ்ரீ வெக்காள்யை | நமஹ |

## ஸ்ரீ சூர்யநாராயண தியானம்

த்யாயேத் சூர்ய மனந்த சக்திகிரணம்
தேஜோமலம் பாஸ்கரம்
பக்தானாம் அபயப்ரதம் தினகரம்
ஜ்யோதிர்மயம் சங்கரம் |
ஆதித்யம் ஜகதீசமச்யுதம் அஜம்
த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தாபீஷ்ட வரப்ரதம் தினமணிம்
மார்தாண்ட மாத்யம் சுபம் ||

உடலில் நெருப்புக் காயம்
ஏற்பட்டால், புண் ஆறுவதற்கான

[redacted]

## மந்திர சுலோகம்

யத்யஸ்தி சாம்பவீ வித்யா
யதி தர்மஸ் ஸநாதன: |
யதி மே பக்திர் பரிதா
சீதோ பவ ஹுதாசன ||

## கெட்டுப் போன பொருளைத் திரும்பப் பெறுவதற்கான கார்த்த வீர்யார்ஜுன மந்திரம்

1. க்ருத் வீர்ய ஸுதோ ராஜா
ஸஹஸ்ர புஜ மண்டன: |
அவதீர்ணோ ஹரிஸ்ஸாக்ஷாத்
பாலயேத் ஸகலம் மம் ||

2. கார்த்த வீர்யார்ஜுனோ நாம
ராஜா பாஹுஸ ஹஸ்ரவான் |
யஸ்ய ஸ்மரண மாத்ரேண கதம்
நஷ்டம் ச லப்யதே ||

# வியாதிகள் அகல

1. பாலாம்பிகேச வைத்யேச
   பவரோக ஹரேதி ச ।
   ஜபேந்நாமத்ரயம் நித்யம்
   மஹா ரோக நிவாரணம் ॥

2. அச்யுதானந்த கோவிந்த நாமோச்
   சாரண பேஷஜாத் ।
   நச்யந்தி ஸகலா ரோகா : ஸத்யம்
   ஸத்யம் வதாம்யஹம் ॥

3. மருத்யுஞ்ஜய மஹாதேவ த்ராஹி மாம்
   சரணாகதம் ।
   ஜன்ம மருத்யு ஜரா ரோகை : பீடிதம்
   கர்மபந்தனை : ॥